முடியரசன்
தமிழ் இலக்கணம்

S. M. S. VIDYASALA
KARAIKUDI

# முடியரசன் தமிழ் இலக்கணம்

(கட்டுரை—மொழிப் பயிற்சியுடன்)

பதினோராம் வகுப்பு

S. M. S. VIDYASALA
KARAIKUDI

ஆசிரியர்:
வித்துவான் கா. சு. துரைராசு
(கவிஞர் முடியரசன்)
தலைமைத் தமிழாசிரியர், மீ. சு. உயர்நிலைப்பள்ளி,
காரைக்குடி.

டியூகோ பப்ளிஷிங் ஹவுஸ்
69, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-6.

விலை ரூ. 1-75

முதற்பதிப்பு: டிசம்பர், 1967

பதிப்புரிமையுடையது.

(10.9 கி. கிராம், டபிள் கிரௌன் வெள்ளைத்தாளில்
அச்சிடப்பட்டது)

Approved by the Madras Text Book
Committee Vide Page 20 in Supple-
ment to Section 3, Part I, Fort St.
George Gazette Dated 24-4-68

அச்சிட்டோர்:

சௌந்தரா பிரிண்டர்ஸ்,
சென்னை—17

# முன்னுரை

தமிழக அரசின் புதிய பாடத் திட்டத்தின்படி இவ்விலக்கண நூல் பதினோராம் வகுப்பிற்கு எழுதப் பட்டுள்ளது; மாணவர்க்கு ஏற்ற வகையில், எளி திற் புரிந்து கொள்ளுமாறு விளக்கி எழுதப்பட் டுள்ளது.

கட்டுரையும், மொழிப்பயிற்சியும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன. பதினோராம் வகுப்பு மாணவர்க்கு இந்நூல், இலக்கணத் துணைவனாக மட்டுமின்றிக் கட்டுரை நண்பனாகவும், மொழிப் பயிற்சி ஆசானாகவும் நின்றுதவவல்லது.

இந்நூல், நல்ல முறையில் உருவாகத் துணை செய்த புலவர் ஆ. பழநி, ந. சக்திவேல், B.A.,B.T. வித்துவான் இராம. சிதம்பரம் ஆகிய மூவர்க்கும் நன்றி செலுத்துங்கடப்பாடுடையேன்.

இந்நூலைத் தமிழகத்துப் பள்ளிகளில் உலா வரச் செய்யும் ஆசிரியப் பெருமக்கட்கு என் உளங் கனிந்த நன்றி.

காரைக்குடி,
11—12—'67

இங்ஙனம்,
ஆசிரியர்.

# பொருளடக்கம்

## பொருள்


எண். பக்கம்.

### 1. எழுத்து

1. எழுத்துக்களின் பிறப்பு—இடம், முயற்சி. (சூத்திரங்கள்) ... 1

### 2. சொல்

1. தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி. ... 13
2. பொதுப் பெயர்—தான், தாம், எல்லாம். (சூத்திரம்) ... 17
3. ஆகுபெயர்—அன்மொழித் தொகை வேறுபாடு. ... 20
4. பொதுவினைகள்—(விரிவாக) ... 24
5. உருபு மயக்கம். ... 39
6. காலங்காட்டும் உறுப்புக்கள் (சூத்திரங்கள்) ... 40
7. சினைவினை—முதல்வினை. ... 51
8. பொதுவினை (வேறு, உண்டு, இல்லை, யார், எவன்.) (சூத்திரங்கள்) ... 53
9. எல்லாவிடத்தும் வரும் அசைச்சொல். (சூத்திரம்) ... 56
10. பெயர், வினை, இடை, உரிச்சொற்கள்—(விரிவாக.) (சூத்திரங்கள்) ... 58

### 3. பொது

1. வினாவகை. (சூத்திரம்) ... 91
2. விடை வகை. (சூத்திரம்) ... 93
3. அடைமொழி—பொருள்கோள் (ஆற்று நீர், கொண்டு கூட்டு, தாப்பிசை, மொழிமாற்று.) ... 96
4. உவமவுருபுகள் (சூத்திரம்) ... 105

## 4. புணர்ச்சி


1. பல, சில, பூ, தெங்கு, மரம், தேன்—
இவற்றின் புணர்ச்சி (சூத்திரங்கள்) ... 108
2. செய்யுள் விகாரம் (சூத்திரங்கள்) ... 115
3. ணகர னகர வீறு, யகர ரகர ழகர வீறு,
லகர ளகர வீறு. (சூத்திரங்கள்) ... 119


## 5. பொருள்


1. அகத்திணை (முதல்—கரு) ... 129
2. புறத்திணை (பன்னிரண்டும் கூறல்) ... 136


## 6. யாப்பு


1. வெண்பா (குறள்—நேரிசை—இன்னிசை.) ... 140
2. ஆசிரியப்பா (பொது.) ... 143
3. அலகிடுதல்—சீர் பிரித்து, வாய்பாடு கூறி,
தளை, எதுகை, மோனை எடுத்து எழுதுதல். ... 144


## 7. அணி


1. வேற்றுப் பொருள் வைப்பணி ... 148
2. வேற்றுமையணி ... 149
3. இரட்டுற மொழிதல் ... 150
4. மடக்கணி ... 152
5. வஞ்சப் புகழ்ச்சி ... 153
6. சொற்பொருள் பின்வருநிலையணி ... 154


## கட்டுரைகள்


1. செய்தித்தாள்களுக்குச் செய்திப் பத்திகள்
எழுதி அனுப்புதல். ... 157
2. வருணனைக் கட்டுரைகள் ... 158
3. விளக்கக் கட்டுரைகள் ... 160
4. கருத்தியல் கட்டுரைகள் ... 161

5. எடுத்தியம்பும் கட்டுரைகள் ... 162
6. வாழ்க்கைக் குறிப்புக் கட்டுரைகள் ... 164
7. நடை முறைச் சமுதாயவியல், பொருளியல், கல்வியியல் கட்டுரைகள். ... 165
8. பிறர் சொற்பொழிவுகளைக் கேட்டுக் குறிப்பெடுத்தல். ... 167
9. பிறர் வானொலிப் பேச்சைக் கேட்டுக் குறிப்பெடுத்தல் ... 169
10. வானொலிப் பேச்சுக் குறிப்புக்களைப் பின் விரித்து எழுதுதல். ... 170
11. கொடுத்த தலைப்புக்கள் பற்றிக் கட்டுரைகள் எழுதுதல். ... 171
12. கொடுக்கப்பட்ட மேற்கோள் நூல்களிலிருந்து கட்டுரைப் பொருள் திரட்டல். ... 172
13. பொருள் வகையாலும், நடை வகையாலும் சிறந்த கடிதங்கள் எழுதுதல். ... 174
14. அரசியல் அலுவலகங்களுக்கும், ஊராட்சி, நகராட்சிக் கழகங்களுக்கும் குறித்த பொருள்கள் பற்றி விண்ணப்பங்கள் எழுதுதல். ... 175
15. கற்பனைக் கட்டுரைகள். ... 177
16. நிறைவேறிய தீர்மானங்களை உரிய இடங்களுக்கு அனுப்பி வைத்தல். ... 180
17. ஒரு பொருள் அல்லது சூழ்நிலை பற்றி ஒட்டியும் வெட்டியும் உரையாடல் அமைத்தல்... 181
18. நூல் மதிப்புரை எழுதுதல், ... 186
19. செய்யுள் திரண்ட பொருள் எழுதுதல். ... 187
20. கூட்டங்கள், மாநாடுகளுக்கு வரவேற்புரை எழுதுதல். ... 188

21. பிரிவுரை எழுதுதல். ... 191
22. வெள்ளி விழாக் காலப் புகழுரையும், மறுமொழியும். ... 192
23. நாடகக் காட்சிகள் அமைத்தல். ... 195
24. மாணவர் மன்றங்களுக்கு விதிகள் அமைத்தல். ... 199

## மொழிப்பயிற்சி

1. வாக்கியம்—பல வகைகள் ... 201
2. வாக்கிய அமைப்பு—எழுவாய், பயனிலை, செயப்படுபொருள். எச்சங்கள் நிற்கும் முறை. ... 204
3. ஒரே கருத்தைப் பல உருவ வாக்கியங்களில் வெளியிடுதல். ... 206
4, பத்தியமைப்பு—முன்னிலும் விரிவாக. ... 208
5. நடை—விரிவாக. ... 210
6. வழூஉச் சொற்களும் திருத்தமும்—முன்னிலும் விரிவாக. ... 215
7. விலக்குதற்குரிய இழி வழக்குக்கள். ... 216
8. நிறுத்தற்குறிப் பயிற்சிகள். ... 216
9. மரபு. ... 217
10. உவமைகளும், பழமொழிகளும் வைத்தெழுதுதல், ... 218
11. உவமை உருவக மாற்றம். ... 220
12. வல்லெழுத்து மிகும் இடங்களும், மிகா இடங்களும் (முன்னிலும் விரிவாக.) ... 221
13. இடம் விட்டெழுதுதலும், சேர்த்தெழுதுதலும். ... 229
14. சொற்களை இடம் விட்டு எழுதுதலும், சேர்த்து எழுதுதலும். ... 230

# தேசீய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்த்ய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாஹே
காயே தவஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே.

# நாட்டு வணக்கம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்து கிறாய்.
நின் திருநாமம், பஞ்சாபையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்,
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது;
அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை கங்கை நதிகளின் இன்பநாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஒலிக்கப்படுகிறது;
அவை நின் ஆசியை வேண்டுகின்றன;
நின் புகழைப் பாடுகின்றன;
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி.

# 1. எழுத்து

## 1. எழுத்துக்களின் பிறப்பு -இடம், முயற்சி

### *(பிறப்பின் பொதுவிதி)*

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

எழுத்துக்களுக்கு ஒலி வடிவம், வரி வடிவம் என்ற இரண்டு உண்டு. நாம் இங்கு எழுத்துக்களின் ஒலி வடிவம் பற்றிய பொதுப் பிறப்பைக் காண்போம்.

மேலே உள்ள திருக்குறளைப் பன்முறை நன்ருக வாய்விட்டுப் படியுங்கள். அங்ஙனம் படிக்கும்பொழுது, அக் குறட்பாவில் உள்ள எழுத்துக்களின் ஒலிகளைச் செவி சாய்த்துக் கேளுங்கள். ஒவ்வொரு எழுத்தும் ஒலி வடிவம் பெறும்பொழுது, ஒன்றற்கொன்று ஒலியமைப்பில் வேறுபடுவதை உணர்வீர்கள்.

அக் குறட்பாவில் உள்ள ***அ—த்—ன்—ல்*** என்ற எழுத்துக்களைத் தனித்தனியே ஒலித்துப் பாருங்கள்.

உயிரெழுத்தாகிய ***அ*** என்பது, கழுத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு, வாய் திறத்தலாகிய முயற்சியினுல் பிறப்பது தெரியவரும்.

வல்லின மெய்யெழுத்தாகிய **த்** என்பது மார்பைப் பிறப்பிடமாகக் கொண்டு, மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கு நுனி பொருந்தும் முயற்சியினால் பிறப்பது தெரியவரும்.

மெல்லின மெய்யெழுத்தாகிய **ண்** என்பது மூக்கைப் பிறப்பிடமாகக்கொண்டு, மேல்வாயை நாக்கு நுனி மிகப் பொருந்தும் முயற்சியினால் பிறப்பது தெரியவரும்.

இடையின மெய்யெழுத்தாகிய **ல்** என்பது கழுத்தைப் பிறப்பிடமாகக்கொண்டு, மேல்வாய்ப் பல்லினடியை, நாவோரமானது தடித்து நெருங்கும் முயற்சியினால் பிறப்பது தெரியவரும்.

எனவே, எழுத்துக்களின் ஒலி வடிவப் பொதுப் பிறப்பிற்கு இடம், முயற்சி என்ற இரண்டும் காரணமாக அமைகின்றன என்பது தெரியவரும்.

**இலக்கண விதி:** ஒலி எழுத்தாகிய காரியத்திற்கு வேண்டும் காரணங்களில் சிறிதும் குறைவின்றி நிறைந்த உயிரினது முயற்சியினால், உள்ளே நின்ற உதானன் என்னும் காற்றானது எழுப்ப, அதனால் எழுகின்ற செவிப் புலனாம் அணுக்கூட்டம், மார்பும், கழுத்தும், தலையும், மூக்கும் ஆகிய நான்கு இடங்களையும் பொருந்தி, உதடும், நாக்கும், பல்லும், மேல்வாயும் ஆகிய நான்கனுடைய முயற்சிகளால் வெவ்வேறு ஒலி எழுத்துக்களாகத் தோன்றுதல் அவற்றின் பொதுப் பிறப்பாகும்.

நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப
எழுமணுத் திரளுரங் கண்ட முச்சி
மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்
வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே.

(நன்னூல்-நூற்பா 74.)

## 2. முதலெழுத்துக்களின் இடப் பிறப்பு

| | | |
|---|---|---|
| அமைச்சர் | — | ஆட்சி |
| கத்தரி | — | வற்றல் |
| மூன்று | — | சங்கம் |
| யாழ் | — | நூல் |

மேலே உள்ள சொற்களை ஒலித்துப் பாருங்கள். உந்தியிலிருந்து வரும் உதானன் என்னும் காற்று, கழுத்தை அடைந்தவுடன், **அ–ஆ** என்ற உயிர் எழுத்துக்கள் பிறத்தல் தெரியவரும்.

அக் காற்று, மார்பை அடைந்தவுடன் **த் – ற்** என்ற வல்லின மெய்யெழுத்துக்கள் பிறத்தல் தெரியவரும்.

அக் காற்று, மூக்கை அடைந்தவுடன் **ன்–ங்** என்ற மெல்லின மெய்யெழுத்துக்கள் பிறத்தல் தெரியவரும்.

அக் காற்று, கழுத்தை அடைந்தவுடன் **ழ்–ல்** என்ற இடையின மெய்யெழுத்துக்கள் பிறத்தல் தெரியவரும்.

***அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ*** என்ற பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கும்.

**க், ச், ட், த், ப், ற்** என்ற வல்லின மெய் யெழுத்துக்கள் ஆறும், மார்பை இடமாகக் கொண்டு பிறக்கும்.

**ங், ஞ், ண், ந், ம், ன்** என்ற மெல்லின மெய்யெழுத்துக்கள் ஆறும், மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கும்.

**ய், ர், ல், வ், ள், ழ்** என்ற இடையின மெய் யெழுத்துக்கள் ஆறும், கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கும்.

**இலக்கண விதி:** உயிர் எழுத்துக்களுக்கும் இடையின மெய் எழுத்துக்களுக்கும் பிறப்பிடம் கழுத்தாகும். வல்லின மெய் எழுத்துக்களுக்குப் பிறப்பிடம் மார்பாகும். மெல்லின மெய் எழுத்துக் களுக்குப் பிறப்பிடம் மூக்காகும்.

அவ்வழி,—
ஆவி யிடைமை யிடமிட றாகும்
மேவு மென்மைமூக் குரம்பெறும் வன்மை.

(ந-நூற்பா 75.)

## 3. உயிரெழுத்துக்களின் முயற்சிப் பிறப்பு

### (அ, ஆ இவற்றின் முயற்சிப் பிறப்பு)

அரசன் — ஆண்டி

இச் சொற்களில் உள்ள **அ–ஆ** என்ற உயி ரெழுத்துக்களை ஒலித்துப் பாருங்கள். இவற்றை ஒலிப்பதற்கு வாய் திறத்தலாகிய முயற்சி மட்டும் போதும் என்பது தெரியவரும்.

**இலக்கண விதி:** அ–ஆ என்ற உயிரெழுத் துக்கள் இரண்டும், முன்பு கூறப்பட்ட நால்வகை

முயற்சிகளுள், அண்ணத்தின் தொழிலாகிய வாய் திறத்தலால் பிறக்கும்.

**அவற்றுள்,—**

**முயற்சியுள் அஆ அங்காப் புடைய.**

*(ந-நூற்பா 76.)*

**(இ, ஈ, எ, ஏ, ஐ இவற்றின் முயற்சிப் பிறப்பு)**

**இலை, ஈட்டி, எருது, ஏணி, ஐந்து**

இச் சொற்களில் உள்ள ***இ, ஈ, எ, ஏ, ஐ*** என்ற ஐந்து உயிரெழுத்துக்களையும் ஒலித்துப் பாருங்கள். இவற்றை ஒலிப்பதற்கு வாயைத் திறத்தலுடன், மேல்வாய்ப் பல்லை அடி நாக்கின் ஓரங்கள் பொருந்துதலாகிய முயற்சி வேண்டும் என்பது தெரியவரும்.

**இலக்கண விதி:** இ, ஈ, எ, ஏ, ஐ என்ற உயிரெழுத்துக்கள் ஐந்தும், வாய் திறத்தலுடன் மேல்வாய்ப் பல்லை அடி நாக்கின் ஓரங்கள் பொருந்தும் முயற்சியால் பிறக்கும்.

**இஈ எஏ ஐஅங் காப்போடு**
**அண்பல் முதல்நா விளிம்புற வருமே.**

*(ந-நூற்பா 77.)*

**(உ, ஊ, ஒ, ஓ, ஔ இவற்றின் முயற்சிப் பிறப்பு)**

**உருண்டை, ஊசி, ஒன்பது, ஓடம், ஔவை**

இச் சொற்களில் உள்ள ***உ, ஊ, ஒ, ஓ, ஔ*** என்ற ஐந்து உயிரெழுத்துக்களையும் ஒலித்துப் பாருங்கள். இவற்றை ஒலிப்பதற்கு உதடுகளைக் குவிக்கும் முயற்சி வேண்டும் என்பது தெரிய வரும்.

**இலக்கண விதி:** ***உ, ஊ, ஒ, ஓ, ஔ*** என்ற உயிரெழுத்துக்கள் ஐந்தும், உதடுகளைக் குவித்து ஒலிக்கும் முயற்சியால் பிறக்கும்.

உ ஊ ஒ ஓ ஔ இதழ் குவிவே.

(ந-நூற்பா 78.)

## 4. மெய்யெழுத்துக்களின் முயற்சிப் பிறப்பு

**(க, ங, ச, ஞ, ட, ண இவற்றின் முயற்சிப் பிறப்பு)**

| | | |
|---|---|---|
| **மக்கள்** | **அரசாங்கம்** | **மிச்சம்** |
| **பிஞ்சு** | **கட்டம்** | **மண்** |

இச் சொற்களில் உள்ள ***க், ங், ச், ஞ், ட், ண்*** என்ற மெய்யெழுத்துக்களை ஒலித்துப் பாருங்கள். அவற்றுள்,

***க், ங்*** என்ற இரண்டு மெய்யெழுத்துக்களும், அடிநாக்கு மேல்வாயின் அடியைப் பொருந்தும் முயற்சியால் பிறக்கின்றன.

***ச், ஞ்*** என்ற இரண்டு மெய்யெழுத்துக்களும், நடுநாக்கு மேல்வாயின் நடுப்பகுதியைப் பொருந்தும் முயற்சியால் பிறக்கின்றன.

***ட், ண்*** என்ற இரண்டு மெய்யெழுத்துக்களும், நுனிநாக்கு மேல்வாயின் நுனிப் பகுதியைப் பொருந்தும் முயற்சியால் பிறக்கின்றன.

**இலக்கண விதி:** க், ங் என்ற இரண்டு மெய்யெழுத்துக்களும் அடிநாக்கு மேல்வாயின் அடிப் பகுதியைப் பொருந்தும் முயற்சியாலும், ச், ஞ் என்ற இரண்டு மெய்யெழுத்துக்களும் நடுநாக்கு மேல்வாயின் நடுப்பகுதியைப் பொருந்தும்

முயற்சியாலும், ட், ண் என்ற இரண்டு மெய் யெழுத்துக்களும் நுனிநாக்கு மேல்வாயின் நுனிப் பகுதியைப் பொருந்தும் முயற்சியாலும் பிறக்கும்.

**கஙவும் சஞவும் டணவும் முதலிடை**
**நுனிநா அண்ண முறமுறை வருமே.**

*(ந–நூற்பா 79.)*

**(த, ந–இவற்றின் முயற்சிப் பிறப்பு)**

**சத்தம் சந்தம்**

இச் சொற்களில் உள்ள **த், ந்** என்ற இரண்டு மெய்யெழுத்துக்களையும் ஒலித்துப் பாருங்கள். அவை மேல்வாய்ப் பல்லின் அடியை, நாக்கின் நுனி சென்று பொருந்தும் முயற்சியால் பிறத்தல் தெரியவரும்.

**இலக்கண விதி:** மேல்வாய்ப் பல்லின் அடியை, நாக்கின் நுனி சென்று பொருந்தும் முயற்சியால், த், ந் என்ற இரண்டு மெய்யெழுத் துக்களும் பிறக்கும்.

**அண்பல் அடிநா முடியுறத் தநவரும்.**

*(ந–நூற்பா 80.)*

**(ப, ம இவற்றின் முயற்சிப் பிறப்பு)**

**அப்பா அம்மா**

இச் சொற்களில் உள்ள **ப், ம்** என்ற இரண்டு மெய்யெழுத்துக்களையும் ஒலித்துப் பாருங்கள். அவை, மேலுதடும் கீழுதடும் பொருந்தும் முயற்சி யால் பிறத்தல் தெரியவரும்.

**இலக்கண விதி:** மேலுதடும் கீழுதடும் பொருந் தும் முயற்சியால் ப், ம் என்ற இரண்டு மெய் யெழுத்துக்களும் பிறக்கும்.

மீகீ ழிதழுறப் பம்மப் பிறக்கும்.

*(ந-நூற்பா 81.)*

**(ய, என்ற எழுத்தின் முயற்சிப் பிறப்பு)**

**தாய் சேய்**

இச் சொற்களில் உள்ள ***ய்*** என்ற மெய் யெழுத்தை ஒலித்துப் பாருங்கள். அஃது, அடி நாக்கு மேல்வாய் அடியைப் பொருந்தும் முயற்சி யால் பிறப்பது தெரியவரும்.

**இலக்கண விதி:** அடி நாக்கு மேல்வாய் அடி யைப் பொருந்தும் முயற்சியால், ய் என்ற மெய் யெழுத்துப் பிறக்கும்.

அடிநா வடியண முறயத் தோன்றும்.

*(ந-நூற்பா 82.)*

**(ர, ழ இவற்றின் முயற்சிப் பிறப்பு)**

**நீர் அமிழ்து**

இச் சொற்களில் உள்ள ***ர், ழ்*** என்ற இரண்டு மெய்யெழுத்துக்களையும் ஒலித்துப் பாருங்கள். அவை, மேல்வாயை நுனி நாக்குத் தடவும் முயற்சியால் பிறத்தல் தெரியவரும்.

**இலக்கண விதி:** மேல்வாயை நுனி நாக்குத் தடவும் முயற்சியால், ர், ழ் என்ற இரண்டு மெய் யெழுத்துக்களும் பிறக்கும்.

அண்ண நுனிநா வருட ரழவரும்.

*(ந-நூற்பா 83.)*

**(ல, ள இவற்றின் முயற்சிப் பிறப்பு)**

**வெல்லம் வெள்ளம்**

இச்சொற்களில் உள்ள **ல், ள்** என்ற இரண்டு மெய்யெழுத்துக்களையும் ஒலித்துப் பாருங்கள். அவற்றுள்,

**ல்** என்ற மெய்யெழுத்து, மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரமானது தடித்துப் பொருந்தும் முயற்சியால் பிறப்பது தெரியவரும்.

**ள்** என்ற மெய்யெழுத்து, மேல்வாயை நாக்கின் ஓரமானது தடித்துத் தடவும் முயற்சியால் பிறப்பது தெரியவரும்.

**இலக்கண விதி:** மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரமானது தடித்துப் பொருந்தும் முயற்சியால், ல் என்ற மெய்யெழுத்தும், மேல்வாயை நாக்கின் ஓரமானது தடித்துத் தடவும் முயற்சியால், ள் என்ற மெய்யெழுத்தும் பிறக்கும்.

> **அண்பல் முதலு மண்ணமு முறையின்**
> **நாவிளிம்பு வீங்கி யொற்றவும் வருடவும்**
> **லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும்.**

*(ந-நூற்பா 84.)*

**(வ, என்ற எழுத்தின் முயற்சிப் பிறப்பு)**

நவ்வி தெவ்வர்

இச்சொற்களில் உள் **வ்** என்ற மெய்யெழுத்தை ஒலித்துப் பாருங்கள். அது, மேல்வாய்ப் பல்லைக் கீழுதடு சென்று பொருந்தும் முயற்சியால் பிறப்பது தெரியவரும்.

**இலக்கண விதி:** மேல்வாய்ப் பல்லைக் கீழுதடு சென்று பொருந்தும் முயற்சியால், வ் என்ற மெய்யெழுத்துப் பிறக்கும்.

**மேற்பல் இதழுற மேவிடும் வவ்வே.**

*(ந-நூற்பா 85.)*

**(ற, ன இவற்றின் முயற்சிப் பிறப்பு)**

**நாற்று　　　தென்னை**

இச் சொற்களில் உள்ள ***ற், ன்*** என்ற இரண்டு மெய்யெழுத்துக்களையும் ஒலித்துப் பாருங்கள். அவை, மேல்வாயை நாக்கு நுனி நன்கு பொருந்தும் முயற்சியால் பிறத்தல் தெரிய வரும்.

**இலக்கண விதி:** மேல்வாயை நாக்கு நுனி நன்கு பொருந்தும் முயற்சியால், ற், ன் என்ற இரண்டு மெய்யெழுத்துக்களும் பிறக்கும்.

**அண்ண நுனிநா நனியுறிற் றனவரும்.**

*(ந-நூற்பா 86.)*

## 5. சார்பெழுத்துக்களின் இட முயற்சிப் பிறப்பு

**அஃது　　　இஃது**

இச் சொற்களில் உள்ள ஆய்த எழுத்தை ஒலித்துப் பாருங்கள். ஃ என்ற ஆய்த எழுத்தை ஒலிக்கும் பொழுது, உதானன் என்ற காற்று தலைக்குச் சென்று வாய் வழியாக வெளி வருகின்றது. எனவே, ஆய்த எழுத்திற்குப் பிறப்பிடம் தலையும், முயற்சி, வாய் திறத்தல் மட்டுமே என்பதும் தெரியவரும்.

**திருக்குறள்　　　திருவள்ளுவர்**

இச் சொற்களில் உள்ள **தி** என்ற வல்லின உயிர்மெய்யெழுத்தை ஒலித்துப் பாருங்கள்.

**தி** என்ற வல்லின உயிர் மெய்யெழுத்து மார்பு, கழுத்து ஆகிய இரண்டு இடங்களையும் தனக்குப் பிறப்பிடமாகக் கொண்டு பிறப்பது தெரியவரும். **தி** என்ற உயிர் மெய்யெழுத்தில் (த்+இ=தி) **த்** என்ற வல்லின மெய்யெழுத்தும் **இ** என்ற உயிரெழுத்தும் உள்ளன. **த்** என்ற வல்லின மெய்யெழுத்திற்குப் பிறப்பிடம் மார்பு. **இ** என்ற உயிரெழுத்திற்குப் பிறப்பிடம் கழுத்து. எனவே, **தி** என்ற வல்லின உயிர் மெய்யாகிய சார்பெழுத்து, தன் முதல் எழுத்துக்களுக்குரிய பிறப்பிடங்கள் இரண்டினையும் தனக்குப் பிறப்பிடங்களாகக் கொண்டு பிறப்பது தெரியவரும்.

முயற்சிப் பிறப்பில் **த்** என்ற வல்லின மெய்யெழுத்து, மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் நுனி சென்று பொருந்தப் பிறக்கும். **இ** என்ற உயிர்மெய்யெழுத்து மேல்வாய்ப் பல்லை அடி நாக்கின் ஓரங்கள் பொருந்தும் முயற்சியால் பிறக்கும். எனவே, **தி** என்ற வல்லின உயிர் மெய்யெழுத்து, தன் முதல் எழுத்துக்களுக்குரிய இருவகை முயற்சிகளையும் தனக்கு முயற்சிப் பிறப்பாகக் கொண்டு பிறத்தல் தெரியவரும்.

இங்ஙனமே, பிற உயிர்மெய்யெழுத்துக்களாகிய சார்பெழுத்துக்கள், தத்தம் முதல் எழுத்துக்களுக்குரிய பிறப்பிடங்களையும், முயற்சிகளையும் தத்தமக்குரியனவாகக் கொண்டு பிறக்கும்.

**இலக்கண விதி :** சார்பெழுத்துக்களில் ஒன்றான ஆய்த எழுத்து, தலையைப் பிறப்பிடமாகக்

கொண்டு பிறக்கும். அதற்குரிய முயற்சி வாய் திறத்தல் மட்டுமே ஆகும். ஆய்தம் ஒழிந்த உயிர்மெய் முதலான மற்றைச் சார்பெழுத்துக் கள், தத்தம் முதல் எழுத்துக்களுக்குரிய பிறப் பிடம், முயற்சி ஆகியவற்றையே தாமும் கொண்டு பிறக்கும்.

**ஆய்தக் கிடந்தலை யங்கா முயற்சி**
**சார்பெழுத் தேனவுந் தம்முத லனைய.**

*(ந-நூற்பா 87.)*

**பயிற்சி வினாக்கள்**

*1. பொதுவாகத் தமிழ் எழுத்துக்கள் எங்ஙனம் பிறக் கின்றன?*

*2. முதல் எழுத்துக்கள் எவை? அவை பிறக்கின்ற இடங்கள் எவை?*

*3. அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஐ, ஔ—என்ற உயிரெழுத் துக்களின் முயற்சிப் பிறப்பைக் கூறுக.*

*4. க், ங், ச், ஞ், ட், ண் என்ற மெய்யெழுத்துக்களின் முயற்சிப் பிறப்பைக் கூறுக.*

*5. த், ந் என்ற மெய்யெழுத்துக்கள் எங்ஙனம் பிறக் கின்றன?*

*6. மேலுதடும், கீழுதடும் பொருந்தும் முயற்சியால் பிறக்கும் எழுத்துக்கள் எவை?*

*7. ர, ழ, ல, ள என்ற மெய்யெழுத்துக்கள் எங்ஙனம் பிறக்கின்றன?*

*8. ற், ன் என்ற மெய்யெழுத்துக்கள் எங்ஙனம் பிறக் கின்றன?*

*9. ஆய்த எழுத்திற்குரிய இடப் பிறப்பையும் முயற்சிப் பிறப்பையும் கூறுக.*

*10. உயிர்மெய் முதலான சார்பெழுத்துக்கள் எங் ஙனம் பிறக்கும்?*

# 2. சொல்

## தனி மொழி - தொடர் மொழி - பொது மொழி

### 1. தனிமொழி (ஒரு மொழி)

**நிலம்** (பகாப்பதம்)

**நிலத்தன்** (நிலம் + த் + த் + அன் — பகுபதம்)

மேலே உள்ள எடுத்துக்காட்டுக்களில் 'நிலம்' என்ற சொல் பகுதிவிகுதிகளாகப் பிரிக்கமுடியாத பகாப்பதமாகும். அது, தனித்து நின்று ஒரு பொருளைத் தருகிறது. எனவே அது, தனி மொழி (ஒரு மொழி) எனப்படும்.

'நிலத்தன்' என்ற சொல் பகுதிவிகுதிகளாகப் பிரிக்கக்கூடிய பகுபதமாகும். அது, தனித்து நின்று ஒரு பொருளைத் தருகிறது. எனவே, அதுவும் தனி மொழி (ஒருமொழி) எனப்படும்.

| | |
|---|---|
| **நாடு** | **தில்** |
| **நாடன்** | **மன்** |
| **நட** | **தவ** |
| **நடந்தான்** | **நனி** |

மேற்கண்ட எடுத்துக் காட்டுக்களில் நாடு, நாடன், நட, நடந்தான் என்ற பெயர்—வினைப் பகாப்பதங்களும், பகுபதங்களும் தனித்து நின்று தத்தம் ஒரு பொருளைத் தருகின்றன. தில், மன், என்ற இடைச் சொற்கள் தனித்து நின்று தத்தம் ஒரு பொருளைத் தருகின்றன. தவ, நனி என்ற உரிச்சொற்கள் தனித்து நின்று தத்தம் ஒரு

பொருளைத் தருகின்றன. இங்ஙனம் பகாப்பத மும், பகுபதமும் தனித்து நின்று தத்தம் பொரு ளைத் தருமாறால், அவை தனிமொழி (ஒருமொழி) எனப்படும்.

## 2. தொடர்மொழி

(அல்வழி)
**நிலம் வலிது**
**அது கொல்**
**சாலப் பகை**

மேற்கண்ட எடுத்துக் காட்டுக்களில் நிலம் என்ற பகாப்பதமும், வலிது என்ற பகாப்பத மும் தம்முள் தொடர்ந்தும் அது என்ற பகாப் பதமும், கொல் என்ற பகாப்பதமும் தம்முள் தொடர்ந்தும், சால என்ற பகாப்பதமும், பகை என்ற பகாப்பதமும் தம்முள் தொடர்ந்தும், அல் வழியில் இரண்டு முதலிய பல பொருள்களைத் தரு கின்றன.

இரண்டு முதலிய பல பொருளைத் தருத லாவது: 'நிலம் வலிது' என்ற தொடரில் உள்ள 'நிலம்' என்பது, 'பூமி' என்ற பொருளையும், 'வலிது' என்பது, 'வலிமையுடையது' என்ற பொருளையும், 'நிலம் வலிது' என்பது, 'பூமி வலி மையுடையது' என்ற பொருளையும் தருதலாகும்.

(வேற்றுமை)
**நிலங் கடந்தான்**
**நிலத்தைக் கடந்தான்**
**நிலத்தைக் கடந்த நெடுமால்**

மேற்கண்ட எடுத்துக் காட்டுக்களில், 'நிலம்' என்ற பகாப்பதமும், 'கடந்தான்' என்ற பகுபதமும் தம்முள் தொடர்ந்தும், 'நிலத்தை' என்ற பகுபதமும், 'கடந்தான்' என்ற பகுபதமும் தம்முள் தொடர்ந்தும், வேற்றுமையில் இரண்டு முதலிய பல பொருள்களைத் தருகின்றன.

'நிலத்தைக் கடந்த நெடுமால்' என்ற எடுத்துக்காட்டில் 'நிலத்தை' என்ற பகுபதமும், 'கடந்தான்' என்ற பகுபதமும், 'நெடு' என்ற பகாப்பதமும், 'மால்' என்ற பகாப்பதமும், தம்முள் இரண்டு முதலியனவாகத் தொடர்ந்து நின்று, வேற்றுமையில் இரண்டு முதலிய பல பொருள்களைத் தருதல் காண்க.

### 3. பொதுமொழி

**எட்டு, தாமரை, வேங்கை**
**எழுந்திருந்தான், வந்திருந்தான்**

இவ் வெடுத்துக் காட்டுக்களில் 'எட்டு', 'தாமரை', 'வேங்கை', என்பன ஒரு மொழியாய் நின்று எட்டு என்ற எண்ணிக்கையையும், நீர்ப் பூவையும், புலியையும் உணர்த்தி ஒரு பொருள் தருகின்றன.

'எழுந்திருந்தான்' என்பது, 'எழுந்தான்' எனவும், 'வந்திருந்தான்' என்பது, 'வந்தான்' எனவும் ஒருமொழியாய் நின்று ஒரு பொருள் தருதல் காண்க.

இனி 'எட்டு' என்பது 'எள் + து' எனத் தொடர் மொழியாய் நின்று, 'எள்ளை உண்பாய்' எனவும்,

'தாமரை' என்பது 'தா+மரை' எனத் தொடர் மொழியாய் நின்று, 'தாவுகின்ற மரை' எனவும், 'வேங்கை' என்பது 'வேம்+கை' எனத் தொடர் மொழியாய் நின்று, 'வேகின்ற கை' எனவும் தொடர்மொழிகளாய்ப் பல பொருள் தருதல் காண்க. (தா—உண்பாய். மரை—மான்.)

'எழுந்திருந்தான்' என்பது 'எழுந்து+இருந் தான்' எனத் தொடர்மொழியாய் நின்று, 'எழுந்து பின் இருந்தான்' எனவும், 'வந்திருந்தான்' என்பது 'வந்து+இருந்தான்' எனத் தொடர் மொழியாய் நின்று, 'வந்து பின் இருந்தான்' எனவும் தொடர்மொழிகளாய்ப் பல பொருள் தருதல் காண்க.

**இலக்கண விதி:** ஒருமொழிகளாவன, (தனி மொழிகளாவன) பகாப்பதமேனும், பகுபதமேனும் ஒன்று நின்று தத்தம் ஒரு பொருளைத் தருவன வாம். தொடர்மொழிகளாவன, அவ்விருகைப் பதங்களும் தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப் பொருள் நோக்கில் இரண்டு முதலி யனவாகத் தொடர்ந்து நின்று, இரண்டு முதலிய பல பொருள்களைத் தருவனவாம். பொதுமொழி களாவன, ஒன்றாய் நின்று ஒரு பொருள் தந்தும், அதுவே தொடர்ந்து நின்று பல பொருள் தந்தும், இவ்விரண்டிற்கும் பொதுவாய் நிற்பனவாம்.

# 2. பொதுப் பெயர்

## *(தான்–தாம்–எல்லாம்)*

(பொதுப் பெயர்)

**சாத்தன் — சாத்தி**

இவற்றுள், 'சாத்தன்' என்ற முதற்பெயரை உயர்திணையில் ஆண் மகனுக்கும் பெயராக இட்டு வழங்கலாம்; அஃறிணையில் காளைக்கும் பெயராக இட்டு வழங்கலாம். 'சாத்தி' என்ற முதற் பெயரை உயர்திணையில் பெண் மகளுக்கும் பெயராக இட்டு வழங்கலாம்; அஃறிணையில் பசுவுக்கும் பெயராக இட்டு வழங்கலாம். எனவே, இவை இருதிணைப் பொதுப் பெயர்கள் எனப்படும்.

இங்ஙனமே, 'முடவன்', 'முடத்தி' என்ற சினைப் பெயர்களையும், 'முடச்சாத்தன்', 'முடச் சாத்தி' என்ற சினைமுதற் பெயர்களையும், 'தந்தை' 'தாய்' என்ற முறைப் பெயர்களையும், 'எல்லாம்', 'தாம்', 'தான்' என்ற பெயர்களையும் உயர்திணைக்கும், அஃறிணைக்கும் பொதுவாக வழங்கலாம்.

முதற்பெயர் நான்கும், சினைப்பெயர் நான்கும், சினைமுதற் பெயர் நான்கும், முறைப்பெயர் இரண்டும், தன்மைப் பெயர் நான்கும், முன்னிலைப் பெயர் ஐந்தும், எல்லாம், தாம், தான் என்பனவும், இவை போல்வன பிறவும் பொதுப் பெயர்களாகும்.

இவற்றுள், 'தான்', 'தாம்', 'எல்லாம்', என்ற பொதுப் பெயர்களைப்பற்றி இனிக் காண்போம்.

(தான்)

**அவன் தான் சென்றான்.**
**அவள் தான் சென்றாள்.**
**அது தான் சென்றது.**

மேற்கண்ட தொடர்களில் உள்ள 'தான்' என்பது பொதுப்பெயர்ச் சொல்லாகும். 'அவன் தான் சென்றான்', 'அவள் தான் சென்றாள்' என்ற தொடர்களில், 'தான்' என்பது உயர்திணை ஒருமையில் வந்துள்ளது. 'அதுதான் சென்றது' என்ற தொடரில், 'தான்' என்பது அஃறிணை ஒருமையில் வந்துள்ளது. எனவே, 'தான்' என்பது இங்ஙனம் இருதிணைக்கும் பொதுவாக வந்தமையால் பொதுப்பெயர் எனப்படும்.

(தாம்)

**அவர் தாம் சென்றனர்.**
**அவை தாம் சென்றன.**

மேற்கண்ட தொடர்களில் உள்ள 'தாம்' என்பது பொதுப்பெயர்ச் சொல்லாகும். 'அவர்தாம் சென்றனர்' என்ற தொடரில், 'தாம்' என்பது உயர்திணைப் பன்மையில் வந்துள்ளது. 'அவைதாம் சென்றன' என்ற தொடரில், 'தாம்' என்பது அஃறிணைப் பன்மையில் வந்துள்ளது. எனவே, 'தாம்' என்பது இங்ஙனம் இருதிணைக்கும் பொதுவாக வந்தமையால் பொதுப் பெயர் எனப்படும்.

(எல்லாம்)

**அவர் எல்லாம் சென்றனர்.**
**அவை எல்லாம் சென்றன.**

மேற்கண்ட தொடர்களில் உள்ள 'எல்லாம்' என்பது பொதுப்பெயர்ச் சொல்லாகும். 'அவர் எல்லாம் சென்றனர்' என்ற தொடரில் உள்ள 'எல் லாம்' என்பது, உயர்திணைப் பன்மையில் வந்துள் ளது. 'அவை எல்லாம் சென்றன' என்ற தொடரில் உள்ள 'எல்லாம்' என்பது, அஃறிணைப் பன்மையில் வந்துள்ளது. எனவே, 'எல்லாம்' என்பது இங் ஙனம் இருதிணைக்கும் பொதுவாக வந்தமையால் பொதுப்பெயர் எனப்படும்.

**யாம் எல்லாம் வந்தோம்** — (தன்மையிடம்)
**நீர் எல்லாம் சென்றீர்** — (முன்னிலையிடம்)
**அவர் எல்லாம் வந்தனர்** —} (படர்க்கையிடம்)
**அவை எல்லாம் வந்தன** —}

இவற்றுள், 'எல்லாம்' என்ற பொதுப்பெயர் தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூவிடங் களுக்கும் பொதுவாக வந்துள்ளது.

'தான்' என்பது, 'அவன்தான்' 'அவள்தான்', 'அதுதான்' என ஆண் பால், பெண்பால், ஒன்றன் பாலுக்குப் பொதுவாக வரும்.

'தாம்' என்பதும், 'எல்லாம்' என்பதும் 'அவர் தாம்', 'அவைதாம்', 'அவரெல்லாம்', 'அவையெல் லாம்' எனப் பலர் பாலுக்கும், பலவின் பாலுக் கும் பொதுவாக வரும்.

'தான், தாம், எல்லாம்' என்பன திணைப் பொதுவே அன்றிப் பாற் பொதுவாகவும் வரும். அவற்றுள், 'எல்லாம்' என்பது தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூவிடங்களிலும் வரும்.

**இலக்கண விதி:** முதற்பெயராகிய நான்கு பெயரும், சினைப்பெயராகிய நான்கு பெயரும், சினை முதற் பெயராகிய நான்கு பெயரும், முறைப் பெயராகிய இரண்டு பெயரும், தன்மைப் பெயராகிய நான்கு பெயரும், முன்னிலைப் பெயராகிய ஐந்து பெயரும், எல்லாம், தாம், தான் என்னும் மூன்று பெயரும், இவைபோல்வன பிறவும் இரு திணைக்கும் பொதுப் பெயர்களாகும்.

முதற்பெயர் நான்குஞ் சினைப்பெயர் நான்குஞ்
சினைமுதற் பெயரொரு நான்கு முறையிரண்டுந்
தன்மை நான்கு முன்னிலை யைந்தும்
எல்லாந் தாந்தா னின்னன பொதுப்பெயர்.

*(ந-நூற்பா 282.)*

## 3. ஆகுபெயர்-அன்மொழித்தொகை வேறுபாடு

### (ஆகுபெயர்)

ஒரு பொருளுக்கு இயற்கையாய் அமைந்துள்ள பெயர், அதனோடு தொடர்புடைய வேறு பொருளுக்குத் தொன்று தொட்டு ஆகி வருவது 'ஆகுபெயர்' எனப்படும்.

அவ் வாகுபெயர், பொருளாகுபெயர், இடவாகு பெயர், காலவாகுபெயர், சினையாகுபெயர், குண வாகுபெயர், தொழிலாகுபெயர் முதலியனவாகப் பலவகைப்படும்.

'தாமரை போலும் முகம்'—இங்கே தாமரை என்ற முதற்பொருளின் பெயர், அதனோடு தொடர் புடைய சினையாகிய மலருக்கு ஆகி வந்துள்ளது.

எனவே, இது 'பொருளாகுபெயர்' அல்லது முதலாகு பெயர் எனப்படும்.

'உலகம் மகிழ்ந்தது'—இங்கே உலகம் என்ற இடத்தின் பெயர், அவ்விடத்தோடு தொடர்பு கொண்டு வாழ்கின்ற மக்களுக்கு ஆகி வந்துள்ளது. எனவே இஃது 'இடவாகுபெயர்' எனப்படும்.

'கார்த்திகை பூத்தது'—இங்கே கார்த்திகை என்னும் காலத்தின் பெயர், அக் காலத்தில் மலர்ந்த பூவுக்கு ஆகி வந்துள்ளது. எனவே, இது 'காலவாகுபெயர்' எனப்படும்.

'வெற்றிலை நட்டான்'—இங்கே வெற்றிலை என்னும் சினைப்பொருளின் பெயர், அதனோடு தொடர்புடைய கொடி என்னும் முதற்பொருளுக்கு ஆகி வந்துள்ளது. எனவே, இது 'சினையாகு பெயர்' எனப்படும். (சினைப்பெயர், முதற்பெயருக்கு ஆகிவந்தால், அது சினையாகுபெயர் எனப்படும். முதற் பெயர், சினைப்பெயருக்கு ஆகிவந்தால், அது முதலாகுபெயர் அல்லது பொருளாகு பெயர் எனப்படும்.)

'வெள்ளை உழுதது'—இங்கே வெள்ளை என்னும் நிறப்பெயர், அந் நிறத்தினை உடைய காளைக்கு ஆகி வந்துள்ளது. எனவே, இது 'குணவாகுபெயர்' அல்லது பண்பாகுபெயர் எனப்படும்.

'பொங்கல் உண்டான்'—இங்கே பொங்குதல் என்ற தொழிலின் பெயர், அத் தொழிலை அடைந்த உணவுக்குப் பெயராக வந்துள்ளது. எனவே, இது

'தொழிலாகுபெயர்' எனப்படும். இங்ஙனமே வேறும் பல ஆகுபெயர்கள் வரும். வரும் வழிக் கண்டுகொள்க.

(அன்மொழித் தொகை)

வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமத்தொகை, உம்மைத்தொகை ஆகிய இவற்றில் ஒன்றனடியாகப் பிறந்து, இவையல்லாத வேறு சொற்களும் மறைந்து வருவது 'அன்மொழித்தொகை' எனப்படும்.

(அன்மொழித்தொகை = அல் + மொழி + தொகை-அல்லாத மொழிகளும் தொக்கு நிற்பது.)

வளைக்கை வந்தாள்

இங்கே, 'வளைக்கை' என்பது 'வளையலை அணிந்த கையை உடையவளாகிய பெண் வந்தாள்' என விரியும். அங்ஙனம் விரியும் பொழுது, **ஐ** என்ற இரண்டாம் வேற்றுமை உருபுடன், **பெண்** என்ற பிற சொல்லும் முன்பு மறைந்து நின்றமை தெரியவரும். எனவே, இஃது இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும்.

இங்கு, 'வளைக்கை' என்பது, 'வந்தாள்' என்ற சொல்லால் பெண் என்பதை உணர்த்தி அன்மொழித் தொகையாகியது. இங்ஙனமின்றி வளைக்கை என்பது தனித்து நின்று, 'வளையலை அணிந்த கை' என்ற அளவில் விரியுமானால், அப்பொழுது அஃது இரண்டாம் வேற்றுமை உருபும்

பயனும் உடன் தொக்க தொகை எனப்படும். இங் ஙனமே பிற தொகைகளும் அமையும்.

இங்ஙனம், இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையுள்ள, ஆறு வேற்றுமைத் தொகைகளின் புறத்தே, அன்மொழித் தொகை பிறக்கும்.

'தாழ்குழல் பாடினுள்' — இது, தாழும்–தாழ்ந்த–தாழ்கின்ற குழலினை உடைய பெண் பாடினுள் என விரியும். எனவே, இது வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும். (குழல் கூந்தல்.)

'கருங்குழல் சென்ருள்'—இது கருமையாகிய கூந்தலையுடைய பெண் சென்ருள் என விரியும். எனவே இது, பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும்.

'துடியிடை நின்ருள்' — இது, துடிபோலும் இடையினை உடைய பெண் நின்ருள் என விரியும். எனவே, இஃது உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும். (துடி–உடுக்கை.)

'தகரஞாழல்'—இது, தகரமும் ஞாழலும் கலந்துண்டாகிய சாந்து என விரியும். எனவே, இஃது உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும். (தகரஞாழல்-மணப் பொருள்கள்)

### ஆகுபெயருக்கும்—அன்மொழித் தொகைக்கும் வேறுபாடு

1. ஆகுபெயர், ஒரே சொல்லாக இருக்கும். அன்மொழித்தொகை, பல சொற்கள் சேர்ந்ததாக இருக்கும்.

2. ஆகுபெயர், பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் முதலாயவற்றின் அடியாகப் பிறக்கும். அன்மொழித்தொகை, வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகையின் அடியாகப் பிறக்கும்.

3. ஆகுபெயர், தொன்று தொட்டுத் தொடர்புடைய ஒன்றற்கு ஆகிவரும். அன்மொழித் தொகை, இடத்திற்கு ஏற்பப் புதிது புதிதாக அமைக்கப்பட்டு வரும்.

## 4. பொதுவினைகள்

கண்டேன் — சென்றேன்
வாழ்க — உண்க

'கண்டேன், சென்றேன்' என்ற வினைச்சொற்களில் இறந்த காலமும், தன்மை இடமும் தெரிகின்றன. ஆனால், திணையும் பாலும் தெரியவில்லை. எனவே, இவ் வினைச் சொற்கள் இருதிணைப் பொது வினைகளாகும்.

வாழ்க, உண்க } அவன்—அவள்—அவர்—அது—அவை, யான்-யாம்-நீ-நீவிர்

மேற்கண்டவாறு 'வாழ்க, உண்க' என்னும் வியங்கோள் வினைமுற்றுச் சொற்கள், இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும், ஒருமை பன்மைக்கும் பொதுவினைகளாக வரும்.

இங்ஙனம் இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும், ஒருமை பன்மைக்கும் பொதுவாக வரும் வினைச்சொற்களும், முக்காலங்களுக்கும், தன் வினை பிறவினைக்கும், உடன்பாட்டுவினை எதிர் மறைவினைக்கும், செய்வினை செயப்பாட்டுவினைக்கும், பெயரெச்சம் வினையெச்சத்திற்கும் பொதுவாக வரும் வினைச்சொற்களும் பொதுவினைகள் எனப்படும்.

தன்மை ஒருமை வினைமுற்றுக்களும், தன்மைப் பன்மை வினைமுற்றுக்களும், முன்னிலை ஒருமை வினைமுற்றுக்களும், முன்னிலைப் பன்மை வினைமுற்றுக்களும், வியங்கோள் வினைமுற்றுக்களும், வேறு–இல்லை–உண்டு என்னும் மூன்று வினைக்குறிப்பு முற்றுக்களும், பெயரெச்சங்களும், வினையெச்சங்களும், செய்யும் என்னும் முற்றும், யார்,எவன் என்னும் வினாவினைக்குறிப்பு முற்றுக்களும், மேலும் சில வினைச்சொற்களும் பொது வினைகளாக வரும்.

இனி, அவற்றைப்பற்றி விரிவாகக் காண்போம்.

(தன்மை ஒருமை வினைமுற்றுக்கள்)
(இருதிணைப் பொதுவினை)

| | |
|---|---|
| **யான் உண்டு (உண்டேன்)**<br>**யான் வந்து (வந்தேன்)**<br>**யான் சென்று (சென்றேன்)** | இறந்த காலம் |

யான் உண்கு (உண்பேன்)
யான் வருது (வருவேன்)
யான் சேறு (செல்வேன்)
} எதிர் காலம்

இங்கே, 'கு—டு—து—று' என்னும் குற்றியலுகர விகுதிகளை ஈற்றிலே உடைய தன்மை ஒருமைத் தெரிநிலை வினைமுற்றுச் சொற்கள், இறந்த காலத்திலும் எதிர்காலத்திலும் இருதிணைப் பொதுவினைகளாக வந்துள்ளன.

யான் உண்பல் (உண்+ப்+அல்) உண்பேன்.

இங்கு, 'அல்' என்னும் விகுதியை ஈற்றிலே உடைய தன்மை ஒருமைத் தெரிநிலை வினைமுற்றுச் சொல், எதிர்காலத்தில் இருதிணைப் பொதுவினையாக வந்துள்ளது.

யான் உண்டனன்
யான் உண்டனென்
யான் உண்டேன்
} இறந்த காலம்

யான் உண்ணாநின்றனன்
யான் உண்ணாநின்றனென்
யான் உண்ணாநின்றேன்
} நிகழ்காலம்

யான் உண்பன்
யான் உண்பென்
யான் உண்பேன்
} எதிர்காலம்

இங்கு, 'அன்—என்—ஏன்' என்னும் விகுதிகளை ஈற்றிலே உடைய தன்மை ஒருமைத் தெரிநிலை வினைமுற்றுச் சொற்கள், மூன்று காலங்களிலும் இருதிணைப் பொதுவினைகளாக வந்துள்ளன.

யான் தாரினன்
யான் தாரினென்
யான் தாரினேன்
} குறிப்பு வினைமுற்று

இங்கு, 'அன்-என்-ஏன்' என்னும் மூன்று விகுதிகளையும் ஈற்றிலே உடைய தன்மை ஒருமைக் குறிப்பு வினைமுற்றுச் சொற்கள், இருதிணைப் பொதுவினைகளாக வந்துள்ளன.

**இலக்கண விதி:** கு-டு-து-று என்னும் குற்றிய லுகர விகுதிகளும், அல்-அன்-என்-ஏன் என்னும் நான்கு மெய்யீற்று விகுதிகளும் ஆகிய இவ் வெட்டு விகுதிகளையும் இறுதியிலே உடைய சொற்கள், இருதிணை யிடத்தனவாகிய ஒருவன், ஒருத்தி, ஒன்று என்னும் மூன்று பால்களுக்குப் பொதுவாகிய, தன்மை ஒருமைத் தெரிநிலை வினை முற்றும், குறிப்புமுற்றுக்களும் ஆகும். (இவை இருதிணைப் பொதுவினைகளாகும்.)

(தன்மைப் பன்மை வினைமுற்றுக்கள்)

(இருதிணைப் பொதுவினை)

**உண்டனம்-உண்கின்றனம்-உண்பம்**
**உண்டாம்-உண்கின்றாம்-உண்பாம்** } யாம்-யானும் நீயும்

இங்கு, 'அம்-ஆம்' என்ற விகுதிகளை இறுதி யிலே உடைய தன்மைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்றுச் சொற்கள், தனித்தும், முன்னிலையை உளப்படுத்தியும் மூன்று காலங்களிலும் இரு திணைப் பொதுவினைகளாக வந்துள்ளன.

**உண்டனெம்-உண்கின்றனெம்-உண்பெம்**
**உண்டேம்-உண்கின்றேம்-உண்பேம்**
**உண்டோம்-உண்கின்றோம்-உண்போம்** } யாம்-யானும் அவனும்

இங்கு, 'எம்-ஏம்-ஓம்' என்ற விகுதிகளை இறுதியிலே உடைய தன்மைப் பன்மைத் தெரி நிலை வினைமுற்றுச் சொற்கள், தனித்தும், படர்க்-

கையை உளப்படுத்தியும் இருதிணைப் பொது வினைகளாக வந்துள்ளன.

**தாரினம்**
**தாரினும்** } யாம்-யானும் நீயும்

இங்கு, 'அம்-ஆம்' என்னும் விகுதிகளை இறுதியிலே உடைய தன்மைப் பன்மைக் குறிப்பு வினைமுற்றுச் சொற்கள், தனித்தும், முன்னிலையை உளப்படுத்தியும் இருதிணைப் பொதுவினைகளாக வந்துள்ளன.

**தாரினெம்**
**தாரினேம்**
**தாரினோம்** } யாம்-யானும் அவனும்

இங்கு, 'எம்-ஏம்-ஓம்' என்னும் விகுதிகளை இறுதியாக உடைய தன்மைப் பன்மைக் குறிப்பு வினைமுற்றுச் சொற்கள், தனித்தும், படர்க்கையை உளப்படுத்தியும் இருதிணைப் பொதுவினைகளாக வந்துள்ளன.

**உண்டும் (உண்டோம்)**
**வந்தும் (வந்தோம்)**
**சென்றும் (சென்றோம்)** } (இறந்த காலம்) யாம்-யானும் நீயும் அவனும்

**உண்கும் (உண்போம்)**
**வருதும் (வருவோம்)**
**சேறும் (செல்வோம்)** } (எதிர்காலம்) யாம்-யானும் நீயும் அவனும்

இங்கே, 'கும்-டும்-தும்-றும்' என்ற விகுதிகளை இறுதியிலே உடைய தன்மைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்றுச் சொற்கள், தனித்தும், முன்னிலையையும் படர்க்கையையும் உளப்படுத்தியும், இறந்த

காலத்திலும், எதிர்காலத்திலும், இருதிணைப் பொதுவினைகளாக வந்துள்ளன.

உண்டனம் }
உண்டாம் } யானும் அவனும்

உண்டனம் }
உண்டாம் } யானும் நீயும் அவனும்

இங்ஙனம், 'அம்–ஆம்' என்னும் விகுதிகளை இறுதியிலே உடைய தன்மைப் பன்மை வினை முற்றுச் சொற்கள், படர்க்கையை உளப்படுத்தியும், முன்னிலையையும் படர்க்கையையும் ஒருங்கு உளப்படுத்தியும் இருதிணைப் பொதுவினைகளாக மயங்கி வருதலும் உண்டு.

**இலக்கண விதி:** அம்–ஆம் என்னும் இருவிகுதிகளை இறுதியாக உடைய சொற்கள் முன்னிலையாரையும், எம்–ஏம்–ஓம் என்னும் விகுதிகளை இறுதியாக உடையசொற்கள் படர்க்கையாரையும், கும்–டும்–தும்–றும் என்னும் விகுதிகளை இறுதியாக உடைய சொற்கள் முன்னிலை, படர்க்கை என்னும் ஈரிடத்தாரையும், தன்னுடன் கூட்டும் உளப்பாட்டுத்தன்மைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்றுச் சொற்களும், குறிப்பு வினைமுற்றுச்சொற்களுமாகும். இவை இருதிணைக்கும் பொதுவினைகளாகும்.

மேலும், பெயருடனே அன்றி, 'உண்டு வந்தேன்', 'உண்டும் வந்தேம்', என வினையுடன் முடியும் தன்மை ஒருமை–பன்மை வினைமுற்றுக்களும், 'நீயும் அவனும் உண்டீர்', என முன்னிலை

புடன் படர்க்கை கூடியபொழுது வரும் முன்னிலை வினைமுற்றுக்களும், இருதிணைப் பொதுவினைகளேயாகும்.

(முன்னிலை ஒருமை வினைமுற்றுக்கள்)

(இருதிணைப் பொதுவினை)

**உண்டனை - உண்டாய் - உண்டி (இறந்தகாலம்)**
**உண்கின்றனை - உண்கின்றாய் - உண்ணுநின்றி (நிகழ்காலம்)**
**உண்பை - உண்பாய் - சேறி (எதிர் காலம்)** } நீ

இங்கு, 'ஐ—ஆய்—இ' என்னும் மூன்று விகுதிகளையும் இறுதியாக உடைய முன்னிலை ஒருமைத் தெரிநிலை வினைமுற்றுச் சொற்கள், இருதிணைக்கும் பொதுவினைகளாக வந்துள்ளன.

**வில்லினை - வில்லாய் - வில்லி (நீ)**

இங்கு, 'ஐ—ஆய்—இ' என்னும் மூன்று விகுதிகளையும் இறுதியாக உடைய முன்னிலை ஒருமைக் குறிப்பு வினைமுற்றுச் சொற்கள், இருதிணைக்கும் பொதுவினைகளாக வந்துள்ளன.

**நட - வா - கேள் - அஃகு**
**நடவாய் - வாராய் - கேளாய் - அஃகாய்** } நீ

மேற்காட்டியவாறு விகுதி குன்றியும், குன்றாமலும் நிற்பனவாகிய இருபத்து மூன்று ஈற்று முன்னிலை ஏவலொருமைத் தெரிநிலை வினைமுற்றுச் சொற்களும் இருதிணைப் பொதுவினைகளாகும்.

**உண்ணல் - உண்ணேல் - மருல் (நீ)**

இங்ஙனம், 'அல்—ஏல்—ஆல்' என்ற விகுதிகளை ஈற்றிலே உடைய எதிர்மறை ஏவலொருமை வினை

முற்றுச் சொற்களும் இருதிணைப் பொதுவினை களாகும். இவ்வெதிர்மறை ஏவலொருமை வினை முற்றுக்கள், உண்ணாதே, உண்ணாதி எனவும் வரும். அவையும் இருதிணைப் பொதுவினை களாகும்.

**இலக்கண விதி:** ஐ, ஆய், இ என்னும் மூன்று விகுதிகளை இறுதியில் உடைய சொற்களும், விகுதி குன்றியும், குன்றாதும் ஏவலிலே வரும் இருபத்து மூன்று ஈற்றுச் சொற்களும், ஒருவன், ஒருத்தி, ஒன்று என்னும் மூன்று பால்களுக்கும் பொதுவாகிய முன்னிலை ஒருமை வினைமுற்றும், குறிப்பு முற்றுக்களும் ஆகும். (இவை இரு திணைப் பொதுவினைகளாகும்.)

(முன்னிலைப் பன்மை வினை முற்றுக்கள்)
(இருதிணைப் பொதுவினை)

| | | |
|---|---|---|
| **உண்டனிர்-உண்டீர்** | **(இறந்த காலம்)** | **நீவிர்** |
| **உண்கின்றனிர்-உண்கின்றீர்** | **(நிகழ் காலம்)** | |
| **உண்பிர்-உண்பீர்** | **(எதிர் காலம்)** | |

இங்கு, 'இர்–ஈர்' என்ற இரண்டு விகுதிகளை யும் இறுதியில் உடைய முன்னிலைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்றுச் சொற்கள், இருதிணைப் பொதுவினைகளாக வந்துள்ளன.

**குழையினிர்—குழையீர் (நீவிர்)**

இங்கு, 'இ—ஈர்' என்ற இரண்டு விகுதிகளையும் இறுதியில் உடைய முன்னிலைப் பன்மைக் குறிப்பு வினைமுற்றுச் சொற்கள், இருதிணைப் பொதுவினை களாக வந்துள்ளன.

**உண்மின்—உண்ணீர்—உண்ணும் (நீவிர்)**

இங்கு, 'மின்—ஈர்—உம்' என்ற விகுதிகளை இறுதியில் உடைய முன்னிலைப் பன்மை ஏவல் வினைமுற்றுச் சொற்கள், இருதிணைப் பொதுவினைகளாக வந்துள்ளன.

**இலக்கண விதி:** இர்—ஈர் என்ற இரண்டு விகுதிகளையும் இறுதியில் உடைய சொற்கள் இருதிணைக்கும் பொதுவாகிய முன்னிலைப் பன்மை வினை முற்றும், குறிப்பு முற்றுமாகும். மின் விகுதியை இறுதியில் உடைய சொற்கள் முன்னிலைப் பன்மை ஏவல் வினைமுற்றாகும்.

(வியங்கோள் வினைமுற்றுக்கள்)
(இருதிணை ஐம்பால் மூவிடப் பொதுவினை)

வாழ்க, வாழிய, வாழியர் } அவன்—அவள்—அவர்—அது—அவை
யான்—யாம்—நீ—நீவிர்

இங்கு, 'க—இய—இயர்' என்பனவற்றை இறுதியிலே உடைய வியங்கோள் வினைமுற்றுச் சொற்கள், மூன்றிடங்களிலும், ஐம்பால்களிலும் வரும் பொதுவினைகளாகும்.

**இலக்கண விதி:** க, ய என்னும் இரண்டு உயிர் மெய்களையும், ரகர ஒற்றினையும் இறுதியாக உடைய வியங்கோள் வினைமுற்றுக்கள், மூன்று இடங்களிலும் ஐம்பால்களிலும் வரும்.

(வேறு—இல்லை—உண்டு)
(இருதிணை ஐம்பால் மூவிடப் பொதுவினை)

**வேறு**
**இல்லை**
**உண்டு** } அவன் - அவள் - அவர் - அது - அவை
யான் - யாம் - நீ - நீவிர்

'வேறு—இல்லை—உண்டு' என்ற மூன்று குறிப்பு வினைமுற்றுச் சொற்கள், ஐம்பால்களிலும், மூன்று இடங்களிலும் வரும் பொது வினைகளாகும்.

நீ போதல் **வேண்டும்**
சோறு உண்ணத் **தகும்**
வஞ்சரை அஞ்சப் **படும்**

மேற்கண்ட எடுத்துக்காட்டுக்களில் உள்ள 'வேண்டும்—தகும்—படும்' என்ற சொற்கள் தேற்றப் பொருளில், ஐம்பால் மூவிடத்திற்கும் உரியனவாகிப் பொதுவினைகளாக வரும்.

**இலக்கண விதி :** வேறு — இல்லை — உண்டு என்னும் மூன்று குறிப்பு வினைமுற்றுக்கள், ஐம்பாலுக்கும், மூவிடத்திற்கும் உரியனவாம்.

(பெயரெச்சவினை வினைக்குறிப்புக்கள்)

(இருதிணைப் பொதுவினை)

**உண்ட-உண்கின்ற-உண்ணும்—சாத்தன்** (வினைமுதல்)
**உண்ட—உண்கின்ற—உண்ணும்—கலம்** (கருவி)
**உண்ட—உண்கின்ற—உண்ணும்— இடம்** (நிலம்)
**உண்ட—உண்கின்ற—உண்ணும்— ஊண்** (தொழில்)
**உண்ட—உண்கின்ற—உண்ணும்— நாள்** (காலம்)
**உண்ட—உண்கின்ற—உண்ணும்— சோறு** (செயப்படு பொருள்)

மேற்கண்ட எடுத்துக்காட்டுக்களில் 'செய்த–செய்கின்ற–செய்யும்' என்னும் வாய்பாட்டில் அடங்கும், அறுவகைப் பொருட் பெயர்களும் எஞ்ச நின்ற, 'உண்ட–உண்கின்ற–உண்ணும்' என்ற முக்காலப் பெயரெச்சங்களும் இருதிணைப் பொதுவினைகளாகும்.

| | |
|---|---|
| **கரிய** | குதிரை, **மக்கள்** |
| **உண்ணுத** | **மக்கள்**, குதிரை |
| **இல்லாத** | பொருள், **மக்கள்** |

மேற்கண்ட எடுத்துக்காட்டுக்களில் உள்ள 'கரிய' என்ற குறிப்புவினைப் பெயரெச்சமும், 'உண்ணுத' என்ற எதிர்மறைத் தெரிநிலை வினைப் பெயரெச்சமும், 'இல்லாத' என்ற எதிர் மறைக் குறிப்புவினைப் பெயரெச்சமும் இரு திணைப் பொதுவினைகளாகும்.

**இலக்கண விதி :** செய்த–செய்கின்ற–செய்யும் என்ற மூவகைப்பட்ட சொல்லின்கண், முறையே இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று காலங் களும் தோன்றி, வினை முற்றுதற்கு வேண்டும் பால் ஒன்றும் தோன்ருது, அப் பாலுடன் செய்ப வன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படு பொருள் என்னும் அறுவகைப் பொருட் பெயரும் ஒழிய நிற்பன, பெயரெச்சவினை வினைக்குறிப்புக் களாகும். (இவை இருதிணைப் பொதுவினை களாகும்.)

(வினையெச்சவினை வினைக்குறிப்புக்கள்)

(இருதிணைப் பொதுவினை)

உண்டு } வந்தான்–வந்தது (உடன்பாடு)
உண்டு } வாரான் –வாராது (எதிர்மறை)

மேற்கண்டவாறு உடன்பாட்டிலும், எதிர்மறையிலும் வருகின்ற 'உண்டு' என்னும் தெரிநிலை வினையெச்சம், இருதிணைக்கும் பொதுவினையாக வரும்.

அருளின்றி } செய்தான்–செய்தது (உடன்பாடு)
அருளின்றி } செய்யான்-செய்யாது (எதிர்மறை)

மேற்கண்டவாறு உடன்பாட்டிலும், எதிர்மறையிலும் வருகின்ற 'அருளின்றி' என்னும் குறிப்பு வினையெச்சம், இருதிணைக்கும் பொது வினையாக வரும்.

இங்ஙனமே, 'செய்து–செய்பு' என வருகின்ற வினையெச்ச வாய்பாட்டுள் அடங்கும் வினையெச்சச் சொற்கள் எல்லாம் இருதிணைப் பொதுவினைகளாகும்.

**இலக்கண விதி:** செய்பு, செய்து முதலியவாக விதந்து சொல்லப்படும் வாய்பாடுகளிலே தொழிலுங் காலமும் விளங்கி, வினை முற்றுதற்கு வேண்டும் பால் ஒன்றும் தோன்ருமல், அப்பாலுடனே வினை ஒழிய நிற்பன, வினையெச்ச வினை வினைக்குறிப்புக்களாகும். இவை இருதிணைப் பொதுவினை எனப்படும்.

(செய்யும்–என்னும் வாய்பாட்டு வினைமுற்று)
(படர்க்கை நான்கு பாலுக்கும் பொதுவினை)

**அவன் உண்ணும்–அவள் உண்ணும்**
**அது உண்ணும்–அவை உண்ணும்**

இங்கே, செய்யும் என்னும் எச்சத்தால் வந்த செய்யும் என்னும் வாய்பாட்டுள் அடங்கும் 'உண்ணும்' என்ற வினைமுற்றுச் சொல், பலர் பால் ஒழிந்த படர்க்கை நான்கு பால்களிலும் இரு திணைப் பொதுவினையாக வந்துள்ளது.

**இலக்கண விதி:** செய்யும் என்னும் எச்சத்தால் ஆகும் செய்யும் என்னும் முற்றானது, உயர் திணைப் பன்மைப் படர்க்கையிலும், முன்னிலை யிலும், தன்மையிலும் வாராது. எனவே, பலர்பால் ஒழிந்த படர்க்கை நான்கு பால்களிலும் வந்து இருதிணைப் பொதுவினையாகும்.

(யார்—என்னும் வினாவினைக் குறிப்புமுற்று)

(உயர்திணை முப்பாற் பொதுவினை)

**அவன் யார்—அவள் யார்—அவர் யார்**

இங்கு, 'யார்' என்னும் வினாவினைக் குறிப்பு முற்று, உயர்திணை முப்பால்களுக்கும் பாற் பொதுவினையாக வந்துள்ளது.

**அஃது யார்—அவை யார்**
**யான் யார்—யாம் யார்**
**நீ யார்—நீவிர் யார்**

இங்கு, 'யார்' என்னும் வினாவினைக் குறிப்பு முற்று, புதியன புகுதலாக அஃறிணை இரு பால் களிலும், தன்மை முன்னிலை ஆகிய ஈரிடத்திலும் பொதுவினையாக வந்துள்ளது. எனவே, யார் என்னும் வினாவினைக் குறிப்புமுற்று, புதிய வழக்குப்படி திணை பால் இடங்களுக்குப் பொது வினையாகும்.

**இலக்கண விதி:** வினுப் பொருளைத் தரும் யார் என்னும் வினுவினைக் குறிப்புமுற்று, உயர் திணை முப்பால்களுக்கும் பொதுவினையாக வரும்.

புதியன புகுதலாக அஃறிணை இருபால்களி லும், தன்மை, முன்னிலைகளிலும் பொதுவினையாக வரும்.

(எவன்–என்னும் வினுவினைக் குறிப்புமுற்று)

(அஃறிணை இருபாற் பொதுவினை)

**அஃதெவன்–அவையெவன்**

இங்கு, 'எவன்' என்னும் வினுவினைக் குறிப்பு முற்று, அஃறிணை இருபால்களுக்கும் பொது வினையாக வந்துள்ளது.

எவன் என்பது, 'என்–என்ன–என்னை' என விகாரப்பட்டும் பாற்பொதுவினையாக வரும்.

**இலக்கண விதி:** வினுப் பொருளைத் தரும் எவன் என்னும் வினுவினைக் குறிப்புமுற்று, அஃறிணை இருபாலுக்கும் பொதுவினையாக வரும்.

(குறிப்பு: வேறு–இல்லை–உண்டு என்னும் மூன்று குறிப்புவினை முற்றுக்களும், யார்–எவன் என்னும் இரண்டு வினுவினைக் குறிப்பு முற்றுக் களும் பின்னீடும் விளக்கப்பட்டுள்ளன.)

(முக்காலங்களுக்குமுரிய பொதுவினைகள்)

**உண்ப — உண்ணும் — உண்ணு**

'உண்ப' என்னும் பகர விகுதி வினைச் சொல், 'உண்பார்–உண்டார்' என எதிர்காலத் திற்கும், இறந்த காலத்திற்கும் பொதுவினையாக வரும்.

'உண்ணும்' என்ற செய்யும் என்னும் வாய்பாட்டு முற்றுவிகுதி, நிகழ் காலத்திற்கும், எதிர் காலத்திற்கும் பொதுவினையாக வரும்.

'உண்ணு' என்னும் எதிர்மறை, முக்காலத்திற்கும் பொதுவினையாக வரும்.

(தன்வினைக்கும்—பிறவினைக்கும்
பொதுவினை)

'வெளுத்தான்' என்பது, தான் வெளுப்படைந்தான் என்றும், தான் பிறிதொன்றை வெளுப்படையச் செய்தான் என்றும், தன்வினைக்கும், பிறவினைக்கும் பொதுவினையாக வரும்.

(உடன்பாட்டிற்கும்—எதிர்மறைக்கும்
பொதுவினை)

'சாவான்' என்பது இறப்பான் என்றும், இறக்க மாட்டான் என்றும் உடன்பாட்டிற்கும், எதிர்மறைக்கும் பொதுவினையாக வரும்.

(செய்வினைக்கும்—செயப்பாட்டுவினைக்கும்
பொதுவினை)

'புலி கொன்ற யானை' என்பது, புலியைக் கொன்ற யானை என்றும், புலியால் கொல்லப்பட்ட யானை என்றும் செய்வினைக்கும், செயப்பாட்டு வினைக்கும் பொதுவினையாக வரும்.

(பெயரெச்சத்திற்கும், வினையெச்சத்திற்கும்
பொதுவினை)

'தேடிய சாத்தன்—தேடிய வந்தான்' என்பவற்றிலுள்ள 'தேடிய' என்பது, பெயரெச்சம்,

வினையெச்சம் இரண்டிற்கும் பொதுவினையாக வந்துள்ளது.

இவை போல்வன பிறவும் பொதுவினைகளாக வரும்.

## 5. உருபு மயக்கம்

### மன்னனை மாலையிட்டாள்

### 'இந் நகர்க்கே வாழ்கின்றோம்'

'மன்னனை மாலையிட்டாள்' என்ற தொடர், 'மன்னனுக்கு மாலையிட்டாள்' என்று இருக்க வேண்டும். இங்கே, **கு** என்ற நான்காம் வேற்றுமை உருபு இருக்க வேண்டிய இடத்தில், **ஐ** என்ற இரண்டாம் வேற்றுமை உருபு மயங்கி வந்துள்ளது.

'இந் நகர்க்கே வாழ்கின்றோம்' என்ற தொடர், 'இந் நகரின்**கண்** வாழ்கின்றோம்' என்று இருக்க வேண்டும். இங்கே, **கண்** என்ற ஏழாம் வேற்றுமை உருபு இருக்க வேண்டிய இடத்தில், **கு** என்ற நான்காம் வேற்றுமை உருபு மயங்கி வந்துள்ளது.

இங்ஙனம், ஒரு வேற்றுமை உருபு இருக்க வேண்டிய இடத்தில், வேறொரு வேற்றுமை உருபு மயங்கி வந்தாலும், பொருள் மாறுபடாமல், எந்த வேற்றுமை உருபு இருக்க வேண்டுமோ, அந்த வேற்றுமை உருபின் பொருளையே தருவது

'உருபு மயக்கம்' எனப்படும். இதனை 'வேற்றுமை மயக்கம்' எனவும் கூறுவர்.

**இலக்கண விதி:** ஒரு வேற்றுமைப் பொருள் மற்றொரு வேற்றுமை உருபால் சொல்லப்பட்டாலும், அப் பொருள் சென்ற வழியே அவ் வேற்றுமை உருபு சேரும்.

## 6. காலங்காட்டும் உறுப்புக்கள்

### (இடைநிலை—விகுதி—பகுதி)

(இறந்தகால இடைநிலைகள்)

**நடந்தான், உண்டான், சென்றான், உறங்கினான்**

மேற்கண்ட வினைச்சொற்கள் எல்லாம் இறந்த காலத்தை உணர்த்துகின்றன. இச் சொற்களில் இறந்த காலத்தைக் காட்டும் உறுப்புக்கள் இடைநிலைகள் ஆகும். அவை ***த், ட், ற், இன்*** என்பன.

நடந்தான் (நட+த்(ந்)+த்+ஆன்) என்பதில் 'த்' இடைநிலை இறந்த காலம் காட்டுகிறது.

உண்டான் (உண்+ட்+ஆன்) என்பதில் 'ட்' இடைநிலை இறந்த காலம் காட்டுகிறது.

சென்றான் (செல்+ற்+ஆன்) என்பதில் 'ற்' இடைநிலை இறந்த காலம் காட்டுகிறது.

உறங்கினான் (உறங்கு+இன்+ஆன்) என்பதில் 'இன்' இடைநிலை இறந்த காலம் காட்டுகிறது.

***த், ட், ற், இன்*** என்ற இவ்விடைநிலைகள், ஐம்பால் மூவிடங்களிலும் இறந்தகாலம் காட்டும்.

வந்தான்—கண்டான்<br>நின்றன்—தும்மினன் } த்-ட்-ற்-இன் என்ற இறந்தகால இடைநிலைகள், படர்க்கை ஆண் பாலில் வந்துள்ளன.

வந்தாள்—கண்டாள்<br>நின்றள்—தும்மினள் } த்-ட்-ற்-இன் என்ற இறந்தகால இடைநிலைகள், படர்க்கைப் பெண் பாலில் வந்துள்ளன.

வந்தார் — கண்டார்<br>நின்றர் — தும்மினர் } த்-ட்-ற்-இன் என்ற இறந்தகால இடைநிலைகள், படர்க்கைப் பலர் பாலில் வந்துள்ளன.

வந்தது — கண்டது<br>நின்றது — தும்மினது } த்-ட்-ற்-இன் என்ற இறந்தகால இடைநிலைகள், படர்க்கை ஒன்றன் பாலில் வந்துள்ளன.

வந்தன — கண்டன<br>நின்றன — தும்மின } த்-ட்-ற்-இன் என்ற இறந்தகால இடைநிலைகள், படர்க்கைப் பலவின் பாலில் வந்துள்ளன.

இங்ஙனம், த்—ட்—ற்—இன் என்ற இடைநிலைகள், படர்க்கை ஐம்பால்களில் இறந்த காலம் காட்டும் இடைநிலைகளாக வரும்.

வந்தேன்—கண்டேன்<br>நின்றேன்-தும்மினேன் } த்-ட்-ற்-இன் என்ற இறந்தகால இடைநிலைகள், தன்மை ஒருமையில் வந்துள்ளன.

வந்தேம்—கண்டேம்<br>நின்றேம்—தும்மினேம் } த்-ட்-ற்-இன் என்ற இறந்தகால இடைநிலைகள், தன்மைப் பன்மையில் வந்துள்ளன.

இங்ஙனம், த்—ட்—ற்—இன் என்ற இடைநிலைகள், தன்மை ஒருமையிலும், பன்மையிலும் இறந்தகாலம் காட்டும் இடைநிலைகளாக வரும்.

வந்தாய் — கண்டாய்<br>நின்றய் — தும்மினய் } த்-ட்-ற்-இன் என்ற இறந்தகால இடைநிலைகள், முன்னிலை ஒருமையில் வந்துள்ளன.

| | | |
|---|---|---|
| **வந்தீர் — கண்டீர்** | | த்-ட்-ற்-இன் என்ற இறந்தகால இடைநிலைகள், முன்னிலைப் பன்மையில் வந்துள்ளன. |
| **நின்றீர் — தும்மினீர்** | | |

இங்ஙனம், த், ட், ற், இன் என்ற இடைநிலைகள், முன்னிலை ஒருமையிலும், பன்மையிலும் இறந்த காலம் காட்டும் இடை நிலைகளாக வரும்.

சிறுபான்மை 'இன்' இடைநிலை, 'எஞ்சியது' என்ற சொல்லில் (ன்) கடைக் குறைந்தும், 'போனது' என்ற சொல்லில் (இ) முதல் குறைந்தும் வரும்.

**இலக்கண விதி:** தகர டகர றகர மெய்களும், 'இன்' என்னும் குற்றெழுத்தும், ஐம்பால், மூவிடங்களிலும் இறந்த காலத்தைக் காட்டும் வினைப்பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும்.

> **தடறவொற் றின்னே யைம்பான் மூவிடத்**
> **திறந்த காலந் தருந்தொழி லிடைநிலை.**
>
> *(ந-நூற்பா 142.)*

(நிகழ்கால இடைநிலைகள்)

**உண்ணாநின்றான்–உண்கின்றான்–உண்கிறான்**

மேற்கண்ட வினைச்சொற்கள் நிகழ்காலத்தைக் காட்டுகின்றன. இச் சொற்களில் நிகழ்காலத்தைக் காட்டும் உறுப்புக்கள் இடைநிலைகளாகும். அவை, ***ஆநின்று, கின்று, கிறு*** என்பன.

உண்ணாநின்றான் (உண் + ஆநின்று + ஆன்) என்பதில் 'ஆநின்று' நிகழ்கால இடைநிலையாகும்.

உண்கின்றான் (உண் + கின்று + ஆன்) என்பதில் 'கின்று' நிகழ்கால இடைநிலையாகும்.

உண்கிறான் (உண் + கிறு + ஆன்) என்பதில் 'கிறு' நிகழ்கால இடைநிலையாகும்.

'ஆநின்று, கின்று, கிறு' என்ற இவ்விடைநிலைகள், ஐம்பால் மூவிடங்களிலும் நிகழ்காலங் காட்டும்.

**நடவாநின்றான்-நடக்கின்றான்-நடக்கிறான்**

இவற்றில், 'ஆநின்று, கின்று, கிறு' என்ற நிகழ்கால இடைநிலைகள், படர்க்கை ஆண்பாலில் வந்துள்ளன.

**நடவாநின்றாள்-நடக்கின்றாள்-நடக்கிறாள்**

இவற்றில், 'ஆநின்று, கின்று, கிறு' என்ற நிகழ்கால இடைநிலைகள், படர்க்கைப் பெண்பாலில் வந்துள்ளன.

**நடவாநின்றார்-நடக்கின்றார்-நடக்கிறார்**

இவற்றில், 'ஆநின்று, கின்று, கிறு' என்ற நிகழ்கால இடைநிலைகள், படர்க்கைப் பலர்பாலில் வந்துள்ளன.

**நடவாநின்றது-நடக்கின்றது-நடக்கிறது**

இவற்றில், 'ஆநின்று, கின்று, கிறு' என்ற நிகழ்கால இடைநிலைகள், படர்க்கை ஒன்றன்பாலில் வந்துள்ளன.

**நடவாநின்றன-நடக்கின்றன-நடக்கிறவை**

இவற்றில், 'ஆநின்று, கின்று, கிறு' என்ற நிகழ்கால இடைநிலைகள், படர்க்கைப் பலவின் பாலில் வந்துள்ளன.

**நடவாநின்றேன்—நடக்கின்றேன்—நடக்கிறேன்**
**நடவாநின்றோம்—நடக்கின்றோம்—நடக்கிறோம்**

இவற்றில், 'ஆநின்று, கின்று, கிறு' என்ற நிகழ்கால இடைநிலைகள், தன்மை ஒருமையிலும், பன்மையிலும் வந்துள்ளன

**நடவாநின்றாய்—நடக்கின்றாய்—நடக்கிறாய்**
**நடவாநின்றீர்—நடக்கின்றீர்—நடக்கிறீர்**

இவற்றில், 'ஆநின்று, கின்று, கிறு' என்ற நிகழ்கால இடைநிலைகள், முன்னிலை ஒருமையிலும், பன்மையிலும் வந்துள்ளன.

**இலக்கண விதி:** ஆநின்று என்பதும், கின்று என்பதும், கிறு என்பதும் ஐம்பால் மூவிடங்களினும் நிகழ்காலத்தைக் காட்டும் வினைப் பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும்.

**ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்**
**ஐம்பா னிகழ்பொழு தறைவினை யிடைநிலை.**

*(ந-நூற்பா 143.)*

(எதிர்கால இடைநிலைகள்)

**உண்பான்–செல்வான்**

மேற்கண்ட வினைச்சொற்கள் எதிர்காலத்தைக் காட்டுகின்றன. இச் சொற்களில் எதிர்காலத்தைக் காட்டும் உறுப்புக்கள் இடைநிலைகளாகும். அவை ***ப்–வ்*** என்பன.

உண்பான் (உண்+ப்+ஆன்) என்பதில் 'ப்' இடைநிலை எதிர்காலம் காட்டுகிறது.

செல்வான் (செல்+வ்+ஆன்) என்பதில் 'வ்' இடைநிலை எதிர்காலம் காட்டுகிறது.

'ப்–வ்' என்ற இவ்விடைநிலைகள் ஐம்பால் மூவிடங்களிலும் எதிர்காலங் காட்டும்.

**நடப்பான்-நடப்பாள்-நடப்பார்**
**நடப்பது-நடப்பன**

இவற்றில், 'ப்' என்ற எதிர்கால இடைநிலை படர்க்கை ஐம்பாலில் வந்துள்ளது.

**வருவான்-வருவாள்-வருவார்**

**வருவது-வருவன**

இவற்றில், 'வ்' என்ற எதிர்கால இடைநிலை படர்க்கை ஐம்பாலில் வந்துள்ளது.

**நடப்பேன்-வருவேன்**

இவற்றில், 'ப்–வ்' என்ற எதிர்கால இடைநிலைகள் தன்மை ஒருமையில் வந்துள்ளன.

**நடப்போம்-வருவோம்**

இவற்றில், 'ப்–வ்' என்ற எதிர்கால இடைநிலைகள் தன்மைப் பன்மையில் வந்துள்ளன.

**நடப்பாய்-வருவாய்**

இவற்றில், 'ப்–வ்' என்ற எதிர்கால இடைநிலைகள் முன்னிலை ஒருமையில் வந்துள்ளன.

**நடப்பீர்-வருவீர்**

இவற்றில், 'ப்-வ்' என்ற எதிர்கால இடைநிலைகள் முன்னிலைப் பன்மையில் வந்துள்ளன.

**இலக்கண விதி:** பகர மெய்யும், வகர மெய்யும் ஐம்பால் மூவிடங்களிலும் எதிர்காலத்தைக் காட்டும் வினைப் பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும். இம் முக்கால இடைநிலைகள், சில முற்று வினை எச்சவினைகட்கு இலவாம்.

**பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழு**
**திசைவினை யிடைநிலை யாமிவை சிலவில.**

*(ந-நூற்பா 144.)*

(காலங்காட்டும் விகுதிகள்—பகுதிகள்)

இதுவரை, வினைச்சொற்களில் இடைநிலைகள் காலங்காட்டுவதைப் பார்த்தோம். இனி, விகுதிகளும், ஒருசில பகுதிகளும் காலங்காட்டுவதைப் பற்றிப் பார்ப்போம்.

**நான் சென்று** (நான் சென்றேன்)
**நாம் சென்றும்** (நாம் சென்றோம்)

**நான் சேறு** (நான் செல்வேன்)
**நாம் சேறும்** (நாம் செல்வோம்)

இங்கு, 'று' என்ற தன்மை ஒருமை விகுதியும், 'றும்' என்ற தன்மைப் பன்மை விகுதியும் இறந்த காலத்தையும், எதிர் காலத்தையும் காட்டின.

**நான் வந்து** (நான் வந்தேன்)
**நாம் வந்தும்** (நாம் வந்தோம்)

**நான் வருது** (நான் வருவேன்)
**நாம் வருதும்** (நாம் வருவோம்)

இங்கே, 'து' என்ற தன்மை ஒருமை விகுதியும், 'தும்' என்ற தன்மைப் பன்மை விகுதியும் இறந்த காலத்தையும், எதிர்காலத்தையும் காட்டின.

**நான் உண்டு (நான் உண்டேன்)**
**நாம் உண்டும் (நாம் உண்டோம்)**

இங்கு, 'டு' என்ற தன்மை ஒருமை விகுதியும், 'டும்' என்ற தன்மைப் பன்மை விகுதியும் இறந்த காலங் காட்டின.

**நான் உண்கு (நான் உண்பேன்)**
**நாம் உண்கும் (நாம் உண்போம்)**

இங்கே, 'கு' என்ற தன்மை ஒருமை விகுதியும் 'கும்' என்ற தன்மைப் பன்மை விகுதியும் எதிர் காலங் காட்டின.

**நீவிர் உண்மின்**
**நீவிர் உண்ணுதிர்**
**நீவிர் உண்ணீர்**
**நீவிர் உண்ணும்**
} **(நீவிர் உண்பீர்)**

**நீ உண்ணாய் (நீ உண்பாய்)**

இங்கு, 'மின்—இர்—ஈர்—உம்' என்ற முன்னிலை ஏவற் பன்மை விகுதிகளும், 'ஆய்' என்ற முன்னிலை ஏவலொருமை விகுதியும் எதிர்காலம் காட்டின.

| | | |
|---|---|---|
| அவன் வாழ்க | அவன் வாழிய | அவன் வாழியர் |
| அவள் வாழ்க | அவள் வாழிய | அவள் வாழியர் |
| அவர் வாழ்க | அவர் வாழிய | அவர் வாழியர் |
| அது வாழ்க | அது வாழிய | அது வாழியர் |
| அவை வாழ்க | அவை வாழிய | அவை வாழியர் |

இங்கே, 'க–இய–இயர்' என்னும் வியங்கோள் விகுதிகள், இருதிணை ஐம்பாலிலும் எதிர்காலம் காட்டின.

**நான் வாழ்க—நான் வாழிய—நான் வாழியர்**
**நாம் வாழ்க—நாம் வாழிய—நாம் வாழியர்**

இங்கே, 'க–இய–இயர்' என்னும் வியங்கோள் விகுதிகள், தன்மை ஒருமையிலும், பன்மையிலும் எதிர்காலம் காட்டின.

**நீ வாழ்க—நீ வாழிய—நீ வாழியர்**
**நீவிர் வாழ்க—நீவிர் வாழிய—நீவிர் வாழியர்**

இங்கே, 'க–இய–இயர்' என்னும் வியங்கோள் விகுதிகள், முன்னிலை ஒருமையிலும், பன்மையிலும் எதிர்காலம் காட்டின.

**நீ சேறி** (நீ செல்வாய்)
**அவர் சென்மார்** (அவர் செல்வார்)

இங்கு, 'இ' என்ற முன்னிலை ஒருமை விகுதியும், 'மார்' என்ற பலர் பால் விகுதியும் எதிர்காலம் காட்டின. 'நீ வருதி' (நீ வருகின்றாய்) என 'இகர' விகுதி சிறுபான்மை நிகழ்காலமும் காட்டும்.

**அவர் உண்ப** (அவர் உண்டார், அவர் உண்பார்)

இங்கே, 'ப' என்ற பலர் பால் விகுதி இறந்த காலத்தையும், எதிர்காலத்தையும் காட்டியது.

**அவன் உண்ணும்** (அவன் உண்கிறான்)
**அவள் உண்ணும்** (அவள் உண்கிறாள்)

**அவன் உண்ணும்** (அவன் உண்பான்)
**அவள் உண்ணும்** (அவள் உண்பாள்)

இங்கே, 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றில் வரும் 'உம்' என்ற விகுதி, நிகழ் காலமும், எதிர்காலமும் காட்டியது.

**உண்ணு (உண் + ண் + ஆ)** } **முக்காலம்**
**தின்னு (தின் + ன் + ஆ)**

இங்கு, 'ஆ' என்னும் எதிர்மறை விகுதி முக்காலமும் காட்டும்.

இதுவரை, வினைச்சொற்களில் விகுதி காலங் காட்டுவதைப் பார்த்தோம். இனி, ஒரு சில பகுதி இரட்டித்துக் காலங்காட்டுவதைப் பார்ப்போம்.

**புக்கான்** (புகு + ஆன்) புகு–புக்கு
**தொட்டான்** (தொடு + ஆன்) தொடு-தொட்டு
**பெற்றான்** (பெறு + ஆன்) பெறு-பெற்று

இங்கே, 'புகு' என்ற பகுதி 'புக்கு' எனவும், 'தொடு' என்ற பகுதி 'தொட்டு' எனவும், 'பெறு' என்ற பகுதி 'பெற்று' எனவும், பகுதியில் உள்ள 'க்–ட்–ற்' என்ற ஒற்றெழுத்துக்கள் இரட்டித்து இறந்த காலம் காட்டின.

எனவே, 'கு–டு–று' என்னும் மூன்று உயிர் மெய்யீற்றுச் சில குறிலிணைப் பகுதிகள், தம் ஒற்று இரட்டித்து இறந்தகாலங் காட்டும்.

இவை தவிர, வேறு சில இடைநிலைகள் இறந்த காலமும், நிகழ்காலமும், எதிர்காலமும் காட்டும். அவை வருமாறு:

**போயது** (போ + ய் + அ + து)
**உண்ணுகிடந்தான்** (உண் + ஆகிட்ந்து + ஆன்)
**உண்ணுவிருந்தான்** (உண் + ஆவிருந்து + ஆன்)

4

இங்கு, 'ய்' என்ற இடைநிலை இறந்தகாலமும், 'ஆகிடந்து', 'ஆவிருந்து' என்னும் இடைநிலை கள் நிகழ்காலமும் காட்டின.

**என்றிசினோர்-என்மர்-என்மனர்**

இங்கு, என்றிசினோர் என்பதில் உள்ள 'இசின்' என்பது, இறந்தகால இடைநிலையாகவும், என்மர் என்பதில் உள்ள 'ம்' என்னும் மகர மெய்யும், என்மனர் என்பதில் உள்ள 'மன்' என்பதும் எதிர் கால இடைநிலைகளாகவும் செய்யுளில் வரும்.

மேலும், 'காண்டும்' (காண் + டும்) என்ற சொல்லில் உள்ள 'டும்' என்னும் விகுதியும், 'செய்கேன்' (செய்+க்+ஏன்) என்ற சொல்லில் உள்ள 'க்' என்ற இடைநிலையும், 'காண்போம், செய்வேன்' என எதிர்காலத்தை உணர்த்தியும் வரும்.

**இலக்கண விதி:** வினைச்சொற்களில் இறந்த கால நிகழ்கால எதிர்கால இடைநிலைகளே அன்றி, விகுதியும் பகுதியும், வேறு இடைநிலையும் காலங் காட்டும். அவை: று–றும் என்ற விகுதிகள் இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும், து–தும் என்ற விகுதிகள் இறந்த காலத்தையும் எதிர்காலத்தை யும், டு–டும் என்ற விகுதிகள் இறந்த காலத்தை யும், கு–கும் என்ற விகுதிகள் எதிர்காலத்தையும், (மின்–இர்–ஈர்–உம், ஆய்) என்னும் ஏவல் விகுதி களும், (க–இய–இயர்) என்னும் வியங்கோள் விகுதிகளும் எதிர்காலத்தையும், இ–மார் என்னும் விகுதிகள் எதிர்காலத்தையும், 'ப' என்னும் விகுதி

இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும், செய்யும் என்னும் வாய்பாட்டு 'உம்' என்னும் முற்று விகுதி நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும், எதிர்மறை ஆகார விகுதி மூன்று காலங்களையும் உணர்த்தும்.

றவ்வொ டுகர வும்மை நிகழ் பல்லவுந்
தவ்வொ டிறப்பு மெதிர்வும் டவ்வொடு
கழிவுங் கவ்வோ டெதிர்வுமின் னேவல்
வியங்கோ ளிம்மா ரெதிர்வும் பாந்தஞ்
செலவொடு வரவுஞ் செய்யுநிகழ் பெதிர்வும்
எதிர்மறை மும்மையு மேற்கு மீங்கே.

*(ந-நூற்பா 145.)*

## 7. சினைவினை - முதல்வினை

இராமன் விழுந்தான்.
இராமன் கால் முறிந்தது.
இராமன் கால் முறிந்து விழுந்தது.
இராமன் கால் முறிந்து விழுந்தான்.

'இராமன் விழுந்தான்' என்ற தொடரில், விழுந்தவன் யார்? இராமன். எனவே, இராமன் என்பது முதற்பொருளைக் குறிக்கும் பெயர்ச் சொல்லாகும். விழுந்தான் என்பது அம் முதற் பொருளின் தொழிலைக் குறிக்கும் வினைச் சொல் லாகும். இங்கு விழுந்தான் என்பதிலுள்ள 'விழுதல்' முதற்பொருளின் தொழிலைக் குறிக்கும் வினையாதலால், அது முதல்வினை எனப்படும்.

'இராமன் கால் முறிந்தது' என்ற தொடரில், முறிந்தது எது? கால். எனவே, கால் என்பது சினைப்பொருளைக் குறிக்கும் பெயர்ச்சொல்லாகும். முறிந்தது என்பது அச் சினைப் பொருளின் தொழிலைக் குறிக்கும் வினைச் சொல்லாகும். இங்கு, முறிந்தது என்பதிலுள்ள 'முறிதல்' சினைப்பொருளின் தொழிலைக்குறிக்கும் வினையாதலால், அது சினைவினை எனப்படும்.

'இராமன் கால் முறிந்து விழுந்தது' என்ற தொடரில், முறிந்து என்ற வினை எச்சத்தில் உள்ள 'முறிதல்' சினையாகிய காலினுடைய தொழிலாகும். எனவே, அது சினைவினை எனப்படும். இங்கு, விழுந்தது என்பது வினைமுற்றாகும். அவ் வினை முற்றில் உள்ள 'விழுதல்' என்ற தொழிலும், சினையாகிய காலினுடைய தொழிலேயாகும். எனவே, அதுவும் சினைவினையே யாகும்.

மேலும் இத்தொடரில், 'முறிந்து' என்ற சினையின் வினைஎச்சம், 'விழுந்தது' என்ற சினையின் வினை முற்றைக் கொண்டு முடிந்திருக்கிறது. எனவே, இத்தொடரில் சினைவினை, சினைவினையைக் கொண்டே முடிந்துள்ளமை தெரியவரும்.

'இராமன் கால் முறிந்து விழுந்தான்' என்ற தொடரில், முறிந்து என்ற வினையெச்சத்தில் உள்ள 'முறிதல்' சினையாகிய காலினுடைய தொழிலாகும். அது, சினைவினை எனப்படும். இங்கு, விழுந்தான் என்பது வினைமுற்றாகும். அவ் வினை

முற்றில் உள்ள 'விழுதல்' முதல் வினையின் தொழிலாகும். அது, முதல்வினை எனப்படும்.

மேலும் இத்தொடரில், 'முறிந்து' என்ற சினையின் வினை எச்சம், விழுந்தான் என்ற முதற்பொருளின் வினைமுற்றைக் கொண்டு முடிந்திருக்கிறது. எனவே, இத்தொடரில் சினைவினை, முதல்வினையைக் கொண்டு முடிந்துள்ளமை தெரியவரும்.

**இலக்கண விதி:** முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும் என்று சொல்லப்பட்ட வினை எச்சங்கள், சினைவினையாயின், சினைவினையைக் கொண்டு முடிதலேயன்றி, முதல்வினையையும் கொண்டு முடியும். (சினை—உறுப்பு)

## 8. பொதுவினை

(வேறு—உண்டு—இல்லை—யார்—எவன்)

| | |
|---|---|
| **அவன் வேறு—அவன் உண்டு—அவன் இல்லை**<br>**அவள் வேறு—அவள் உண்டு—அவள் இல்லை**<br>**அவர் வேறு—அவர் உண்டு—அவர் இல்லை** | } உயர்திணை |
| **அது வேறு—அது உண்டு—அது இல்லை**<br>**அவை வேறு—அவை உண்டு—அவை இல்லை** | } அஃறிணை |

மேற்கண்ட எடுத்துக்காட்டுக்களில் உள்ள 'வேறு—உண்டு—இல்லை' என்னும் வினைமுற்றுக்கள், தொழிலையும், காலத்தையும் வெளிப்படையாக உணர்த்தாமையால் குறிப்பு வினைமுற்றுக்களாகும். அவை, இங்கு இருதிணை ஐம்பாலுக்கும் பொதுவாகப் படர்க்கையில் வந்துள்ளன.

அவ் வினைமுற்றுக்கள் தன்மை முன்னிலை யிலும் வரும். அவை வருமாறு:

**நான் வேறு-நான் உண்டு-நான் இல்லை** (ஒருமை)
**நாம் வேறு-நாம் உண்டு-நாம் இல்லை** (பன்மை)

இவ் வெடுத்துக்காட்டுக்களில்'வேறு–உண்டு–இல்லை' என்னும் குறிப்பு வினைமுற்றுக்கள், தன்மை ஒருமையிலும், பன்மையிலும் வந்துள்ளன.

**நீ வேறு - நீ உண்டு - நீ இல்லை** (ஒருமை)
**நீவிர் வேறு - நீவிர் உண்டு - நீவிர் இல்லை** (பன்மை)

இங்கு, 'வேறு—உண்டு—இல்லை' என்னும் குறிப்பு வினைமுற்றுக்கள், முன்னிலை ஒருமை யிலும், பன்மையிலும் வந்துள்ளன.

**இலக்கண விதி:** வேறு–இல்லை–உண்டு என்னும் மூன்றும் வினைக்குறிப்பு முற்றுக்கள், ஐம்பாலுக்கும் மூவிடத்திற்கும் உரியனவாகும்.

**வேறில்லை யுண்டைம் பான்மூ விடத்தன.**

(ந–நூற்பா 339.)

(பாற் பொதுவினை)

('யார்' என்னும் வினாவினைக் குறிப்பு முற்று)

**அவன் யார்?**
**அவள் யார்?**
**அவர் யார்?**

இவ் வெடுத்துக்காட்டுக்களில் உள்ள "யார்" என்பது வினாப்பொருளைத் தரும் வினைமுற்றாகும். அது, தொழிலையும், காலத்தையும், வெளிப்படை

யாக உணர்த்தாமையால், வினா வினைக் குறிப்பு முற்றாகும்.

அவ் வினைமுற்று, இங்கு உயர்திணைப் படர்க்கையில் ஆண்பால், பெண்பால், பலர்பால் என்ற மூன்று பால்களிலும் வந்துள்ளமையால், முப்பாற் பொதுவினை எனப்படும்.

(குறிப்பு: அஃதி யார்? அவை யார்? என அஃறிணை இருபாலிலும், நான் யார்? நாம் யார்? எனத் தன்மை ஒருமை–பன்மையிலும், நீ யார்? நீவிர் யார்? என முன்னிலை ஒருமை–பன்மையிலும், 'யார்' என்னும் வினா வினைக் குறிப்பு முற்று, புதிய வழக்காக வழங்கி வருதலும் உண்டு. நானார் (நான்+ஆர்) என, யார்–ஆர் என, மருவி வருதலும் உண்டு.)

**இலக்கண விதி:** வினாப் பொருளைத்தரும் யார் என்னும் வினைக்குறிப்பு முற்று, உயர்திணை முப்பால்களுக்கும் பொதுவினையாக வரும்.

**யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால்.**

*(ந–நூற்பா 349.)*

('எவன்' என்னும் வினா வினைக் குறிப்பு முற்று)

**அஃதெவன், அவையெவன்**

இவ் வெடுத்துக்காட்டுக்களில் உள்ள 'எவன்' என்பது, வினாப்பொருளைத் தரும் வினைமுற்றாகும். அது, தொழிலையும், காலத்தையும் வெளிப்படையாக உணர்த்தாமையால், வினா வினைக் குறிப்பு முற்றாகும்.

அவ் வினைமுற்று, இங்கு அ∴றிணை ஒன்றன் பால், பலவின்பால் ஆகிய இரண்டு பால்களிலும் வந்துள்ளமையால் இருபாற் பொதுவினை எனப் படும்.

(எவன்-என்னும் வினா வினைக் குறிப்பு முற்று, 'என்—என்ன—என்னை' என விகாரப்பட்டு வருதலும் உண்டு.)

அவற்றிற்கு எடுத்துக்காட்டுக்கள் வருமாறு:

**நீ படித்ததன் பயன் என்?**

**நீ கூறியது என்ன?**

**நீ கூறியதன் பொருள் என்னை?**

இவற்றில், எவன் என்னும் வினா வினைக் குறிப்பு முற்று 'என்—என்ன—என்னை' என விகாரப்பட்டு வந்துள்ளன.

**இலக்கண விதி:** வினாப்பொருளைத் தரும் எவன் என்னும் வினைக்குறிப்பு முற்று, அ∴றிணை இருபாலுக்கும் பொதுவினையாக வரும்.

(வினைக்குறிப்புமுற்று=குறிப்புவினைமுற்று)

**எவனென் வினாவினைக் குறிப்பிழி யிருபால்.**

**(ந—நூற்பா 350.)**

## 9. எல்லாவிடத்தும் வரும் அசைச் சொல்

**நான்தான் - நீதான் - அவன்தான்**

**நாம்தாம் - நீவிர்தாம் - அவர்தாம்.**

இவ் வெடுத்துக்காட்டுக்களில் உள்ள 'தான்—தாம்' என்ற இடைச்சொற்கள், அசைச் சொற்

களாகும். இவை, தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களிலும் அசைநிலைப் பொருளில் வருவதால், எல்லாவிடத்தும் வரும் அசைச் சொற்கள் எனப்படும். இவையேயன்றி, இவைபோல்வன பிறவும் உள. அவை வருமாறு:

யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இகும், சின், குரை, ஒரும், போலும், இருந்து, இட்டு, அன்று, ஆம், தாம், தான், கின்று, நின்று என்பனவாகிய இவ் விருபது இடைச்சொற்களும் தன்மை, முன்னிலை படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் அசைநிலைப் பொருளில் வரும். எனவே, இவை எல்லா இடத்தும் வரும் அசைச் சொற்கள் எனப்படும்.

**யா** பன்னிருவர் மாணுக்கர் — யா
இவளிவட் காண்டி**கா** — கா
ஆயனை யல்ல **பிற** — பிற
**பிறக்க**தனுட் செல்லான் — பிறக்கு
இருங்குயி லாலு**மரோ** — அரோ
பிரியின் வாழா தென்**போ** — போ
விளிந்தன்று **மா து**வர்த் தெளிந்த — மாது
கண்**டிகு** மல்லமோ கொண்க — இகும்
ஈங்கா கியவா லென்றி**சின்** — சின்
அதுபெறலருங் **குரை**த்தே — குரை
அஞ்சுவ **தோரு** மறனே — ஒரும்
வருந்தினை **போலும்** — போலும்
நனவென் றெழுந்**திருந்**தேன் — இருந்து
நெஞ்சம் பிளந்**திட்டு** — இட்டு

| | | |
|---|---|---|
| அவன் சேவடி சேர் து**மன்றே** | — | அன்று |
| பணியு**மாம்** என்றும் பெருமை | — | ஆம் |
| நீர்**தாம்** | — | தாம் |
| நீ**தான்** | — | தான் |
| வாழ்வான் ஆசைப்பட்டிருக்**கின்றேன்** | — | கின்று |
| **நின்றூர்** நிழலடைந்தே | — | நின்று |

'வாழ்வான் ஆசைப்பட்டிருக்கின்றேன்' என்ற தொடரில் உள்ள, 'ஆசைப்பட்டிருக்கின்றேன்' என்பது, 'ஆசைப்பட்டேன்' என இறந்த காலப் பொருளில் வந்துள்ளது. எனவே, இங்கு உள்ள **'கின்று'** என்பது நிகழ்கால இடைநிலை யன்று; அசைச் சொல்லாகும்.

**இலக்கண விதி:** யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இகும், சின், குரை, ஒரும், போலும், இருந்து, இட்டு, அன்று, ஆம், தாம், தான், கின்று, நின்று என்னும் இவ் விருபது இடைச் சொற்களும் எல்லா இடங்களிலும் வரும் அசைச் சொற்களாம்.

**யாகா பிறபிறக் கரோபோ மாதிகும்**
**சின்குரை ஓரும் போலும் இருந்திட்**
**டன்றூந் தாந்தான் கின்றுநின் றசைமொழி.**

(ந - நூற்பா 441.)

## 10. பெயர்-வினை-இடை-உரிச்சொற்கள்

### (1) *பெயர்ச் சொல்*

மரம் — பனை
அணி — முடி

இங்கு, 'மரம் – பனை' என்பன இடுகுறிப் பெயர்களாகும். மரம் என்றும் பனை என்றும் பெயர்கள் ஏற்பட்டதற்குரிய காரணங்கள் எதுவும் தெரியவில்லை. அவை, தொன்று தொட்டு இட்ட குறியாய் வழங்கி வருகின்றன. எனவே, 'மரம், பனை' என்பன இடுகுறிப் பெயர்களாகும்.

'அணி – முடி' என்பன காரணப் பெயர்களாகும். அணியப்படுதலின் 'அணி' என்றும், முடியில் சூட்டப்படுதலின் 'முடி' என்றும் பெயர்பெற்றன. எனவே, 'அணி - முடி' என்பன காரணப் பெயர்களாகும்.

இங்ஙனம், இடுகுறியும் காரணக் குறியுமாகிய, இடுகுறிப் பெயரும் காரணப் பெயரும், மரபினையும் ஆக்கப்பாட்டினையும் தொடர்ந்து வரும். அங்ஙனம் வரும்பொழுது வினையால் அணையும் பெயர் மட்டும் காலங் காட்டும். மற்றவை காலங் காட்டா. எட்டு வேற்றுமைக்கும் இடமாகி, இருதிணை ஐம்பால் மூவிடத்து ஒன்றனை ஏற்பனவும் பலவற்றினை ஏற்பனவுமாகி வருவம். பொதுவாக இங்ஙனம் வருபவை எல்லாம் பெயர்ச் சொற்கள் எனப்படும்.

இனி, இங்ஙனம் வருகின்ற பெயர்ச் சொற்களைப் பற்றி விரிவாகப் பார்ப்போம்.

**மா – தென்னை (இடுகுறி மரபுப் பெயர்கள்)**
**விலங்கு – பறவை (காரணக்குறி மரபுப் பெயர்கள்)**

இட்ட குறியாக வழங்கும் 'மா–தென்னை' என்னும் இடுகுறிப் பெயர்கள், இடையே ஒருவரால்

ஆக்கப்பட்டன அன்றி, மா மரத்திற்குரிய இயல்போடும், தென்னை மரத்திற்குரிய இயல்போடும் தோன்றிய பொருள்களுக்கெல்லாம், தொன்று தொட்டு மரபுபற்றி வருதலின் இடுகுறி மரபு தொடர்ந்த பெயர்களாகும்.

இடையே ஒருவரால் ஆக்கப்பட்டன அன்றி, குறுக்கே முதுகெலும்பை உடைய காரணத்தால் விலங்கு என்றும், பறக்கின்ற காரணத்தால் பறவை என்றும் பெயர் பெற்ற 'விலங்கு-பறவை' என்ற காரணப் பெயர்கள், குறுக்கே முதுகெலும்பை உடைய எல்லாவற்றிற்கும், பறக்கின்ற எல்லாவற்றிற்கும் தொன்றுதொட்டு மரபு பற்றி வருதலின், காரணக்குறி மரபு தொடர்ந்த பெயர்களாகும்.

**"மானவேல் முட்டைக்கு மாறுய தெவ்வர்போம்**
**கானவேல் முட்டைக்கும் காடு."**

என்ற, பொய்யாமொழிப் புலவர் பாடலில் வேட்டுக்குமரன் தன்பெயர் ***முட்டை*** என்று கூறியது இடுகுறி ஆக்கம் ஆகும்.

***பொன்னன்*** என்பது காரணக்குறி ஆக்கம் ஆகும்.

இங்கு, முட்டை என்ற இடுகுறிப் பெயரும், பொன்னன் என்ற காரணப்பெயரும், மரபுபோலத் தொன்று தொட்டு வருதலின்றி இடையே ஒருவரால் ஆக்கப்பட்டு அப் பொருள்களுக்குப் பெயர்களாக வருவதால், அவை முறையே இடுகுறி ஆக்க

மும், காரணக்குறி ஆக்கமும் தொடர்ந்த பெயர்களாகும்.

முட்டை என்ற இடுகுறிப் பெயரை, வேட்டுக்குமரன் தனக்குப் பெயராக ஆக்கிக் கொண்டமையால், அஃது இடுகுறி ஆக்கம் ஆயிற்று.

பொன்னை உடைய காரணத்தால் வரும் பொன்னன் என்ற காரணப் பெயரை, ஒருவன் தனக்குப் பெயராக ஆக்கிக் கொண்டால், அப்பெயர் காரணக்குறி ஆக்கம் ஆகும்.

**நடந்தவனைக் கண்டேன்**

இங்கு, நடந்தவன் என்ற வினையால் அணையும் பெயர், வினையால் அணையும் காரணக்குறியாகும். அஃதாவது, நடத்தலாகிய வினை காரணமாக, அஃது அத் தொழிலைச் செய்தவனுக்குப் பெயராக வந்துள்ளது.

**நடந்தவனை** — (இறந்த காலம்)
**நடக்கின்றவனை** — (நிகழ்காலம்)
**நடப்பவனை** — (எதிர்காலம்)

இங்ஙனம், பெயர்ச் சொற்களிலே வினையால் அணையும் பெயர் மட்டும் காலங் காட்டும். மற்றவை காட்டா.

(பெயர்ச்சொல் வேற்றுமைக்கு இடனாதல்)

**முருகன் வந்தான்** - முதல் வேற்றுமை
(எழுவாய் வேற்றுமை)

**முருகனைக் கண்டேன்** - இரண்டாம் வேற்றுமை (ஐ)
**முருகனால் கட்டப்பட்டது** - மூன்றாம் வேற்றுமை (ஆல்)

ஆக்கப்பட்டன அன்றி, மா மரத்திற்குரிய இயல் போடும், தென்னை மரத்திற்குரிய இயல்போடும் தோன்றிய பொருள்களுக்கெல்லாம், தொன்று தொட்டு மரபுபற்றி வருதலின் இடுகுறி மரபு தொடர்ந்த பெயர்களாகும்.

இடையே ஒருவரால் ஆக்கப்பட்டன அன்றி, குறுக்கே முதுகெலும்பை உடைய காரணத்தால் விலங்கு என்றும், பறக்கின்ற காரணத்தால் பறவை என்றும் பெயர் பெற்ற 'விலங்கு-பறவை' என்ற காரணப் பெயர்கள், குறுக்கே முது கெலும்பை உடைய எல்லாவற்றிற்கும், பறக் கின்ற எல்லாவற்றிற்கும் தொன்றுதொட்டு மரபு பற்றி வருதலின், காரணக்குறி மரபு தொடர்ந்த பெயர்களாகும்.

**"மானவேல் முட்டைக்கு மாருய தெவ்வர்போம்**
**கானவேல் முட்டைக்கும் காடு."**

என்ற, பொய்யாமொழிப் புலவர் பாடலில் வேட்டுக்குமரன் தன்பெயர் **முட்டை** என்று கூறியது இடுகுறி ஆக்கம் ஆகும்.

**பொன்னன்** என்பது காரணக்குறி ஆக்கம் ஆகும்.

இங்கு, முட்டை என்ற இடுகுறிப் பெயரும், பொன்னன் என்ற காரணப்பெயரும், மரபுபோலத் தொன்று தொட்டு வருதலின்றி இடையே ஒருவ ரால் ஆக்கப்பட்டு அப் பொருள்களுக்குப் பெயர்க ளாக வருவதால், அவை முறையே இடுகுறி ஆக்க

மும், காரணக்குறி ஆக்கமும் தொடர்ந்த பெயர்களாகும்.

முட்டை என்ற இடுகுறிப் பெயரை, வேட்டுக் குமரன் தனக்குப் பெயராக ஆக்கிக் கொண்டமையால், அஃது இடுகுறி ஆக்கம் ஆயிற்று.

பொன்னை உடைய காரணத்தால் வரும் பொன்னன் என்ற காரணப் பெயரை, ஒருவன் தனக்குப் பெயராக ஆக்கிக் கொண்டால், அப் பெயர் காரணக்குறி ஆக்கம் ஆகும்.

**நடந்தவனைக் கண்டேன்**

இங்கு, நடந்தவன் என்ற வினையால் அணையும் பெயர், வினையால் அணையும் காரணக்குறியாகும். அஃதாவது, நடத்தலாகிய வினை காரணமாக, அஃது அத் தொழிலைச் செய்தவனுக்குப் பெயராக வந்துள்ளது.

**நடந்தவனை** — (இறந்த காலம்)
**நடக்கின்றவனை** — (நிகழ்காலம்)
**நடப்பவனை** — (எதிர்காலம்)

இங்ஙனம், பெயர்ச் சொற்களிலே வினையால் அணையும் பெயர் மட்டும் காலங் காட்டும். மற்றவை காட்டா.

(பெயர்ச்சொல் வேற்றுமைக்கு இடனாதல்)

**முருகன் வந்தான்** - முதல் வேற்றுமை (எழுவாய் வேற்றுமை)

**முருகனைக் கண்டேன்** - இரண்டாம் வேற்றுமை (ஐ)

**முருகனால் கட்டப்பட்டது** - மூன்றாம் வேற்றுமை (ஆல்)

முருகனுக்குக் கொடுத்தேன் - நான்காம் வேற்றுமை (கு)
முருகனின் மூப்பு யான் - ஐந்தாம் வேற்றுமை (இன்)
முருகனது கை - ஆறாம் வேற்றுமை (அது)
முருகனின்கண் இருக்கின்ற பேனா - ஏழாம் வேற்றுமை (கண்)
முருகா வா - எட்டாம் வேற்றுமை (விளி வேற்றுமை)

இங்கு, முருகன் என்ற பெயர்ச்சொல் எட்டு வேற்றுமைப் பொருள்களுக்கும் இடமாகியது போலப் பிற பெயர்ச்சொற்கள் எல்லாம், எட்டு வேற்றுமைப் பொருள்களுக்கும் இடமாகி வரும்.

இனி, இருதிணை ஐம்பால் மூவிடத்து ஒன்றனை ஏற்பனவும், பலவற்றினை ஏற்பனவுமாகிய பெயர்களைப் பற்றிப் பார்ப்போம்.

**உயர்திணை ஆண் - பெண் - பலர்பாற் பெயர்கள்**

**(பொருளால் வருபெயர்கள்)**

தமன் - நமன் - நுமன் - எமன் — (ஆண்பால்)
தமள் - நமள் - நுமள் - எமள் — (பெண்பால்)
தமர் - நமர் - நுமர் - எமர் — (பலர்பால்)

இவையும், இவை போல்வனவுமாகிய கிளை, எண் முதலியன பற்றிய பெயர்கள் எல்லாம், உயர்திணை ஆண் - பெண் - பலர்பால்களில், பொருளால் வருபெயர்களாகும்.

**(இடத்தால் வருபெயர்கள்)**

வெற்பன் - எயினன் - ஆயன்
மகிழ்நன் - துறைவன் - கருவூரான் } — (ஆண்பால்)

குறத்தி - எயிற்றி - ஆய்ச்சி
உழத்தி - பரத்தி - கருவூராள் } — (பெண்பால்)

குறவர் - எயினர் - ஆயர்
உழவர் - பரதவர் - கருவூரார் } — (பலர்பால்)

இவையும், இவை போல்வனவுமாகிய திணை, ஊர் முதலியன பற்றிய பெயர்கள் எல்லாம், உயர்திணை ஆண் – பெண் – பலர்பால்களில், இடத்தால் வருபெயர்களாகும்.

(காலத்தால் வருபெயர்கள்)

மூவாட்டையான் - வேனிலான் - ஆதிரையான்
—(ஆண்பால்)
மூவாட்டையாள் - வேனிலாள் - ஆதிரையாள்
—(பெண்பால்)
மூவாட்டையார் – வேனிலார் – ஆதிரையார்
—(பலர்பால்)

இவையும், இவை போல்வனவுமாகிய ஆண்டு, பருவம், மாதம், நாண்மீன் முதலியன பற்றிய பெயர்கள் எல்லாம், உயர்திணை ஆண் – பெண் – பலர்பால்களில், காலத்தால் வருபெயர்களாகும்.

(சினையால் வருபெயர்கள்)

குழைக்காதன் - நெடுங்கையன் — (ஆண்பால்)
குழைக்காதாள் – நெடுங்கையாள் — (பெண்பால்)
குழைக்காதர் - நெடுங்காதர் — (பலர்பால்)

இவையும், இவை போல்வனவுமாகிய தோள், குழல், மார்பு, கண், காது, கை முதலிய உறுப்புக்கள் பற்றிய பெயர்கள் எல்லாம், உயர்திணை ஆண் – பெண் – பலர்பாலில், சினையால் வருபெயர்களாகும்.

(குணத்தால் வருபெயர்கள்)

பெரியன் – கரியன் - கூனன் — (ஆண்பால்)
பெரியள் – கரியள் – கூனி — (பெண்பால்)
பெரியர் - கரியர் – கூனர் — (பலர்பால்)

இவையும், இவை போல்வனவுமாகிய அளவு, அறிவு, ஒப்பு, வடிவு, நிறம், கதி, சாதி, குடி, சிறப்பு முதலியன பற்றிய பெயர்கள் எல்லாம், உயர்திணை ஆண் – பெண் – பலர்பாலில், குணத்தால் வருபெயர்களாகும்.

(தொழிலால் வருபெயர்கள்)

ஓதுவான் – ஈவான் — (ஆண்பால்)
ஓதுவாள் – ஈவாள் — (பெண்பால்)
ஓதுவார் – ஈவார் — (பலர்பால்)

இங்ஙனம், ஓதல், ஈதல் முதலியன பற்றிய பெயர்கள் எல்லாம், உயர்திணை ஆண் - பெண் – பலர்பாலில், தொழிலால் வருபெயர்களாகும்.

இவை அனைத்தும் பொருளாதி ஆறன் அடியாகப் பிறந்து, இருதிணையில் உயர்திணையையும், ஐம்பால்களில் ஆண்பால், பெண்பால், பலர்பால்களையும் தனித்தனியே ஏற்று நின்ற பெயர்களாகும்.

இவை தவிர, உயர்திணை ஆண் – பெண் — பலர்பாற் பெயர்களாக வருவனவும் உள.

அஃறிணை ஒன்றன்பாற் பெயர்கள்

எது – ஏது – யாது } துவ்விகுதி வினாப் பெயர்கள்

அது - இது - உது } துவ்விகுதிச் சுட்டுப் பெயர்கள்

குழையது — (பொருள்)
திலத்தது — (இடம்)
மூலத்தது — (காலம்)
கோட்டது — (சினை)
குறியது — (குணம்)
ஆடலது — (தொழில்)
} துவ்விகுதி பெற்ற பொருளாதி அறுபெயர்கள்

அஃது
இஃது
உஃது
} சுட்டுடன் கூடிய ஆய்தம் பொருந்திய துவ்விகுதிப் பெயர்கள்

ஒன்று } எண்ணுகு பெயர்

மேற்கண்ட துவ்விகுதி பெற்ற வினுப்பெயரும், சுட்டுப்பெயரும், பொருளாதி அறுபெயரும், சுட்டுடன் கூடிய ஆய்தம் பொருந்திய பெயரும், ஒன்று என்னும் எண்ணுகு பெயரும், பிறிது, மற்றையது என அஃறிணை ஒருமைப் பொருள் குறித்து வருவனவும், பிறவும் அஃறிணை ஒன்றன் பாற் பெயர்களாகும்.

இவை, இருதிணையில் அஃறிணைக்கும், ஐம் பால்களில் ஒன்றன்பாலுக்கும் உரியனவாகும்.

அஃறிணைப் பலவின்பாற் பெயர்கள்

எவை – ஏவை – யாவை — வினுப் பெயர்கள்

அவை - இவை - உவை — சுட்டுப் பெயர்கள்

நெடியவை – கரியவை — வை விகுதிப் பெயர்கள்

| | |
|---|---|
| பொருள<br>பொருளன | பொருள் |
| அகத்த<br>அகத்தன | இடம் |
| மூலத்த<br>மூலத்தன | காலம் |
| கோட்ட<br>கோட்டன | சினை |
| கரிய<br>கரியன | குணம் |
| ஓதுவ<br>ஓதுவன | தொழில் |

இவை, 'அன்'சாரியை பெற்றும், பெறுமலும் வந்த அகர விகுதிப் பெயர்கள்.

| | |
|---|---|
| அவ்<br>இவ்<br>உவ் | வகர மெய்யீற்றுச் சுட்டுப் பெயர்கள் |
| யானைகள்<br>குதிரைகள் | கள் என்னும் பகுதிப்பொருள் விகுதியீற்றுப் பெயர்கள் |
| இரண்டு<br>மூன்று | எண்ணுகு பெயர்கள் |

'உள்ள—இல்ல, பல்ல—சில்ல, உள—இல, பல—சில' என்பன குறிப்பு வினையால் அணையும் பெயர்களாகும்.

மேற்கண்ட வினைப் பெயர்களும், சுட்டுப் பெயர்களும், வை விகுதிப் பெயர்களும், பொருளாதி ஆறன் அடியாகப் பிறந்த அகர விகுதிப் பெயர்களும், வகர மெய்யீற்றுச் சுட்டுப் பெயர்

களும், கள் என்னும் பகுதிப்பொருள் விகுதியீற்றுப் பெயர்களும், இரண்டு, மூன்று முதலிய எண்ணுகு பெயர்களும், உள்ள, இல்ல, பல்ல, சில்ல, உள, இல, பல, சில என்னும் குறிப்பு வினையாலணைந்த எட்டுப் பெயர்களும், இவை போல்வன பிறவும் அஃறிணைப் பலவின்பாற் பெயர்களாகும்.

இவை, இருதிணையில் அஃறிணைக்கும், ஐம்பால்களில் பலவின்பாலுக்கும் உரியவையாகும்.

இதுவரை, திணைபால்களில் ஒன்றனை ஏற்கும் பெயர்களைப் பார்த்தோம். இனி, திணைபால்களில் பலவற்றினை ஏற்கும் பெயர்களைப் பார்ப்போம்.

**அஃறிணை இருபாற் பொதுப்பெயர்**

**யானை வந்தது**
**யானை வந்தன**
**மரம் வளர்ந்தது**
**மரம் வளர்ந்தன**

இங்கு, யானை, மரம் என்பன பால் பகுக்கப் படாத அஃறிணைப் பெயர்களாகும். எனவே அவை, அஃறிணை ஒன்றன்பால், பலவின்பால் இரண்டிற்கும் பொதுவாயின. இவை, பால்பகா அஃறிணைப் பெயர் எனவும் படும். இங்ஙனம் வரும் பால்பகா அஃறிணைப் பெயர்கள் எல்லாம் அஃறிணை இருபாற் பொதுப் பெயர்களாகும்.

**இருதிணைப் பொதுப்பெயர்**

**சாத்தன் இவன்**
**சாத்தன் இவ்வெருது** } **ஆண்மை முதற்பெயர்**

சாத்தி இவள்
சாத்தி இப்பசு } பெண்மை முதற்பெயர்

கோதை இவன்
கோதை இவள்
கோதை இது } ஒருமை முதற்பெயர்

கோதைகள் இவர்
கோதைகள் இவை } பன்மை முதற்பெயர்

ஆண்மை முதற்பெயர், பெண்மை முதற்பெயர், ஒருமை முதற்பெயர், பன்மை முதற்பெயர்கள் நான்கும் இருதிணைக்கும் பொதுவாயின.

முடவன் இவன்
முடவன் இவ்வெருது } ஆண்மைச் சினைப்பெயர்

முடத்தி இவள்
முடத்தி இப்பசு } பெண்மைச் சினைப்பெயர்

செவியிலி இவன்
செவியிலி இவள்
செவியிலி இப்பசு } ஒருமைச் சினைப்பெயர்

செவியிலிகள் இவர்
செவியிலிகள் இவை } பன்மைச் சினைப்பெயர்

ஆண்மைச் சினைப்பெயர், பெண்மைச் சினைப்பெயர், ஒருமைச் சினைப்பெயர், பன்மைச் சினைப்பெயர்கள் நான்கும் இருதிணைக்கும் பொதுவாயின.

முடக்கொற்றன் இவன்
முடக்கொற்றன் இவ்வெருது } ஆண்மைச் சினை முதற்பெயர்

முடக்கொற்றி இவள்
முடக்கொற்றி இப்பசு } பெண்மைச் சினை முதற்பெயர்

| | |
|---|---|
| கொடும்புற மருதி இவன்<br>கொடும்புற மருதி இவள்<br>கொடும்புற மருதி இது | ஒருமைச் சினை முதற்பெயர் |
| கொடும்புற மருதி இவர்<br>கொடும்புற மருதி இவை | பன்மைச் சினை முதற்பெயர் |

ஆண்மை – பெண்மை – ஒருமை – பன்மைச் சினைமுதற் பெயர்கள் நான்கும் இருதிணைப் பொதுவாயின.

| | |
|---|---|
| தந்தை இவன்<br>தந்தை இவவெருது | ஆண்மை முறைப்பெயர் |
| தாய் இவள்<br>தாய் இப்பசு | பெண்மை முறைப்பெயர் |

ஆண்மை – பெண்மை முறைப் பெயர்கள் இரண்டும் இருதிணைக்கும் பொதுவாயின.

| | |
|---|---|
| யான் நம்பி<br>யான் நங்கை<br>யான் பூதம்<br>நான் நம்பி<br>நான் நங்கை<br>நான் பூதம் | யான் - நான் என்ற தன்மை ஒருமைப் பெயர்கள் |
| யாம் மக்கள்<br>யாம் பூதங்கள்<br>நாம் மக்கள்<br>நாம் பூதங்கள் | யாம்-நாம் என்ற தன்மைப் பன்மைப் பெயர்கள் |

யான், நான், யாம், நாம் என்ற தன்மைப் பெயர்கள் நான்கும் இருதிணைக்கும் பொதுவாயின.

| | |
|---|---|
| நீ நம்பி<br>நீ நங்கை<br>நீ பூதம் | முன்னிலை ஒருமைப்பெயர் |
| நீர் மக்கள்<br>நீர் பூதங்கள்<br>எல்லீர் மக்கள்<br>எல்லீர் பூதங்கள்<br>நீயிர் மக்கள்<br>நீயிர் பூதங்கள்<br>நீவிர் மக்கள்<br>நீவிர் பூதங்கள் | நீர், எல்லீர், நீயிர், நீவிர் என்ற முன்னிலைப் பன்மைப் பெயர்கள் |

நீ, நீர், எல்லீர், நீயிர், நீவிர் என்ற முன்னிலைப் பெயர்கள் ஐந்தும் இருதிணைப் பொதுவாயின.

| | |
|---|---|
| அவர் எல்லாம்<br>அவை எல்லாம் | எல்லாம் |
| அவர்தாம்<br>அவைதாம் | தாம் |
| அவன்றான்<br>அவடான்<br>அதுதான் | தான் |

எல்லாம், தாம், தான் என்பன இருதிணைக்கும் பொதுவாயின.

இதுவரை, இருதிணைக்கும் பொதுவாக வரும் பெயர்ச் சொற்களைப் பற்றிப் பார்த்தோம். இனி, மூவிடப் பெயர்களையும், மூவிடப் பொதுப்பெயரையும் பார்ப்போம்.

### மூவிடப் பெயர்கள்

'யான்–நான்-யாம்–நாம்' இவை நான்கும் தன்மை இடத்திற்குரிய ஒருமை–பன்மைப் பெயர்களாகும்.

'நீ, நீர், எல்லீர், நீயிர், நீவிர்' இவை ஐந்தும் முன்னிலை இடத்திற்குரிய ஒருமை-பன்மைப் பெயர்களாகும்.

தன்மைப் பெயரும், முன்னிலைப் பெயரும் ஒழிந்த, அவன், அவள், அவர், அது, அவை என்பனவற்றை உள்ளிட்ட பிற பெயர்கள் எல்லாம் படர்க்கை இடத்திற்குரியன.

**மூவிடப் பொதுப்பெயர்**

| | | |
|---|---|---|
| **யாம் எல்லாம்** | — | **தன்மையிடம்** |
| **நீர் எல்லாம்** | — | **முன்னிலையிடம்** |
| **அவர் எல்லாம்** | — | **படர்க்கையிடம்** |
| **அவை எல்லாம்** | — | |

'எல்லாம்' என்பது தன்மை – முன்னிலை– படர்க்கை ஆகிய மூன்று இடத்திற்கும் பொதுப் பெயராக வந்துள்ளது.

இதுவரை பார்த்தவற்றிலிருந்து பெயர்கள், இருதிணை ஐம்பால் மூவிடங்களில், ஒன்றனை ஏற்பனவும், பலவற்றினை ஏற்பனவுமாய் வந்தமை தெரியவரும்.

**இலக்கண விதி:** இடுகுறியும் காரணக்குறியுமாகிய பெயர்கள், மரபினையும் ஆக்கப்பாட்டினையும் தொடர்ந்துவர, வினையாலணையும் காரணக்குறி மட்டும் காலங்காட்ட, மற்றவை காலங்காட்டாவாய், எட்டு வேற்றுமைகளும் சார்தற்கு இடமாகி, இருதிணை ஐம்பால் மூவிடத்து ஒன்றனை ஏற்பனவும், பலவற்றினை ஏற்பனவுமாய் வருவன பெயர்ச் சொற்களாகும்.

**இடுகுறி காரண மரபோ டாக்கம்**
**தொடர்ந்து தொழிலல காலந் தோற்ற**
**வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன்**
**றேற்பவும் பொதுவு மாவன பெயரே.**

(ந-நூற்பா 275.)

## 2. வினைச்சொல்

### (1) தெரிநிலை வினை

**சேணியன் ஆடை நெய்தான்**

இத்தொடரில் 'நெய்தான்' என்னும் வினைச் சொல், நெய்தலாகிய தொழில் முற்றுப் பெற்றதையும், இறந்த காலத்தையும் உணர்த்துகிறது. எனவே, நெய்தான் என்பது தெரிநிலை வினை முற்றாகும். காலம் வெளிப்படையாகத் தெரிய நிற்கும் வினை, தெரிநிலை வினை எனப்படும்.

இங்ஙனம் வருகின்ற தெரிநிலை வினைமுற்றுச் சொற்கள், செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் என்ற ஆறனையும் தரும்.

(1) செய்பவன்—(சேணியன்)
(2) கருவி—(நூல்)
(3) நிலம்—(வீடு-இடம்)
(4) செயல்—(நெய்தல்)
(5) காலம்—(இறந்த காலம்)
(6) செயப்படுபொருள்—(ஆடை)

நெய்தான் என்ற தெரிநிலை வினைமுற்றுச் சொல்லானது, சேணியனாகிய நெய்பவனையும்,

நெய்தற்கு முதற்கருவி துணைக்கருவிகளாகிய நூல், தறி முதலியனவற்றையும், நெய்தற்கு இடமாகிய வீட்டையும், செயலாகிய நெய்தலையும், இறந்த காலத்தையும், செயப்படுபொருளாகிய ஆடையையும் உணர்த்துகின்றது.

இங்ஙனம் வருகின்ற தெரிநிலை வினைமுற்றுச் சொற்கள், பகுதியால் செயலையும், விகுதியால் செய்பவனையும், இடைநிலையால் காலத்தையும் உணர்த்தும். மற்றைய மூன்றையும் இவற்றின் தொடர்பால் உணரமுடியும்.

ஒரு சில தெரிநிலை வினைமுற்றுச் சொற்களில் செய்பவன் முதலிய ஆறும் வராமல், குறைந்து வருவதும் உண்டு. அஃதாவது, செயப்படுபொருள் குறைந்து வரும்.

**கண்ணன் வீட்டிற்குச் சென்றான்**

இத் தொடரில் உள்ள 'சென்றான்' என்பது தெரிநிலை வினைமுற்றுச் சொல்லாகும். இங்கே, செல்லுதலாகிய தொழிலைச் செய்பவன் உயர்திணை ஆண்பாலாகிய கண்ணன் என்பதும், செல்லுதற்குக் கருவி கால்கள் என்பதும், சென்ற இடம் வீடு என்பதும் தெரிவதுடன், செல்லுதலாகிய தொழிலும், இறந்த காலமும் தெரிகின்றன. ஆனால், செயப்படுபொருள் மட்டும் தெரியவில்லை. இங்குச் செயப்படுபொருள் இல்லை.

எதை நெய்தான்? என்று வினவினால், ஆடையை என்று விடை வருகின்றது. எனவே, ஆடை செயப்படுபொருளாகும். எதைச் சென்

ருன்? என்று வினவினால், அதற்கு விடை இல்லை. எனவே, சென்றான் என்ற வினைக்குச் செயப்படு பொருள் இல்லை.

எனவே, தெரிநிலைவினை செயப்படுபொருள் பெற்றும், பெறாமலும் வரும். செயப்படுபொருள் பெற்ற வினை, 'செயப்படுபொருள் குன்றாவினை' என்றும், செயப்படுபொருள் பெறாத வினை, 'செயப்படுபொருள் குன்றியவினை' என்றும் கூறப்படும்.

**உண்டான், படித்தோம், கண்டேன்**

இவையும், இவை போல்வனவுமாகிய வினைச்சொற்கள் செயப்படுபொருள் குன்றாவினை எனப்படும்.

**நடந்தான், வந்தான், பறந்தது**

இவையும், இவை போல்வனவுமாகிய வினைச் சொற்கள் செயப்படுபொருள் குன்றியவினை எனப்படும்.

**இலக்கண விதி:** கருத்தாவும், கருவியும், இடமும், செயலும், காலமும், செயப்படுபொருளு மாகிய அறுவகைப் பொருளையும் தருவது தெரி நிலைவினைச் சொல்லாகும்.

**செய்பவன் கருவி நிலஞ்செயல் காலம்**
**செய்பொரு ளாறுந் தருவது வினையே.**

***(ந—நூற்பா 320.)***

(2) குறிப்புவினை

**இவன் பொன்னன்**

**அவன் கண்ணன்**

இவ் வெடுத்துக்காட்டுக்களில் உள்ள பொன்னன், கண்ணன் என்பன வினைமுற்றுக்களாகும். ஆனால், இவை கருத்தாவை மட்டும் உணர்த்தித் தொழிலையும் காலத்தையும் வெளிப்படையாகக் காட்டவில்லை. எனினும், பொன்னை உடையவனாக இருந்தான்; இருக்கின்றான்; இருப்பான் எனவும், கண்ணை உடையவனாக இருந்தான்; இருக்கின்றான்; இருப்பான் எனவும் பொருள்தரும்பொழுது, குறிப்பால் முக்காலத்தையும் காட்டும்.

இங்ஙனம், கருத்தாவை மட்டும் உணர்த்தித் தொழிலையும், காலத்தையும், பிறவற்றையும் வெளிப்படையாக உணர்த்தாமல், குறிப்பால் உணர்த்துவன 'குறிப்புவினை' எனப்படும். அக் குறிப்புவினை, பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற அறுவகைப் பெயர்களின் அடியாகப் பிறக்கும்.

குழையன்—பொருள் அடியாகப் பிறந்த குறிப்புவினை. (குழை—காதணி)

ஊரன்—இடம் அடியாகப் பிறந்த குறிப்புவினை.

ஆதிரையான்—காலம் அடியாகப் பிறந்த குறிப்புவினை.

செங்கண்ணன்—சினை அடியாகப் பிறந்த குறிப்புவினை.

கரியன்—பண்பு அடியாகப் பிறந்த குறிப்புவினை.

இன்சொல்லன்—தொழில் அடியாகப் பிறந்த குறிப்புவினை.

குறிப்பு வினைகளில், விகுதியினால் செய்பவன் (கருத்தா) மட்டுமே விளங்கும். ஏனைய குறிப்பாகவே விளங்கும்.

**இலக்கண விதி:** பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற அறுவகைப் பெயர்களின் அடியாகத் தோன்றிச் செய்பவன் முதலாகிய ஆறனுள், செய்பவனைகிய கருத்தாவை மட்டும் வெளிப்படையாக விளக்குவது குறிப்பு வினையாகும்.

**பொருண்முத லாறினுந் தோற்றிமுன் னுறனுள்**
**வினைமுதன் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே.**
***(ந-நூற்பா 321.)***

(3) வினைச்சொற்களின் வகைகள்

(தெரிநிலை வினைமுற்று)

**கண்ணகி வந்தாள்**

இங்கு, 'வந்தாள்' என்ற வினைச்சொல், பகுதியால் தொழிலையும், இடைநிலையால் காலத்தையும், விகுதியால் திணைபாலையும் வெளிப்படையாகக் காட்டுகிறது. எனவே, வந்தாள் என்பது தெரிநிலை வினைமுற்றுகும்.

(தெரிநிலைப் பெயரெச்சம்)

**படித்த பெண்**

இங்கே, 'படித்த' என்ற வினைச்சொல், பகுதியால் தொழிலையும், இடைநிலையால் காலத்தையும், வெளிப்படையாக உணர்த்துகிறது. திணைபால் உணர்த்தும் விகுதி இன்மையால் 'படித்த' என்ற சொல் முற்றுப் பெறவில்லை. எனவே, 'படித்த' என்பது எச்சவினையாகும். அது, பெண் என்ற பெயர்ச் சொல்லைச் சார்ந்து முற்றுப் பெறுகிறது.

எனவே, 'படித்த' என்பது தெரிநிலைப் பெயரெச்சமாகும்.

(தெரிநிலை வினையெச்சம்)

**படித்துத் தேறினன்**

இங்கே, 'படித்து' என்ற வினைச்சொல், பகுதியால் தொழிலையும், இடைநிலையால் காலத்தையும் வெளிப்படையாக உணர்த்துகிறது. திணைபால் உணர்த்தும் விகுதி இன்மையால் 'படித்து' என்ற சொல் முற்றுப் பெறவில்லை. எனவே, 'படித்து' என்பது எச்சவினையாகும். அது,தேறினன் என்ற வினைச் சொல்லைச் சார்ந்து முற்றுப் பெறுகிறது. எனவே, 'படித்து' என்பது தெரிநிலை வினையெச்சமாகும்.

இங்ஙனம், தெரிநிலை வினைமுற்று, தெரிநிலைப் பெயரெச்சம், தெரிநிலை வினையெச்சம் எனத் தெரிநிலை வினை மூன்று வகைப்படும்.

(குறிப்பு வினைமுற்று)

**அவன் நல்லவன்**

இங்கு, 'நல்லவன்' என்பது தொழிலையும் காலத்தையும் வெளிப்படையாக உணர்த்தாமல், குறிப்பாக உணர்த்தித் திணை பால் காட்டும் விகுதியுடன் முற்றுப் பெற்றுள்ளது. எனவே, நல்லவன் என்பது குறிப்பு வினை முற்ருகும்.

(குறிப்புப் பெயரெச்சம்)

**நல்ல பையன்**

இங்கு, 'நல்ல' என்பது தொழிலையும் காலத்தையும் குறிப்பாக உணர்த்திப் பையன் என்ற

பெயரைச் சார்ந்து முற்றுப் பெறுகிறது. எனவே, 'நல்ல' என்பது குறிப்புப் பெயரெச்சமாகும்.

(குறிப்புவினையெச்சம்)

**மெல்லச் சென்றான்**

இங்கே, 'மெல்ல' என்பது தொழிலையும் காலத்தையும் வெளிப்படையாக உணர்த்தாமல் குறிப்பாக உணர்த்தி, 'சென்றான்' என்ற வினைச் சொல்லைச் சார்ந்து முற்றுப் பெறுகிறது. எனவே, 'மெல்ல' என்பது குறிப்பு வினையெச்சமாகும்.

இங்ஙனம், குறிப்பு வினைமுற்று, குறிப்புப் பெயரெச்சம், குறிப்பு வினையெச்சம் எனக் குறிப்பு வினை மூன்று வகைப்படும்.

**இலக்கண விதி:** மேலே கூறப்பட்ட தெரிநிலை-குறிப்பு என்ற வினைச் சொற்கள், வினை முற்றும், பெயரெச்சமும், வினையெச்சமும் ஆகித் திணைபால் இடங்களில் ஒன்றற்குச் சிறப்பாய் வருவனவும், பலவற்றிற்குப் பொதுவாய் வருவனவும் ஆகும்.

அவைதாம்—

**முற்றும் பெயர்வினை யெச்சமு மாகி**
**ஒன்றற் குரியவும் பொதுவு மாகும்.**

**(ந-நூற்பா 322)**

## 3. இடைச் சொல்

**பண்டு காடுமன் - எமக்கு அருளுமன்**
**மற்று அறிவாம் - மற்று என்னை ஆள்க**

இங்கு, 'மன்' என்னும் இடைச்சொல் 'காடு' என்ற பெயர்ச் சொல்லுக்குப் பின்னும், 'அருளும்'

என்ற வினைச் சொல்லுக்குப் பின்னும் வந்துள்ளது.

'மற்று' என்னும் இடைச்சொல் 'அறிவாம்' என்ற வினைச் சொல்லுக்கு முன்னும், 'என்னை' என்ற பெயர்ச் சொல்லுக்கு முன்னும் வந்துள்ளது.

இங்ஙனம், தனித்து இயங்காமல் பெயர் வினைகளைச் சார்ந்து, அவற்றின் முன்னும் பின்னும் அகத்துறுப்பாயும், புறத்துறுப்பாயும் ஒன்றும் பலவும் இடைச்சொற்கள் வரும்.

அவை, வேற்றுமை உருபுகள், இடைநிலைகளும் விகுதிகளுமாகிய வினை உருபுகள், சாரியைகள், உவம உருபுகள், தத்தம் பொருள் உணர்த்தும் சொற்கள், இசைநிறை, அசைநிலை, குறிப்பால் பொருள் தரும் சொற்கள் என எட்டு வகையினவாய் வரும்.

இவ் விடைச்சொற்கள், பெயர்ச் சொற்களுமாகாமல் வினைச் சொற்களுமாகாமல், அவற்றின் வேறுமாகாமல் இடை நிகரனவாய் நிற்றலாலும், பெயர் வினைகளின் இடமாக நடத்தலினாலும் இடைச்சொற்கள் எனப்பட்டன.

(1) **வேற்றுமை உருபுகள்:** ஐ–ஆல்–கு–இன்–அது–கண் என்ற வேற்றுமை உருபுகள் இடைச் சொற்களாகும்.

(2) **வினை உருபுகள்:** (இடைநிலைகள்–விகுதிகள்) த்–ட்–ற்–இன் போன்ற இடைநிலைகளும்,

அன்—ஆன்—அள்-ஆள் போன்ற விகுதிகளும் இடைச்சொற்களாகும்.

(3) **சாரியைகள்:** அற்று-அத்து-அன்—ஆன்—அம்-இன் போன்ற சாரியைகள் இடைச்சொற்களாகும்.

(4) **உவம உருபுகள்:** போல – புரைய – ஒப்ப— உறழ என்பன போன்ற உவம உருபுகள் இடைச் சொற்களாகும்.

(5) **தத்தம் பொருள் உணர்த்தும் சொற்கள்:** ஏ-ஒ— உம்-கொல்—தான்-மன் என்பன போலத் தத்தம் பொருள் உணர்த்தும் சொற்கள் இடைச்சொற் களாகும்.

(6) **இசைநிறை:** ஏஎ—ஒஒ என்பன போலத் தமக்கெனப் பொருளின்றிச் செய்யுளின் ஓசையை நிறைக்க வரும் இசைநிறைகள் இடைச்சொற் களாகும்.

(7) **அசைநிலை:** கொல் – ஆல் – ஏ – ஒ – அரோ என்பன போல, வேறு பொருளின்றி அசை நிலைப் பொருளில் வரும் அசைநிலைகள் இடைச் சொற்களாகும்.

(8) **குறிப்பால் பொருள் தரும் சொற்கள்:** கோவென, சோவென, கடகடென, படபடென என்பன போல ஒலிக்குறிப்புப் பொருளைத் தரும் சொற் களும், துண்ணென, திடுக்கென என்பன போல அச்சக் குறிப்புப் பொருளைத் தரும் சொற்களும், பொள்ளென, டொருக்கென என்பன போல

விரைவுக் குறிப்புப் பொருளைத்தரும் சொற்களும் இடைச் சொற்களாகும்.

(1) ஊரை அடைந்தான்

ஊரை (ஊர்+ஐ)ஐ-இரண்டாம் வேற்றுமை உருபு.

(2) அவன் உண்டான்

உண்டான் (உண்+ட்+ஆன்) ட்-இடைநிலை, ஆன்-விகுதி.

(3) அவற்றைத் தந்தான்

அவற்றை (அவ்+அற்று+ஐ) அற்று–சாரியை

(4) மயில் போல ஆடினள்

போல-உவம உருபு

(5) அவன் தான் சொன்னன்

தான்-தேற்றப்பொருள் (தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொல்)

(6) ஏஎ இவள் ஒருத்தி

ஏஎ-இசைநிறை

(7) நாடாமால் ஊராமால்

ஆல்-அசைநிலை

(8) மழை சோவெனப் பெய்தது

சோவென-ஒலிக்குறிப்பு

நெஞ்சம் திடுக்கென நடுங்கியது

திடுக்கென-அச்சக்குறிப்பு

பொருக்கென எழுந்தான்

பொருக்கென-விரைவுச்குறிப்பு

இவை யாவும் எட்டுவகையினவாய் வந்த இடைச்சொற்களாகும். இனி, அகத்துறுப்பாயும்

புறத்துறுப்பாயும் ஒன்றும் பலவுமாகப் பின்னும் முன்னும் வருவனவற்றைப் பார்ப்போம்.

**குழையன் (குழை + அன்)**

இங்கு, 'அன்' என்ற விகுதியிடைச்சொல் மட்டும், பெயரின் அகத்துறுப்பாய் வந்துள்ளது.

**நிலத்தினன் (நிலம் + த் + த் + இன் + அன்)**

இங்கு 'த்-இன்-அன்' என முறையே இடைநிலையும், சாரியையும், விகுதியுமாகிய பல இடைச்சொற்கள் பெயரின் அகத்துறுப்பாய் வந்துள்ளன.

**உண்ணுய் (உண் + ஆய்)**

இங்கு 'ஆய்' என்ற விகுதியிடைச்சொல் மட்டும், வினையின் அகத்துறுப்பாய் வந்துள்ளது.

**நடந்தனன் (நட + த்(ந்) + த் + அன் + அன்)**

இங்கு,'த்-அன்-அன்' என முறையே இடைநிலையும், சாரியையும்,விகுதியுமாகிய பல இடைச்சொற்கள் வினையின் அகத்துறுப்பாய் வந்துள்ளன.

**அதுமன் - கொன்னூர்**

இங்கு, 'மன்' என்னும் இடைச்சொல்லும் 'கொன்' என்னும் இடைச்சொல்லும் பெயருக்குப் பின்னும் முன்னும் புறத்துறுப்பாய்த் தனித்து வந்துள்ளன.

**அது மற்றம்ம - இனி மற்றொன்று**

இங்கு, 'மற்று—அம்ம' என்ற இடைச்சொற்களும், 'மற்று-ஒன்று' என்ற இடைச்சொற்களும் பெயருக்குப் பின்னும் முன்னும் புறத்துறுப்பாய்ப் பலவாக வந்துள்ளன.

**வந்தானே - ஐயோ விழுந்தான்**

இங்கு, 'ஓ—ஐயோ' என்ற இடைச்சொற்கள் வினையின் புறத்துறுப்பாய்த் தனித்து வந்துள்ளன.

**கொன்றான் கூகூ—சீசீ போ**

இங்கே, 'கூகூ' என்ற இடைச்சொற்களும், 'சீசீ' என்ற இடைச் சொற்களும், வினைக்குப் பின்னும் முன்னும் புறத்துறுப்பாய்ப் பலவாக வந்துள்ளன.

தத்தம் பொருள் தரும் இடைச்சொற்கள் தெரிநிலை, தேற்றம், ஐயம், முற்று என்பன போன்ற பல பொருள்களில் வரும்.

இனி, நன்னூல் (421) நூற்பாவுள் 'இன்னன' என்றதனால் வரும் இடைச்சொற்களைப் பார்ப்போம்.

**அவன்-இவன்-உவன்**

அ-இ-உ சுட்டுப் பொருளைத் தருகின்ற இடைச்சொற்களாகும்.

**எது-ஏது-யாது - அவனா - அவனோ**

எ-ஏ-யா-ஆ-ஓ வினாப்பொருளைத் தருகின்ற இடைச்சொற்களாகும்.

**நக்கீரர்**

ந—சிறப்புப் பொருளைத் தருகின்ற இடைச்சொல்லாகும்.

**இனிச்செல்வான்—இனி எம்மெல்லை**

'இனி' என்பது கால இடங்களின் எல்லைப் பொருளைத்தரும் இடைச்சொல்லாகும்.

அறிதொறறியாமை
சேரி தோறிது

'தொறு-தோறு' என்பன இடப்பன்மைப் பொருள்தரும் இடைச்சொற்களாகும்.

அந்தோ இழந்தான்
அஆ என்ன உயரம்

'அந்தோ,' என்னும் சொல் இரக்கப்பொருளை யும், 'அஆ' என்னும் சொல் வியப்புப் பொருளை யும் தரும் இடைச்சொற்களாகும்.

வாளா இருந்தான்
சும்மா இருந்தான்

'வாளா-சும்மா' என்பன பயனின்மைப் பொருளைத்தரும் இடைச் சொற்களாகும். இவை தவிர, இன்னும் வருவனவும் உள.

**இலக்கண விதி :** ஐ முதலிய வேற்றுமை உருபு களும், விகுதிகளும் இடைநிலைகளுமாகிய வினை உருபுகளும், அன்–ஆன் முதலிய சாரியை உருபு களும், போலப் புரைய முதலிய உவம உருபு களும், பிறவாறு தத்தமக்குரிய பொருளை உணர்த்தி வருவனவும், வேறு பொருளின்றிச் செய்யுளில் இசைநிறைத்தலே பொருளாக வரு வனவும், அசை நிலையே பொருளாக நிற்பனவும், வெளிப்படையான் வரும் இவை போலாது, ஒலி, அச்சம், விரைவு இவற்றைக் குறிப்பால் உணர்த்தி வருவனவும் என, எட்டுவகையினை உடையவாய்த் தனித்து நடத்தலின்றிப் பெயரின் அகத்தும், வினையின் அகத்தும், அவற்றின் புறமாகிய பின் னும் முன்னும் ஆகிய இவ்விடங்கள் ஆறனுள்

ஓரிடத்து ஒன்றேனும் பலவேனும் வந்து, அப் பெயர் வினைகளுக்கு அகத்துறுப்பாயும், புறத் துறுப்பாயும் ஒன்று பட்டு நடக்குந் தன்மையது இடைச் சொல்லாகும்.

**வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்**
**தத்தம் பொருள விசைநிறை யசைநிலை**
**குறிப்பெனெண் பகுதியிற் றனித்திய லின்றிப்**
**பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்**
**தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல்.**

*(ந-நூற்பா 420.)*

**இலக்கண விதி :** தெரிநிலையும், தேற்றமும், ஐயமும், முற்றும், எண்ணும், சிறப்பும், எதிர் மறையும், எச்சமும், வினவும், விழைவும், ஒழி யிசையும், பிரிப்பும், கழிவும், ஆக்கமும் இவை போல்வன பிறவும் தத்தம் பொருள என்ற இடைச் சொற்களின் பொருள்களாகும்.

**தெரிநிலை தேற்ற மையமுற் றெண்சிறப்**
**பெதிர்மறை யெச்சம் வினவிழை வொழியிசை**
**பிரிப்புக் கழிவாக்க மின்னன விடைப்பொருள்.**

*(ந-நூற்பா 421.)*

## 4. உரிச் சொல்

**உறுமீன் வருமளவும்**
**சாலப் பேசினன்**

இங்கு, 'உறு' என்னும் உரிச்சொல் 'மீன்' என்னும் பெயர்ச் சொல்லைத் தழுவி வந்து, 'பெரிய மீன்' எனப் பொருள் தந்து, பெயரின் பண்பை உணர்த்துகிறது. 'சால' என்னும் உரிச்

சொல் 'பேசினன்' என்னும் வினைச்சொல்லைத் தழுவி வந்து, மிகுதியாகப் பேசினன் எனப் பொருள் தந்து, வினையின் பண்பை உணர்த்து கிறது.

இங்ஙனம், பெயர்ச் சொல்லையும், வினைச் சொல்லையும் தழுவிவந்து, பல்வேறு வகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயராகி, ஒருகுணம் தழுவியும், பலகுணம் தழுவியும் செய்யுளுக்கே உரியனவாக வருஞ்சொல் உரிச்சொல் எனப்படும்.

பெயரைத் தழுவி அதன் பண்பை உணர்த்தும் உரிச்சொல் 'பெயர் உரிச்சொல்' என்றும், வினையைத் தழுவி அதன் பண்பை உணர்த்தும் உரிச் சொல் 'வினை உரிச்சொல்' என்றும் வழங்கப்படும். அவ் வுரிச்சொற்கள், ஒருகுணம் தழுவிய உரிச் சொல் என்றும், பலகுணம் தழுவிய உரிச்சொல் என்றும் இரண்டு வகைப்படும்.

**இலக்கண விதி:** இசையும், குறிப்பும், பண்பும் ஆகிய பல்வேறு வகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயராகி, அங்ஙனம் உணர்த்தும் பொழுது, ஒருசொல் ஒருகுணத்தை உணர்த்து வனவும், பலகுணத்தை உணர்த்துவனவுமாய்ப் பெயர்வினைகளை விட்டு நீங்காமல், செய்யுட்கு உரியனவாகிப் பொருட்கு உரிமை பூண்டு வரு வன உரிச்சொல் எனப்படும்.

**பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி**
**ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை**
**ஒருவா செய்யுட் குரியன வுரிச்சொல்.**

(ந-நூற்பா 442.)

(ஒருகுணந் தழுவிய பல உரிச்சொற்கள்)

**சாலச் சிறந்தது**
**உறு புகழ்**
**தவச்சேய் நாட்டார்**
**நனி வருந்தினை**
**துனி கூர் எவ்வம்**
**கழி கண்ணோட்டம்**

மேற்கண்ட எடுத்துக்காட்டுக்களில் 'சால-உறு-தவ-நனி-கூர்-கழி' என்னும் ஆறு உரிச் சொற்களும், 'மிகுதி' என்ற ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாகும். இவை, ஒரு குணம் தழுவிய பல உரிச்சொற்கள் எனப்படும்.

இன்னும், 'சொல்' என்னும் ஒருகுணத்தை உணர்த்தும் பல உரிச்சொற்களும், 'ஓசை' என்னும் ஒரு குணத்தை உணர்த்தும் பல உரிச்சொற்களும் உள.

**இலக்கண விதி:** சால–உறு-தவ-நனி-கூர்-கழி என்ற இவ் வுரிச்சொற்கள் ஆறும், மிகுதியாகிய ஒருகுணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாகும்.

**சால வுறுதவ நனிகூர் கழிமிகல்.**

(ந-நூற்பா 456.)

(பலகுணந் தழுவிய ஓர் உரிச்சொல்)

**கடி**நகர்–காவலை உடைய நகரம் (காப்பு-காவல்)
**கடி**வேல்–கூர்மையான வேல் (கூர்மை)
**கடி**மாலை–வாசனை உடைய மாலை (மணம்-நாற்றம்)
**கடி**மார்பன்–விளங்கும் மார்புடையவன் (விளக்கம்)

கடிபேய்—அஞ்சத்தக்க பேய் (அச்சம்)
கடியரண்—சிறந்த அரண் (சிறப்பு)
அம்புகடிவிடுதும்-அம்பை விரைவில்
விடுவோம் (விரைவு)
கடிகாற்று—மிகுந்த் காற்று (மிகுதி)
கடிமணம்—புதுமணம் (புதுமை)
கடிமுரசு—ஒலிக்கும் முரசு (ஆர்த்தல்-ஒலித்தல்)
கடி மது-நீக்கத்தக்க மது (வரைவு-நீக்குதல்)
கடி. வினை—திருமண வேலை (மன்றல்-திருமணம்)
கடி. மிளகு - கரிக்கின்ற மிளகு (கரிப்பு-காரம்)

மேற்கண்ட எடுத்துக்காட்டுக்களில் **கடி** என்றும் ஓர் உரிச்சொல் காப்பு, கூர்மை, நாற்றம் விளக்கம், அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஆர்த்தல், வரைவு, மன்றல், கரிப்பு என்ற பதின்மூன்று குணத்தையும் உணர்த்தி வந்த பலகுணந் தழுவிய ஓர் உரிச்சொல்லாகும்.

**இலக்கண விதி :** கடி என்னும் உரிச்சொல் காவலும், கூர்மையும், வாசனையும், விளக்கமும், அச்சமும், சிறப்பும், விரைவும், மிகுதியும், புதுமையும், ஒலித்தலும், நீக்கலும், மணமும், கரிப்பும் ஆகிய பதின்மூன்று குணங்களிலும் வரும்.

**கடியென் கிளவி காப்பே கூர்மை**
**விரையே விளக்க மச்சஞ் சிறப்பே**
**விரைவே மிகுதி புதுமை யார்த்தல்**
**வரைவே மன்றல் கரிப்பி னாகும்.**

**(ந-நூற்பா 457.)**

## பயிற்சி வினாக்கள்

1. தனிமொழியாவது யாது?
2. தொடர்மொழியாவது யாது?
3. பொது மொழியாவது யாது? சான்றுடன் விளக்குக.
4. இருதிணைப் பொதுப் பெயர்கள் யாவை?
5. மூவிடங்களுக்கும் பொதுவாக வரும் பெயர் எது?
6. ஆகுபெயராவது யாது?
7. பொருளாகு பெயரையும், குணவாகு பெயரையும் விளக்குக.
8. பொங்கல் உண்டான்; கார்த்திகை பூத்தது-இவை எவ்வெவ் ஆகுபெயருள் அடங்கும்?
9. அன்மொழித் தொகை என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?
10. வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக்குச் சான்று காட்டி விளக்குக.
11. அன்மொழித்தொகைக்கும் ஆகுபெயருக்கும் உள்ள வேறுபாட்டைக் கூறுக.
12. பொதுவினையாவது யாது?
13. இருதிணைப் பொதுவினைகளாக வருபவை எவை?
14. பாற்பொதுவினைகளாக வருபவை எவை?
15. உருபு மயக்கம் என்றால் என்ன? விளக்குக.
16. இறந்தகால இடைநிலைகள் எவை?
17. நிகழ்கால இடைநிலைகள் எவை?
18. எதிர்கால இடைநிலைகள் எவை?
19. இடைநிலைகள் தவிரக் காலங்காட்டும் வேறு உறுப்புக்கள் எவை?
20. று-றும், கு-கும் என்ற விகுதிகள் எவ்வெக் காலங்களைக் காட்டும்.

21. செய்யும் என்னும் வாய்பாட்டு முற்றுவிகுதி எவ்வெக் காலங்களைக் காட்டும்?
22. எதிர்மறை ஆகார விகுதி எவ்வெக் காலங்களைக் காட்டும்?
23. புக்கான், தொட்டான் - இவற்றில் காலங்காட்டும் உறுப்பு எது?
24. சினைவினை, முதல்வினையைக் கொண்டு முடிவதைச் சான்றுடன் விளக்குக.
25. ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாக வரும் குறிப்பு வினைமுற்றுக்கள் எவை? சான்றுடன் விளக்குக.
26. யார், எவன்-இக் குறிப்பு வினைமுற்றுக்கள் எவ்வெப் பால்களுக்குப் பொதுவாக வரும்? சான்று தருக.
27. எல்லாவிடத்தும் வரும் அசைச் சொற்களில் எவையேனும் பத்தை எடுத்தெழுதுக. அவற்றுள் எவையேனும் ஐந்திற்குச் சான்று தருக.
28. பெயர்ச் சொல்லாவது யாது?
29. பெயர்ச் சொற்கள் எட்டு வேற்றுமை உருபுகளையும் ஏற்று நிற்றற்கு ஒவ்வோர் சான்று தருக.
30. மூவிடப் பெயர்கள் எவை?
31. மூவிடப் பொதுப்பெயர் எது?
32. தெரிநிலை வினையாவது யாது? குறிப்பு வினையாவது யாது?
33. வினைச்சொற்கள் எத்தனை வகைப்படும்?
34. இடைச் சொற்கள் எத்தனை வகையாக வரும்.
35. இடைச் சொல் என்று ஏன் பெயர் வந்தது?
36. உரிச்சொல்லாவது யாது?
37. பெயர் உரிச்சொல், வினை உரிச்சொல்—விளக்குக.
38. ஒரு குணம் தழுவிய உரிச் சொற்கள் எவை?
39. கடி என்னும் உரிச்சொல் எவ்வெக் குணங்களை உணர்த்தும்? ஐந்திற்குச் சான்று தருக.

# 3. பொது

## 1. வினவகை

**இச் செய்யுளுக்குப் பொருள் யாது?**
**அஃது அரவோ கயிறோ?**

மேற்கண்ட தொடர்கள் வினப்பொருளைத் தருகின்றமையால் வினவாக்கியங்கள் எனப்படும். ஆசிரியர், தம் மாணவனை நோக்கி, 'இச் செய்யுளுக்குப் பொருள் யாது?' என வினவும்பொழுது, ஆசிரியர் அச் செய்யுளின் பொருளை அறிந்து கொண்டுதான் மாணவனை வினவுகின்றார். எனவே, இவ்வினு 'அறிவினு' எனப்படும்.

மாணவன், தன் ஆசிரியரை நோக்கி, 'இச் செய்யுளுக்குப் பொருள் யாது?' என வினவும்பொழுது, அவன் அச் செய்யுளின் பொருளை அறியாமையால், அதனை அறிந்துகொள்ள எண்ணிக் கேட்கின்றானதலின், அப்பொழுது இவ்வினு 'அறியாவினு' எனப்படும்.

'அஃது அரவோ கயிறோ?' என ஒருவர் வினவும்பொழுது, வினவுகின்றவர் ஒன்றிலும் துணிவு பிறவாமல் ஐயமுற்றுக் கேட்கின்றாராதலின், இவ்வினு 'ஐயவினு' எனப்படும். (அரவு—பாம்பு)

இங்ஙனம் வருகின்ற வினு ஆறுவகைப் படும். அவை, அறிவினு, அறியாவினு, ஐயவினு,

கொளல்வினா, கொடைவினா, ஏவல்வினா எனப் படும்.

1. **அறிவினா:**

ஆசிரியர், மாணவனை நோக்கி 'எட்டுத் தொகை நூல்கள் யாவை? என வினவுதல், அறிந்துகொண்டு வினவப்படுதலின் அறிவினா எனப்படும்.

2. **அறியாவினா:**

மாணவன், ஆசிரியரை நோக்கி 'எட்டுத் தொகை நூல்கள் யாவை?' என வினவுதல், அறி யாமையால் அவற்றை அறிந்துகொள்ள எண்ணி வினவப்படுதலின் அறியாவினா எனப்படும்.

3. **ஐயவினா:**

'அவ் வடிவம் குற்றியோ மகனோ?' என ஒரு வர் வினவுதல், ஒன்றிலும் துணிவு பிறவாது வினவப்படுதலின் ஐயவினா எனப்படும். (குற்றி–மரக்கட்டை)

4. **கொளல்வினா:**

'பயறு உளதோ வணிகரே?' என வினவுதல் அதனைக் கொள்ளும் பொருட்டு வினவப்படுதலின் கொளல்வினா எனப்படும்.

5. **கொடைவினா:**

'சாத்தா உனக்கு ஆடையில்லையா?' என வினவுதல், அவனுக்கு ஆடையைக் கொடுக்கும் நோக்கமுடன் வினவப்படுதலின் கொடைவினா எனப்படும்.

6. **ஏவல்வினா:**

'சாத்தா உண்டாயா?' என வினவுதல், அவனை உண்ணுமாறு ஏவும் பொருட்டு வினவப் படுதலின் ஏவல்வினா எனப்படும்.

**இலக்கண விதி:** அறிதலும், அறியாமையும், ஐயுறலும், கொள்ளுதலும், கொடுத்தலும், ஏவுதலு மாகிய அறுவகைப் பொருளையும் நீக்காது, வினா வகையாகக் கொள்வர்.

**அறிவறி யாமை யையுறல் கொளல்கொடை**
**ஏவ றரும்வினா வாறு மிழுக்கார்.**

(ந-நூற்பா 385)

## 2. விடைவகை

**'மதுரைக்கு வழி யாது?' - இஃது.**

**'நீ சினம் கொள்வாயா?' - கொள்ளேன்.**

மதுரைக்கு வழி யாது? என வினவும்பொழுது 'இஃது' என வழியைச் சுட்டிக்காட்டி விடை கூறு தலின், அவ் விடை 'சுட்டு விடை' எனப்படும்.

'நீ சினம் கொள்வாயா?' என வினவும் பொழுது, 'கொள்ளேன்' என மறுத்து விடை கூறு தலின், அவ் விடை 'மறை விடை' எனப்படும்.

இவ்வாறு வருகின்ற 'விடை' எட்டுவகைப் படும். அவை, சுட்டு விடை, மறை விடை, நேர் விடை, ஏவல் விடை, வினுதல் விடை, உற்ற துரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இன மொழி விடை எனப்படும்.

**1. சுட்டு விடை:**

'சென்னைக்கு வழி யாது?' என்ற வினாவிற்கு 'இஃது' என்று வழியைச் சுட்டிக் காட்டிக் கூறுதல் சுட்டு விடை எனப்படும்.

**2. மறை விடை:**

'சாத்தா இது செய்வாயா?' என்ற வினாவிற்குச் 'செய்யேன்' என்று விடை கூறுதல் மறை விடை எனப்படும்.

**3. நேர் விடை:**

'சாத்தா இது செய்வாயா?' என்ற வினாவிற்குச் 'செய்வேன்' என்று விடை கூறுதல் நேர் விடை எனப்படும்.

**4. ஏவல் விடை:**

'சாத்தா உண்பாயா?' என்ற வினாவிற்கு 'நீ உண்' என விடை கூறுதல் ஏவல் விடை எனப்படும்.

**5. வினாதல் விடை:**

'சாத்தா படிப்பாயா?' என்ற வினாவிற்குப் 'படிப்பேனோ' என வினாவெதிர் வினாதலாக விடை கூறுதல், வினாதல் விடை எனப்படும். (இங்கு ஓகார இடைச்சொல் வினாப்பொருளில் வந்துள்ளது.)

**6. உற்றதுரைத்தல் விடை:**

'சாத்தா நடப்பாயா?' என்ற வினாவிற்குக் 'கால் வலித்தது' என்று விடை கூறுதல் உற்றதுரைத்தல் விடை எனப்படும். 'கால் வலிக்கிறது'

என நிகழ்காலத்தால் கூறினும் அமையும். (உற்றதுரைத்தல்-தனக்கு நேர்ந்ததைக் கூறுதல்.)

**7. உறுவது கூறல் விடை:**

'சாத்தா இரவு விழிப்பாயா?' என்ற வினாவிற்குக் 'கண் நோகும்' என்று விடை கூறுதல் உறுவது கூறல் விடை எனப்படும். (உறுவது கூறல்-தனக்கு இனி நேரக்கூடியதைக் கூறுதல்.)

**8. இனமொழி விடை:**

'சாத்தா பேனா உளதா?' என்ற வினாவிற்குப் 'பென்சில் உண்டு' என்று விடை கூறுதல் இனமொழி விடை எனப்படும்.

இவ் விடை வகைகளுள் சுட்டு விடை, மறை விடை, நேர் விடை மூன்றும் வினாவிற்கு ஏற்ற விடைகளாகும். ஏவல் விடை, வினாதல் விடை, உற்றதுரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை என்ற ஐந்தும் விடைப்பொருளைக் குறிப்பால் தருவனவாகும். இவ்வைந்துள், வினாதல்விடை ஒன்றும் உடன்பாட்டுப் பொருளையும், ஏனைய நான்கும் எதிர்மறைப் பொருளையும் தரும்.

**இலக்கண விதி:** சுட்டும், எதிர் மறுத்தலும், உடன்படலும், ஏவுதலும், எதிர் வினாவுதலும், உற்றதுரைத்தலும், உறுவது கூறலும், இனத்தைச் சொல்லுதலும் என, விடை எட்டு வகைப்படும். அவற்றுள் இறுதியாக உள்ள ஐந்தும், அவ் விடைப் பொருளைத் தருதலினால் விடைகளாகவே தழுவிக்கொள்வர்.

கட்டு மறைநே ரேவல் வினைதல்
உற்ற துரைத்த லுறுவது கூறல்
இனமொழி யெனுமெண் ணிறையு ளிறுதி
நிலவிய வைந்துமப் பொருண்மையி னேர்ப.

(ந-நூற்பா 386.)

## 3. அடைமொழி - பொருள்கோள்

### (1) அடைமொழி

#### வெண்டாமரை - வெண்டிங்கள்

வெண்டாமரை (வெண்மை+தாமரை) என்ற தொடரில், வெண்மை என்பது நிறத்தையும், தாமரை என்பது பூவையும் குறிக்கும் சொற்களாகும். தாமரைப்பூவில், செந்தாமரை வெண்டாமரை என்ற இரண்டு வகை உண்டு. அவற்றுள் செந்தாமரையை நீக்கி வெண்டாமரையைக் குறிப்பதற்கு 'வெண்மை' என்ற பண்புச்சொல் அடைமொழியாக வந்துள்ளது. இவ்வாறு ஒன்றற்கு இனமான பிறவற்றை விலக்கிக் குறித்த பொருளைக் காட்ட வரும் சொல் 'அடைமொழி' எனப்படும். இவ்வாறு வரும் அடைமொழி 'இனமுள்ள அடைமொழி' ஆகும்.

வெண்டிங்கள் (வெண்மை+திங்கள்) என்ற தொடரில், வெண்மை என்னும் பண்புச்சொல் திங்களுக்கு அடைமொழியாக வந்துள்ளது. வெண்டிங்களுக்கு இனமாகக் கருந் திங்கள் இல்லை. எனவே, 'வெண்மை' என்ற அடைமொழி, இங்கு, இனம் விலக்க வரவில்லை; திங்களின் சிறப்பைக்

காட்டவே வந்துள்ளது. இவ்வாறு இனம் விலக்க வராமல், ஒரு பொருளின் சிறப்பைக் காட்டவரும் அடைமொழி 'இனமில்லா அடைமொழி' ஆகும். (திங்கள்—சந்திரன்)

எனவே அடைமொழி, இனமுள்ள அடைமொழி, இனமில்லா அடைமொழி என இருவகைப் படும். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய அறுவகைப் பெயர்களும் இனமுள்ள அடைமொழிகளாகவும், இனமில்லா அடைமொழிகளாகவும் வரும்.

### இனமுள்ள அடைமொழி

1. பொருள் — நெய்க்குடம் (பாற்குடம்-இனம்)
2. இடம் — வயல்நெல் (மலைநெல்-இனம்)
3. காலம் — ஆடிக்கார்த்திகை (தைக்கார்த்திகை-இனம்)
4 சினை — பூமரம் (பழமரம்-இனம்)
5. குணம் — செந்தாமரை (வெண்டாமரை-இனம்)
6. தொழில் — ஆடுபாம்பு (ஆடாத பாம்பு-இனம்)

நெய்க்குடம், வயல்நெல், ஆடிக்கார்த்திகை, பூமரம், செந்தாமரை, ஆடுபாம்பு என்ற சொற்றொடர்களில் உள்ள நெய், வயல், ஆடி, பூ, செம்மை, ஆடு(தல்) என்ற அறுவகைப் பெயர்களும், இனம் விலக்க வந்த அடைமொழிகளாகும். எனவே, இவை இனமுள்ள அடைமொழிகள் எனப்படும்.

## இனமில்லா அடைமொழி

| | | | |
|---|---|---|---|
| 1. | பொருள் | — உப்பளம் | இவற்றிற்கு இனமில்லை |
| 2. | இடம் | — வடவேங்கடம் | |
| 3. | காலம் | — நாளரும்பு | |
| 4. | சினை | — இலைமரம் | |
| 5. | குணம் | — செம்போத்து | |
| 6. | தொழில் | — தோய்தயிர் | |

அளம் என்றவுடன் உப்பென்பதும், வேங்கடம் என்றவுடன் வடக்கு என்பதும், அரும்பு என்றவுடன் நாள் என்பதும், மரம் என்றவுடன் இலை என்பதும், போத்து என்றவுடன் செம்மை என்பதும், தயிர் என்றவுடன் தோய்தல் என்பதும் தாமே வந்து இயையும். இவ் அடைமொழிகள் இன்றியும், அளம் முதலியன பொருளாதி ஆறையும் உணர்த்தும்.

எனவே, உப்பில்லாத அளமும், வடக்கில்லாத வேங்கடமும், நாளில்லாத அரும்பும், இலையில்லாத மரமும், செம்மை நிறமில்லாத போத்தும், தோய்தல் இல்லாத தயிரும் இல்லை. ஆகவே, உப்பு, வடக்கு, நாள், இலை, செம்மை, தோய்தல் என்ற அறுவகைப்பெயரும் இனம் விலக்க வரவில்லை; அளம், வேங்கடம், அரும்பு, மரம், போத்து, தயிர் ஆகியவற்றைச் சிறப்பிக்கவே வந்துள்ளன. எனவே, இவை இனமில்லா அடைமொழிகள் எனப்படும்.

**இலக்கண விதி:** பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற அறுவகைப் பெயர்களும், ஒன்றற்கு இனமுள்ள அடைமொழிகளாக

வும், இனமில்லா அடை மொழிகளாகவும் உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் வரும்.

## 2. பொருள்கோள்

(ஆற்றுநீர்–கொண்டுகூட்டு–
தாப்பிசை–மொழிமாற்று!)

செய்யுளில் அமைந்துள்ள சொற்களைப் பொருள் பொருத்தமுற எடுத்துக்கூட்டி அமைத்துப் பொருள் கொள்ளுதல், பொருள்கோள் எனப்படும். அவை எட்டு வகைப்படும்.

ஆற்றுநீர்ப் பொருள்கோள், மொழி மாற்றுப் பொருள்கோள், நிரல்நிறைப் பொருள்கோள், பூட்டுவிற் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள், அளைமறி பாப்புப் பொருள்கோள், கொண்டு கூட்டுப் பொருள்கோள், அடிமறி மாற்றுப் பொருள்கோள் எனப் பொருள்கோள் எட்டு வகைப்படும்.

பொருள்கோள் எட்டனுள், ஆற்றுநீர்ப் பொருள்கோள், கொண்டுகூட்டுப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள், மொழிமாற்றுப் பொருள்கோள் என்ற நான்கைப் பற்றிப் பார்ப்போம்.

### 1. ஆற்று நீர்ப் பொருள்கோள்

**"சொல்லரும் சூற்பசும் பாம்பின் றோற்றம்போல்**
**மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்**
**செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்**
**கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே."**

"நெற்பயிர்கள், கருவுற்ற பச்சைப் பாம்பின் தோற்றம்போல மெதுவாகக் கருவுற்று, பின்பு கதிர்களை ஈன்று, கதிர்கள் முற்ருதபொழுது, செல்வம் பெற்ற கீழ்மக்கள் செருக்கித் தலைநிமிர்ந்து நிற்பதைப் போலத் தமது கதிர்களாகிய தலையை வணங்காமல் நேரே நிறுத்தி, கதிர்கள் முற்றியவுடன், உண்மைப் பொருளை ஆராய்ந்து கூறுகின்ற அறநூல்களைக் கற்ற அறிவுடைய சான்ருேர்களைப்போலத் தலை வணங்கி விளைந்தன" என்பது இப் பாடலின் பொருளாகும்.

இப் பாட்டினுள், நெற்பயிரைக் குறிக்கும் 'சொல்' என்பது எழுவாயாக நிற்க, அதன் தொழிலாகிய கருவிருந்து, ஈன்று, நிறுவி, இறைஞ்சி என்னும் வினையெச்சங்கள் ஒன்றனை ஒன்று கொள்ளுமாறு இடையே அமைத்துக் 'காய்த்த' என்னும் பயனிலையை இறுதியிலே தந்து முடித்தமையால், இப் பொருள்கோள், ஆற்று நீர்ப் பொருள்கோள் எனப்படும்.

ஆற்றுநீர்ப் பொருள்கோள், புனல்யாற்றுப் பொருள்கோள் என்றும், யாற்றுவரவுப் பொருள்கோள் என்றும், ஆற்ருெழுக்குப் பொருள்கோள் என்றும் வழங்கவும் படும். (ஆறு-யாறு.)

ஆற்று நீர் ஆரம்பத்திலிருந்து இடையீடில்லாமல் தொடர்ந்து செல்லுதல்போலப் பாட்டினுள் எழுவாய் முதலில் அமைய, இடையில் வினையெச்சங்கள் ஒன்றனை ஒன்று கொண்டு முடியுமாறு அமைந்து, இறுதியில் பயனிலை பெற்று முடிவது ஆற்று நீர்ப் பொருள்கோள் எனப்படும்.

**இலக்கண விதி:** மொழிமாற்று முதலியபோல், சொற்களைப் பிறழ்ந்து கொண்டுகூட்ட வேண்டாது, ஆற்று நீரொழுக்குப்போல நெறிப்பட்டு, இடையறுது அடிதோறும் சிறந்த பொருள் ஆங்காங்கு அமைந்து வருவது, ஆற்றுநீர்ப் பொருள்கோள் எனப்படும்.

இனி ஒருசாரார், ஏனைய அடிகளை நோக்காது அடிதோறும் பொருள் முடிந்து வருவது, ஆற்று நீர்ப் பொருள்கோள் என்பர். அதற்கு எடுத்துக் காட்டு வருமாறு :

**''அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்;**
**விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்;**
**சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்;**
**கொலைப்பாலுங் குற்றமே யாம்.''**

இப்பாடலில் உள்ள ஒவ்வோர் அடிகளும் தனித்தனியே பொருள் முடிந்துள்ளன.

### 2. கொண்டுகூட்டுப் பொருள்கோள்

**''தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்**
**வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி**
**அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே**
**வங்கத்துச் சென்ருர் வரின்.''**

''கப்பலேறிச் சென்ற தலைவன் வந்தால், மை போன்ற கரிய கூந்தலையுடைய தலைவியின் அழகிய உடம்பில், தேங்காய் போலத் திரண்டு உருண்ட கோழியின் வெண்மையான முட்டையை உடைத்து ஊற்றியது போன்ற பசலை நிறம் தணியும்'' என்பது இப்பாடலின் பொருளாகும்.

இப்பாடலில், 'வங்கத்துச் சென்றார் வரின், அஞ்சனத்தன்ன பைங்கூந்தல் மாமேனி தெங்கங் காய் போலத் திரண்டுருண்ட கோழி வெண் முட்டை உடைத்தன்ன பசலை தணிவாம்' எனச் சொற்களை முன்னும் பின்னும் கொண்டுகூட்டிப் பொருள் கொண்டமையால், இது கொண்டு கூட்டுப் பொருள்கோளாகும்.

இக் கொண்டுகூட்டுப் பொருள்கோளுக்கும், மொழிமாற்றுப் பொருள்கோளுக்கும் உள்ள வேறுபாடு வருமாறு:

கொண்டுகூட்டுப் பொருள்கோளில் பல அடிகளில் நின்ற சொற்களை முன்னும் பின்னும் கொண்டுகூட்டிப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

மொழிமாற்றுப் பொருள்கோளில், ஒவ்வோர் அடியிலும் நின்ற சொற்களை, அவ் வடிக்குள்ளே மாற்றிப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

**இலக்கண விதி:** செய்யுளடிகள் பலவற்றினும், இயல்பாகிய ஆற்றுநீர்ப் பொருள்கோளுக்கு ஏலாது அமைந்து கிடந்த சொற்களை எடுத்து, அப் பொருளுக்கு ஏற்றவிடத்துக் கூட்டிப் பொருள் கொள்வது கொண்டுகூட்டுப் பொருள் கோளாகும்.

### 3. தாப்பிசைப் பொருள்கோள்

**"உண்ணாமை யுள்ள துயிர்நிலை ஊனுண்ண**
**அண்ணாத்தல் செய்யா தளறு."**

இத் திருக்குறளில், "புலால் உண்ணாமை யாகிய அறத்திலேதான் உயிர் அடையும் நற்கதி

அமைந்துள்ளது; புலால் உண்டால், அங்ஙனம் உண்டவர்களை விழுங்கிய நரகம், அவர்களை உமிழ்வதற்கு வாயைத் திறவாது'' என்ற பொருள் அமைந்துள்ளது.

இத் திருக்குறளில், நடுவே நிற்கும் 'ஊன்' என்ற சொல், 'ஊன் உண்ணாமை யுள்ள துயிர் நிலை' என முன்னும், 'ஊன் உண்ண அண்ணாத் தல் செய்யா தளறு' எனப் பின்னும் சென்று பொருள் தருகின்றது.

நடுவே நிற்கும் ஊசல், ஆட்டும் பொழுது முன்னும் பின்னும் சென்று வருதல்போல, நடுவே நிற்கும் 'ஊன்' என்ற சொல், பொருள் கொள்ளும் பொழுது முன்னும் பின்னும் சென்று பொருள் தருகின்றது. எனவே, இது தாப்பிசைப் பொருள் கோள் எனப்படும். (தாம்பு=ஊசல்; தாப்பு என வலித்தல் விகாரம் பெற்றுள்ளது. இசை—சொல்.)

**இலக்கண விதி:** இடையில் நிற்கும் சொல், முதலிலும், ஈற்றிலும் சென்று பொருளைத் தரு வது தாப்பிசைப் பொருள்கோளாகும்.

### 4. மொழிமாற்றுப் பொருள்கோள்

**''சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய**
**யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப**
**கானக நாடன் சுனை''**

இப் பாடலில் 'ஆழ' என்னும் பயனிலைக் கேற்ற 'அம்மி' என்னும் சொல்லை, 'மிதப்ப' என் னும் பயனிலைக்கு மாற்றிக் கூறப்பட்டுள்ளது.

'மிதப்ப' என்னும் பயனிலைக்கேற்ற 'சுரை' என்னும் சொல்லை, 'ஆழ' என்னும் பயனிலைக்கு மாற்றிக் கூறப்பட்டுள்ளது.

'நீத்து' என்னும் பயனிலைக்கேற்ற 'முயல்' என்னும் சொல்லை, 'நிலை' என்னும் பயனிலைக்கு மாற்றிக் கூறப்பட்டுள்ளது.

'நிலை' என்னும் பயனிலைக்கேற்ற 'யானை' என்னும் சொல்லை, 'நீத்து' என்னும் பயனிலைக்கு மாற்றிக் கூறப்பட்டுள்ளது.

இங்ஙனம் மாற்றிக் கூறியபடி பொருள் கொள்ள முடியாது. எனவே, 'அம்மி ஆழ' என்றும், 'சுரை மிதப்ப' என்றும் 'முயற்கு நீத்து' என்றும் 'யானைக்கு நிலை' என்றும் மொழி மாற்றிப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

"காடுகள் சூழ்ந்துள்ள நாட்டை உடைய தலைவனது மலையின்கண் உள்ள சுனையானது, சுரைக் குடுக்கை மிதக்கத்தக்க இயல்பை உடையது; அம்மி ஆழத் தக்க இயல்பை உடையது; மலை போன்ற யானை கால் ஊன்றி நிற்கத் தக்க இயல்பை உடையது; முயல் நீந்தத் தக்க இயல்பை உடையது" என்பதே பொருளாகும்.

**இலக்கண விதி:** ஏற்ற இரண்டு பயனிலைகளுக்குப் பொருந்தும் மொழிகளை, ஏலாத பயனிலைகளுக்குத் தனித்தனி கூட்டி ஓரடியுள்ளே கூறுவது, மொழி மாற்றுப் பொருள்கோள் எனப்படும்.

## 4. உவமவுருபுகள்

### "பவளத் தன்ன மேனி"

'பவளம் போன்ற (செந்நிற) உடல்' என்பது இத் தொடரின் பொருளாகும்.

இத் தொடரில் 'பவளம்' உவமை. 'மேனி' உவமேயம். 'அன்ன' என்பது உவம உருபு.

இவ்வாறு வரும் உவம உருபுகள் பலவுண்டு. அவை போல, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைய, ஏய்ப்ப, நேர, நிகர, அன்ன, இன்ன என்பனவும் பிறவுமாகும்.

'குயில் **போலக்** கூவினாள்'
'தாமரை **புரையுங்** காமர் சேவடி'
'தருமனை **ஒப்பப்** பொறுமை யுடையான்'
'கூற்றுவன் **உறழும்** ஆற்றலான்'
'மை **மானும்** வடிவம்'
'மழை **கடுக்கும்** கையான்'
'கற்கண்டு **இயையப்** பேசுவான்'
'குன்றி **ஏய்க்கும்** உடுக்கை'
'துடி **நேர்** இடை'
'சேல் **நிகர்க்கும்** விழி'
'வேய் **அன்ன** தோள்'
'தேன் **இன்ன** மொழி'

('பிறவும் உவமத்துருபே' என்றதனால், போல், புரை, என்றற்றொடக்கத்து வினையடியாற் பிறத் தற்குரிய மற்றை வினையெச்ச விகற்பங்களும், பெயரெச்ச விகற்பங்களும், பொருவ, ஏற்ப,

அனைய, இகல, எதிர, சிவண, மலைய முதலானவையும் உவமவுருபுகளாக வரும்.)

**இலக்கண விதி :** போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைய, ஏய்ப்ப, நேர, நிகர என்னும் செயவெனெச்சம் பத்தும், அன்ன, இன்ன என்னும் பெயரெச்சக் குறிப்பு இரண்டும், இவை போல்வன பிறவும் உவமவுருபுகளாம்.

**போலப் புரைய வொப்ப வுறழ**
**மானக் கடுப்ப வியைய வேய்ப்ப**
**நேர நிகர வன்ன வின்ன**
**என்பனவும் பிறவு முவமத் துருபே.**

*(ந—நூற்பா 367.)*

**பயிற்சி வினாக்கள்**

1. *வினா எத்தனை வகைப்படும்? வகைக்கொரு சான்று தருக.*
2. *விடை எத்தனை வகைப்படும்? வகைக்கொரு சான்று காட்டி விளக்குக.*
3. *இனமுள்ள அடைமொழி என்றால் என்ன? இனமில்லா அடைமொழி என்றால் என்ன? விளக்குக.*
4. *மோர்ப்பானை, பச்சரிசி, தென்குமரி, புன்செய்ப் பயிர் - இவற்றுள் இனமுள்ள அடைமொழிகள் எவை? இனமில்லா அடைமொழிகள் எவை? இனமுள்ள அடைமொழிகளுக்கு இனம் எவை?*
5. *பொருள்கோள் என்றால் என்ன?*

6. ஆற்றுநீர்ப் பொருள்கோளைச் சான்றுடன் விளக்குக.
7. கொண்டு கூட்டுப் பொருள்கோளை விளக்குக.
8. தாப்பிசைப் பொருள்கோளைச் சான்று காட்டி விளக்குக.
9. மொழிமாற்றுப் பொருள்கோள் என்றால் என்ன? ஓர் எடுத்துக்காட்டின் வாயிலாக விளக்குக.
10. எவையேனும் ஐந்து உவம உருபுகளைக் கூறி, அவற்றிற்கு எடுத்துக்காட்டுக்களும் தருக.

# 4. புணர்ச்சி

## 1. பல, சில, பூ, தெங்கு, மரம், தேன் இவற்றின் புணர்ச்சி

### 1. பல, சில என்னும் சொற்களின் புணர்ச்சி

| | |
|---|---|
| 1. பல + பல = பலபல | 1. சில + சில = சிலசில |
| 2. பல + பல = பலப்பல | 2. சில + சில = சிலச்சில |
| 3. பல + பல = பற்பல | 3. சில + சில = சிற்சில |

மேற்கண்ட எடுத்துக்காட்டுக்களை நோக்குங்கள்.

1. பல என்ற சொல்லுக்குமுன் பல என்ற சொல்லும், சில என்ற சொல்லுக்குமுன் சில என்ற சொல்லும் வந்து புணரும்பொழுது, அவை பலபல, சிலசில என இயல்பாகவும் புணரும்.

2. பல என்ற சொல்லுக்குமுன் பல என்ற சொல்லும், சில என்ற சொல்லுக்குமுன் சில என்ற சொல்லும் வந்து புணரும்பொழுது, அவை பல**ப்**பல சில**ச்**சில என வல்லெழுத்து மிக்கும் புணரும்.

3. பல என்ற சொல்லுக்குமுன் பல என்ற சொல்லும், சில என்ற சொல்லுக்குமுன் சில என்ற சொல்லும் வந்து புணரும்பொழுது, நிலைமொழி ல வில் உள்ள ***அகரம்*** கெட நின்ற **ல்–ற்** ஆகத் திரிந்து ப**ற்**பல, சி**ற்**சில எனவும் புணரும்.

பல + பல = பல்பல | சில + சில = சில்சில

பல என்ற சொல்லுக்குமுன் பல என்ற சொல்லும், சில என்ற சொல்லுக்குமுன் சில என்ற சொல்லும் வந்து புணரும்பொழுது, நிலை மொழி **ல** வில் உள்ள **அகரம்** கெட நின்ற **ல்–ற்** ஆகத் திரியாமல், ஒரோவழி, பல்பல, சில்சில எனவும் புணரும். (பிற என்ற மிகை விதிப்படி.)

பல + கலை = பலகலை, பல்கலை
சில + படை = சிலபடை, சில்படை
பல + நாள் = பலநாள், பன்னாள்
சில + மணி = சிலமணி, சின்மணி
பல + யாழ் = பலயாழ், பல்யாழ்
சில + வளை = சிலவளை, சில்வளை
பல + அணி = பலவணி, பல்லணி
சில + ஆயம் = சிலவாயம், சில்லாயம்

மேற்கண்ட எடுத்துக்காட்டுக்களை நோக்குங்கள்.

'பல, சில' என்ற சொற்களுக்குமுன் பிற பெயர்களாகிய வல்லினமும், மெல்லினமும், இடையினமும் உயிரெழுத்துக்களும் வந்து புணரும் பொழுது, அவை இயல்பாயும், ல வில் உள்ள அகரம் கெட்டு விகற்பமாயும் புணரும். (விகற்பமாவது, அகரம் நின்றும், கெட்டும் புணர்வது.)

பல + படை = பற்படை
சில + படை = சிற்படை

இங்ஙனம், 'பல, சில' என்பவை பிறபெயர்கள் வந்து புணரும்பொழுது, மேற்கூறிய விதிப்

படி அகரம் விகற்பமாய்ப் புணராமல், நிலைமொழி ல வில் உள்ள அகரம் நீங்க நின்ற **ல்–ற்** ஆகத் திரிந்து புணர்தலும் ஒரோவழி உண்டு. (பிற என்ற மிகை விதிப்படி.)

**இலக்கண விதி:** பல சில என்னும் இவ்விரு சொல்லும் தம் முன்னர்த் தாம் வருமாயின் இயல் பாகவும், வல்லினம் மிகுந்தும், நிலை மொழி ஈற் றில் உள்ள அகரம் கெட நின்ற ல்–ற் ஆகத் திரிந்தும் புணரும். இவற்றின்முன் பிறபெயர் கள் வந்து புணரும்பொழுது, ஈற்றில் உள்ள அகரம் கெட்டும், கெடாமலும் விகற்பமாய்ப் புணரும்.

**பலசில வெனுமிவை தம்முன் றம்வரின்**
**இயல்பு மிகலும் அகர மேக**
**லகரம் றகர மாகலும் பிறவரின்**
**அகரம் விகற்ப மாகலு முளபிற.**

*(ந–நூற்பா 170.)*

### 2. பூ என்னும் சொல்லின் புணர்ச்சி

**பூ + கொடி = பூங்கொடி | பூ + தடம் = பூந்தடம்**
**பூ + சோலை = பூஞ்சோலை | பூ + பணை = பூம்பணை**

மேற்கண்ட எடுத்துக்காட்டுக்களுள் **பூ** என் னும் சொல்லின்முன் 'கொடி, சோலை, தடம், பணை' என்ற சொற்கள் வந்து புணரும் பொழுது, வருமொழியில் உள்ள க், ச், த், ப் என்ற வல் லெழுத்துக்களுக்கு இனமாகிய ங்,ஞ்,ந்,ம் என்ற மெல்லெழுத்துக்கள் இடையில் தோன்றியுள் ளன.

எனவே, பூ, என்னும் பெயர்க்குமுன் வரு மொழியில் க, ச, த, ப என்ற வல்லினம் வந்து புணரும்பொழுது, வருகின்ற வல்லின மெய்க்கு இனமாகிய மெல்லின மெய்யெழுத்து இடையில் வந்து தோன்றும்.

இங்ஙனம் புணர்வதோடல்லாமல், 'இயல் பினும் விதியினும் நின்ற உயிர்முன் க, ச, த, ப மிகும்' என்ற பொது விதிப்படி,

பூ + கொடி = பூக்கொடி
பூ + சோலை = பூச்சோலை
பூ + தொட்டி = பூத்தொட்டி
பூ + பொழில் = பூப்பொழில்

என, வரும் வல்லெழுத்தே மிக்குப் புணர்தலும் உண்டு.

**இலக்கண விதி:** பூ என்னும் பல பொருட் பெயர்ச் சொல்லின்முன் க, ச, த, ப என்ற வல்லி னம் வரின், பொது விதிப்படி மிக்குப் புணர்தலே அன்றி, வருகின்ற வல்லினத்திற்கு இனமாகிய மெல்லினம் இடையே தோன்றப் புணர்தலும் உண்டு.

**பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்.**
(ந - நூற்பா **200.**)

### 3. தெங்கு என்ற சொல்லின் புணர்ச்சி

தெங்கு + காய் = தேங்காய்

'தெங்கு' என்ற பெயர்ச் சொல்லின்முன் 'காய்' என்ற சொல் வந்து புணரும்பொழுது, நிலைமொழியாகிய தெங்கு என்பதில் உள்ள முதல்

எழுத்தாகிய 'தெ' என்பது 'தே' என நீண்டு, ஈற்றில் உள்ள 'கு' என்ற உயிர்மெய் கெட்டுத் தேங்காய் எனப் புணர்ந்தமை அறிக.

'கெட்டே புணரும்' என்று கூறுமையால் **தெங்கு + காய் = தெங்கங்காய் (தெங்கு + அம் + காய்)** என 'அம்' சாரியை பெற்றுப் புணர்தலும் உண்டு.

**இலக்கண விதி:** காய் என்னும் சொல் வந்து புணரும் பொழுது, தெங்கு என்னும் சொல் முதல் நீண்டு, ஈற்றுயிர்மெய் கெட்டுப் புணரும்.

**தெங்குநீண் டீற்றுயிர் மெய்கெடுங் காய்வரின்.**

(ந. நூற்பா 187.)

**4. மரப் பெயர்ச் சொற்களின் புணர்ச்சி**

மா + பூ = மாம்பூ
விள + காய் = விளங்காய்
கள + கனி = களங்கனி

'மா, விள, கள' என்பன மரத்தைக் குறிக்கும் பெயர்ச் சொற்களாகும். அவற்றின்முன் 'பூ, காய், கனி' என்ற வல்லெழுத்தை முதலாக உடைய சொற்கள் வரும்பொழுது, அங்ஙனம் வருகின்ற வல்லெழுத்துக்களுக்கு இனமான மெல்லெழுத்துக்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் வரும்.

'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க, ச, த, ப மிகும்' என்ற பொது விதிப்படி,

வாழை + காய் = வாழைக்காய்
பலா + காய் = பலாக்காய்

என்பனபோலச் சில இடங்களில் வல்லினம் மிக்குப் புணரும்.

எனவே, மரப்பெயர்களின் புணர்ச்சி அமைப்பைக் கொண்டு, வல்லினம் மிக்குப் புணர்வதை அறிந்து கொள்க.

**இலக்கண விதி:** சில மரப் பெயர்ச் சொற்களுக்குமுன், பொது விதிப்படி வல்லெழுத்து மிகாமல் அவற்றின் இனமான மெல்லெழுத்து வேற்றுமையில் வரப்பெறுவனவும் உள. (பொது விதிப்படி வல்லினம் மிக்குப் புணர்தலும் உண்டு.)

**மரப்பெயர் முன்ன ரினமெல் லெழுத்து**
**வரப்பெறு னவுமுள வேற்றுமை வழியே.**

*(ந. நூற்பா. 166.)*

### 5. தேன் என்னும் சொல்லின் புணர்ச்சி

**(அல்வழி)**

**தேன் + கடிது = தேன்கடிது**
**தேன் + ஞான்றது = தேன்ஞான்றது**
**தேன் + யாது = தேன்யாது**
**தேன் + மொழி = தேன்மொழி, தேமொழி**
**தேன் + குழம்பு = தேன்குழம்பு, தேக்குழம்பு,**
**[தேங்குழம்பு**

**(வேற்றுமை)**

**தேன் + கடுமை = தேன்கடுமை**
**தேன் + மலிவு = தேன்மலிவு**
**தேன் + யாப்பு = தேன்யாப்பு**
**தேன் + மலர் = தேன்மலர், தேமலர்**
**தேன் + குடம் = தேன்குடம், தேக்குடம்,**
**[தேங்குடம்**

மேற்கண்ட எடுத்துக்காட்டுக்களில் அல்வழி, வேற்றுமை ஆகிய இருவகைப் புணர்ச்சிகளிலும்,

தேன் என்ற சொல்லின்முன் மூவின மெய்களும் வரப் புணர்ந்துள்ளமை தெரியவரும்.

அங்ஙனம் புணரும்பொழுது,

தேன்கடித்து, தேன்ஞான்றது, தேன்யாது என அல்வழியிலும், தேன்கடுமை, தேன்மலிவு, தேன்யாப்பு என வேற்றுமையிலும் மூவினமும் வர இயல்பாகப் புணரும்.

ஒரோவழி, மெல்லினம் வந்து புணரும் பொழுது, தேன்மொழி என அல்வழியில் இயல் பாதலே அன்றி, ஈற்று **ன்** கெட்டுத் தேமொழி எனவும் புணரும்.

வேற்றுமையில், தேன்மலர் என இயல்பாகப் புணர்தலே அன்றி, ஈற்று **ன்** கெட்டுத் தேமலர் எனவும் புணரும்.

ஒரோவழி, வல்லினம் வந்து புணரும் பொழுது, தேன்குழம்பு என அல்வழியில் இயல் பாதலே அன்றி, ஈற்று **ன்** கெட்டு வருமொழி வல்லினம் மிகப் பெற்றுத் தேக்குழம்பு எனவும், அவ் வல்லினத்திற்கு இனமான மெல்லினம் மிகப் பெற்றுத் தேங்குழம்பு எனவும் புணரும்.

வேற்றுமையில், வல்லினம் வந்து புணரும் பொழுது, தேன்குடம் என இயல்பாதலே அன்றி, ஈற்று **ன்** கெட்டு வருமொழி வல்லினம் மிகப் பெற்றுத் தேக்குடம் எனவும், அவ் வல்லினத் திற்கு இனமான மெல்லினம் மிகப் பெற்றுத் தேங் குடம் எனவும் புணரும்.

இடையினம் வந்து புணரும்பொழுது, தேன்யாது என அல்வழியிலும், தேன்யாப்பு என வேற்றுமையிலும் இயல்பாகவே புணரும்.

**இலக்கண விதி:** தேன் என்னும் சொல்லின்முன் மூவின மெய்களும் வந்து புணரும்பொழுது அல்வழி வேற்றுமை ஆகிய இருவழிகளிலும் இறுதி னகரம் இயல்பாதலும், மெல்லினம் வரின் இறுதி னகரம் இயல்பாதலே அன்றிக் கெடுதலும், வல்லினம் வரின் இறுதி னகரம் இயல்பாதலே அன்றிக் கெட்டு, வந்த வல்லினமாதல் அதற்கின மாதல் மிகுதலும் ஆம்.

**தேன்மொழி மெய்வரி னியல்பு மென்மை**
**மேவி னிறுதி யழிவும் வலிவரின்**
**ஈறுபோய் வலிமெலி மிகலுமா மிருவழி.**

(ந-நூற்பா 214.)

## 2. செய்யுள் விகாரம்

**''தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறு மறிவு.''**

இத் திருக்குறளில் 'தொட்டது, கற்றது' என நிற்கவேண்டிய சொற்கள், 'தொட்டு, கற்று' எனத் தொகுத்தல் விகாரம் பெற்றுள்ளன. இங்ஙனம் செய்யுளில் அடி, தொடை முதலானவைகளை நோக்கிச் சொற்கள் பல விகாரங்களைப் பெற்று வரும். அங்ஙனம் வருவது செய்யுள் விகாரம் எனப்படும்.

செய்யுள் விகாரம், வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல் என்ற

ஆறுடன், முதற்குறை, இடைக்குறை, கடைக் குறை என்ற மூன்றும் சேர்த்து 'ஒன்பது' வகைப் படும். அவை வருமாறு:

**1. வலித்தல் விகாரம்**

**"குறுத்தாட் பூதஞ் சுமந்த"**

குறுமை + தாள் = குறுந்தாள் எனப் புணர வேண்டும். அங்ஙனம் புணராது **ந்** என்ற மெல் லெழுத்து **த்** என்ற வல்லெழுத்தாக விகாரப்பட் டுள்ளது. எனவே, வலித்தல் விகாரம் எனப்படும்.

**2. மெலித்தல் விகாரம்**

**"தண்டையி னினக்கிளி கடிவோள்"**

இத்தொடரில் தட்டை எனற்பாலது, தண்டை என **ட்** என்ற வல்லெழுத்து **ண்** என்ற மெல் லெழுத்தாக விகாரப்பட்டுள்ளது. எனவே, இது மெலித்தல் விகாரமாகும். (தட்டை—கிளியோட்டும் கருவி.)

**3. நீட்டல் விகாரம்**

**"ஈசன் எந்தை இணையடி நீழலே"**

இத்தொடரில் 'நிழலே' எனற்பாலது 'நீழலே' எனக் குறில், நெடிலாக நீண்டு விகாரப்பட்டுள் ளது. எனவே, இது நீட்டல் விகாரமாகும்.

**4. குறுக்கல் விகாரம்**

**"திருத்தார் நன்றென்றேன் றியேன்"**

இத்தொடரில் 'தீயேன்'எனற்பாலது 'தியேன் என நெடில், குறிலாக விகாரப்பட்டுள்ளது. எனவே, இது குறுக்கல் விகாரமாகும்.

### 5. விரித்தல் விகாரம்

"வெதிரி னெல்விளை யும்மே"

இத் தொடரில் 'விளையுமே' எனற்பாலது 'விளையும்மே' என, இடையே ம் என்ற மெய் யெழுத்து விரிந்து விகாரப்பட்டுள்ளது. எனவே, இது விரித்தல் விகாரமாகும்.

### 6. தொகுத்தல் விகாரம்

"சிறியிலை வெதிரினெல்"

இத் தொடரில் 'சிறியவிலை' எனற்பாலது 'சிறியிலை' என, யகர உயிர்மெய் தொகுத்தல் விகாரப்பட்டுள்ளது. எனவே, இது தொகுத்தல் விகாரமாகும்.

### 7. முதற்குறை

"மரையிதழ் புரையும் அஞ்செஞ் சீறடி"

இத் தொடரில் 'தாமரை' எனற்பாலது 'மரை' என முதல் எழுத்துக் குறைந்து நிற்கிறது. எனவே, இது முதற்குறை யாகும்.

### 8. இடைக்குறை

"ஓதி முதுபோத்து"

இத் தொடரில் 'ஓந்தி' எனற்பாலது 'ஓதி' என இடையில் உள்ள நகரமெய் குறைந்து நிற்கிறது. எனவே, இஃது இடைக்குறை யாகும்.

### 9. கடைக்குறை

"நீலுண் டுகிலிகை கடுப்ப"

இத் தொடரில் 'நீலம்' எனற்பாலது 'நீல்' எனக் கடைக் குறைந்துள்ளது. எனவே, இது கடைக்குறை யாகும்.

இவை தவிர, உரையிற்கோடல் என்ற வகையில், விதியின்றி வருகின்ற தோன்றல், திரிதல், கெடுதல், நீளல், எழுத்து நிலைமாறுதல், சொல் நிலைமாறுதல் முதலாயினவும் செய்யுள் விகாரமாகக் கொள்ளப்படும்.

அவற்றுள் சில வருமாறு:

யாது — யாவது என வருவது தோன்றல் விகாரமாகும்.

கண்ணகல் பரப்பு — கண்ணகன் பரப்பு என வருவது திரிதல் விகாரமாகும்.

யானை — ஆனை என வருவது கெடுதல் விகாரமாகும்.

பெயர் — பேர் என வருவது நீளல் விகாரமாகும்.

தசை — சதை என வருவது எழுத்து நிலைமாறுதல் விகாரமாகும்.

இல்வாய் — வாயில் என வருவது சொல் நிலைமாறுதல் விகாரமாகும்.

**இலக்கண விதி:** மெல்லொற்றை வல்லொற்றுக்கலும், வல்லொற்றை மெல்லொற்றுக்கலும், குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கலும், நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கலும், இல்லாத எழுத்தை வருவித்தலும், உள்ள எழுத்தை நீக்கலும், செய்யுளிடத்து அடி, தொடை முதலானவைகளை நோக்கி அமைக்க வேண்டுமிடத்து வருவனவும் செய்யுள் விகாரமாகும்.

**இலக்கண விதி:** அடி, தொடை முதலானவை களை நோக்கி, ஒருமொழி 'முதல், இடை, கடை' என மூன்றிடத்தும் குறைந்து வருதலும் செய்யுள் விகாரமாகும்.

**வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்**
**விரித்த றொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி.**
*(ந-நூற்பா 155.)*

**ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே.**
*(ந-நூற்பா 156.)*

## 3. ணகர, னகர-யகர, ரகர, ழகர-லகர, ளகர ஈற்றுப்புணர்ச்சி

### (1) ணகர, னகர ஈற்றுப்புணர்ச்சி

(வேற்றுமை)

| | |
|---|---|
| **மண் + கலம் = மட்கலம்** | **பொன் + கலம் = பொற்கலம்** |
| **மண் + குடம் = மட்குடம்** | **பொன் + குடம் = பொற்குடம்** |

இவ்வாறு, வேற்றுமையிலே வல்லினம் வரின், ணகர னகர ஈறுகள் முறையே டகரமாகவும், றகர மாகவும் திரியும்.

| | |
|---|---|
| **மண் + ஞாற்சி = மண்ஞாற்சி** | **பொன் + ஞாற்சி = பொன்ஞாற்சி** |
| **மண் + மாட்சி = மண்மாட்சி** | **பொன் + மாட்சி = பொன்மாட்சி** |

இவ்வாறு, வேற்றுமையிலே மெல்லினம் வரின், ணகர, னகர ஈறுகள் இயல்பாகும்.

| | |
|---|---|
| **மண் + வன்மை = மண்வன்மை** | **பொன் + வன்மை = பொன்வன்மை** |

**மண் + யாப்பு = மண்யாப்பு | பொன் + யாப்பு = பொன்யாப்பு**

இவ்வாறு, வேற்றுமையிலே இடையினம் வரின், ணகர, னகர ஈறுகள் இயல்பாகும்.

(அல்வழி)

**மண் + சிறிது = மண்சிறிது | பொன் + சிறிது = பொன்சிறிது**

**மண் + பெரிது = மண்பெரிது | பொன் + பெரிது = பொன்பெரிது**

இவ்வாறு, அல்வழியிலே, வல்லினம் வரின், ணகர, னகர ஈறுகள் இயல்பாகும்.

**மண் + ஞான்றது = மண்ஞான்றது | பொன் + ஞான்றது = பொன்ஞான்றது**

**மண் + மாண்டது = மண்மாண்டது | பொன் + மாண்டது = பொன்மாண்டது**

இவ்வாறு, அல்வழியிலே மெல்லினம் வரின், ணகர, னகர ஈறுகள் இயல்பாகும்.

**மண் + யாது = மண்யாது | பொன் + யாது = பொன்யாது**
**மண் + வலிது = மண்வலிது | பொன் + வலிது = பொன்வலிது**

இவ்வாறு, அல்வழியிலே இடையினம் வரின், ணகர, னகர ஈறுகள் இயல்பாகும்.

(கண் + பொறி = கட்பொறி எனப் பண்புத் தொகையிலும், பொன் + சுணங்கு = பொற்சுணங்கு என உவமைத்தொகையிலும் அல்வழியில், ஒரோவழி ணகர, னகர ஈறுகள் திரிதல் உண்டு. **மண் +** சுமந்தான் = மண் சுமந்தான், பொன் + சுமந்தான் = பொன்சுமந்தான் என வேற்றுமையிலே, வருமொழி

வினையாயின், ஈறுகள் திரியாமல் ஒரோவழி இயல்பாதல் உண்டு.)

**இலக்கண விதி:** ணகர, னகர ஈறுகள் வேற்றுமைப்புணர்ச்சியிலே வருமொழி முதலில் வல்லினம் வரின், ண்—ட் ஆகவும், ன்—ற் ஆகவும் திரியும்; மெல்லினமும் இடையினமும் வந்து புணரின் இயல்பாகும். அல்வழிப் புணர்ச்சியிலே மூவின மெய்கள் வரினும் இயல்பாகும்.

ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின்
இயல்பு மாகும் வேற்றுமைக் கல்வழிக்
கனைத்துமெய் வரினு மியல்பா கும்மே.

(ந—நூற்பா 209.)

**குறிலணைவில்லா ணகர, னகர ஈறுகள்**

(அல்வழி)

**தூண் + நன்று = தூணன்று | பசுமண் + நன்று = பசுமணன்று**

**அரசன் + நல்லன் = அரசனல்லன் | செம்பொன் + நன்று = செம்பொனன்று**

(வேற்றுமை)

**தூண் + நன்மை = தூணன்மை | பசுமண் + நன்மை = பசுமணன்மை**

**அரசன் + நன்மை = அரசனன்மை | செம்பொன் + நன்மை செம்பொனன்மை**

இவ்வாறு, அல்வழியிலும், வேற்றுமையிலும் தனிக்குறிலைச் சாராத ணகர, னகர ஈறுகளின்முன் வருகின்ற நகரம், முறையே ணகரமாகவும், னகரமாகவும் திரியும்பொழுது, நிலைமொழி ணகர, னகர ஈறுகள் கெட்டுப் புணரும்.

**இலக்கண விதி:** குறில் ஒன்றனையும் சாராது, ஒருமொழி தொடர் மொழிகளைச் சார்ந்த ணகர, னகர ஈறுகள், வருமொழிக்கு முதலாக வந்த நகரம் மயக்கவிதி இன்மையினாலே திரிந்தவிடத்துத் தாம் கெடுதலைப் பொருந்தும்.

**குறிலணை வில்லா ணனக்கள் வந்த**
**நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே.**

*(ந-நூற்பா 210.)*

**2. யகர, ரகர, ழகர ஈற்றுப்புணர்ச்சி**

(அல்வழி)

(எழுவாய்த்தொடர்-இயல்பு)

**வேய் + குறிது = வேய்குறிது**
**வேர் + சிறிது = வேர்சிறிது**
**யாழ் + பெரிது = யாழ்பெரிது**

இவ்வாறு, அல்வழி எழுவாய்த் தொடரில் யகர, ரகர, ழகர மெய்களின்முன் வரும் க, ச, த, பக்கள் இயல்பாகும்.

(உம்மைத்தொகை-இயல்பு)

**பேய் + பூதம் = பேய்பூதம்**
**நீர் + கானல் = நீர்கானல்**
**இகழ் + புகழ் = இகழ்புகழ்**

இவ்வாறு, அல்வழி உம்மைத் தொகையில் யகர, ரகர, ழகர மெய்களின்முன் வரும் க, ச, த, பக்கள் இயல்பாகும்.

(வினைத்தொகை-இயல்பு)

**செய் + கடன் = செய்கடன்**
**தேர் + பொருள் = தேர்பொருள்**

**வீழ் + புனல் = வீழ்புனல்**

இவ்வாறு, அல்வழி வினைத்தொகையில் யகர, ரகர, ழகர மெய்களின்முன் வரும் க, ச, த, பக்கள் இயல்பாகும்.

(பண்புத்தொகை—மிகுதல்)

**மெய் + கீர்த்தி = மெய்க்கீர்த்தி**
**கார் + பருவம் = கார்ப்பருவம்**
**யாழ் + கருவி = யாழ்க்கருவி**

இவ்வாறு, அல்வழிப் பண்புத்தொகையில் யகர, ரகர, ழகர மெய்களின்முன் வரும் க, ச, த, பக்கள் மிகும்.

(உவமைத்தொகை—மிகுதல்)

**வேய் + தோள் = வேய்த்தோள்**
**கார் + குழல் = கார்க்குழல்**
**காழ் + படிவம் = காழ்ப்படிவம்**

இவ்வாறு, அல்வழி உவமைத் தொகையில் யகர, ரகர, ழகர மெய்களின்முன் வரும் க, ச, த, பக்கள் மிகும்.

(யகரவீற்று வினையெச்சம்—மிகுதல்)

**போய் + கொண்டான்—போய்க்கொண்டான்**

இவ்வாறு, யகரவீற்று வினையெச்சத்தின்முன் வரும் வல்லினம் மிகும்.

(ரகரவீற்று வினையெச்சம்—இயல்பு)

**உண்ணியர் + போவான் = உண்ணியர்போவான்.**

இவ்வாறு, ரகரவீற்று வினையெச்சத்தின்முன் வரும் வல்லினம் இயல்பாகும்.

(வேற்றுமையில் வலிமிகல்)

**நாய் + கால் = நாய்க்கால்**
**தேர் + தலை = தேர்த்தலை**
**யாழ் + கோடு = யாழ்க்கோடு**

இவ்வாறு வேற்றுமையிலே யகர, ரகர, ழகர மெய்களின்முன் வரும் க, ச, த, பக்கள் மிகும்.

(வேற்றுமையில் இனத்தோடு உறழ்தல்)

**வேய் + குழல் = வேய்க்குழல், வேய்ங்குழல்**
**ஆர் + கோடு = ஆர்க்கோடு, ஆர்ங்கோடு**
**பாழ் + தூறு = பாழ்த்தூறு, பாழ்ந்தூறு**

இவ்வாறு வேற்றுமையிலே யகர, ரகர, ழகர மெய்களின்முன் வரும் க, ச, த, பக்கள் ஒருகால் மிக்கும், ஒருகால் இனமெல்லினத்தோடு உறழ்ந்தும் வரும்.

நன்னூல் நூற்பாவுள் (224) 'மேல்' என்ற மிகை விதிப்படி, வேற்றுமையில் இயல்பாதலும், அல்வழியில் உறழ்லும், தனிக்குறிலைச் சாராத யகரத்தின்முன் யகரம் வரின், அல்வழி வேற்றுமை இருவழியிலும் நிலைமொழி யகரங் கெடுதலும் கொள்ளுதல் வேண்டும்.

(வேற்றுமையில் இயல்பாதல்)

**வாய் + புகுவது = வாய்புகுவது**

இங்கு, வேற்றுமையில் இயல்பாயிற்று.

(அல்வழியில் உறழ்தல்)

**பாழ் + கிணறு = பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு**

இங்கு அல்வழிப் பண்புத்தொகையுள் உறழ்ந்து வந்துள்ளது.

(அல்வழியில்–யகரம் கெடுதல்)

**காய் + யாது = காயாது**

இங்கு, அல்வழியில் நிலைமொழி இறுதி யகரம் கெட்டது.

(வேற்றுமையில்-யகரம் கெடுதல்)

**நோய் + யானை = நோயானை**

இங்கு, வேற்றுமையில் நிலைமொழி இறுதி யகரம் கெட்டது.

**இலக்கண விதி:** யகர, ரகர, ழகர, மெய்களின் முன் க, ச, த, பக்கள் வரின் அல்வழியில் இயல்பாயும் மிக்கும் புணரும். வேற்றுமையில் மிக்கும், வல்லினத்திற்கு இனமான மெல்லினம் உறழ்ந்தும் புணரும்.

**யரழ முன்னர்க் கசதப வல்வழி**
**இயல்பு மிகலு மாகும் வேற்றுமை**
**மிகலு மினத்தோ டுறழ்தலும் விதிமேல்.**

*(ந-நூற்பா 224.)*

### 3. லகர, ளகர ஈற்றுப்புணர்ச்சி

(வேற்றுமை)

**கல் + குறை = கற்குறை**
**முள் + குறை = முட்குறை**

இவ்வாறு, வேற்றுமையிலே லகர, ளகர மெய்களின்முன் வல்லினம் வரின், லகரம் றகரமாகவும், ளகரம் டகரமாகவும் திரியும்.

(அல்வழி)

**கல் + குறிது = கல்குறிது, கற்குறிது**
**முள் + குறிது = முள்குறிது, முட்குறிது**

இவ்வாறு, அல்வழியிலே லகர, ளகர மெய்களின்முன் வல்லினம் வரின், ஒருகால் இயல்பாகியும் ஒருகால் திரிந்தும் வரும்.

(வேற்றுமை)

**கல் + மாட்சி = கன்மாட்சி**
**முள் + மாட்சி = முண்மாட்சி**

இவ்வாறு, வேற்றுமையிலே லகர, ளகர மெய்களின்முன் மெல்லினம் வரின், லகரம் னகரமாகவும், ளகரம் ணகரமாகவும் திரியும்.

(அல்வழி)

**கல் + மாண்டது = கன்மாண்டது**
**முள் + மாண்டது = முண்மாண்டது**

இவ்வாறு, அல்வழியில் லகர, ளகர மெய்களின்முன் மெல்லினம் வரின், லகரம் னகரமாகவும், ளகரம் ணகரமாகவும் திரியும்.

(வேற்றுமை)

**கல் + யாப்பு = கல்யாப்பு**
**முள் + யாப்பு = முள்யாப்பு**

இவ்வாறு, வேற்றுமையிலே லகர, ளகர மெய்களின்முன் இடையினம் வரின் இயல்பாகும்.

(அல்வழி)

**கல் + யாது = கல்யாது**
**முள் + யாது = முள்யாது**

இவ்வாறு, அல்வழியிலே லகர, ளகர மெய்களின்முன் இடையினம் வரின் இயல்பாகும்.

**கல் + தீது = கற்றீது**
**முள் + தீது = முட்டீது**

இவ் வெடுத்துக்காட்டுக்களில், தம்முடன் மயங்காத தகரம் வந்தபொழுது, லகர ளகரங்கள் இயல்பாகாமல் முறையே றகரமாகவும், டகரமாக வும் திரிந்துள்ளன. அல்வழியுள் இங்ஙனம் வரும் திரிபு ஒன்றை மட்டும் ஏற்புழிக்கோடலால் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**இலக்கண விதி:** லகர, ளகரமாகிய இரண்டு மெய்யீறுகளும் வேற்றுமையில் வல்லினம் வந்தால், முறையே றகரமாகவும், டகரமாகவும் திரியும். அல்வழியில் வல்லினம் வந்தால் இயல் பாயும் திரிந்தும் வரும். வேற்றுமையிலும் அல் வழியிலும் மெல்லினம் வந்தால், லகர, ளகர ஈறு கள் முறையே னகரமாகவும்,ணகரமாகவும் திரியும். வேற்றுமையிலும் அல்வழியிலும் இடையினம் வந்தால், லகர, ளகர ஈறுகள் இயல்பாகும்.

**லளவேற் றுமையிற் றடவு மல்வழி**
**அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி**
**மேவி னணவு மிடைவரி னியல்பும்**
**ஆகு மிருவழி யானு மென்ப.**

(ந-நூற்பா 227.)

பயிற்சி வினாக்கள்

1. பல, சில என்னும் இவ்விரு சொற்களும் தம்முன் தாம்வரின் எவ்வாறு புணரும்?
2. பல, சில என்னும் இவ்விரு சொற்களும் தம்முன் பிறவரின் எவ்வாறு புணரும்?
3. பூ என்னும் பெயர் வல்லினம் வர எங்ஙனம் புணரும்? சான்று தருக.

4. தெங்கு என்பதன்முன் காய் என்ற சொல் வரின் எவ்வாறு புணரும்?

5. மரப் பெயர்ச் சொற்களில் சில, வல்லினம் வரும் பொழுது வேற்றுமையில் எவ்வாறு புணரும்? சான்று தருக.

6. தேன் என்னும் சொல்லின்முன் மூவின மெய்களும் வந்து புணரும் முறையை விளக்குக.

7. பிரித்தெழுதுக:

பற்பல, சில்வளை, பூங்கொடி, தேங்காய்.

8. சேர்த்தெழுதுக:

கள + கனி, மா + தளிர், தேக் + குழம்பு, தே + மலர்.

9. செய்யுள் விகாரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை? எவையேனும் இரண்டிற்குச் சான்று தருக.

10. ணகர, னகர ஈறுகள் வேற்றுமையில் வல்லினம் வர எங்ஙனம் புணரும்?

11. ணகர, னகர ஈறுகள் வேற்றுமையில் மெல்லினமும் இடையினமும் வர எங்ஙனம் புணரும்?

12. ணகர, னகர ஈறுகள் அல்வழியில் மூவினமும் வர எங்ஙனம் புணரும்?

13. தூணன்று-புணர்ச்சி விதி கூறுக.

14. ய ர ழ ஈற்றின்முன் வல்லினம் வரின் அல்வழியில் எங்ஙனம் புணரும்? வேற்றுமையில் எங்ஙனம் புணரும்? ஒவ்வோர் சான்று தருக.

15. லகர, ளகர ஈறுகள் வல்லினம் வரின் அல்வழியிலும் வேற்றுமையிலும் எவ்வாறு புணரும்? சான்று தருக.

16. லகர, ளகர ஈறுகள் மெல்லினம் வரின் இருவழி யிலும் எங்ஙனம் புணரும்? சான்று தருக.

17. லகர, ளகர ஈறுகள் இடையினம் வரின் இருவழி யிலும் எங்ஙனம் புணரும்?

# 5. பொருள்

## 1. அகத்திணை

அகத்திணை, (அகம்+திணை) அகத்தே நிகழும் ஒழுக்கம் பற்றியது. அகப்பொருள் எனவும் படும். அஃதாவது, ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும், தாம் துய்த்த இன்பத்தைப் புறத்தார்க்கு இத்தன்மையது என எடுத்துக் கூற இயலாததாய்த் தம் உள்ளத்தால் உய்த்துணரும் தன்மையதாகும். எனவே, அகத்திணை எனப்பட்டது.

**அகத்திணை வகை :**

குறிஞ்சித்திணை, முல்லைத்திணை, மருதத்திணை, நெய்தற்றிணை, பாலைத்திணை என அகத்திணை ஐந்து வகைப்படும்.

இவற்றுடன், கைக்கிளைத்திணை, பெருந்திணை என்ற இரண்டையும் கூட்டி ஏழு வகையாகவும் கூறுவர்.

**ஐந்திணைக்குரிய பொருள் :**

மேற்சொல்லப்பட்ட ஐந்திணைகளும் முதற்பொருள் - கருப்பொருள் - உரிப்பொருள் என்ற மூன்று வகையால் வழங்கப்படும். அவற்றுள் முதற்பொருள்,கருப்பொருள் என்ற இரண்டையும் பற்றிக் காண்போம்.

## முதற்பொருள்

நிலமும், பொழுதும் முதற்பொருள் எனப் படும்.

### 1. நிலம்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலம் ஐந்து வகைப்படும்.

1. குறிஞ்சி—மலையும் மலைசார்ந்த இடமும்.
2. முல்லை—காடும் காடுசார்ந்த இடமும்.
3. மருதம்—வயலும் வயல்சார்ந்த இடமும்.
4. நெய்தல்—கடலும் கடல்சார்ந்த இடமும்.
5. பாலை—தனியாக நிலம் இல்லை. குறிஞ்சி நிலமும், முல்லை நிலமும் தத்தமக் குரிய தன்மை திரிந்த பகுதி பாலை நிலம் எனப்படும்.

### 2. பொழுது

பெரும்பொழுது, சிறுபொழுது எனப் பொழுது இரண்டு வகைப்படும்.

#### பெரும்பொழுது

இளவேனில், முதுவேனில், கார், கூதிர் (குளிர்) முன்பனி, பின்பனி எனப் பெரும்பொழுது ஆறு வகைப்படும்.

1. சித்திரை, வைகாசி-இளவேனிற் காலம்.
2. ஆனி, ஆடி-முதுவேனிற் காலம்.
3. ஆவணி, புரட்டாசி-கார் காலம்.
4. ஐப்பசி, கார்த்திகை-கூதிர் (குளிர்) காலம்.

5. மார்கழி, தை-முன்பனிக் காலம்
6. மாசி, பங்குனி–பின்பனிக் காலம்

**சிறுபொழுது**

காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை எனச் சிறுபொழுது ஆறு வகைப்படும்.

1. சூரியன் உதித்ததுமுதல் பத்து நாழிகை வரை (காலை 6 மணிமுதல் 10 மணிவரை) உள்ள நேரம் 'காலை' எனப்படும்.

2. பகல் பத்து நாழிகைமுதல் இருபது நாழிகைவரை (10 மணிமுதல் 2 மணிவரை) உள்ள நேரம் 'நண்பகல்' எனப்படும்.

3. பகல் இருபது நாழிகைமுதல் முப்பது நாழிகைவரை (2 மணிமுதல் 6 மணிவரை) உள்ள நேரம் 'எற்பாடு' எனப்படும். (எற்பாடு = எல் + பாடு. எல் = சூரியன். பாடு–மறைதல்.)

4. சூரியன் மறைந்ததுமுதல் பத்து நாழிகை வரை (மாலை 6 மணிமுதல் 10 மணிவரை) உள்ள நேரம் 'மாலை' எனப்படும்.

5. இரவு பத்து நாழிகைமுதல் இருபது நாழிகைவரை (இரவு 10 மணிமுதல் 2 மணிவரை) உள்ள நேரம் 'யாமம்' எனப்படும். (யாமம் = நள்ளிரவு.)

6. இரவு இருபது நாழிகைமுதல் சூரியன் உதிக்கும்வரை (இரவு 2 மணிமுதல் காலை 6 மணி வரை) உள்ள நேரம் 'வைகறை' எனப்படும். (வைகறை = விடியற்காலம்.)

## ஐந்து நிலங்களுக்கும் உரிய பெரும்பொழுதும்–சிறுபொழுதும்

### 1. குறிஞ்சி

குளிர்காலம், முன்பனிக்காலம் என்ற பெரும் பொழுதுகளும், யாமம் என்ற சிறுபொழுதும் குறிஞ்சி நிலத்துக் குரியன.

### 2. முல்லை

கார் காலமாகிய பெரும்பொழுதும், மாலை யாகிய சிறுபொழுதும் முல்லை நிலத்துக் குரியன.

### 3. மருதம்

ஆறு பெரும்பொழுதுகளும், வைகறையாகிய சிறுபொழுதும் மருத நிலத்துக் குரியன.

### 4. நெய்தல்

ஆறு பெரும்பொழுதுகளும், எற்பாடு எனப் படும் சிறுபொழுதும் நெய்தல் நிலத்துக் குரியன.

### 5. பாலை

இளவேனில், முதுவேனில், பின்பனி என்ற பெரும்பொழுதுகளும், நண்பகலாகிய சிறுபொழு தும் பாலை நிலத்துக் குரியன.

## கருப்பொருள்

ஒவ்வொரு திணைக்கும் உரிய இயங்குதிணை யும், நிலைத்திணையுமாகிய பொருள்கள், கருப் பொருள்கள் எனப்படும். அவை, தெய்வம், உயர்ந் தோர், தாழ்ந்தோர், பறவை, விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண், தொழில் எனப் பதினான்கு வகைப்படும். அவை வருமாறு:

## குறிஞ்சித்திணைக் கருப்பொருள்

| | | | |
|---|---|---|---|
| 1. | தெய்வம் | — | முருகன். |
| 2. | உயர்ந்தோர் | — | பொருப்பன், வெற்பன், சிலம்பன், குறத்தி, கொடிச்சி. |
| 3. | தாழ்ந்தோர் | — | குறவர், கானவர், குறத்தியர். |
| 4. | பறவை | — | கிளி, மயில். |
| 5. | விலங்கு | — | புலி, கரடி, யானை, சிங்கம். |
| 6. | ஊர் | — | சிறுகுடி. |
| 7. | நீர் | — | அருவிநீர், சுனைநீர். |
| 8. | பூ | — | வேங்கைப் பூ, குறிஞ்சிப் பூ, காந்தட் பூ. |
| 9. | மரம் | — | சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில். |
| 10. | உணவு | — | மலைநெல், மூங்கிலரிசி, தினை. |
| 11. | பறை | — | தொண்டகப்பறை. |
| 12. | யாழ் | — | குறிஞ்சியாழ். |
| 13. | பண் | — | குறிஞ்சிப்பண், |
| 14. | தொழில் | — | வெறியாடல், மலைநெல் விதைத்தல், தினைகாத்தல், தேன் எடுத்தல், கிழங்ககழ்தல், அருவியாடல், சுனையாடல். |

## முல்லைத்திணைக் கருப்பொருள்

| | | | |
|---|---|---|---|
| 1. | தெய்வம் | — | திருமால். |
| 2. | உயர்ந்தோர் | — | குறும்பொறை நாடன், தோன்றல், மனைவி, கிழத்தி. |
| 3. | தாழ்ந்தோர் | — | இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர். |
| 4. | பறவை | — | காட்டுக்கோழி. |
| 5. | விலங்கு | — | மான், முயல். |
| 6. | ஊர் | — | பாடி. |
| 7. | நீர் | — | குறுஞ்சுனைநீர், கான்யாற்று நீர். |

8. பூ — குல்லைப்பூ, முல்லைப்பூ, தோன்றிப் பூ, பிடவம் பூ.
9. மரம் — கொன்றை, காயா, குருந்தம்.
10. உணவு — வரகு, சாமை, முதிரை.
11. பறை — ஏறுகோட்பறை.
12. யாழ் — முல்லையாழ்.
13. பண் — சாதாரிப் பண்.
14. தொழில் — சாமை விதைத்தல், வரகுவிதைத்தல், களைகட்டல், அரிதல், கடாவிடல், கொல்லேறு தழுவுதல், குழல் ஊதல், குரவைக் கூத்தாடல், கான்யாறாடல், கால்நடைகளை மேய்த்தல்.

## மருதத்திணைக் கருப்பொருள்

1. தெய்வம் — இந்திரன்.
2. உயர்ந்தோர் — ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி.
3. தாழ்ந்தோர் — உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர்.
4. பறவை — வண்டானம், மகன்றில், நாரை, அன்னம், பெருநாரை, கம்புள், குருகு, தாரா.
5. விலங்கு — எருமை, நீர்நாய்.
6. ஊர் — பேரூர், மூதூர்.
7. நீர் — யாற்றுநீர், கிணற்றுநீர், குளத்துநீர்.
8. பூ — தாமரைப் பூ, கழுநீர்ப் பூ, குவளைப் பூ.
9. மரம் — காஞ்சி, வஞ்சி, மருதம்.
10. உணவு — செந்நெல்லரிசி, வெண்ணெல்லரிசி.
11. பறை — நெல்லரிகிணை, மணமுழவு.

12. யாழ் — மருதயாழ்.
13. பண் — மருதப்பண்.
14. தொழில் — விழாச் செய்தல், வயல் களை கட்டல், நெல்லரிதல், கடா விடுதல், குளத்தில் நீராடல், புதுப்புனலாடல்.

## நெய்தற்றிணைக் கருப்பொருள்

1. தெய்வம் — வருணன்.
2. உயர்ந்தோர் — சேர்ப்பன், புலம்பன், பரத்தி, நுளைச்சி.
3. தாழ்ந்தோர் — நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர்.
4. பறவை — கடற்காக்கை.
5. விலங்கு — சுறாமீன்.
6. ஊர் — பாக்கம், பட்டினம்.
7. நீர் — உவர்நீர்க்கேணி, கவர்நீர்.
8. பூ — நெய்தற்பூ, தாழம்பூ, முண்டகப் பூ, அடம்பம்பூ.
9. மரம் — கண்டல், புன்னை, ஞாழல்.
10. உணவு — மீன், மீனும் உப்பும் விற்றுப் பெற்ற பொருள்கள்.
11. பறை — மீன் கோட்பறை, நாவாய்ப் பறை, பம்பை.
12. யாழ் — விளரியாழ்.
13. பண் — செவ்வழிப்பண்.
14. தொழில் — மீன்பிடித்தல், உப்புவிளைத்தல், அவற்றை விற்றல், மீன் உலர்த்தல், பறவையோட்டுதல், கடலாடல்.

## பாலைத்திணைக் கருப்பொருள்

1. தெய்வம் — துர்க்கை.
2. உயர்ந்தோர் — விடலை, காளை, மீளி, எயிற்றி.

| | | |
|---|---|---|
| 3. தாழ்ந்தோர் | — | எயினர், மறவர், எயிற்றியர், மறத்தியர். |
| 4. பறவை | — | பருந்து, புறு, எருவை, கழுகு. |
| 5. விலங்கு | — | செந்நாய். |
| 6. ஊர் | — | குறும்பு. |
| 7. நீர் | — | நீரில்லாக்குழி, நீரில்லாக் கிணறு. |
| 8. பூ | — | குராஅம்பூ, மராஅம்பூ. |
| 9. மரம் | — | உழிஞை, பாலை, ஓமை, இருப்பை. |
| 10. உணவு | — | வழியில் பறித்த பொருள்கள், ஊர்களில் கொள்ளையிட்ட பொருள்கள். |
| 11. பறை | — | துடி. |
| 12. யாழ் | — | பாலையாழ். |
| 13. பண் | — | பஞ்சுரம். |
| 14. தொழில் | — | போர் செய்தல், பகற் சூறையாடல். |

## 2. புறத்திணை

ஒத்த அன்புடையவர்தாமே அன்றி எல்லாராலும் துய்த்து உணரக்கூடியதாய், புறத்தார்க்கும் இத்தன்மைத்தென எடுத்துக் கூறக்கூடியதாய், அறம்பொருள் என்பனவற்றைப் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கம், புறத்திணை எனப்படும். (புறம்-வெளி. திணை—ஒழுக்கம்.)

புறத்திணை, பன்னிரண்டு. அவை வருமாறு:—

1. **வெட்சித்திணை:** பகைவருடைய பசுக்கூட்டங்களைக் கவர்தல். இதற்கு அடையாளமாக வெட்சிப் பூவைச் சூடுதல் மரபு.

**2. கரந்தைத்திணை:** பகைவர் கவர்ந்து சென்ற பசுக்கூட்டங்களை மீட்டல். இதற்கு அடையாளமாகக் கரந்தைப் பூவைச் சூடுதல் மரபு.

**3. வஞ்சித்திணை:** பகைவருடைய நாட்டின் மீது படை எடுத்துச் செல்லுதல். இதற்கு அடையாளமாக வஞ்சிப்பூவைச் சூடுதல் மரபு.

**4. காஞ்சித்திணை:** படை எடுத்து வந்த பகைவர், தம் நாட்டினுள் நுழையாதபடி எதிர் சென்று தடுத்தல். இதற்கு அடையாளமாகக் காஞ்சிப் பூவைச் சூடுதல் மரபு.

**5. நொச்சித்திணை:** படை எடுத்து வந்த பகைவர், உள்ளே நுழையாதபடி தம் மதிலைக் காத்தல். இதற்கு அடையாளமாக நொச்சிப் பூவைச் சூடுதல் மரபு.

**6. உழிஞைத்திணை:** பகைவருடைய மதிலைச் சுற்றி வளைத்துக் கொள்ளுதல். இதற்கு அடையாளமாக உழிஞைப் பூவைச் சூடுதல் மரபு.

**7. தும்பைத்திணை:** இருதிறத்துப் படைவீரர்களும் போர்க்களத்தில் எதிர்த்து நின்று அதிரப் போர் புரிதல். இதற்கு அடையாளமாக இருதிறத்தாரும் தும்பைப் பூவைச் சூடுதல் மரபு. (இருதிறத்து வீரரும் தத்தம் மன்னர்களுக்கே உரிய சிறப்புப் பூவுடன், வெட்சி முதலாய பூக்களைப் போர் நிகழ்ச்சிகளுக்கேற்ப உடன் சூட்டிக் கொள்வர்.)

**8. வாகைத்திணை:** பகைவரை வென்றவர், தம் வெற்றியைக் கொண்டாடுதல். இதற்கு அடையாளமாக வாகைப் பூவைச் சூடுதல் மரபு.

**9. பாடாண்டிணை:** (பாடு + ஆண் + திணை) பாடப்படுகின்ற ஆண் மகனது ஒழுக்கம் எனப் பொருள்தரும். அஃதாவது, பாடப்படுகின்ற ஆண்மகனது வீரம், வெற்றி, இரக்கம், ஈகை, புகழ் ஆகியவற்றைச் சிறப்பித்துப் பாடுவதாகும்.

**10. பொதுவியல்:** மேலே கூறியுள்ள புறத் திணைகளுக்கெல்லாம் பொதுவான செய்திகளைக் கூறுவது.

**11. கைக்கிளை:** ஒருதலைக் காமம். அஃதாவது ஆண் பெண் ஆகிய இருவருள், ஒருவரிடத்தில் மட்டும் தோன்றும் அன்பு பற்றியது.

**12. பெருந்திணை:** பொருந்தாக் காமம். ஒத்த தலைவனும் தலைவியும் அல்லாதாரிடத்துத் தோன் றும் அன்பு பற்றியது.

வெட்சித்திணையும், கரந்தைத்திணையும் ஒன் றற்கொன்று மறுதலைத் திணையாகும்.

வஞ்சித்திணையும், காஞ்சித்திணையும் ஒன்றற் கொன்று மறுதலைத் திணையாகும்.

நொச்சித்திணையும் உழிஞைத்திணையும் ஒன் றற்கொன்று மறுதலைத் திணையாகும்.

### பயிற்சி வினாக்கள்

1. *அகத்திணையாவது யாது? அஃது எத்தனை வகைப் படும்? அவை யாவை?*
2. *ஐந்திணைகளுக்குரிய பொருள்கள் எவை?*
3. *முதற் பொருள்கள் எவை?*
4. *நிலம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?*

5. பொழுது எத்தனை வகைப்படும்? அவை யாவை?

6. பெரும்பொழுது எத்தனை வகைப்படும்? விளக்குக.

7. சிறுபொழுது எத்தனை வகைப்படும்? விளக்குக.

8. முன்பனிக் காலத்திற்குரிய மாதங்கள் எவை?

9. பாலைத்திணைக்குரிய பெரும்பொழுதுகளையும், சிறு பொழுதையும் குறிப்பிடுக.

10. கருப்பொருள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

11. குறிஞ்சித் திணைக்குரிய கருப்பொருள்களைக் கூறுக.

12. முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய திணைகளுக் குரிய பூ, மரம், உணவு வகைகளைக் குறிப்பிடுக.

13. புறத்திணையாவது யாது? அஃது எத்தனை வகைப் படும்? அவை யாவை?

14. உழிஞைத் திணையாவது யாது? அதன் மறுதலைத் திணையை எழுதி விளக்குக.

15. பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை—இவற்றின் இலக்கணத்தைக் கூறுக.

# 6. யாப்பு

## 1. வெண்பா

**(குறள் — நேரிசை — இன்னிசை)**

ஈற்றடி முச்சீராயும் ஏனைய அடிகள் நாற்சீராயும், காய்ச்சீரும் இயற்சீரும் வர, வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும்கொண்டு, மற்றைச் சீருந்தளையும் வராமல், செப்பலோசை உடையதாய், இறுதிச்சீர் 'காசு-பிறப்பு-நாள்-மலர்' என்னும் வாய்பாடுகளுள் ஒன்றால் முடிவது வெண்பாவாகும். இது வெண்பாவின் பொது இலக்கணம் ஆகும்.

வெண்பா—வெள்ளைப்பா—முதற்பா என்பன ஒரு பொருளன.

இவ் வெண்பா, குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, பஃறொடை வெண்பா எனப் பல வகைப் படும்.

**(குறள் வெண்பா)**

குறள் வெண்பா, குறுகிய அடிகளால் (அஃதாவது இரண்டடியால்) ஆகிய வெண்பாவாகும்.

> ''எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
> எண்ணுவ மென்ப திழுக்கு.'' (ஒரு விகற்பம்)

> ''முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
> இன்மை புகுத்தி விடும்.'' (இரு விகற்பம்)

மேற்கண்ட குறள்வெண்பாக்களில் முன்னது, ஓர் எதுகையால் (ஒரு விகற்பத்தால்) வந்துள்ளது. பின்னது, ஈர் எதுகையால் (இரு விகற்பத்தால்) வந்துள்ளது.

இங்ஙனம், வெண்பாவின் பொது இலக்கணமெல்லாம் அமையப்பெற்று, ஒரு விகற்பத்தாலோ, இரு விகற்பத்தாலோ இரண்டடிகளால் வரும் வெண்பா, குறள் வெண்பா எனப்படும்.

**(நேரிசை வெண்பா)**

**(ஒரு விகற்பம்)**

**"கஞ்சி குடியாளே கம்பன்சோ றுண்ணுளே**
**வெஞ்சினங்கள் என்றும் விரும்பாளே நெஞ்சதனில்**
**அஞ்சுதலை யாவருக்கு ஆறுதலை யாவாளே**
**கஞ்சமுகக் காமாட்சி காண்."**

**(இரு விகற்பம்)**

**"அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும் கல்லார்**
**அவையஞ்சா ஆகுலச் சொல்லும்—நவையஞ்சி**
**ஈத்துண்ணுர் செல்வமும் நல்கூர்ந்தார் இன்னலமும்**
**பூத்தலிற் பூவாமை நன்று."**

மேலே உள்ள இரண்டு நேரிசை வெண்பாக்களுள் முன்னது ஒரு விகற்பத்தால் வந்துள்ளது. பின்னது இரு விகற்பத்தால் வந்துள்ளது.

நேரிசை வெண்பா, வெண்பாவுக்குரிய பொது இலக்கணம் எல்லாம் அமையப்பெற்று, ஒரு விகற்பமாயும், இரு விகற்பமாயும், இரண்டாமடியின் நான்காம் சீர் ஒருஉத்தொடை பெற்ற தனிச் சொல்லாக நிற்க, நான்கடிகள் பெற்று

வரும். இது நேரிசை வெண்பாவின் இலக்கண மாகும்.

(இன்னிசை வெண்பா)

வெண்பாவின் பொது இலக்கணம் எல்லாம் அமையப்பெற்று, நேரிசை வெண்பாவில் சிறிது வேறுபட்டு நான்கடியாய் வருவது, இன்னிசை வெண்பா எனப்படும்.

அவை, தனிச் சொல் இன்றி ஒரு விகற்பமாய் வருதலும், தனிச் சொல் இன்றிப் பல விகற்ப மாய் வருதலும், அடி தோறும் தனிச் சொல் பெற்று வருதலும், இரண்டாம் அடியின் இறுதிச் சீர் தனிச் சொல்லாய் மூன்று விகற்பமாய் வருத லும், மூன்ரும் அடியின் இறுதிச் சீர் தனிச் சொல் லாய் இரு விகற்பமாயும், பல விகற்பமாயும் வரு தலும் எனப் பல வகைப்படும்.

**"கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்**
**துரும்பெழுந்து வேங்கால் துயராண் டுழவார்**
**வருந்தி உடம்பின் பயன்கொண்டார் கூற்றம்**
**வருங்காற் பரிவ திலர்."**

இது, தனிச் சொல் இன்றி நான்கடியும் ஒரு விகற்பமாய் வந்த இன்னிசை வெண்பாவாகும்.

**"கடற்குட்டம் போழ்வர் கலவர் பகைக்குட்டம்**
**பாய்மா உடையான் உடைக்கிற்கும் தோமில்**
**தவக்குட்டம் தன்னுடையான் நீந்தும் அவைக்**
**[குட்டம்**
**கற்ருன் கடந்து விடும்."**

இது, தனிச் சொல் இன்றிப் பல விகற்பமாய் வந்த இன்னிசை வெண்பாவாகும்.

பிறவகை இன்னிசை வெண்பாக்களை வந்த வழிக் கண்டு கொள்க.

இன்னிசை வெண்பாவின் பொது இலக்கணம் எல்லாம் அமையப்பெற்று, நேரிசை வெண்பாவிற் சிறிது வேறுபட்டு நான்கடியாய் வருவது இன்னிசை வெண்பாவாகும்.

## 2. ஆசிரியப்பா

### (பொது)

ஆசிரியப்பா, பெரும்பாலும் ஈரசைச்சீர்களையும், அச் சீர்களாலாகிய அளவடிகளையும் கொண்டு, அகவலோசை தழுவி, மூன்றடிச் சிறுமையும், பலவடிப் பெருமையும் உடையதாக வரும். ஆசிரியப்பா எனினும், அகவற்பா எனினும் ஒன்றேயாகும்.

இவ் வாசிரியப்பா, நேரிசை ஆசிரியப்பா, நிலை மண்டில ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா என நான்கு வகைப்படும்.

### (நேரிசை ஆசிரியப்பா)

**''பாரி பாரி என்றுபல ஏத்தி**
**ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்**
**பாரி ஒருவனும் அல்லன்**
**மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே.''**

இது நேரிசை ஆசிரியப்பாவாகும். நேரிசை ஆசிரியப்பாவில் (ஈற்றயலடி) ஈற்றடிக்கு முந்திய அடி மட்டும் மூன்று சீர்களைப் பெற்று வரும்.

(நிலைமண்டில ஆசிரியப்பா)

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.''

இது நிலைமண்டில ஆசிரியப்பாவாகும். நிலைமண்டில ஆசிரியப்பாவில் எல்லா அடிகளும் நான்கு சீர்களைப்பெற்று வரும். மற்ற இரு ஆசிரியப்பாக்களை வரும்வழிக் கண்டுகொள்க.

**ஆசிரியப்பாவின் பொது இலக்கணம்:**

ஆசிரியப்பாவில் பெரும்பாலும் எல்லா அடிகளும் நான்கு சீர்களைக் கொண்ட அளவடிகளாக வரும். ஈரசைச் சீர்களாகிய இயற்சீரும், சிறுபான்மை பிற சீரும் வரும். நேரொன்றாசிரியத் தளையும், நிரையொன்றாசிரியத் தளையும் பெற்று, அகவலோசை உடையதாக வரும். சிறுபான்மை பிறதளையும் விரவி வரும். இறுதிச்சீர் ஏகாரத் தால் முடியும். மூன்றடிச் சிறுமையும், பாடு வோன் ஆற்றலைப் பொருத்துப் பலவடிப் பெருமை யும் உடையதாக வரும்.

## 3. அலகிடுதல்

**(சீர் பிரித்து, வாய்பாடு கூறி, தளை, எதுகை, மோனை எடுத்து எழுதுதல்)**

செய்யுளை அலகிடுதலாவது, முதலில் செய்யுளில் அடிதோறும் உள்ள ஒவ்வொரு சீருக்கும்

‘நேர் நிரை’ என வருகின்ற அசைகளைப் பிரித்தல் வேண்டும். பிறகு, அங்ஙனம் அசை பிரிக்கப் பட்ட சீர்களுக்கு உரிய வாய்பாடுகளாகிய ‘தேமா புளிமா’ என்பன போன்ற வாய்பாடுகளைக் கூறுதல் வேண்டும். அதன் பிறகு, நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் ஒன்றியும் ஒன்றாமலும் தட்டு வருகின்ற, இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை என்பன போன்ற தளைகளை எடுத்து எழுதுதல் வேண்டும். இறுதியாக, அடிதோறும் ஒவ்வொரு சீரிலும் உள்ள இரண்டாம் எழுத்து ஒன்றி வருகின்ற சீர் எதுகை வகைகளையும், முதல் எழுத்து ஒன்றி வருகின்ற சீர் மோனை வகைகளையும், அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருகின்ற அடி எதுகைகளையும், அடிதோறும் முதல் எழுத்து ஒன்றி வருகின்ற அடி மோனைகளையும் எடுத்து எழுதுதல் வேண்டும்.

**அலகிடும் முறை வருமாறு:**

“ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா
ஊக்க முடையா னுழை.”

**சீர் பிரித்தல்:**

நேர்நேர் நிரைநிரை நேர்நேர் நிரைநிரை
நேர்நேர் நிரைநேர் நிரை.

**வாய்பாடு கூறுதல்:**

தேமா கருவிளம் தேமா கருவிளம்
தேமா புளிமா மலர்.

**தளை எழுதுதல்:**

தேமா[1] கருவிளம்[2] தேமா[3] கருவிளம்[4]
தேமா[5] புளிமா[6] மலர்

1. இயற்சீர் வெண்டளை (மாமுன் நிரை)
2. இயற்சீர் வெண்டளை (விளமுன் நேர்)
3. இயற்சீர் வெண்டளை (மாமுன் நிரை)
4. இயற்சீர் வெண்டளை (விளமுன் நேர்)
5. இயற்சீர் வெண்டளை (மாமுன் நிரை)
6. இயற்சீர் வெண்டளை (மாமுன் நிரை)

**எதுகை மோனை எடுத்து எழுதுதல்:**

**''ஆக்க மதர்விஞய்ச் செல்லு மசைவிலா
ஊக்க முடையா னுழை.''**

முதல் வரியின் முதற்சீரில் 'க்' என்ற இரண் டாம் எழுத்தும், இரண்டாம் வரியின் முதற்சீரில் 'க்' என்ற இரண்டாம் எழுத்தும் ஒனறி வந்துள் ளது. எனவே இஃது அடி எதுகையாகும்.

முதல்வரியில், முதற்சீரின் முதல் எழுத்தும், இரண்டாம் சீரின் முதல் எழுத்தும், மூன்ருஞ்சீரின் முதல் எழுத்தும் **ஆ—அ—அ** என ஒன்றி வந் துள்ளன. எனவே சீர் மோனையாகும்.

இரண்டாம்வரியில், முதற்சீரின் முதல் எழுத் தும், இரண்டாஞ்சீரின் முதல் எழுத்தும், மூன்ருஞ் சீரின் முதல் எழுத்தும் <u>ஊ</u>—<u>உ</u>—<u>உ</u> என ஒன்றி வந்துள்ளன. எனவே சீர் மோனையாகும்.

இங்ஙனம், செய்யுளை அசை பிரித்து, வாய் பாடு கூறித் தளையும், எதுகையும், மோனையும் எடுத்து எழுதுவது அலகிடுதல் எனப்படும்.

பா வகைகளுக்கு ஏற்ப அவ்வவற்றிற்குரிய வாய்பாடுகளையும், தளைகளையும் அறிந்து எழுத வேண்டும். வெண்பாவின் இறுதிச் சீருக்கு வாய்

பாடு எழுதும் பொழுது மட்டும் நினைவோடு 'காசு–பிறப்பு நாள்–மலர்' என்ற வாய்பாடுகளில் ஒன்றை அறிந்து எழுத வேண்டும்.

### பயிற்சி வினுக்கள்

1. வெண்பாவின் பொது இலக்கணத்தைக் கூறுக.
2. ஒரு விகற்பத்தால் வரும் குறள் வெண்பாவுக்கும், இரு விகற்பத்தால் வரும் குறள் வெண்பாவுக்கும் சான்று தருக.
3. நேரிசை வெண்பாவின் இலக்கணத்தைக் கூறுக.
4. இன்னிசை வெண்பாவிற்குரிய இலக்கணம் யாது?
5. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தைக் கூறுக.
6. பின்வரும் குறட்பாவை அலகிட்டு வாய்பாடு கூறித் தளை, எதுகை, மோனைகளை எடுத்து எழுதுக.

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை."

# 7. அணி

## 1. வேற்றுப்பொருள் வைப்பணி

அ∴தாவது, புலவர் தாம் கூறக் கருதிய பொருளை முன்பு கூறி, அதனை வலியுறுத்துவ தற்கு உலகறிந்த வேறு ஒரு பொருளைப் பின்பு எடுத்துக்காட்டிக் கூறுவது, வேற்றுப்பொருள் வைப்பணி எனப்படும்.

**"புறந்தந் திருளிரியப் பொன்னேமி யுய்த்துச்
சிறந்த வொளிவளர்க்குந் தேரோன்—மறைந்தான்
புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்ருர் யார்."**

'இருள் புறங்காட்டி ஓடும்படி அழகிய சக்க ரத்தைச் செலுத்திச் சிறந்த ஒளியை வளர்க்கும் தேரை உடைய சூரியன் மறைந்தான்; புறத்தே கட லால் சூழப்பட்ட இவ்வுலகிலே தோன்றி இறவா மல் வாழ்கின்ருர் யார்? ஒருவருமில்லை' என்பது இப்பாடலின் பொருளாகும்.

இப்பாடலில் முன் இரண்டடியில் கூறப்பட்ட 'சூரியன் மறைந்தான்' என்ற சிறப்புப் பொருள், 'உலகத்தில் தோன்றிய யாவரும் இறப்பது உறுதி' என்று, பின் இரண்டடியில் கூறப் பட்ட பொதுப் பொருளால் வலியுறுத்தப்படு கிறது. எனவே, இது வேற்றுப்பொருள் வைப்பணி ஆகும்.

இவ்வணி, பொதுப் பொருளால் சிறப்புப் பொருளையும், சிறப்புப் பொருளால் பொதுப் பொருளையும் வலியுறுத்திப் பாடப்படும்பொழுது, முழுவதுஞ் சேறல், ஒருவழிச் சேறல் எனப் பல வகையாகப் பாடப்படும்.

## 2. வேற்றுமையணி

முதலில், ஒப்புடைய இரு பொருள்களை ஒரு பொருளாக வைத்து ஒப்புமை கூறி, பிறகு பிறி தொரு வகையில், கூற்றினலாவது குறிப்பினலாவதுஅவை தம்முள் வேற்றுமைப்படச் சொல்லுவது வேற்றுமையணி எனப்படும்.

**''ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது**
**தன்னே ரிலாத தமிழ்.''**

'உதயகிரியில் தோன்றி, உயர்ந்த மக்கள் தொழ விளங்கி, ஒலிக்கும் கடல் சூழ்ந்த உலகின் புற இருளைப் போக்குவது, ஒளியும் அழகும் பொருந்திய ஒற்றைச் சக்கரம் கொண்ட தேரை உடைய சூரியனுவான்; பொதியமலையில் தோன்றி, அறிவுடையோர் தொழ விளங்கி, ஒலிக்கும் கடல் சூழ்ந்த உலகில் வாழும் மக்களின் அகவிருளாகிய அறியாமையைப் போக்குவது, தனக்கு நிகரற்ற தமிழ் மொழியாகும்' என்பது இப்பாடலின் பொருளாகும்.

இப்பாடலில், சூரியன், தமிழ் ஆகிய இரண்டும் மலையில் தோன்றுவதாலும், உயர்ந்த மக்கள்

தொழ விளங்குவதாலும், இருளை அகற்றுவ தாலும் ஒரு வகையில் இரண்டுக்கும் ஒப்புமை கூறப்பட்டுள்ளது; ஆனால், சூரியன் புற இருளைப் போக்கும் என்றும், தமிழ் அக இருளாகிய அறி யாமையைப் போக்கும் என்றும் கூறுவதால், பிறி தொரு வகையில் வேற்றுமை கூறப்பட்டுள்ளது. எனவே, இப்பாடல் வேற்றுமையணியாகும்.

### 3. இரட்டுற மொழிதல் (சிலேடை அணி)

ஒரு வகையாய் நின்ற சொற்றொடர் இரு பொருள் தருமாறு கூறுவது, இரட்டுற மொழிதல் என்னும் அணியாகும். இவ் இரட்டுற மொழித லுக்குச் 'சிலேடை அணி' என்ற பெயரும் உண்டு.

இச் சிலேடை அணி, செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை என இருவகைப்படும்.

#### 1. செம்மொழிச் சிலேடை

ஒரே வகையாக நின்ற சொற்றொடர்கள், இரு பொருள் தருவது செம்மொழிச் சிலேடை என்னும் அணியாகும்.

**"ஓடும் இருக்குமதன் உள்வாய் வெளுத்திருக்கும்
நாடும் குலைதனக்கு நாணாது—சேடியே!
தீங்கான தில்லாத் திருமலைரா யன்வரையில்
தேங்காயும் நாயுமெனச் செப்பு."**

(இப்பாடல், தேங்காய்க்கும் நாய்க்கும் சிலேடை)

**தேங்காய்:** மேலோட்டைப் பெற்றிருக்கும்; அதன் உட்பகுதி வெண்மையான பருப்பைப் பெற் றிருக்கும்; அனைவராலும் விரும்பப்படும்; குலை யில் காய்த்திருப்பதற்குக் கோணாது.

**நாய்:** விரைவாக ஓடும்; ஓடி இளைத்தால் ஓரிடத்தில் உட்கார்ந்திருக்கும்; அதன் வாயின் உட்புறம் வெளுத்திருக்கும்; ஆதரிப்பவர் அனை வரையும் விரும்பும்; குரைப்பதற்குக் கொஞ் சங்கூட வெட்கப்படாது.

இப்பாடலில் உள்ள சொற்றொடர்கள், பிரிவு படாமல் ஒரே வகையாக நின்று, தேங்காய்க்கும் நாய்க்கும் ஏற்பப் பொருள் கொள்ளுமாறு இரு பொருள் தருகின்றன. எனவே, இப்பாடல் செம் மொழிச் சிலேடை எனப்படும்.

**2. பிரிமொழிச் சிலேடை**

ஒரேவகையாக நின்ற சொற்றொடர்கள், பிரிவு பட்டு நின்று வேறுபல பொருள்களையும் தருவது பிரிமொழிச் சிலேடை எனப்படும்.

**"மன்னீரி லேபிறக்கும் மற்றலையி லேமேயும்**
**பின்னீச்சிற் குத்தும் பெருமையால்—சொன்னேன்**
**[கேள்**
**தேனுந்து சோலைத் திருமலைரா யன்வரையில்**
**மீனும்பே னுஞ்சரி யாம்."**

(இப்பாடல், மீனுக்கும் பேனுக்கும் சிலேடை)

மீன், நிலைபெற்ற நீரிலே பிறக்கும்.
(மன்னீர் = மன் + நீர்)

பேன், தலையில் நிலைத்துள்ள ஈரிலே பிறக் கும் (மன்னீர் = மன் + ஈர்)

மீன், நீர் அலைகளிலே அங்குமிங்கும் சென்று மேயும். (மற்றலை = மற்று + அலை)

பேன், நிலைபெற்ற தலையில் திரிந்து மேயும். (மற்றலை = மன் + தலை)

மீன், பின்னால் இருந்தவாறு நீந்தி வந்து இரையைக் குத்தும். (பின்னீச்சு = பின் + நீச்சு)

பேன், தலையிலிருந்து வாரி எடுத்த பிறகு 'ஈச்சு, ஈச்சு' என்னும் ஒலிக்குறிப்புடன் குத்தப் படும். (பின்னிச்சு = பின் + ஈச்சு)

இப் பாடலில் உள்ள சொற்றொடர்கள் இங் ஙனம் பிரிவுபட்டு நின்று, மீனுக்கும் பேனுக்கும் சிலேடைப் பொருளைத் தருகின்றன. எனவே, இப்பாடல் பிரிமொழிச் சிலேடை எனப்படும்.

### 4. மடக்கணி

முதலில் வந்த சொல்லோ, சொற்றொடரோ, அடியோ மீண்டும் மீண்டும் வந்து வேறு பொருள் தருவது மடக்கணி எனப்படும். மடக்கு எனினும் யமகம் எனினும் பொருள் ஒன்றே.

**"கொடியார் கொடியார் மதின்மூன்றும் கொன்ற**
**படியார் பனைத்தடக்கை நால்வாய்க்—கடியார்**
**உரியார் உரியார் எமையாள ஓதற்**
**கரியார் கரியார் களம்"**

'கொடியவராயுள்ளவருடைய கொடிகள் பொருந் திய முப்புரத்தையும் எரித்த தன்மையினையுடை யார்; பனை போன்ற பெரிய துதிக்கையினை உடைய யானையின், அச்சத்தைத் தருகின்ற தோலை உடையார்; எம்மை ஆண்டுகோடற்குரி யார்; யாவராலும் புகழ்தற்கு அரியார்; கரிய

மிடற்றினை உடையார்' என்பது இப்பாடலின் பொருள்.

இப்பாடலில் 'கொடியார் கொடியார்','உரியார் உரியார்', 'கரியார் கரியார்' என்ற சொற்கள் மீண்டும் மீண்டும் வந்து வேறு பொருள் தருகின்றன. எனவே, இப்பாடல் மடக்கணி எனப்படும்.

## 5. வஞ்சப் புகழ்ச்சி

ஒன்றனைப் புகழ்ந்தாற் போலப் பழித்துரைத்தலும், பழித்தாற்போலப் புகழ்ந்துரைத்தலும் வஞ்சப் புகழ்ச்சி எனப்படும். இவ் வஞ்சப் புகழ்ச்சி அணி, இலேச அணியின் பாற்படும்.

**''இவ்வே பீலியணிந்து மாலை சூட்டிக்**
**கண்டிரள் நோன்காழ் திருத்திநெய் யணிந்து**
**கடியுடை வியனக ரவ்வே யவ்வே**
**பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து**
**கொற்றுறைக் குற்றில மாதோ''.........**

**.........................................................**

என்ற இப் பாடற் பகுதி, வஞ்சப்புகழ்ச்சி அணிக்கு எடுத்துக்காட்டாகும். இப்பாடல், அஞ்சியின் பொருட்டுத் தொண்டைமானிடம் தூது சென்ற ஔவையார் பாடியதாகும்.

தொண்டைமானின் படைக்கலங்களைக் கண்ட ஔவையார், 'இப் படைக்கலங்கள் மயிற்பீலி அணிந்து மாலை சூட்டப்பெற்றுக் காம்பு திருத்தி நெய் பூசப் பெற்றுப் புதிதாக உள்ளன' என்று புகழ்வது போலக் கூறிக் குறிப்பாக 'இப் படைக் கலங்கள் போரிற் பயன்படுத்தப்படவில்லை.

எனவே, நீயும், உன் வீரரும் போர்ப் பயிற்சி அற்றவர்களாவீர்கள். ஆகவே, அஞ்சியுடன் போர் புரிந்தால் நீ தோற்று விடுவாய்' என அவன் ஆற்றலைப் பழித்துக் கூறுகின்றார்.

'அஞ்சியின் படைக்கலங்களோ, பகைவரைக் குத்திக் குத்திக் கங்கும் நுனியும் முறிந்து, பழுது பார்ப்பதற்காகக் கொல்லன் உலைக் களத்தில் உள்ளன' என்று பழிப்பது போலக் கூறிக் குறிப்பாக 'அஞ்சியும், அவன் படை வீரரும் அடிக்கடி போர்செய்து பழக்கம் உடையவர்கள். எனவே அவன், உன்னை எளிதாக வென்று விடுவான்' என அஞ்சியின் ஆற்றலைப் புகழ்ந்து கூறுகின்றார்.

எனவே, இப்பாடலில் புகழ்வது போலப் பழித்தலும், பழிப்பதுபோலப் புகழ்தலும் ஆகிய இரண்டும் ஒருங்கே அமைந்துள்ளன. இது வஞ்சப் புகழ்ச்சியாகும்.

### 6. சொற்பொருட் பின்வருநிலையணி

ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர்ப் பலவிடத்தும் வருமாயின், அது, சொற்பொருட் பின்வருநிலை அணி எனப்படும்.

அங்ஙனம் வரும்பொழுது,

1. முன்வந்த சொல்லே பின்னும் பலவிடத்தும் வருமாயின், அது 'சொற்பின்வருநிலையணி' எனப்படும்.

2. முன்வந்த பொருளே பின்னும் பலவிடத்தும் வருமாயின், அது 'பொருட்பின்வருநிலையணி' எனப்படும்.

3. முன்வந்த சொல்லும் பொருளும் பின்னும் பலவிடத்தும் வருமாயின், அது 'சொற்பொருட் பின்வருநிலையணி' எனப்படும்.

### 1. சொற்பின்வருநிலையணி

**"மால்கரி காத்தளித்த மாலுடைய மாலைசூழ்**
**மால்வரைத்தோள் ஆதரித்த மாலையார் —**
**மாலிருள்சூழ்**
**மாலையின் மால்கடல் ஆர்ப்ப மதன்றொடுக்கு**
**மாலையின் வாளி மலர்."**

இப்பாடலில்,'மால்', 'மாலை' என்ற முன்வந்த சொற்களே பின்னும் பலவிடத்தும் வந்துள்ளன. எனவே, இது சொற்பின்வருநிலையணியாகும்.

### 2. பொருட்பின்வருநிலையணி

**"அவிழ்ந்தன தோன்றி அலர்ந்தன காயா**
**நெகிழ்ந்தன நேர்முகை முல்லை—மகிழ்ந்திதழ்**
**விண்டன கொன்றை விரிந்த கருவிளை**
**கொண்டன காந்தள் குலை."**

இப் பாடலில், அவிழ்ந்தன, அலர்ந்தன, நெகிழ்ந்தன, விண்டன, விரிந்த என்னும் சொற்கள் 'மலர்ந்தன' என்னும் ஒரே பொருளில் திரும்பத் திரும்ப வந்துள்ளன. எனவே, இது பொருட்பின்வருநிலையணியாகும்.

### 3. சொற்பொருட்பின்வருநிலையணி

"வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்."

இப் பாடலில், 'வைகல் என்ற முன் வந்த சொல்லே, பின்னும் பலவிடத்தும் வந்து 'நாள் தோறும்' என்னும் ஒரே பொருளைத் தந்தமையின் இது சொற்பொருட்பின்வருநிலையணியாகும்.

#### பயிற்சி வினாக்கள்

1. வேற்றுப்பொருள் வைப்பணியாவது யாது? சான்று தருக.
2. வேற்றுமையணியை ஓர் எடுத்துக்காட்டின் வாயிலாக விளக்குக.
3. இரட்டுற மொழிதலின் இலக்கணத்தையும், அதன் மறுபெயரையும் கூறுக.
4. பிரிமொழிச் சிலேடை அணிக்கோர் சான்று தருக.
5. மடக்கணியாவது யாது? ஓர் எடுத்துக்காட்டின் வாயிலாக விளக்குக.
6. வஞ்சப் புகழ்ச்சி அணியின் இலக்கணத்தைக் கூறுக.
7. பின்வரும் பாடலில்உள்ள அணியைக்கூறி விளக்குக.
   'தேவ ரனையர் கயவர் அவருந்தாம்
   மேவன செய்தொழுக லான்.'
8. சொற்பொருட்பின்வருநிலையணி எத்தனை வகையாக வரும்? அவை யாவை? ஏதேனும் ஒன்றிற்கு எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

# கட்டுரைகள்

## 1. செய்தித் தாள்களுக்குச் செய்திப்பத்திகள் எழுதியனுப்புதல்.

ஒரு பொருள் குறித்துத் தங்கள் உள்ளத்தில் எழுந்த கருத்துக்களைக் கோவைப்பட எழுதுதலையே கட்டுரை என்கிறோம். அக் கட்டுரை பல திறத்தன. அவற்றுள், சில கட்டுரைகளை இவண் பயில்வோம்.

பள்ளியில் நடந்த விழாக்கள் பற்றிச் செய்தித் தாள்களுக்கு எழுதியனுப்ப மாணவர்கள் பயிற்சி பெறுதல் வேண்டும். காட்டாக, பள்ளியில் நடை பெறும் வள்ளுவர் விழா, பாரதி விழா, இலக்கிய விழா, தமிழர் திருநாள் முதலிய விழாக்கள் குறித்து எழுதி யனுப்பலாம்.

எடுத்துக்காட்டுச் செய்திப்பத்திகள்:

(அ) காரைக்குடி மீ. சு. உயர்நிலைப் பள்ளியில் 14—8—'67 திங்கட்கிழமையன்று இலக்கியக் கழக விழா நடைபெற்றது. மாணவர் ஒருவர் இறை வணக்கம் பாடக் கூட்டம் தொடங்கியது. பள்ளித் தலைமை யாசிரியர் யாவரையும் வரவேற்றார். தலைவரான பண்டாரகர் திரு. வ. சுப. மாணிக்கம் அவர்கள் தம் முன்னுரையில், தமிழ் இலக்கியத்தின் தொன்மையை யும், தனித் தன்மையையும் சான்றுகள் காட்டி நிறுவி னார். பள்ளி மாணவர்களான அறிவழகனும், வளவ னும் சிறு சொற்பொழிவு நிகழ்த்தினர். தலைவர் தம் முடிவுரையில், தாய்மொழி இலக்கியங்கள் தமிழர் யாவ ராலும் போற்றப்பெற்றுப் புரக்கப்பெறல்வேண்டுமென்

ருர். கழகச் செயலாளர் நன்றிகூற நாட்டுப் பண்ணுடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

(ஆ) மதுரை நகராட்சி உயர்நிலைப் பள்ளி (செனாய் நகர்)யில் 20—6—'67 செவ்வாய்க்கிழமையன்று வள்ளுவர் விழா நிகழ்ந்தது. அவ்விழாவிற்குப் பண்டாரகர் திரு. அ. சிதம்பரநாதன், எம்.ஏ., பி.எச்டி., அவர்கள், தலைமை தாங்கினார்கள். மாணவர் அறிவுடைநம்பி இறை வணக்கம் பாடக் கூட்டம் தொடங்கியது. மாணவர் தலைவர் கூட்டத்திற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றார். தலைவர், வள்ளுவப் பேராசானின் வாய்மை மொழிகளை உலக வழக்குடன் ஒப்பிட்டு உணர்த்தினார். சிறப்புப் பொழிவு நிகழ்த்திய திரு. தமிழண்ணல், எம்.ஏ., அவர்கள் 'மாணவர் நெஞ்சில் வள்ளுவர்' என்ற பொருள் குறித்துப் பேசினார். மாணவர் மன்றச் செயலர் நன்றி நவில நாட்டுப் பண்ணுடன் கூட்டம் முடிந்தது.

## உ. வருணனைக் கட்டுரைகள்

நம்முடைய காட்சிப் புலத்தால் உணரப்பட்டு உள்ளதை உள்ளவாறே வருணித்து உரைத்தலே வருணனைக் கட்டுரைகளாகும். அவை ஆறு, கடல், காடு, மலை முதலிய இயற்கைப்பொருள்கள்பற்றியும் அமைக்கப்படலாம்; கல்லோவியங்களாகத் திகழும், மாமல்லபுரம், காஞ்சீபுரம், மலைக்கோட்டை, செஞ்சிக்கோட்டை போன்றவற்றைப் பற்றியும் எழுதப்படலாம்; வரலாற்றுப் புகழ்பெற்ற வளநகர்களைப் பற்றியும் வருணிக்கப்படலாம். கடற் செலவுகள் வான்வழிச் செலவுகள், விண்வெளிச் செலவுகள் ஆகியவை பற்றியும் எடுத்து மொழியப்படலாம்; இவை யாவும் வருணனைக் கட்டுரையின்பாற்படும்.

எடுத்துக்காட்டாகத் தமிழ் முனிவர் திரு. வி. கலியாணசுந்தரனார், தம் இலங்கைச் செலவு குறித்து எழுதிய கட்டுரையில் ஒரு பகுதியை இங்கே காண்க.

### எனது இலங்கைச் செலவு

"பொழுது செவ்வனே புலர்ந்தது. எங்கள் பேறே பேறு!

வழிநெடுகப் பசுமை உமிழும் மலைகளின் செறிவும், சூழலும், நிரையும், அணியும் உள்ளத்தைக் கவர்கின்றன. முகிற்குழாங்கள் மூண்டெழுந்து படிப்படியே அசைந்தும், ஆடியும், ஓடியும் மலை முகடுகளிற் சூழ்ந்து தவழ்ந்து பாகைபோல் பொலியுங் காட்சியும்—அம்மலைகளின் உடல் புலனாகாவாறு பசும்பட்டுப் போர்த்தாலெனப் பொழில்கள் துதைந்துள்ள அழகும்—புலன்களை ஒன்றச் செய்கின்றன. மலையுச்சியினின்றும் தரைவரை நிரைநிரையாகச், சரிந்தும் செறிந்தும் நிற்கும் தெங்கின் பெருக்கும், அவ்வாறே தெங்கை விட்டுப் பிரியாது அணித்தே புடைசூழ்ந்து நிற்குங் கமுகின் உயர்வும், அவைகளுடன் நீக்கமின்றி வாழ்க்கைத் துணையெனச் சுற்றிச் சுற்றிப் பின்னிக்கிடக்குங் கான் பரந்த செடிகொடிகளின் ஈட்டமும், வானுலகேறப் பச்சைப் படாம் விரித்த படிகளெனத் திகழ்கின்றனவோ என்று ஐயுறலாம். புகைவண்டி அப் பசுமை நிலத்தில் பாய்ந்தோடுவதை நோக்குழி, அது பச்சை மரகத மலையைக் கிழித்தோடும் அம்பெனத் தோன்றுகிறது. பசுமைக்காட்சியில்லாத இடனும் உண்டோ! கண்ணுக்கும் உளத்துக்கும் இனிமையூட்டும் பசுமையின் பெற்றியை என்னென்றுரைப்பேன்!

புகைவண்டியின் விரைவில், இடையிடை யோடுஞ் சிற்றருவிகளின் தோற்றம், பசிய வானில் மின்னொளி

தோன்றி மறைவதுபோலப் புலப்படுகிறது. பச்சைப் பசுங்கடலில் சிறு சிறு தீவுகள் நிலவுவதைமான, கூரை வேய்ந்த சிறு சிறு குடில்கள் நிலவுகின்றன. அக் குடில்களின் நடுவண் ஆடவர் மகளிர் குழந்தைகள், காளை மயில் கன்றுகளென நிற்கின்றனர். அவ் வீட்டமும், இக்கூட்டமும் இயற்கையோடியைந்த இன்பமாகப் பொலிகின்றன. ஆங்காங்கே, சிற்சில இடங்களில் இக்கால நாகரிகக் கட்டடங்களும் புலனுகின்றன. அவைகளைக் காணுந்தோறும் பொல்லா அரக்கர் குழுவைப் பார்ப்பதுபோன்ற நிகழ்ச்சி உள்ளத் துருமற்போகாது. கூரை வேய்ந்த வீடுகள் இயற்கையோடியைந்து இன்பூட்டுவதுபோலப் பெரும் பெரும் மாடிகள் இயற்கையோடியைந் திருப்பினும் இன்பூட்டுவதில்லை."

(இத் தமிழ்ப்பெரியாரின் வருணனைக் கட்டுரையை நினைவிற்கொண்டு, கீழ்க்காணும் பொருள்களில் வருணனைக் கட்டுரைகள் வரைந்து பழகுக.)

(1) கடற்கரைக்காட்சி (2) மலைவளக் காட்சி (3) இயற்கைக் காட்சி (4) மாமல்லபுரச் சிற்பக் காட்சி (5) மலைக்கோட்டை (திருச்சிராப்பள்ளி) (6) செஞ்சிக் கோட்டை (இற்றைய நிலை) (7) காவிரிப் பூம்பட்டினம் (பூம்புகார்) (8) மதுரை மீனாட்சியம்மன் கோயில். (9) நீ சென்ற கடற்செலவு (10) நீ கண்ட நாடகக் காட்சி (11) நீ பார்த்த ஒரு பயிர்த் தொழில் (12) தேன் சேகரிக்கப்படும் முறை (13) முழுநிலவுக் காட்சி (14) நீ கண்ட கொலுக்காட்சி (15) மேட்டூர் அணை.

## 3. விளக்கக் கட்டுரைகள்

இவை, படிப்பார்க்குப் பொருள்விளங்க, விளக்கமாக வரையப்படுவதால் விளக்கக்கட்டுரைகள் எனப்படும்.

அஃதாவது எடுத்துக் கொண்ட பொருளை விளக்கமாக, எளிதில் உணரும் வண்ணம் படைக்கப்படுவதாகும். இவ் விளக்கக் கட்டுரைகள் எண்ணங்களை, கொள்கைகளை வெளிப்படுத்துவனவாகவும், பொதுக் கொள்கைகளைத் தெளிவுபடுத்துவனவாகவும் அமையும். மேலும், மனிதப் பண்புகளையும், உலகிலுள்ள அனைத்துப் பொருள்களையும் விளக்குவனவாகவும் அமையலாம்.

இக்கருத்தை உளங்கொண்டு பின் வரும் தலைப்புக்களில் கட்டுரைகள் எழுதிப் பயிலுக.

(1) கல்விப்பயன் (2) பண்புடைமை (3) ஒழுக்கமுடைமை (4) நான் அமைச்சரானால்......(5) நான் ஓர் அறிவியற் புலவனானால்......(6) நல்ல நட்பு (7) ஓவியக் கலை (8) உழு தொழில் (9) கொடையுள்ளம் (10) காகிதம் செய்யும் முறை (11) சோப்புச் செய்யும் முறை (12) கவிதையும் கற்பனையும் (13) சிற்பமும் ஓவியமும் (14) உழவனின் தோழன் (15) தமிழர் திருநாள்.

## 4. கருத்தியல் கட்டுரைகள்

கருத்தியல் கட்டுரைகளில் கருத்துக்கள் மலிந்திருக்கும். எதுகை மோனை நடைபற்றிக் கருதாமல், பரந்த சொற்கள் நிறைந்து வராமல், வருணனைகள் பெருகித் தோன்றாமல், கருத்துக்களின் கோவையாக அமைதலே கருத்தியல் கட்டுரையாம். இக்கட்டுரையில் கருத்துக்கே முதலிடம் தரப்படும். கற்பனையால் ஒன்றை எண்ணிப் பார்த்து, எழுதுதலும் இதனைச் சாரும். இரு பொருள்பற்றி முரணியும் ஒன்றியும் எழுதி, இறுதியில் முடிவுக்கு வரக்கூடிய விவாதக் கட்டுரையும் இதன்பாற்படும். இவற்றை உளத்தமைத்துக் கீழ்க் காணும் பொருள்கள் குறித்துக் கட்டுரைகள் எழுதிப் பழகுக.

(1) 'நன்றி மறப்பது நன்றன்று' (2) வள்ளுவர் வழியில் நாம் (3) பள்ளி வாழ்வில் மாணவர் (4) மாண வரும் ஆசிரியரும் (5) இராமலிங்கரும் சமயப் பொது மையும் (6) சிறந்த வாழ்வு அமைவது சிற்றூரிலா? நகரத்திலா? (7) காந்தியடிகளும் உரிமைப் போரும் (8) நாட்டுப்பற்று (9) மொழிப்பற்று (10) திரு. வி. க. வின் தமிழ்த்தொண்டு (11) உழைப்பால் உயர்ந்தவர் (12) உழுதொழிலும் பிறதொழிலும் (13) மாணவர் சமுதாயத் தொண்டு (14) 'முத்து'-தன் வரலாறுகூறல் (15) நான் வள்ளுவரைக் கண்டால்......

## 5. எடுத்தியம்பும் கட்டுரைகள்

மனிதர், தம் உள்ளத்திலிருக்கின்ற கருத்துக்களைத் தெளிவாகப் பிறருக்கு எடுத்து மொழிவதே எடுத்தியம் பும் கட்டுரைகளாகும்.

அவை, பெருங்கதை, நாடகம், திரைப்படம் முதலியவற்றில் படித்த—பார்த்த பகுதிகளை எடுத்தி யம்புவனவாக அமையலாம். காட்டாக:—சிலப்பதிகாரம், பூலித்தேவன் (நாடகம்) வீரபாண்டியக் கட்டப் பொம்மன். (திரைப்படம்)

பேரறிஞர்கள், பெரியோர்கள் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளைக்கூட எடுத்து எழுதலாம். காட்டாக:— பாரதியார், காந்தியடிகள், மறைமலையடிகள், டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் போன்றோர் வாழ்க்கை நிகழ்ச்சிகள்.

தெருச்சண்டை, மணவிழா, மணிவிழா, திருவிழாப் போன்ற நிகழ்ச்சிகளில் தாம் கண்ட—உணர்ந்த செய்தி களைச் சுவைபட எழுதலாம்.

இயற்கையன்னையின் சீற்றமான வெள்ளப் பெருக்கு, பெருமழை, புயற்காற்று, தீப்பற்றி எரிதல்,

நிலநடுக்கம் போன்றவற்றையும்,எதிர்பாராமல் நிகழும் இடையூறுகளான கலம் கடலில் மூழ்குதல், வானவூர்தி விண்ணில் எரிந்து வீழ்தல் போன்றவற்றை யும் எடுத்தியம்பும் கட்டுரையில் இடம் பெறச் செய்ய லாம்.

தரைச் செலவு, கடற்செலவு பற்றி உண்மையில் தாம் அனுபவித்தவைகளைப் பற்றியும் அல்லது கற் பனையில் தாம் கண்டவற்றைப் பற்றியும் விளக்கி வரையலாம்.

இவ்வாறு மேற்குறித்த பொருள்கள் பற்றிக் கட் டுரைகள் எழுதும்போழ்து, நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சி யாகக் கொண்டு செல்லவேண்டும். வேண்டாத செய்திகளை விலக்கிவிடலாம். பெரியோர்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகளை வரையும்போழ்து, அவர்களின் பண்பாடு களையும், பழக்க வழக்கங்களையும் குறிப்பிடல் வேண்டும். எடுத்தியம்பும் கட்டுரையைப் படிக்கும் பொழுது, கட்டுரையில் உள்ளன யாவும் தம்முன் நிகழ்வதுபோல் காட்சியளித்தல் வேண்டும். இவை யாவையும் நினைவிற்கொண்டு, தொடரும் பத்தியி லுள்ள பொருள்கள் குறித்துக் கட்டுரைகள் வரைந்து பயிற்சி பெறுக.

(1) நீ விரும்பிக் கேட்ட கதை (2) நீ கூற விரும் பும் கதை (3)நீ விரும்பும் பெரியார் ஒருவரின் வரலாறு (4) நீ மகிழ்ந்த சில நிகழ்ச்சிகள் (5) நீ பார்த்த திருவிழா (6) ஓர் அறிஞருடன் உனக்கு ஏற்பட்ட முதற் சந்திப்பு (7) நீ கண்ட ஒரு தெருத் துன்ப நேர்ச்சி (8) நீ நேரில் கண்ட இயற்கையின் எழுச்சி (9) நீ சிறுவயதில் செய்த அஞ்சாச் செயல் (10) நீ செய்த கடற் செலவு (11) உனக்குப் பிடித்த பள்ளி

நிகழ்ச்சிகள் (12) உன் பள்ளி வாழ்வில் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகள் (13) மதுரைச் சித்திரைத் திருவிழா (14) சென்னைப் பொருட்காட்சி (15) உலகத் தமிழ்க் கருத்தரங்கம்.

## 6. வாழ்க்கைக் குறிப்புக் கட்டுரைகள்

ஒருவருடைய வாழ்க்கையைப் பற்றிப் புனைந்துரையாமல் உண்மை வாழ்வை அப்படியே எழுதுவதுதான் வாழ்க்கைக் குறிப்புக் கட்டுரையாகும். ஒருவருடைய வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப்பற்றி எழுதுவதும் இதனையே சாரும். மேலும், ஒரு பொருளின் வாழ்க்கையைப் பற்றிக் கூறுதலும் இதனுள் அடங்கும். வாழ்க்கை வரலாறு எழுதுகின்றபோழ்து சட்டகங்களின் துணையோடு எழுதுதல் வேண்டும்.

கீழ்க்காணும் தலைப்புக்கள் குறித்துக் கட்டுரைகள் எழுதிப் பயிற்சி பெறுக.

(1) காந்தியடிகள் வாழ்க்கை வரலாறு (2) திரு. வி. க. வாழ்க்கை வரலாறு (3) நாவலர் சோமசுந்தர பாரதியார் வாழ்க்கை வரலாறு (4) மறைமலையடிகள் வரலாறு (5) தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதய்யர் வரலாறு (6) விபுலானந்த அடிகள் வரலாறு (7) மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை வரலாறு (8) வ. உ. சிதம்பரனார் வரலாறு (9) பச்சையப்ப முதலியார் வரலாறு (10) கதிரேசஞ் செட்டியார் வாழ்க்கை வரலாறு (11) பாண்டித்துரைத்தேவர் வாழ்க்கை வரலாறு (12) பாரதியார் வாழ்க்கை வரலாறு (13) பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு (14) நேருவின் வாழ்க்கை வரலாறு (15) கென்னடியின் வாழ்க்கை வரலாறு.

# 7. நடைமுறைச் சமுதாயவியல்–பொருளியல் கல்வியியல் கட்டுரைகள்

## (அ) நடைமுறைச் சமுதாயவியல் கட்டுரைகள்

மனிதர்களின் கூட்டமே சமுதாயமாகும். அச் சமுதாயம் பல செயல்களை உள்ளிட்டது. சமுதாயத்தின் தேவைகள் யாவை? அவற்றைப் பெற எவ்வாறு முயல வேண்டும்? என்பன பற்றியும், சமுதாயத்தில் அமைந்து கிடக்கும் உயர்வு தாழ்வு பற்றியும், ஏழை பணக்கார வாழ்வு பற்றியும் அறிந்து, அவற்றின் உண்மை நிலைகளை ஆய்ந்து எழுதுவது இக் கட்டுரையின் பாற்படும். மேலும், சமுதாயத்தில் பெண்கள் நிலைமை குறித்தும், பெண்ணடிமை, கைம்மை, குழந்தை மணம் முதலியன பற்றியும் எழுதுவதும் இத் தலைப்புடைய கட்டுரைகளின் கீழ் அடங்கும்.

நம்முடைய சமுதாயம் முன்னேற வழிவகை கண்டு உழைத்த சான்றோர் பலர். அவருள் இராசாராம் மோகனர், பாரதியார், காந்தியடிகள், விவேகானந்தர், இராமலிங்க அடிகள் போன்றோர் எழுத்தாலும், பேச்சாலும், செயலாலும் தொண்டாற்றினர். அவர்கள் இயற்றிய நூல்களைப் பயின்று குறிப்புக்களைத் திரட்டிக் கீழ்க்காணும் தலைப்புக்கள் குறித்துக் கட்டுரைகள் வரைந்து பழகுக.

(1) சமுதாயத்தில் நம் கடமை (2) சமுதாயமும் சமயமும் (3) சமுதாயத்தில் பெண்கள் நிலை (4) தன்னலமும் பொதுநலமும் (5) நம் இந்தியச் சமுதாய நிலை (6) மங்கையர் முன்னேற்றம் (7) வாழ்வு வளம் பெற... (8) நாடு வாழ வேண்டுவன (9) இராமலிங்க

ரும் சமயப் பொதுமையும் (10) தாயுமானவர் வேண்டும் சமய வாழ்க்கை (11) ஆங்கிலச் சமுதாயத் திற்கும் இந்தியச் சமுதாயத்திற்கும் உள்ள வேறுபாடு கள் (12) பொருளாதார நிலையும் மக்கள் வாழ்வும் (13) மாணவர் நிலை (14) மெய்கண்டார் வகுத்த வழிகள் (15) சமயப் பெரியார்களும் சமுதாய வாழ்வும்.

### (ஆ) நடைமுறைப் பொருளியல் கட்டுரைகள்

பொருளற்றவரைப் பொருளாகச்செய்யும் பொருள் சமுதாயத்தில் முதலிடம் பெறுகிறது. அப்பொருள் வரும்வழிகளையும், பெருக்கும் முறைகளையும், சேர்த்து வைக்கும் முறைகளையும், செலவிடும் முறைகளையும் அறிந்து பொருளாதாரத் தொடர்பான நாணயமாற்று, வங்கிகள், பயிர்த் தொழில், வாணிகம், கைத்தொழில், கூட்டுறவுச் சங்கம் போன்றவற்றைப்பற்றி எழுதுவது பொருளியல் கட்டுரைகளாகும். சுருங்கக்கூறின் பொரு ளாதாரத் தலைப்புக்கள் குறித்து எழுதுதல் இதன் பாற்படும்.

பின்வரும் பொருள்கள் குறித்துக் கட்டுரைகள் வரைந்து பயிலுக.

(1) வங்கிகள் (2) போக்கு வரவுச் சாதனங்களின் வரவு செலவுகள் (3) நாணயமாற்று (4) கூட்டுறவுச் சங்கம் (5) பயிர்த் தொழில் வளர்ச்சி (6) பொருளா தாரம் (7) உழவர் கடன் தொல்லை (8) உள்நாட்டு வாணிகம் (9) இந்திய மக்கள் வருமானம் (10) குடி சைத் தொழில் வளர்ச்சி (11) வெளிநாட்டு வாணிகம் (12) பெரிய கைத்தொழில் வளர்ச்சி (13) பொருள் நூல் (14) வரவு செலவு (15) திட்டமிட்ட வாழ்வு.

### (இ) நடைமுறைக் கல்வியியல் கட்டுரைகள்

கேடில் விழுச் செல்வமாகிய கல்வி மனித இனத்தின் பிறப்புரிமையாக அமைந்துவிட்டது. அக் கல்வி, கிராமக் கல்வி, முதியோர் கல்வி, தொழிற் கல்வி, பொதுக் கல்வி, சமயக் கல்வி, ஒழுக்கக் கல்வி எனப் பலதிறத்தனவாம். இவ்வாறு நடைமுறையில் அமைந்துள்ள கல்வியைப்பற்றி எழுதுதல் இத்தலைப்பின் கீழ் அடங்கும்.

தொடரும் பத்தியிலுள்ள பொருள்கள் குறித்துக் கட்டுரைகள் எழுதிப் பழகுக.

(1) முதியோர் கல்வி (2) சிறுவர் கல்வி (3) உயர் நிலைக் கல்வி (4) கல்லூரிக் கல்வி (5) தொழிற் கல்வி (6) கிராமக் கல்வி (7) தொடக்க நிலைக் கல்வி (8) இன்றையக் கல்வி முறை (9) அறிவியற் கல்வி (10) கல்வித்திட்டத்தில் வேண்டப்படுவன (11) தொழில் மூலம் கல்வி (12) கல்வியும் கல்விக் கழகங்களும் (13) ஒழுக்கக் கல்வி (14) வானொலியும் கல்வியும் (15) திரைப் படமும் கல்வியும் (16) நாடகமும் கல்வியும் (17) பொருட்காட்சியும் கல்வியும்.

## 8. பிறர் சொற்பொழிவுகளைக் கேட்டுக் குறிப்பெடுத்தல்

சொற்பொழிவைக் கேட்கின்ற பொழுது மிகக் கவனமாய் இருத்தல் வேண்டும். கேள்விப்புலமும், மனமும் ஒருமையாய் இயங்குதல் வேண்டும். சொற்பொழிவைக் கேட்டுக் குறிப்பெடுத்துப் பழகப் பல அறிஞர்களுடைய சொற்பொழிவுகளைக் கேட்க வேண்டும். குறிப்புக்களைக்கொண்டே கட்டுரை வரையலாம்.

குறிப்பெடுக்கின்ற பொழுது, இன்றியமையாக் கருத்துக்களையே குறித்துக்கொளல் வேண்டும். பிறகு அவற்றைப் பத்தித் தலைப்புக்களாக்கி எழுதுதல் வேண்டும்.

காட்டாக 14-2-'57 இல் சத்தியமங்கலம் நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில், முன்னாள் பொதுக்கல்வி இயக்குநர் திரு. நெ. து. சுந்தரவடிவேல் எம். ஏ., எல். டி. அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் குறிப்புக்கள்.

முன்னுரை—சரிநிகர் சமானமாக வாழ்தல்—மாணவர்களிடையே போட்டி வேண்டும்—வெற்றியும் வெறியும் — நெற்பயிரும் நல்வாழ்வும் — அரசியலாரின் பங்கும் நம் கடமையும்—உடலுக்குச் சோறு, உயிருக்குக் கல்வி—பல கல்வி—உள்ளத்தில் உறுதி—கல்விப் பயன்-பசியே வெறுப்புக்கும் பொறாமைக்கும் வித்து-பசிப்பிணி மருத்துவர்கள் பெருகுக—முடிவுரை.

இச் சொற்பொழிவுக் குறிப்பைக் கட்டுரையாக எழுதும் பொழுது, ஒவ்வொரு தொடரையும் கட்டுரைத் தலைப்பாக்கிக் கேட்டதை உளத்தமைத்து வேண்டிய செய்திகளைத் தொகுத்து எழுதுதல் வேண்டும். எழுதுகின்ற கட்டுரைக்குத் தலைப்பிட்டு எழுதுதல்வேண்டும். இங்கே, கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்பொழிவுக் குறிப்புக்களை எடுத்துக்காட்டாகக்கொண்டு கட்டுரை எழுதிப் பழகுக.

உரை வேந்தர் ஔவை திரு.சு. துரைசாமிப்பிள்ளை 9-2-'52இல் நடந்த பத்துப்பாட்டு மாநாட்டில் திருமுருகாற்றுப்படைபற்றி ஆற்றிய சொற்பொழிவின் குறிப்புக்கள்.

தோற்றுவாய்—ஆற்றுப்படை விளக்கம்—முருகாற்றுப்படையின் சிறப்பு நிலை—முருகாற்றுப்படையின் கருப்பொருள்—பரிசில் விளக்கம்—முருகனுடைய திருப்பதிகள்—வழிபாடுகள்—காந்தட் கண்ணி—கூதளங் கண்ணி—உருள் பூந்தார்—வண்டு சூழ்ந் தொலிக்கும் சுனை மலர் — பேய் மகள் துணங்கை — உடை—கடல்—கணவீரம்—களிறு—ஆகம்— ஆசினி—ஆமா—இருல்—உளியம்—முடிப்புரை.

## 9. பிறர் வானொலிப் பேச்சைக் கேட்டுக் குறிப்புக்கள் எடுத்தல்

செல்வத்துட் செல்வமான செவிச் செல்வத்தை வானொலியில் கேட்டுச் சுவைக்கலாம். வானொலியிற் பேசப்படும் பேச்சைக் குறிப்பெடுத்துப் பழகுதல் வேண்டும்.

கவிஞர் திரு. முடியரசனார் திருச்சி வானொலியில் பாவேந்தர் நினைவு நாள் குறித்து, 1966 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ஆம் நாள் பேசிய பேச்சின் குறிப்புக்களைக் கீழே காண்க.

முன்னுரை—இலக்கியஉலகில் மறுமலர்ச்சி–பாரதியும் பாரதிதாசனும்—கவிஞனின் இயல்பு—சமுதாயத்தில் கவிஞனின் இடம் — பாரதிதாசனின் பாநலம்—அழகின் சிரிப்பு — குடும்ப விளக்கு — மெய்ப்பாடு—குழந்தையும் குடும்பக் கட்டுப்பாடும் — கவிஞரின் ஆசை—பாரதிதாசனும் தமிழும் — மாகவி—ஞாயிறு எழுக—முடிவுரை.

இவ்வாறு வானொலிச் சொற்பொழிவைக் கேட்டுக் குறிப்பெடுத்துப் பழகுதல் வேண்டும். எடுத்த குறிப்

புக்களைக் கொண்டே கட்டுரை எழுதத் தொடங்க வேண்டும். ஒவ்வொரு தொடரையும் சிறு தலைப்பாகக் கொண்டு கட்டுரையை அமைத்தல் வேண்டும். இன்றி யமையாச் செய்திகள் யாவும் கட்டுரையில் இடம் பெறல் வேண்டும். மாணவர்கள் நல்ல வானொலிச் சொற்பொழிவுகளைத் தவறாது கேட்டுக் குறிப்பெடுத்தல் நல்லது. பிறகு அவற்றைக் கட்டுரை வடிவமாக்கித் தங்கள் எழுத்தாற்றலை வளர்த்துக்கொளல் வேண்டும்.

## 10. வானொலிப் பேச்சுக் குறிப்புக்களைப் பின் விரித்து எழுதுதல்

கடந்த வகுப்பில் குறிப்புக்களைக்கொண்டு விரித்தெழுதப் பழகியிருப்பீர்கள். சென்ற கட்டுரையில் வானொலிப் பேச்சின் சுருக்கக் குறிப்புக்களைக் கண்டோம். அச்சொற்பொழிவுச் சுருக்கக் குறிப்புக்களை விரித்தெழுதப் பழகிக் கொளல் வேண்டும். கவிஞர் முடியரசனார் வானொலியில் பேசிய சொற்பொழிவுச் சுருக்கத்தைக் கீழே விரித்தெழுதியுள்ளேன். அதனைக் காட்டாகக் கொண்டு குறிப்புக்களை விரித்தெழுதக் கற்றுக்கொள்க.

### குறிப்பின் விரிவு

முன்னுரை: இலக்கிய உலகின் மறுமலர்ச்சிக்கு இராமலிங்கர், தாயுமானவர், அருட்பிரகாசர் முதலியோரை வழிகாட்டியோராகக் கொள்ளலாம்—இவர்கள் சமய நோக்குடையராயினும், சீர்திருத்தக் கருத்துடையவர்கள். அவ் வழியைக் கவிஞர் பாரதியும், பாரதிதாசனும் பின்பற்றினர்.

பொருள்: பாரதியும், பாரதிதாசனும் — விடிவெள்ளி, உதய ஞாயிறு—பேரருவி, பேராறு—வித்து,

ஆலமரம்—கவிஞன் துணிவு மனப்பான்மை உடைய வன்—எதற்கும் எவர்க்கும் அஞ்சாத நெஞ்சு—தன்னல மும், பொதுநலமும்—பல உள்ளங்கள்.

பலவித மறுமலர்ச்சி—சொற் சிக்கனம், உணர்ச்சி வேகம், தனிப்பாணி—எண்சீர் விருத்தத்திற்கு ஒரு தனி நடை—அழகின் சிரிப்பு—குடும்ப விளக்கு—தனி மனிதனும் பொதுமக்களும்—சோம்பிக் கிடப்பவனிடம் பாரதிதாசன் — மலையும் கவிஞரும்—காதலும் கருத் தடையும்—தமிழியக்கம்—தாய்மொழி வளர்ச்சி—கவி ஞரின் குணநலன்கள்—பாடல்களில் தென்றல், புயல், குயில், சிங்கம், வெண்ணிலவு, செங்கதிர், இனிப்பு, கசப்பு, தண்மை, வெம்மை.

முடிவுரை: இருளால் ஞாயிறு மறைக்கப்படுவ தில்லை—இருள் அகலட்டும் — ஞாயிற்றின் ஒளி பர வட்டும்—கவிஞர் வாழ்க!

## 11. கொடுத்த தலைப்புக்கள் பற்றிக் கட்டுரைகள் எழுதுதல்

கொடுத்த தலைப்புக் குறித்துக் கட்டுரை எழுதப் புகும் மாணவர்கள், அத்தலைப்பிற்கு வேண்டிய செய்தி களை நூல்கள் வாயிலாகத் திரட்டுதல் வேண்டும். பனு வல்களில் படித்த செய்திகளைக் குறிப்பெடுத்து வைத்துக் கொளல் வேண்டும். கட்டுரையை எவ்வாறு அமைக்கலாம் எனச் சிந்தித்து, மனத்தில் கட்டுரைக்கு ஒரு முன் வடிவம் கொடுக்கப்படல் வேண்டும். பிறகு, அவ் வடிவை எழுதிவைத்துக்கொண்டு கட்டுரையை எழுதத் தொடங்க வேண்டும்.

ஒரு பெரியாருடைய வாழ்க்கை வரலாற்றை எழுத வேண்டுமென்றால் — அப்பெரியாருடைய பிறப்பு,

இளமை வாழ்வு, கல்வி, தொண்டு, இல்வாழ்வு, செயற்கருஞ்செயல்கள் முதலியனவற்றை ஒன்றன்பின் ஒன்ருகத் தொகுத்து வரைதல் வேண்டும்.

முன் வகுப்புக்களில் நீங்கள், கொடுத்த தலைப்புக் குறித்துக் கட்டுரை எழுதப் பழக்குவிக்கப்பட்டிருக்கிறீர்கள். அதனை நினைவிற்கொண்டு பின்வரும் தலைப்புக்கள் குறித்துக் கட்டுரைகள் வரைந்து காட்டுக.

1. அறிவுடையாரெல்லாம் உடையார்.
2. மாணவர் கடமை.
3. ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்.
4. ஈதல் இசைபட வாழ்தல்......
5. 'யாதும் ஊரே யாவருங் கேளிர்'.
6. 'தந்தை தாய்ப் பேண்'.
7. விண்வெளி வீரர்கள்.
8. பெண்மை வாழ்க !
9. உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு.
10. தாய்நாட்டுப் பற்று.

## 12. கொடுக்கப்பட்ட மேற்கோள் நூல்களிலிருந்து கட்டுரைப் பொருள் திரட்டல்.

ஓதுதல் ஒழியாது நடைபெறல் வேண்டும். ஆதலின் மாணவர்கள் பல நூல்களை வாங்கிப் படித்தல் வேண்டும். மாணவர்கள், தாம் படிக்கின்ற மேற்கோள் நூல்களிலிருந்து கட்டுரைக்கு வேண்டிய பொருள் திரட்டல் வேண்டும்.

காட்டாக : சிலப்பதிகாரக் கதையைக் கூறக்கூடிய உரைநடைப்பனுவல் கொடுக்கப்படுமானல், அதனைக் கொண்டு கீழ்க்கண்டவாறு கட்டுரைப் பொருள் திரட்டல் வேண்டும்.

முன்னுரை : தமிழ்க் காப்பியங்கள்—நெஞ்சை அள்ளும் காவியம்.

பொருள் : சிலப்பதிகாரம், மூன்று பேருண்மைகளைக் காப்பியத்தின் மையமாகக் கொண்டது. தமிழர் யாவர்க்கும் அது மேற்கோள் நூலாகும். (அந்நூலிலிருந்து கட்டுரைக்குக் கீழ்க்கண்டவாறு குறிப்புக்கள் எடுத்துக் கொளல் வேண்டும்.)

வாழ்த்துப்பகுதி—திருமணம்—ஆடல் மகளுடன் வாழ்ந்த வாழ்வு—கோவலன் வீடு திரும்பல்—தன் மனைவியை மதுரைக் கழைத்தல்—கவுந்தியடிகளின் துணை—ஆயர்குடியில் வரவேற்கப்படல்—கோவலன் சிலம்பு விற்கச் செல்லல்—கொலைக்களக் காட்சி—கண்ணகி உண்மையை உணர்தல்—தன் கணவன் கள்வனல்லன் என விளக்கிக் காட்டல்—அரசன் உயிர் விடுதல்—கண்ணகி சேரநாடு அடைதல்—செங்குட்டுவன் கல்லெடுத்துக் கோயில் அமைத்தல்—யாவராலும் கண்ணகி தொழப்படுதல்—முடிவுரை.

இவ்வாறு, மேற்கோள் நூல்களைக் கொண்டு கட்டுரைகள் எழுதிப் பயிற்சி பெறவேண்டும். திருக்குறள், புறநானூறு, கம்பராமாயணம் போன்ற மேற்கோள் நூல்கள் கொடுக்கப்பட்டால் அவற்றைப் பன்முறை படித்துக் குறிப்புக்களை அமைத்துக் கொண்டு கட்டுரை எழுதத் தொடங்க வேண்டும்.

## 13. பொருள்வகையாலும், நடைவகை யாலும் சிறந்த கடிதங்கள் எழுதுதல்.

மாணக்கர்கள் பொருள் வகையாலும், நடைவகை யாலும் சிறந்த கடிதங்களை எழுதிப் பழகுதல் வேண் டும். ஒரு விழா நடத்துவதற்குமுன் செய்ய வேண் டிய முன்னேற்பாடுகள் குறித்துச் செயலருக்கு எழுத லாம். தம் தம்பி தங்கையர்க்கு அறிவுரை புகன்று ஆக்க வழியில் ஈர்த்துச் செல்லக் கூடிய கடிதமாக அமையலாம். தம் பெற்ரோர்க்குத் தம் நிலையை விளக்கி வரைகின்ற கடிதமாக விருக்கலாம். நாடா ளும் தலைவர்களுக்கு தம் வேண்டுகோள்களை நயம் பட எழுதி உணர்த்தலாம். தம் நண்பர்களுக்கு உள முருக்குகின்ற வகையில் கடிதம் எழுதித் தொடர்பை வலுப்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறு பலதுறை யிலும் நற் கடிதங்கள் எழுதிக் கடிதம் எழுதும் வன்மை கைவரப்பெறல் வேண்டும்.

கடிதம், தலைப்பு, முன்னுரை, பொருள், முடிவுரை, முகவரி என்ற ஐந்து பகுதிகள் அடங் கியதாக இருத்தல் வேண்டும்.

கீழ்க்காணும் பொருள்கள் குறித்துக் கடிதங்கள் எழுதிப் பயிலுக.

(1) பெற்ரோர்க்குத் தன்னிலை குறித்துக் கடிதம் எழுதுதல்(2)நண்பனின் தேர்வு வெற்றிகண்டு மகிழ்ந்து கடிதம் எழுதுதல் (3) நீ பார்த்த விழாச் சிறப்புற நடந் தது குறித்து விழாத் தலைவருக்குக் கடிதம் எழுதுதல் (4) உன் தம்பி தங்கையர்க்கு அறிவுரை கூறுகின்ற முறையில் கடிதம் எழுதுதல் (5) நீ படித்துச் சுவைத்த

புத்தகம் பற்றி உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுதல் (6) நீ பார்த்துக் களித்த நாடகக் காட்சி குறித்து நண்பனுக்குக் கடிதம் எழுதுதல் (7) நீ சுற்றுலாச் சென்றது குறித்து நண்பனுக்குக் கடிதம் எழுதுதல் (8) நீ பார்த்துப் பேசிய அறிஞரைப் பற்றி நண்பனுக்குக் கடிதம் எழுதுதல் (9) உலகத் தமிழ்க் கருத்தரங்கு நடந்த முறை குறித்து வெளிநாட்டு நண்பனுக்குக் கடிதம் எழுதுதல் (10) கடல் கடந்த நண்பனுக்குக் கல்விநிலை குறித்துக் கடிதம் எழுதுதல்.

## 14. அரசியல் அலுவலகங்களுக்கும் ஊராட்சி, நகராட்சிக் கழகங்களுக்கும் குறித்த பொருள்கள் பற்றி விண்ணப்பங்கள் எழுதுதல்.

### (அ) அரசியல் அலுவலகங்களுக்கு எழுதுதல்

இற்றைய நாளில் தமிழன்னை தன்னாட்சி பெற்றுக் கொலுவிருக்கின்றாள். ஆதலின், தாய்மொழியிலேயே அனைத்து அலுவலகங்களுக்கும் தொடர்பு கொள்ளலாம். அலுவலகங்களுக்கு எழுதுகின்ற பொழுது கடித முறையைப் பின்பற்றக் கூடாது. அலுவலகத்திற்குரிய முறைப்படி அனுப்புநர், பெறுநர், வணக்கமொழி, பொருள், முடிப்புரை ஆகிய பகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். எழுதுகின்ற செய்தியைச் சுருக்கமாகத் தெளிவாக எழுதுதல் வேண்டும். விண்ணப்பம் எழுதுகின்ற பொழுது அவ் வந்நிலைக்குரிய வணக்க மொழியும்,பணிவு மொழியும் அமைந்திருத்தல் நல்லது. அலுவலகங்களுக்கு எழுதிப் பயிற்சி பெறுதல் சமுதாயத்திற்குப் பெரிதும் பயன்படும். ஆதலின்,

கீழ்க்கண்ட அலுவலகங்களுக்குப் பின்கண்ட விண்ணப்பங்களை எழுதிப் பழகுக.

1. தெருவிளக்கு எரியவில்லையென்று மின்விசைக் கழகத் துணைப் பொறியாளருக்கு விண்ணப்பமொன்று வரைக.

2. அரசாங்கக் கல்லூரி முதல்வருக்குப் புகுமுக வகுப்பில் சேர, விண்ணப்பத்தாள் அனுப்புமாறு வேண்டி எழுதுக.

3. கல்வி அமைச்சரைப் பள்ளி இலக்கியக் கழக விழாவிற்குத் தலைமை தாங்குமாறு வேண்டி எழுதுக.

4. வருமான வரி அலுவலகத்தில் வேலை வேண்டித் தலைமை அலுவலருக்கு விண்ணப்பம் ஒன்று எழுதுக.

5. அரசு வங்கியில் வேலை வேண்டி வங்கி இயக்குநருக்கு விண்ணப்பம் வரைக.

6. வேலை தேடித்தரும் அலுவலகத்திற்கு உன் தகுதி, நிலை குறிப்பிட்டு வேலை வேண்டி விண்ணப்பம் எழுதுக.

7. பொதுப் பணித் துறைத் தலைமைப் பொறியாளருக்கு, மேற்பார்வையாளர் வேலை வேண்டி விண்ணப்பம் வரைக.

## (ஆ) ஊராட்சி, நகராட்சிக் கழகங்களுக்கு எழுதுதல்

தன்னுடைய ஊருக்கு, நகரத்திற்குத் தேவையான நீர், விளக்கு, சாலை, துப்புரவு முதலியன வேண்டி, ஊராட்சி, நகராட்சிக் கழகங்களுக்கு விண்ணப்பம் எழுதிப் பழகுதல் வேண்டும். கீழ்க்கண்ட விண்ணப்பங்களை எழுதிப் பயிற்சி பெறுக.

1. இராமநாதபுர மாவட்டத்திலுள்ள குன்றக் குடிக்கு, அரசுக் கிளை நூலகம் வேண்டி ஊராட்சி ஒன்றிப்பு ஆணையாளருக்கு விண்ணப்பம் ஒன்று வரைக.

2. திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த சித்தன்ன வாசலில், தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகக் கிளையை நிறுவுமாறு, ஊராட்சி ஒன்றிப்பு ஆணையாளருக்கு விண்ணப்பம் எழுதுக.

3. மதுரை மாவட்டத்தைச் சார்ந்த மேலூரில் மாணவர் விடுதி எழுப்ப, அப்பகுதி ஊராட்சி ஒன்றிப் புத் தலைவருக்கு விண்ணப்பம் ஒன்று வரைக.

4. காரைக்குடி நகராட்சி மன்றத்திற்குப் புதுத் தெருவில் குடிநீர் வசதி வேண்டுமெனக் கேட்டு விண்ணப்பம் எழுதுக.

5. மதுரை நகராட்சி மன்றத்திற்கு, மேலமாசி வீதியில் ஒரு படிப்பகம் அமைக்க வேண்டுமெனக் கேட்டு விண்ணப்பம் எழுதுக.

6. திருச்சி நகராட்சி மன்றத்திற்குத் தில்லை நகரில் இரண்டாவது குறுக்குச் சாலையை ஒழுங்காக அமைத் துத் தருமாறு விண்ணப்பம் ஒன்று வரைக.

7. சென்னை மாநகராட்சி மன்றத்திற்குச் சைதாப் பேட்டையில் ஒரு மகப்பேறு நிலையம் வைக்குமாறு வேண்டி விண்ணப்பம் வரைக.

## 15. கற்பனைக் கட்டுரைகள்

சிந்தனை ஈனும் சிறந்த குழவியே கற்பனையாகும். கற்பனை இருவகைப்படும். உள்ளதையே உயர்வு நவிற்சிபடப் புனைந்துரைப்பது ஒருவகை. இல்லாத

தொன்றைப் படைத்துக் காட்டுவது மற்றொருவகை. அறிவியல் கண்டுபிடிப்புக்களெல்லாம் ஒருவகைக் கற்பனையால் விளைந்த பயன்களேயாம். எண்ண வோட்டம் தங்கு தடையின்றி எல்லையிறந்து போவதுதான் கற்பனையின் உச்சநிலையாகும். மாணவர்கள் தங்கள் எண்ணங்களை ஒருவழிச் செலுத்தி உரிய பொருள் குறித்தோ, நிலை குறித்தோ எழுதிப் பழகல் வேண்டும். கற்பனைக் கட்டுரைக்குக் காட்டாக அறிஞர் மு. வ. வின் கி. பி. இரண்டாயிரம் என்ற நூலைப் பயின்று பார்க்க. கற்பனையாற்றலை மாணவப் பருவத்திலேயே வளர்த்துக்கொளல் நலம். ஈண்டு 'நிலவுக் காட்சி' குறித்து எழுதிய கற்பனைக் கட்டுரையின் ஒரு பகுதி இடம் பெற்றுள்ளது. இதனைக் காட்டாகக் கொண்டு பல கற்பனைக் கட்டுரைகள் எழுதிப் பழகுக.

## நிலவுக் காட்சி
### (கற்பனைக் கட்டுரை)

**வானத்து விளக்கு :**

அந்தி மயங்கி இருள் சூழும் நேரம். என் தாய், வீட்டில் விளக்கேற்றி வைக்கின்றாள். அப்பொழுது உலகத்தை இருள் விழுங்காவண்ணம், இயற்கைத் தாய் ஓர் ஒளி விளக்கை வானத்திலே ஏற்றி வைக்கின்றாள். வீட்டில் விளக்கேற்றியவுடன் குழந்தைகள் மகிழ்ந்து விளையாடுவதைப்போல், வானத்து விளக்கைக் கண்டவுடன் உலக மக்கள் மகிழ்ந்து களிக்கின்றனர். அந்த விளக்கு ஏழை என்றும் செல்வரென்றும், உயர்ந்தவரென்றும் தாழ்ந்தவரென்றும் வேறுபாடு கருதாது ஒரு நிகராக ஒளியைத் தருகின்றது. முழு நிலாக் காலங்களில் வானகமும் வையகமும் ஒரே ஒளி

மயமாகக் காட்சி தருவது பேரின்பமாக இருக்கும். மலைகள், மரங்கள், பயிர் பச்சைகள், வீடுகள் அனைத்தும் வெள்ளைவெளேர் என்று காட்சி நல்கும். உலகத்தையே ஒளிமயமாக்கும் இந்த நிலவினிடம், களங்கம் இருக்கின்றது என்றும் உலகம் சொல்லத்தான் செய்கின்றது. உயர்ந்தவர்களிடம் சிறு களங்கம் தோன்றினாலும், அஃது உலக முழுதும் பரவும் போலும்!

அழகு நிலா :

சில வேளைகளில் கருமுகில்கள் கூட்டமாக விரையும். அவை நிலவைக் கடந்து செல்லும்பொழுது, நிலவு அந்த முகில்களினூடே நுழைந்து வெளிப்படுவது போன்று காணப்படும். சில சமயங்களில் அம் முகிலுக்குள் மங்கியதோர் நிலவாகக் காணப்படும். ஒளிந்து விளையாடும் சிறுவனைப்போல அக்காட்சியிருக்கும். விண்மீன்கள் புடைசூழத் திகழ்ந்து வரும் வெண்ணிலவு, படைவீரர் சூழ்ந்துவரப் பவனி வரும் அரசனெனத் தோற்றமளிக்கும். மாணவர்களிடையே நின்று அறிவுரை பயிற்றும் எங்கள் ஆசிரியர் போலவும் காணப்படும், அந்த மீன்களிடையே விளங்கும் வெண்மதி. இந்த அழகுக் காட்சியை எங்கள் மாடியிலிருந்து நாங்கள் அடிக்கடி கண்டு களிப்பதுண்டு.

பிறை நிலவு :

சில மாலை நேரங்களிற் பிறை நிலவும், அதற்கு மேலே ஒற்றை விண்மீனும் காணப்படும். அந்த அழகே அழகு. நாங்கள் காகிதத்தால் செய்து விடும் கப்பல் போல அந்தப் பிறை மிதக்கும். என் தாய் அங்காடியிலிருந்து வாங்கிவரும் வெள்ளைப் பூசனிக் கீற்றுப் போல அந்தப் பிறை நிலா விளங்குவதும் உண்டு. அப்போது எங்களுக்கே கற்பனை யூறும்; கவிதை

எழுதத் தோன்றும்; கவிஞர்கள் எழுதிய கவிதைகள் பல எம் நினைவிற்கு வரும்.

**நிலாவுணர்த்தும் உண்மை :**

இந்த நிலா எப்பொழுதும் முழுமையாகவே யிருந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்! ஆனல், அப்படி யிருப்பதில்லேயே; தேய்கிறது—வளர்கிறது. மீண்டும் மீண்டும் இப்படியே மாறி மாறி வருகிறது. அப்படி மாறி மாறி வரினும் ஒருண்மையை நமக்குச் சொல்லிக்கொண்டே யிருக்கிறது. உலகத்தில் தோன்றிய பொருள் வளர்வதும் தேய்வதும் இயற்கை என்னும் பேருண்மையை உணர்த்துகிறதல்லவா? பெரியவர்களுடைய நட்பு, பிறை நிலவுபோல வளர்ந்து வரும் என்பதையும், சிறியவர்களுடைய நட்பு முழுமதி போலத் தோன்றிப் பிறகு குறைந்துகொண்டே வரும் என்பதையும் நமக்கு அந்த நிலவுதானே உணர்த்துகிறது.

**முடிவுரை :**

மாணவர்களாகிய நாம் இதுபோன்ற இயற்கை இன்பங்களில் திளைத்து மகிழப் பழகுதல் வேண்டும். அப்படி மகிழ்ந்து, இன்பம் நுகர்வதோடு அமையாது, பல நீதிகளையும் உண்மைகளையும் கற்றுக்கொண்டு நம் வாழ்வைச் செம்மைப் படுத்திக்கொள்ள வேண்டும்.

(இவ்வாறு, இயற்கைப் பொருள்கள் பற்றியும், சிந்தையும் மொழியும் செல்லா நிலையுடையன பற்றியும் கற்பனைக் கட்டுரைகள் எழுதலாம்.)

## 16. *நிறைவேறிய தீர்மானங்களை உரிய இடங்களுக்கு அனுப்பிவைத்தல்.*

சென்ற வகுப்பில் தீர்மானங்களை எவ்வாறு எழுதுவது என்று கற்றுக் கொண்டீர்கள். எழுதக் கற்றுக்

கொள்வதோடமையாது, அத் தீர்மானங்களை நிறைவேற்றித் தலைவர், செயலர் கையொப்பமிட்டு, உரிய அலுவலகங்களுக்கு அனுப்பப் பழகிக் கொள்ள வேண்டும். அத்தீர்மானங்களைச்செயற்படுத்தஅவற்றுடன்வேண்டுகோட் கடிதமொன்று வைக்கப்பெறல் வேண்டும். தீர்மானங்களைப் பல படிகள் எடுத்து அனுப்புதல் வேண்டும். தீர்மானம் பொதுவிடம் அல்லது மன்றம் பற்றியதாக யிருக்குமானால், அதனை நாளிதழ்களுக்கு அனுப்பி வெளியிடச் செய்தல் வேண்டும். தீர்மானங்களைப் படி எடுத்து அனுப்புகின்றபொழுது, தூய்மையாகத் தெளிவாகத் தட்டெழுத்துப் பொறியின் மூலம் படிஎடுத்தோ, அல்லது நல்ல முறையில் எழுதியோ அனுப்புதல் வேண்டும்.

தீர்மானங்களை நிறைவேற்றுவதால் மட்டும் பயனில்லை. உரிய அலுவலகங்களுக்கு அனுப்பி வைப்பதன் மூலம்தான் அவை பயனளிக்கும்.

## 17. ஒருபொருள் அல்லது சூழ்நிலை பற்றி ஒட்டியும் வெட்டியும் உரையாடல் அமைத்தல்.

உரையாடற் கலை, வளர்க்கப் பெற வேண்டிய கலையாகும். மாணவர்கள் இருபாலும் எண்ணத்தக்க பொருள் குறித்துச் சொற்போர் நிகழ்த்தப் பழகியிருப்பார்கள்.

காட்டாக: 'சிறந்த வாழ்க்கை அமைவது சிற்றூரிலா? நகரத்திலா?' என்ற பொருள் குறித்து ஒட்டியும் வெட்டியும் உரை நிகழ்த்துகின்றபொழுது, மாணவர்கள் தாங்கள் சேர்ந்த கட்சிக்கு வெற்றி வேண்டிப் பல ஆதாரங்களையும், கருத்துக்களையும்

சேர்க்க முற்படுவர். அப்பொழுது அவர்கள் ஒன்றின் நன்மையையும், தீமையையும் நன்கு உணர்வர். அவர்கள் சிந்தனையைக் கிளறி விடுவதற்கு இவ்வுரையாடல் பெருந்துணை புரியும்.

கீழ்க்காணும் உரையாடலைக் காட்டாகக் கொண்டு பல உரையாடல்களைப் பேசியும், எழுதியும் பழகுக.

## திரைப்படத்தால் விளைவது நன்மையா? தீமையா?

செயலாளர்: எழுத்தறிவிக்கும் இறைவர்களே! என் அன்பிற்குரிய நண்பர்களே, உங்களனைவர்க்கும் முதற்கண் என் வணக்கத்தை உரித்தாக்கிக் கொள்கிறேன். இன்று நிகழவிருக்கும் நம் மன்றத்தின் சொற்போர் அரங்கிற்கு நடுவராயிருந்து சிறப்புற நடாத்தித் தருமாறு, பேராசிரியர் திரு. நெடுமாறன் எம்.ஏ., அவர்களை மாணவர் மன்றத்தின் சார்பாக வேண்டிக்கொள்கிறேன்.

தலைவர் முன்னுரை: பள்ளித் தலைவரவர்களே! பயிற்றுவிக்கும் ஆசிரிய நண்பர்களே! மாண்புடை மாணவர்களே! எல்லீர்க்கும் என் அன்பு கலந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்கின்றேன். இன்று, உங்கள் சொற்போர் அரங்கிற்கு யான் நடுவராய் வீற்றிருப்பதைக் குறித்துப் பெரிதும் மகிழ்கிறேன். திரைப்படத்தால் விளைவது நன்மையா? தீமையா? எனச் சிலர் எடுத்தியம்ப இருக்கின்றனர்; உங்களைப் போலவே நானும் அவர்தம் சொல்லாற்றலைக் கேட்டு மகிழ விழைகின்றேன். இப்பொருள்பற்றி முதற்கண் நான் ஒன்றுங் கூறுதிருப்பதே முறை. அதனால், மாணவர்களைப் பேசுமாறு அழைக்கின்றேன். முதலில் திரு. அறிவுடை

நம்பி, திரைப்படத்தால் விளைவது நன்மையே என்று சொற்போரைத் தொடங்கி வைப்பாராக.

அறிவுடைநம்பி: ஒரு பாற்கோடா உயர் பெருந் தகையாகிய நடுவர் அவர்களே! அறிவு நல்கும் ஆன்றோரே! மாற்றுக் கட்சி நண்பர்களே! அன்புத் தோழர்களே! அனைவரையும் தலைதாழ்த்தி வணங்குகிறேன். சின்னாட்களுக்கு முன்னர் நம் பள்ளியில் காட்டப் பெற்ற படக்காட்சியைக் காண நாம் அனைவரும் கூடியிருந்தோம். தீமையெனப் பேச முன்வந்துள்ள நண்பர்களும் அன்று முன் வரிசையில் அமர்ந்து கண்டு களித்தமையும் குறிப்பிடத்தக்கது. (கைதட்டல்). திரைப் படக் காட்சிகளைக் கண்ணாரக் கண்டும், உரையாடல்களையும், பாடல்களையும் செவியாரக் கேட்டும் சிந்தை களிகூரும் நிலையை அடைகின்றோம். ஆகவே, கட்புலனுக்கும் செவிப்புலனுக்கும் ஒருசேர இன்பம் உண்டாக்குகிறது திரைப்படம் என்பதை உணர்கின்றோம். பள்ளிகளில் படக்காட்சியும் ஒரு பாடப் பகுதியாகச் சேர்க்கப்பட்டிருப்பதிலிருந்தே, அதனால் விளையும் நன்மைகளைத் தெற்றென உணர்கின்றோம். கற்றவர் மட்டுமே புத்தகங்களைப் படித்துணர முடியும்; சிலர் மட்டுமே சொற்பொழிவைக் கேட்டு மகிழ முடியும்; இசையும் அவ்வாறே. ஆனால், திரைப்படத்தைக் கற்றாரும் மற்றாரும் ஆயிரக்கணக்கானவராகக் கூடியிருந்து ஒரே நேரத்திற் கண்டுகளிக்க வாய்ப்புண்டு! புத்தகம் ஒருவரால் எழுதப்படுவது; சொற்பொழிவு ஒருவரால் நிகழ்த்தப்பெறுவது; இசை ஒருவரால் இசைக்கப் பெறுவது; திரைப்படக் கலையோ பலருடைய அறிவால், கூட்டுறவால் உருவாவது. ஆதலின் பலருடைய அறிவாற்றலையும் ஒருங்கே பெற்று மகிழத் திரையரங்கு துணைபுரிகிறது; பொழுதை நன்முறையிற்

கழிக்கப் பேருதவி செய்கின்றது. மாணவர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய செய்திகளைப் படக்காட்சிகளின் வாயிலாகத் தெளிவாகவும் எளிதாகவும் அறிந்து கொள்ள முடியும். மாணவர்களுக்கு மட்டுமன்று, பொதுமக்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது. திரைப் படத்தைப் 'பொதுமக்கள் புத்தகம்' என்றே கூறலாம். நேரிற் சென்று காண வியலாப் பொருள்களை, இடங் களைப் படக்காட்சிகளின் வாயிலாகக் கண்டு பயன் பெற முடியும். அயல் நாட்டுப் பழக்கவழக்கங்களையும் நிகழ்ச்சிகளையும் அறிந்துகொள்ள அது வாய்ப்பளிக் கிறது. இவ்வாறு, திரைப்படம் பல்லாற்றானும் நன் மையே விளைத்து வருகிறது என்பது வெள்ளிடை மலை என மொழிந்து விடைபெறுகிறேன்; வணக்கம்.

ஆராவமுதன்: சமன் செய்து சீர் தூக்கும் நடுவர் அவர்களே! அறிவூட்டும் பரம்பரையினரே! உடன் பயில்வோரே! அனைவர்க்கும் என் வணக்கம். நன்மை எனப் பேசிய நண்பர், தமக்கே உரிய முறையில், உங்கள் மனத்தை ஈர்க்கச் சொல்வலை வீசினார். ஆனால் மாணவர் நிலைசாயவில்லை. திரைப் படத்தால் விளைவது தீமையே என அழுத்தமாகவும் திருத்தமாகவும் நான் கூறவிரும்புகிறேன். நன்மை எனப் பேசியவர் பள்ளியிற் காட்டப்படும் கல்விப் படக் காட்சியைக் கூறுகிறாரா? அரங்குகளில் காட்டப் படும் கதை தழுவிய காட்சியைக் கூறுகிறாரா? என்பதே புரியவில்லை. இரண்டையுமே குழப்புகிறார். (கைதட்டல்). இரு புலனுக்கு நன்மை தருகிறது என்றும் குறிப்பிட்டார். இது தவறு. இளஞ் சிறாரும் இன்று மூக்குக் கண்ணாடி போடுகின்ற நிலைக்கு வந்துவிட்ட நிலை எதனால் வந்தது? திரைப்

படத்தாலன்றோ? நண்பர் கண்ணாடி போட்டிருக்கிறார் என்பதற்காகக் கூறவில்லை. (கைதட்டல்). உண்மை நிலையை விளக்கினேன். காலம் பொன்போன்றது என்பர். அப்பொன்னான காலத்தை, ஆயிரக்கணக்கான மக்கள், நாடோறும் பாழ்படுத்தி வருகின்றனர். மேலும், காசுங் கரியாகிறது. ஒருவரையொருவர் அடித்துக்கொண்டும், இடித்துக்கொண்டும், முட்டிக்கொண்டும், தள்ளிக்கொண்டும் சீட்டு வாங்க முனைகின்றபொழுது, எத்துணை இழப்புக்கள் நேரிடக்காண்கின்றோம். வரிசையில் நின்று ஒழுங்குறச் செல்லும் பண்பைக் குலைத்துவிடுகிறது. 'பொது மக்கள் புத்தகம்' என்று அவர் குறிப்பிட்டார். அது பொது மக்கள் பண்பாட்டைக் குலைக்கும் புதுக் கருவி என்றே நான் கூறுவேன். புத்தகத்தைக் கற்பதால், சொற்பொழிவைச் சுவைப்பதால், இசையைக் கேட்பதால் கெட்டார்கள் என இதுவரை கேள்விப்பட்டதேயில்லை. ஆனால், திரைப்படத்தால் தீமை பெருகிப் பரந்து விரிந்து வருவதை நம் மாணவர்களுடைய தோற்றமும் ஒப்பனையுமே தெள்ளத் தெளிய விளக்கி நிற்கின்றன. தலையலங்கோலம், ஆடைக் குறைப்பு இவற்றில் நம் மாணவர்தம் மாண்பு எங்கே? (கைதட்டல்). நகைச்சுவைக்காக நான் இதைக் கூறவில்லை; நாட்டின் போக்கைக் கண்டு, மனம் நைந்து கூறுகிறேன். எனவே, திரைப்படத்தால் சமுதாயமே சீரிழந்து வருகிறது என்பதைத் தாழ்மையுடன் வற்புறுத்திக் கூறி முடிக்கின்றேன்; வணக்கம்.

இங்ஙனம், எடுத்துக்கொண்ட பொருளைப் பற்றி ஒட்டியும் வெட்டியும், உரையாடல்களைப் பேசியோ எழுதியோ பழகிக்கொள்வது நன்று.

## 18. நூல் மதிப்புரை எழுதுதல்

மாணவர்கள் ஒரு நூலைப் பயின்ற பிறகுதான், அதற்கு மதிப்புரை எழுதத் தொடங்கவேண்டும். மதிப்புரை என்பது அந்நூலின் சிறப்பை விளக்குவதாகவும், குறைகளைத் தெரிவிப்பதாகவும் அமைதல் வேண்டும். பனுவல் மட்டுமல்லாது பார்த்த திரைக் காட்சி, நாடகக் காட்சி, பொருட்காட்சி, கண்காட்சி முதலியன குறித்தும் மதிப்புரை எழுதலாம். பொன்னை உறைத்து மாற்றுப் பார்ப்பதுபோல, நூலாகிய பொன்னை அறிவாகிய கல்லில் உறைத்துப் பார்த்து உண்மை யுரைப்பதுதான் மதிப்புரையாகும். இச் செயலை மாணவர்கள் நன்கு வளர்த்துக் கொளல் வேண்டும்.

### துணைப்பாட நூல் பற்றிய மதிப்புரை

நான், பள்ளியிறுதி வகுப்பிற்கு வைக்கப்பட்டுள்ள தமிழ்த் துணைப் பாட நூலான 'வீணை வித்தகன்' என்ற நூலைப் பயின்றேன். அந் நூல் சிறந்த தமிழ் நடையைக் கொண்டுள்ளது. அவ் வாசிரியர் அக் கதையை யாத்த புலவர் பற்றியும், அந் நூல் பற்றியும் முதலில் விளக்கிப் பின் கதைக்குச் செல்வது அவருடைய வரலாற்று உணர்வைக் காட்டுகிறது.

பெருங்கதையைப் பள்ளி மாணவர்களுக்கு ஏற்ற முறையில் சிறு கதையாக்கி, முக்கியப் பகுதிகள் அனைத்தும் இடம்பெறச் சுருக்கி, அமைத்திருப்பது அவரது தொகுத்துரைக்கும் தன்மைக்குச் சான்றாகும்.

ஒவ்வொரு காண்டத்தையும் தனித் தனியாகப் பிரித்துப் பகுதிகளாக்கி ஒவ்வொரு பகுதிக்குள்ளும்

சிறு தலைப்புக்களிட்டுக் கதையை வரைந்து செல்வது அந்நூலை அழகுபடுத்துகிறது.

யாவும் சிறப்புற அமைந்திருந்தாலும், கதை மாந்தரின் பண்பு நலன்கள் சிறப்புற விளக்கப்பட்டிருந்தாலும், வருணனைகள் விளக்கி வரையப்பட்டிருந்தாலும், நகையூட்டும் செய்திகள் இடையிடையே காணப்பட்டாலும், புத்தகத்தில் கதையின் சிறந்த பகுதிகளை விளக்கக்கூடிய படங்களை இடை இடையே சேர்க்காதது ஒரு குறையாகும். மேலும், அக் கதையின் மூலப் பாடல்களை மிகுதியாக மேற்கோளாகக் காட்டியிருக்கலாம்.

பொதுவாகப் பார்க்கின்றபொழுது, புத்தகம் நல்ல தகுதியுடையதாகவிருக்கிறது என்பது வெள்ளிடைமலை. ஆதலின், இதைப்போன்று தமிழ் இலக்கியங்களை அறிமுகப்படுத்துகின்ற நூல்கள் மாணவர்களிடையே பல்கிப் பெருகுவதாக.

## 19. செய்யுள் திரண்ட பொருள் எழுதுதல்

மாணவர்கள் ஒரு செய்தியைப் படித்தால் அதனை உளத்தமைக்க வேண்டும். 'நீ படித்தது என்ன' என்று கேட்டால், உடனே படித்ததை மொழிதல் வேண்டும். அதுபோலவே ஒரு செய்யுளைப் படிக்கின்றபொழுது அதன் கருத்துக்களைத் தொகுத்து மனத்தகத்தே நிறுத்தவேண்டும். அதனுடைய திரண்ட பொருளை எழுது என்றால், உடனே பாட்டின் பொருளைச் சுவை குன்றாது எழுத வேண்டும். செய்யுளின் திரண்ட பொருளை எழுதுவதற்கு முன், அதனை இருமுறை மும்முறை நன்கு மனமொன்றிப் படித்தல் வேண்டும். அருஞ்சொற்களாயின் அவற்றின் பொருளை 'அகர வரிசை' முதலியவற்றின் துணையாற் கண்டு, பின்பு,

பொருளெழுத முற்படல் வேண்டும், காட்டாக:— பாரதிதாசனின் பாட்லும், அதனுடைய திரண்ட் பொருளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இதனைக் காட்டாகக்கொண்டு பிற செய்யுள்களுக்கும் திரண்ட் பொருளெழுதிப் பழகுக.

"கனியிடை ஏறிய சுளையும்—முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும்—காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும்—தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும்—தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!"

"பழுத்த பழத்தின் சுளையையும், முற்றிய கரும்பின் சாற்றையும், குளிர் மலரில் அமைந்த தேனையும், காய்ச்சுகின்ற வெல்லப் பாகிடை அமைந்த சுவையையும், நல்ல பசு கொடுக்கின்ற பாலையும், தென்னை நல்குகின்ற குளிர்ந்த இளநீரையும் நான் இனிமையுடையன என்று கூறுவேன். ஆனால், தமிழை என்னுடலில் உறைகின்ற உயிர் என்பேன்; காணுங்கள்" என்கின்றார் பாவேந்தர் பாரதிதாசனார்.

## 20. கூட்டங்கள் - மாநாடுகளுக்கு வரவேற்புரை எழுதுதல்

மாநாடுகள் கூட்டப்பெறுகின்றபொழுதும், கூட்டம் கூடுகின்றபொழுதும் வருகை தந்துள்ள தலைவர், சொற்பொழிவாளர், பொதுமக்கள் ஆகிய யாவரையும்

வரவேற்க வேண்டுமென்பது மரபாகும். ஆதலின் வருகைதந்த பெருமக்களைச் சிறப்பித்து, அவர்கள் செய்த செயல்களைப் பாராட்டி, வரவேற்புரை எழுத வேண்டும். சிறு கூட்டங்களாயின் தலைவரை, வரவேற்று உரை நிகழ்த்துவர். ஊருக்குப் புதிதாக வந்த அறிஞருக்கு, ஆட்சி புரிவோருக்கு வரவேற்புரை எழுதிப் படித்தலுண்டு. பேரறிஞர்கள், பெரும் புலவர்கள், அமைச்சர்கள், போன்றோர் தலைமை வகிக்கின்ற பொழுது அவர்களுக்கு வரவேற்புரை எழுதிப்படிப்பர். வரவேற்புரை எழுதுகின்றபொழுது வரவேற்கப்படுகின்றவரின் பண்பு நலன், அறிவு, உரு, கல்வி, பொறுப்பு, தொண்டு முதலியவற்றைக் குறிப்பிட்டு வரவேற்புரை எழுதுதல் வேண்டும்.

உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி பி. ஏ., பி. டி. அவர்கள் 16-9-'67இல் காரைக்குடிக்கு வருகை தந்த பொழுது, அவருக்கு அளித்த வரவேற்பிதழ், கீழே கொடுக்கப் பெற்றுள்ளது. அதனைக் காட்டாகக் கொண்டு வரவேற்புரை எழுதிப் பழகுக.

## வரவேற்புரை

**குடிபுரந்தழுவும் நலங்கேள் அமைச்சே!**

பள்ளியாசிரியராகப் பணிபுரிந்து, பாராளுமன்றம் புகுந்த மாண்புமிக்க உள்ளாட்சித்துறை அமைச்சே! அல்லும் பகலும் ஒல்லும் வகை ஓவாது செல்லும் வாயெல்லாம் செவ்வினையாற்றும் செஞ்ஞாயிற்றின் ஒளிக் கதிரே! நும்மைக் கள்ளமில் வெள்ளைச் சிந்தை வாழ்த்தொலி எழுப்ப, காலைமுதல் கங்குல்தொடரக்

கைவினையாற்றும் கரம் கூப்ப, உழைப்போரை வணங்கும் தலைதாழ வணக்கம் கூறி வருக! வருக!! என வரவேற்கின்றோம்.

**இளமையும் புலமையும் இயைந்த ஏந்தலே!**

மதிநுட்பமும் நூல்நுட்பமும் இணைந்த அறிவும், இளமையும் புலமையும், ஒன்றார் அஞ்சும் உடலும், ஒருங்கே பெற்ற உருவும், ஆராய்ந்து, தெளிந்து, தேர்ந்த கல்வி வன்மையும் உடைய சாமியே! வள்ளுவப் பேராழியில் மூழ்கி வளஞ்சுரக்கும் கருத்து முத்துக்களைக் காசினிக்குக் காட்டுவிக்கும் தென்னகத்தின் தமிழ் முத்தே! எம்மவரின் சொத்தே! தூங்காமை துணைக்கொண்டு துணிவோடு தொண்டாற்றும் தொண்டரே! நும் வருகை கண்டு தளிர்க்கும் தமிழ் நெஞ்சங்கள் வருக! வருக!! என வரவேற்கின்றன.

**அறிஞருள் அறிஞர்வழி நின்றொழுகும் அண்ணலே!**

கழகத்தின் கடன்களைக் காலந் தவறாது கட்டிக் காத்து, மக்கள் தொண்டே மனிதத் தொண்டெனத் தொண்டுக் கொடியேந்தித் துன்புறுவோர் துயர் துடைக்கவந்த தூயோய்! பார்புரக்கும் மாரியென, பைந்தமிழ் நாடு புரக்கும் தமிழோர் உழவர் பண்பாட்டின் திருவுருவே! பகுத்தறிவின் ஒளிவிளக்காம் அறிஞருள் அறிஞர் அடிச்சுவட்டில் நின்றொழுகும் அருமை இளவலே! எங்கள் அமைச்சே! இவண்போந்து எங்கள் இடத்தை அணிசெய்தமை குறித்து நாங்கள் அகமகிழ்கிறோம். தங்கள் இனிய வருகைக்கு மீண்டும் உளமொன்றிய வணக்கம் கூறி வருக வருகவென வரவேற்கின்றோம்.

## 21. பிரிவுரை எழுதுதல்

உங்கள் ஊரில், பணியாற்றிய அலுவலர்கள், ஆசிரியர்கள், வெளியூருக்கு மாறிச் செல்லுகின்ற பொழுது, அல்லது வேலை உயர்வு கிடைத்துச் செல்லுகின்றபொழுது அவர்கள் பிரிவுக்கு வருந்திப் பிரிவாற்றுது எழுதுவதே பிரிவுரைக் கட்டுரையாகும். பிரிவுரை எழுதுகின்றபொழுது, பிரிந்து செல்லுகின்றவருடைய தொண்டு, பண்புநலன்கள் ஆகியவற்றை உளத்தில் கொண்டு எழுதவேண்டும்.

கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள பிரிவுரையிதழைக் காட்டாக நினைவிற்கொண்டு, பிரிவுரைக் கட்டுரைகள் எழுதிப் பழகுக.

காரைக்குடி மீ. சு. உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றிய திரு. தமிழண்ணல் எம். ஏ. அவர்கள், கல்லூரி விரிவுரையாளராக வேலையுயர்வு பெற்றுச் சென்றுழி, மாணவர்கள் படித்தளித்த பிரிவுரையிதழ்.

**உளங்கொள உணர்த்தும் ஒண்மதியோய்!**

மலர்ந்த முகத்துடன், மாசறு புன்னகையுடன் மாணவர்முன் தோன்றும் கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் வாய்க்கப்பெற்ற எங்கள் தமிழாசிரியப் பெருந்தகையோய்! கொள்வான் கொள்வகையறிந்து, மாணவர் உளங்கொளப் பயிற்றுவிக்கும் எம்முளமுறை தெய்வமே! நீவீர், கல்லூரிப் பேராசிரியராகப்போவது குறித்து நாங்கள் கழிபேருவகை கொள்கிறோம். ஆயினும், தங்கள் பிரிவால் தமிழ் நெஞ்சங்கள் வருந்துகின்றன! எமக்கு எழுத்தறிவிக்கும் இறைவரே! நல்லன கருதிப் பிரிவதால் இன்பமும்,

துன்பமும் கலந்த நிலையில் செல்க, சிறக்க என நெஞ்சார வாழ்த்துகிறோம்.

பாநலமும், நாநலமும், உரைவளமும்
ஒன்றிய உயரியோய்!

தாங்கள் வகுப்பறையில் நடத்திய பாடங்களை எண்ணுகின்றபொழுது, எங்கள் நெஞ்சம் மகிழ்கிறது. இனி எப்பொழுது வகுப்பறையில் தாங்கள் நடத்தும் பாடங்களைக் கேட்போம் என ஏங்கி நனிமிக வருந்து கிறோம். தங்கள் பாநலத்தைப் பாட்டரங்குகளிலும், நாநலத்தைச் சொற்போர்க்களங்களிலும், உரை வளத்தைத் தங்கள் பனுவல்களிலும் கண்டு, கேட்டு, உண்டு உயிர்த்த நாங்கள், உங்கள் பிரிவை எண்ணி நனிமிக வருந்துகிறோம். தங்கள் பிரிவைத் தமிழ் நெஞ்சங்கள் தாங்கா. அத் தமிழுள்ளங்கள் மகிழ்வுபெற இன்னுரை பகர்ந்து ஏகுக என மிகப் பணிவுடன் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

இன்னணம்,
செயலர்,
மாணவர் கழகம்.

## 22. வெள்ளி விழாக்காலப் புகழுரையும் மறுமொழியும்

வெள்ளி விழாவென்பது இருபத்தைந்தாண்டுகள் நிறைவெய்தியதைக் குறித்துக் கொண்டாடப் பெறுவதாகும். பொறுப்பில், அலுவலில் தொடர்ந்து இருபத்தைந்தாண்டுகளிருந்தால் வெள்ளிவிழா நடைபெறும். பொது நிலையங்கள் மேலே குறிப்பிட்ட காலம் முடியச்

செயற்படின் அவற்றிற்கும் வெள்ளிவிழா எடுக்கப் படும்.

காட்டாகத் தமிழ்ப் பேராசிரியராக இருபத்தைந் தாண்டுகள் பணியாற்றிய பண்டாரகர் திரு. வளவன் எம். ஏ., எம். ஒ. எல்., பிஎச்.டி. அவர்களுக்கு நடை பெற்ற வெள்ளி விழாவில் தமிழ் அறிஞரொருவர் புகழ்ந்த புகழுரையும், அதற்கு அவரின் மறுமொழி யும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைக்கொண்டு வெள்ளிவிழாப் புகழுரையும், மறுமொழியும் எவ்வாறு நிகழ்த்தப்பெறுகின்றன என அறிந்து கொள்க.

புகழுரை:

நாளும் நல்லிசையால் நற்றமிழ் பரப்பும் நால்வர் வழி வந்த நல்லோய்! தித்திக்கும் தேன் தமிழை எத்திக்கும் பரப்ப—தனித்தன்மையும் நனித் தொன்மை யும் பெற்ற நந்தம் தாய்மொழியை உலக அரங்கில் உலவவிட ஒல்லும் வாயெல்லாம் உழைக்கும் உயரி யோய்!

இருபத்தைந்தாண்டுக் காலம் தமிழ்ப் பேராசிரிய ராகப் பணிபுரிந்து தமிழ் நலங்காத்த தகையோய்! நும்முடைய உயர் பணியால் ஒண்டமிழின் ஒளி உலக முழுதும் வீசுகிறது. அவ்வொளி நோக்கி எப்புலத் தாரும் இப்புலம் வருகின்றனர்.

தமிழ்ப் பற்றுக் குன்றிக் கிடந்த காலத்து, 'விழி! எழு!! மொழியைப் பேணு' என ஆர்த்தனை. தாய்மொழி யைப் புறக்கணித்து வாழ்தல் முடியாதென மேடை தோறும் அஞ்சா நெஞ்சுடன், அரிமா நோக்குடன், தமிழிடம் காழ்ப்புக் கொண்டோரையும் கவரும்

வண்ணம் கன்னித் தமிழில் பேசினே. நும்முடைய பேச்சால் மேடைத் தமிழ் வாழ்வு பெற்றது.

இவ்வாறு நும்மால் மேடைத் தமிழோடு, உரை நடைத் தமிழும் வளர்க்கப்பெற்றது. நும்முடைய பேருழைப்பால் நூற்றுக்கணக்கான பனுவல்கள் தமிழர்க்குப் பெருமுதலாகக் கிடைத்துள்ளன. தங்களிடம் கல்வி கற்ற காரணத்தால் நூற்றுக்கணக்கான மாணவர்கள் தமிழ் காத்துத் தாயகம் பேணி வருகின்றனர்.

ஆதலின் மொழி வாழவும்,நாடு வளரவும் தாங்கள் இன்னும் பல்லாண்டு பேராசிரியப் பொறுப்பேற்றுப் பணிபுரிதல் வேண்டுமென எல்லாம் வல்ல இயற்கையை இறைஞ்சுகிறேன்.

மேல் மொழிந்த புகழுரையைக் கேட்ட, தமிழ்ப் பேராசிரியர் விடுத்த மறுமொழி.

என் உழுவலன்புடைக் கெழுதகை நண்பர் அவர்கள், தமிழின்பாலுளதணியாக் காதலால், தமிழால் வாழும் என்னைப் பலபடப் பாராட்டிப் புனைந்துரைத் தார்கள். அவர்கள் புகழ்ந்த புகழுரைகளுக்கு நான் எட்டுணையும் தகுதியுடையவனல்லேன்.

அவர்கள் கூறுகின்ற பொழுது என்னால் மேடைத் தமிழ் வளர்ந்ததென்றார்கள். அவ்வாறெல்லாமில்லை. எனக்கு முன்பே திரு. வி. க., மறைமலையடிகள், இராமலிங்க அடிகள், நாவலர், பாரதியார் போன்ற தமிழ்ப் பேரறிஞர்களால் மேடைத் தமிழ் வளர்க்கப் பட்டு வந்துள்ளது. அவர்களை அடியொற்றியே நான் சென்றுள்ளேன்.

மேலும் அவர்கள், என்னால் உரைநடைத் தமிழ் வளர்ந்ததென்றார்கள். இவ்வாறு கூறுவது என்பாலுள பெருமதிப்பையும், அன்பையும்தான் புலப்படுத்து கிறது. எனக்குமுன் உரைநடைத் தந்தை, உரைநடை வேந்தரெலாம் தமிழில் பல நூல்கள் யாத்துத் தமிழ் மண்ணில் உலவவிட்டிருக்கிறார்கள். அவர்களைப் பின் பற்றியே யான் சென்றுள்ளேன். முன்னோர் எவ்வழி சென்றுள்ளனரோ அவ்வழியிலே நான் சென்றுள் ளேன். நான் தமிழ்ப் பேராசிரியராக விருந்த காரணத் தால் என்னுடைய கடமையை முடிந்தவரை மன நிறை வுடன் செய்திருக்கிறேன் என்று கூறி, மேலும் எனக்கு வெள்ளிவிழா நடத்திச் சிறப்பித்த தமிழ் அறிஞர் கழகத்துக்கும் நன்றிகூறி அமர்கின்றேன்; வணக்கம்.

## 23. நாடகக் காட்சி அமைத்தல்

நீங்கள் பல நாடகங்களைப் பார்த்திருப்பீர்கள். அந் நாடகங்களின் காட்சிகளை நாடகவாசிரியர்கள் எவ் வாறு அமைத்துள்ளனரென உன்னிப்பார்த்தல் வேண் டும். நாடகக் காட்சிகளை அமைப்பதற்குமுன் கதையை நன்கு மனத்தில் கொண்டு, எவ்வெந் நாடகமாந்தரை அக்காட்சிக்குக் கொணர்தல் வேண்டும், எவ்வெவ்வாறு உரையாடல்களை அமைத்தல் வேண்டுமென எண்ணிப் பிறகு எழுதுதல் வேண்டும். நாடகக் காட்சிகள் நன்கு அமைந்தால்தான் நாடகம் சிறப்புறும். ஒவ்வொரு காட்சியிலும் காலம், இடம், அக்காட்சிக்குரிய மாந்தர் கள் பற்றிய விளக்கம் தெளிவாகவிருத்தல் வேண்டும். காட்டாக: பின்வரும் நாடகக் காட்சிகளைப் படித்து உணர்ந்து மனத்திற்கொண்டு, நாடகக் காட்சிகளை அமைத்துப் பழகுக.

# மானங் காத்த மன்னன்

## காட்சி—1

இடம்: சேரநாடு; கருவூரில் அரண்மனைக் கொலு மன்றம்.

காலம்: காலை.

நடர்: சேரமான் கணைக்கால் இரும்பொறை, அமைச்சர், பொய்கையார், மற்றும் பல புலவர்கள்.

* * *

**சேரமான்:** புலவர் பெருமக்களே! தங்கள் கூட்டுறவில் நான் அகங்களிக்கிறேன். எனக்கு இதனிலும் சிறந்த பேறு உண்டோ?

**அந்துவனார்:** மன்னா! வாழ்க நின் கொற்றம்! நின் வாய்மை, தூய்மை, நேர்மை முதலிய நற்பண்புகளால் நாடே நல்லொழுக்கத்திற் சிறந்திட, மக்கள் மனங்களித்து வாழ்கின்றனர். நின் பெருமையைப் பாடும் நாங்களன்றோ பேறு பெற்றவராவோம்!

**சேரமான்:** நான் கண்ணென மதித்துப் போற்றும் என் ஆசிரியப் பெருந்தகையின் இன்னருள் ஒளியால் நன்னெறிச் செல்லும் நல்லறிவு பெற்றேன். அவ்வொளியின் கீழ் வாழும் நானும் மக்களும் நல்லொழுக்கப் பாதையறிந்து நடப்பதில் வியப்பில்லை யன்றோ!

**பொய்கையார்:** அன்புடை மன்ன! நின்மொழி கேட்டு என் அகம் குளிர்கிறது. மகிழ்ச்சி! நினது அடக்கத்தை யாவரும் போற்றுவர் என்பதில் தடையில்லை.

அமைச்சர்: சிலர் அழுக்காறும் கொள்ளுகின்றனர்.

சேரமான்: என்ன ?

அமைச்சர்: தங்கள் புகழ் பெருகி வருவதைக் கண்டு சோழ மன்னர் அழுக்காறு கொள்வதாக ஒற்றர் வாயிலாக அறிகிறேன்.

பொய்கையார்: உலகம் பலவிதம். மன்ன ! இதைப் பொருட்படுத்த வேண்டாம். நாம் கலை மன்றம் செல்வோம். (அவை கலைகிறது.)

## காட்சி—2

இடம்: உறையூர்; சோழன் அரண்மனையில் கொலு மன்றம்.

காலம்: மாலை.

நடர்: சோழன் கோச்செங்கணான், அமைச்சர்கள், மதிவலன், கயமன், படைத் தலைவன் படிறன், ஏவலர் முதலியோர்.

* * *

சோழன்: அமைச்சரே ! நாட்டியம் நடைபெறலாமே !

கயமன்: கட்டளை !

(கயமன் ஏவலால் ஒருத்தி நாட்டிய மாடி வணக்கம் செலுத்திச்செல்கிறாள்.)

சோழன்: நன்று ! நன்று !! நாட்டியக் கலையின் மேன்மையே மேன்மை !

கயமன்: மிகவும் உயர்வான கலை !

மதிவலன்: சமண முனிவர்கள் இதை வெறுத்துக் கூறியிருக்கிறார்கள், வேந்தே !

படிறன்: கலையின் பெருமையை உணராதவர்கள் !

கயமன்: துறவிகளுக்குக் கலையின் உணர்வேது ?

சோழன்: துறவிகள் ஐம்புலனை அடக்கியவர்கள். ஆகையால், இன்பக் கலைகளில் நாட்டம் வைக்க விரும்புவதில்லை !

படிறன்: (நகைத்து) துறவிகள் இன்பத்தையே விரும்புவதில்லை !

மதிவலன்: நிலைத்த இன்பத்தையே நாடுகிறார்கள் !

சோழன்: நிறுத்தும் ! நாட்டியம் முதலிய கலைகளின் இன்பம் நிலையா இன்பமோ ? மிக நன்று ! பொய்கையார் என்ற புலவர் கூறியதுபோலல்லவா இருக்கிறது !

மதிவலன்: உண்மையைக் கூறினேன், மன்ன !

சோழன்: (சினந்து) உண்மை ! உலகம் உண்மையை எங்கே மதிக்கிறது ? போர் தொடுத்துப் பகைவரைக் கடிந்து நாட்டைக் காக்கும் நம்மைப் பாராட்டுகிறதா, உலகம் ? அரசாட்சியிற் கவலையின்றிப் புலவர்களுடன் கூடிக்கொண்டு உலகை மறந்து வாழும் சேரனையன்றோ புகழ்கிறது !

கயமன்: பைத்தியக்கார உலகம் !

மதிவலன்: உலகம் உண்மையை மதிக்கத் தவறியதில்லை !

சோழன் : போதும் நிறுத்தும் ! பொய்கையாரின் மாணக்கன் என்பதில் செருக்கடைகிறான் சேரன !

படிறன்: புலவர்களெல்லாம் சேரனைப் பொய்யாகப் புகழ்ந்து பாடி அவன் பெருமையைத் தெருவெல்

லாம் பரப்புகிறார்கள். அதை மெய்யென்று நம்பும் பேதை மக்கள் சேரனைப் போற்றுகிறார்கள் !

**கயமன்:** இதற்கெல்லாம் காரணம் பொய்கையார் !

**சோழன்:** ஆம்; அவர்தான் ! அமைச்சரே! நீர் சென்று அப் புலவரை எவ்வாறேனும் நமது அவைக்குக் கொண்டு வரவேண்டும். என்ன ?

**கயமன்:** இன்றே செல்கிறேன்.

(சோழன் எழுந்ததும் அவை கலைகிறது.)

## 24. மாணவர் மன்றங்களுக்கு விதிகள் அமைத்தல்

பள்ளியில் பயிலும் மாணவர்கள் ஒன்று சேர்ந்து மாணவர் மன்றம், அல்லது இலக்கியக் கழகம் என ஓர் அமைப்பு ஏற்படுத்துதல் மரபு. அம் மன்றங்கள் மாணவர்களின் கல்வி நலத்தை வளர்ப்பதற்காகவும், கல்வியை யொட்டிய கலைகளை வளர்ப்பதற்காகவும், பயன்படுகின்றன. மன்றமென ஒன்று இருக்குமானால், அதற்கெனச் சில விதிகளும் கட்டுப்பாடுகளும் இருத்தல்வேண்டும். இவ்வாறு இளமையிலேயே மன்றங்கள் அமைத்து, அவற்றிற்குரிய விதிகளும் அமைக்கப் பயிற்சி பெறுவது, பின்னர்ப் பொதுவாழ்க்கையில் பெரிதும் பயன்படும். இங்குக் கீழே தரப்பட்டுள்ள மன்ற விதிகளைப் பார்த்து, நீங்கள், உங்கள் மன்றங்களுக்கும் கழகங்களுக்கும் விதிகள் அமைத்துப் பழகுக

### மன்ற விதிகள்

1. **மன்றத்தில், பள்ளியில் பயிலும் அனைத்து மாணவரும் உறுப்பினராய் இருத்தல் வேண்டும்.**

2. மன்றத்திற்குத் தலைவர், துணைத் தலைவர், செயலர், துணைச் செயலர், பொருளாளர் தேர்ந்தெடுக்கப்பெறல் வேண்டும்.

3. மன்ற உறுப்பினர்களில் அறுவர் அல்லது எண்மர் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெறல் வேண்டும்.

4. கூட்டம் வாரத்திற்கு ஒருமுறை நடாத்தப் பெறல் வேண்டும். ஆசிரியரோ, மாணவரோ தலைவராக இருக்கலாம்.

5. திங்கள் ஒருமுறை வெளியிலிருந்து புலமை சான்ற அறிஞர்களைச் சொற்பொழிவாற்றக் கூட்டி வருதல் வேண்டும்.

6. மன்றத்தின் சார்பிலிருக்கும் படிப்பகத்திற்குக் கல்வி பற்றிய அனைத்து நாளிதழ்களும், வார இதழ்களும், திங்களிதழ்களும் வரவழைக்கப்படல் வேண்டும்.

7. மன்றக் கூட்டங்களில் எல்லா மாணவர்களும் பங்கு பெறல் வேண்டும்.

8. நூல்நிலையத்திற்கு வேண்டிய புத்தம் புதிய தமிழ் நூல்கள் வாங்கப்படல் வேண்டும்.

9. ஒவ்வொரு ஆண்டும் மாணவர் மன்ற ஆண்டு விழா நடத்தி, அவ்விழாவில் மாணவர்க்குப் பரிசு வழங்கல் வேண்டும்.

# மொழிப் பயிற்சி

## 1. வாக்கியம்—பலவகைகள்

சொற்கள் தொடர்ந்து நின்று, பொருள் விளக்கந் தருதலைத் தொடர்மொழி என்றும், சொற்றொடர் என்றும், வாக்கியம் என்றும் கூறுவர். அவ்வாக்கிய வகைகளைப் பற்றி இங்கே காண்போம்.

**அ. செய்தி வாக்கியம் :**

ஏதேனும் ஒரு செய்தியை வெளிப்படுத்தும் வாக்கியம் செய்தி வாக்கியம் எனப்படும்.

எ-டு: "தமிழக முதலமைச்சர், பட்டமளிப்பு விழாப் பேருரையைத் தமிழில் நிகழ்த்தினர்."

இஃது, ஒரு செய்தியைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதால், செய்தி வாக்கியம் எனப்படுகிறது.

**ஆ. வினு வாக்கியம் :**

வினைப் பொருள்பட வரும் தொடர், வினுவாக்கியம் எனப்படுகிறது.

எ-டு: வழியிற் கிடந்த இப் பொருள் யாருக்குரியது ?

இத்தொடர் வினைப் பொருள்பட்டு முடிதலின் வினு வாக்கியம் எனப்படுகிறது.

**இ. கட்டளை வாக்கியம்:**

ஏவல் வினை கொண்டு முடியும் வாக்கியம், கட்டளை வாக்கியம் எனப்படும்.

எ-டு: சமுதாயத்தில் சிறப்பிடம் பெறக்கருதினல்? முதற்கண் பொருளைத் தேடு.

"தேடு" என்ற ஏவல் வினையைக் கொண்டிருத்தலின் இது கட்டளை வாக்கியமாயிற்று.

**ஈ. உணர்ச்சி வாக்கியம் :**

மெய்ப்பாட்டை வெளிப்படுத்தும்வகையில் கூறப்படும் வாக்கியம் உணர்ச்சி வாக்கியம் எனப்படும்.

எ-டு: மானும் புலியும் ஒருதுறையில் நீர் அருந்தும் இந் நாட்டின் ஆட்சித் திறந்தான் என்னே !

'வியப்பு' என்னும் மெய்ப்பாடு விளங்க உரைக்கப்படுதலின், இஃது உணர்ச்சி வாக்கியமாயிற்று.

இனி இவ்வாக்கியங்களை அவற்றின் அமைப்புமுறைகொண்டு கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

**தனிவாக்கியம் :**

"புலவன் இயற்கையிலிருந்தே கவிதையைப் பெறுகிறான்."

இங்கு, ஓரெழுவாயும் ஒரு பயனிலையும் வர, வாக்கியம் முற்றுப் பெறுதலின், இது தனி வாக்கியம் எனப்படும்.

**தொடர் வாக்கியம்:**

"ஆசிரியர் வந்தார்; வினாக்களை விடுத்தார்; பாடத்தைத் தொடங்கினார்."

இவ்வெடுத்துக் காட்டில், ஆசிரியர் என்னும் எழுவாய் வந்தார், விடுத்தார், தொடங்கினார் என்னும் மூன்று பயனிலைகளைக் கொண்டுள்ளது. இத்தொடர் "ஆசிரியர் வந்து, வினாக்களை விடுத்துப் பாடத்தைத் தொடங்கினார்" என்று ஒரே தொடர்க்குரிய பொருளைத் தருதலின் தொடர் வாக்கியம் எனப்படும்.

**கலவை வாக்கியம் :**

செங்குட்டுவன், "பத்தினிக் கல்லைக் கங்கையிலே நீராட்டிக் கனகவிசயர் முடித்தலையி லேற்றிக் கொணர்க" என, ஆணையிட்டான்.

இவ்வெடுத்துக்காட்டில், "செங்குட்டுவன் ஆணையிட்டான்" என்பது தலைமை வாக்கியம். "பத்தினிக் கல்லைக் கங்கையிலே நீராட்டிக் கனகவிசயர் முடித்தலையிலேற்றிக் கொணர்க" என்பது சார்பு வாக்கியம். ஒரு தலைமை வாக்கியமும், சார்பு வாக்கியமும் கலந்து வருவது கலவை வாக்கியம் ஆகும்.

**செய்வினை வாக்கியம்:**

"திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்"

எழுவாய் செய்த செயலைப் பயனிலையாகக் கொண்டு முடியும் வாக்கியம், செய்வினை வாக்கியம் எனப்படும்.

**செயப்பாட்டுவினை வாக்கியம் :**

"திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது"

செயப்படு பொருள் எழுவாயாக மாற, பயனிலையில் 'படு' என்னும் துணைவினை புணர்க்கப்பட்டு, செய்து முடிந்ததுபோலக் கூறுதல், செயப்பாட்டு வினை வாக்கியமாகும்.

**உடன்பாட்டு வாக்கியம் :**

"நான் புலால் உணவை விரும்பி உண்டேன்"

இவ்வெடுத்துக்காட்டு 'நான்' என்னும் எழுவாயின் தொழில் நிகழ்ச்சியை 'உண்டேன்' என்னும் உடன்பாட்டு வினையால் வெளிப்படுத்தலின், இஃது உடன்பாட்டு வாக்கியம் ஆயிற்று.

**எதிர்மறை வாக்கியம்:**

**"நான் புலால் உணவை உண்ணேன்"**

இவ்வெடுத்துக்காட்டு, 'நான்'என்னும் எழுவாயின் தொழில் நிகழாமையை **'உண்ணேன்'** என்னும் எதிர் மறை வினையால் வெளிப்படுத்தலின், இஃது எதிர்மறை வாக்கியமாயிற்று.

**நேர்கூற்று வாக்கியம்:**

கைகேயி இராமனை நோக்கி, ''பதினான்கு ஆண்டுகள் காட்டிலே வாழ்க'' என்று கூறினாள். இவ்வெடுத்துக்காட்டில் கைகேயி வாய்மொழியை மாற்றாது அவ்வாறே கூறியிருத்தலின், இது நேர்கூற்று வாக்கியம் எனப்படும். கூறின செய்தி மேற்கோட்குறிக்குள் காட்டப்பட்டிருத்தலை நோக்குக.

**அயற் கூற்று:**

கைகேயி இராமனிடம் பதினான்கு ஆண்டுகள் காட்டிலே வாழுமாறு கூறினாள். இவ்வெடுத்துக் காட்டில் மேற்கோள் குறி நீக்கப்பட்டிருத்தலையும், தன்மையிடம் படர்க்கையிடமாக்கப்பட்டிருத்தலையும், 'வாழ்க' என்னும் முற்று 'வாழுமாறு' என எச்சமாக்கப் பட்டிருத்தலையும் நோக்குக. இஃது அயற் கூற்று எனப்படும்.

## 2. வாக்கிய அமைப்பு

### எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், எச்சங்கள் நிற்கும் முறை

தமிழ் மொழியில் எழுவாய் தொடக்கத்திலும், பயனிலை இறுதியிலும், செயப்படுபொருள் இடையிலும் அமைவதே பெருவழக்கு.

எ-டு:

| எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|
| **பொன்முடி** | **அறம்** | **செய்தான்.** |

இவை முறை மாறி வருதலும் உண்டு.

எ-டு: **திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்.**

இங்கே, செயப்படு பொருள் தொடக்கத்திலும், எழுவாய் இடையிலும், பயனிலை இறுதியிலும் நிற்றல் காண்க. இயற்றியவர் என்னும் வினையாலணையும் பெயர், திருவள்ளுவர் என்னும் பெயர்ப் பயனிலையைக் கொண்டு முடிந்தது.

வாக்கியத்தில் எழுவாய் வெளிப்பட்டு நிற்றலே பெருவழக்கு.

எ-டு: நான் செல்வேன்
நீ வருவாய்

சிறுபான்மையாக எழுவாய் வெளிப்படாது தொடர் அமைதலும் உண்டு. அதனைத் தோன்றா எழுவாய் என்பர்.

எ-டு: வந்தேன் (நான்—தோன்றா எழுவாய்)
வந்தாய் (நீ — ,, )

வாக்கியங்களில் வரும் பெயரெச்சங்கள் பெயருக்கு முன்னும், வினையெச்சங்கள் வினைக்கு முன்னும் வரும்.

எ-டு :

ஓடிந்த வாள் (பெயரெச்சத் தொடர்.)
நடந்து வந்தான் (வினையெச்சத் தொடர்)

செயப்படு பொருளின்றி வாக்கியம் அமைதல் உண்டு. சிறுபான்மையாக எழுவாய் இன்றியும் வாக்கியம் அமைதல் உண்டு. ஆனால், எவ்வகையினும் பயனிலையின்றி வாக்கியம் நிரம்புதல் இல்லை.

ஒரு கலவை வாக்கியத்தில், எழுவாய் அடைமொழிகள் எழுவாயைத் தழுவியும், செயப்படு பொருள் அடைமொழிகள் செயப்படுபொருளைத் தழுவியும், பயனிலை அடைமொழிகள் பயனிலையைத் தழுவியும் வரும்.

எ-டு:

"இந்தியப் பெருநிலத்தின் விடிவெள்ளியென வந்த காந்தியடிகள், மாந்தருக்கு இன்றியமையாத விடுதலை உணர்வை இடையறாது ஊட்டினார்."

"இந்தியப் பெருநிலத்தின் விடிவெள்ளியென வந்த" என்ற பகுதி, எழுவாயாகிய 'காந்தியடிகள்' என்பதைத் தழுவியும், 'இன்றியமையாத' என்பது 'விடுதலை உணர்வு' என்னும் செயப்படுபொருளைத் தழுவியும், 'இடையறாது' என்பது, 'ஊட்டினார்' என்னும் பயனிலையைத் தழுவியும் பொருள் விளக்கம் தருகின்றன.

## 3. ஒரே கருத்தைப் பல உருவ வாக்கியங்களில் வெளியிடுதல்

முன்னர்ப் பலவகை வாக்கியங்களைப் பார்த்தோம். ஒரு வாக்கியத்தையே பலவகை வாக்கியங்களாக மாற்றி அமைத்தலும் கூடும். வாக்கிய மாற்றப் பயிற்சியை மேற்கொள்ளுதல், மொழிநலத் தேர்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்படுவதொன்றாகும். கீழ் வரும் வாக்கியத்தை உற்றுணர்க.

"உள்ளத்தை உருக்குகின்ற சிறந்த பாடல்களை யாரும் மறவார்"

1. இஃது ஓர் எழுவாயையும், ஒரு பயனிலையையும் கொண்டிருத்தலின் தனி வாக்கியம் என்று கூறப்படும்.

2. இஃது ஓர் செய்தியை வெளிப்படுத்தி நிற்றலின் செய்தி வாக்கியம் எனவும் கூறப்படும்.

3. வினு வடியாகப் பிறந்த பெயராகிய 'யாரும்' என்பதன் வினையாகிய 'மறவார்' என்பதைப் பயனிலையாகக் கொண்டிருத்தலின் செய்வினை வாக்கியம் என்றும் கூறலாம்.

4. இவ்வாக்கியம் எதிர்மறை வினையைக்கொண்டு முடிந்திருத்தலின், எதிர்மறை வாக்கியம் என்றும் கூறலாம்.

இவ் வாக்கியத்தை வேறு பல வாக்கியங்களாகவும் மாற்றியமைக்கலாம்.

1. உள்ளத்தை உருக்குவன சிறந்த பாடல்கள்;
அவற்றை யாரும் மறவார் (தொடர்வாக்கியம்)

2. உள்ளத்தை உருக்குகின்ற சிறந்த பாடல்களாயின், அவற்றை யாரும் மறவார். (கலவை வாக்கியம்)

3, உள்ளத்தை உருக்குகின்ற சிறந்த பாடல்கள்,
யாராலும் மறக்கப்படா.
(செயப்பாட்டு வினை வாக்கியம்)

4. உள்ளத்தை உருக்காத சிறப்பற்ற பாடல்களை
யாரும் மறப்பர். (உடன்பாட்டு வாக்கியம்)

5. விபுலானந்தர் "உள்ளத்தை உருக்குகின்ற சிறந்த பாடல்களை யாரும் மறவார்" என்று கூறுகின்றார்.
(நேர்கூற்று வாக்கியம்)

6. உள்ளத்தை உருக்குகின்ற சிறந்த பாட்டல்களை யாரும் மறவாரென்பதாக விபுலானந்தர் கூறுகின்றார். (அயற்கூற்று வாக்கியம்)

7. உள்ளத்தை உருக்குகின்ற சிறந்த பாடல்களை யார்தாம் மறப்பர்? (வினு வாக்கியம்)

8. உள்ளத்தை உருக்காத, சிறப்பற்ற பாடல்களாயின் யாவரும் மறக்கட்டும். (கட்டளை வாக்கியம்)

9. உள்ளத்தை உருக்குகின்ற சிறந்த பாடல்களை யாரும் மறப்பரோ! (உணர்ச்சி வாக்கியம்)

## 4. பந்தியமைப்பு (விரிவாக)

பந்தி என்பது கட்டுரையின் ஒருறுப்பாகும். பந்தியானது பல தொடர்மொழிகளால் ஆக்கப்பட்டிருப்பினும், ஒரு கருத்து அல்லது குறிப்பை விரித்துரைப்பதாகவே அமையும். கருத்து அல்லது குறிப்பை உய்த்துணரும் வகையில் கரந்து வையாது வெளிப்படையாகத் தாங்கி நிற்றல் சிறப்புடையதாகும். பந்தியின் கருத்து அல்லது குறிப்பு, பந்தியின் எப்பகுதியில் வேண்டுமாயினும் நிற்கலாம். எனினும், தொடக்கத்திலேயே நிற்றல் கற்பார்க்கு இனிமையைப் பயக்கும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பல கருத்துக்களை அல்லது குறிப்புக்களை, ஒரே பந்தியில் திணித்து வைத்தல் கட்டுரையின் அழகிற்கும், இனிமைக்கும் ஊறு விளைவிக்கும்.

ஒரு பந்தியை முடித்து, அடுத்த பந்தியைத் தொடங்கும்பொழுது, பொருள் நலங்கருதியும் எழில்

நலங்கருதியும், தக்க இடைவெளி விட்டும், இடப் புறத்தில் சிறிது இடம் விட்டும் எழுதத் தொடங்குதல் வேண்டும்.

நும் பாடப் புத்தகத்தில் உள்ள பத்தியை நோக்கி இதனைத் தேர்க. எடுத்துக்காட்டாகக் கீழ்வரும் பத்திகளையும் நோக்குக :

"முன்பு இசைக் கலையின் உயிர் நாடியாக 'யாழ்' என்னும் கருவி திகழ்ந்தது; அக் கருவியை இயக்குவதிலே திறமை மிக்கதாய்ப் "பாணர் குடி" எனும் கலைஞர் பரம்பரை ஒன்று வாழ்ந்தது. காலவெள்ளத்தில் படிப்படியாக இப் பாணர் குலமும், யாழும், தமிழ்ப்பண் மரபும் மறைந்து போயின. 'நமது கலையிழப்பு' வரலாற்றில், உள்ளம் உருக்கும் உச்ச நிலையில் நிற்பது 'யாழ் இழப்பு, வரலாறேயாகும்."

—தமிழண்ணல்.

இப் பத்தியின் கருத்து அல்லது குறிப்பு என்று கூறப்படும் "யாழ்" பத்தியின் தொடக்கத்திலேயே வெளிப்பட்டு நிற்றலை நோக்குக.

"மிகப் பழங்காலத்தில் வாழ்ந்த தமிழன், விலங்குகளின் தோலை மரங்களிற் காயப்போட்டு வைத்தான். அவற்றில் உலர்ந்த குச்சிகள் உராயும்போதெல்லாம் ஓர் ஒலி எழக் கேட்டான். அதைப்பற்றி எண்ணினான்; தோற் கருவிகள் தோன்றின."

—தமிழண்ணல்.

இப்பத்தியில் "தோற் கருவிகள்" என்னும் குறிப்பு இறுதியில் நிற்றலை நோக்குக.

## 5. நடை (விரிவாக)

நடை என்றால் ஒழுக்கம் எனப்படும். சொற்கள் பொருளை விளக்க ஒழுங்காக அமைந்து செல்லுதலை நடை என்றனர். சொற்கள் ஒழுங்கு பெற அமையாது முரணி நிற்பின் கருத்துக் குழப்பம் ஏற்படும். ஆதலின் கருத்துத் தெளிவிற்கும், அழகுபட மொழிதற்கும் சொற்கள் ஒழுங்குபெற அமைதல் இன்றியமையாது வேண்டப்படுகின்றது. இதனையே நடை என்கிறோம்.

நம் தமிழ்மொழிக்கண் விளங்குகின்ற நடைகள் பலவாம். அவற்றை நெறிப்படுத்திக் கூறின் ஆற்றொழுக்கு நடை, மணிபவள நடை, தனித் தமிழ் நடை, செந்தமிழ் நடை, கொடுந் தமிழ் நடை, கொச்சை நடை, களவியல்நடை, செய்யுள் நடை, இலக்கிய நடை, தருக்க நடை, கலப்பு நடை எனப் பலவகையாய் விரியும்.

ஆற்றொழுக்கு நடை: ஆறானது எவ்வாறு தங்கு தடையின்றி ஒரே சீராக ஓடுகின்றதோ; அஃதே போன்று சொற்களும் தங்குதடையின்றி ஒரே சீராகச் செல்லுமாறு உரைக்கப்படுவது ஆற்றொழுக்கு நடையாகும்.

எடுத்துக் காட்டு :

"கையில் வில்லை எடுத்துக் கொண்டு, காட்டில் வாழும் விலங்குகளை வேட்டையாடினான் தமிழன். அவ் விலங்குகளைக் குறிபார்த்து அம்பைத் தொடுத்து, நாணேற்றி விடும்போதெல்லாம் அந்நாண் ஓர் இனிய ஓசையை எழுப்பக் கேட்டான்; மனம் மகிழ்ந்தான்; வில்லிற் பூட்டிய நரம்பினால் கொலை முடிப்பதை விட்டு, இசை வடிப்பதை ஆராய்ந்தான். வில் யாழும், யாழ் வகைகளும், நரம்புக் கருவிகளும் உருவாயின."

"யாழ் எங்கே"—தமிழண்ணல்.

மணிபவள நடை : (மணிப்ரவாள நடை)

மணியும் பவளமும் விரவத் தொடுத்த ஆரம் போல, வடசொல்லும் தென்மொழியும் விரவத் தொடுத்த நடை மணிபவள நடையாகும்.

"ஞாயிற்றுக்கிழமை அஸ்வதி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபதினத்தில், என் சிரேஷ்ட குமாரன் விஜயனுக்குப் பிரம்மோபதேசம் செய்வதாய் நிச்சயிக்கப்பட்டு, மேற்படி முகூர்த்தம் எனது கிருகத்தில் நடக்கிறபடியால், தாங்கள் பந்து மித்திரர்களுடன் வந்திருந்து குழந்தையை ஆசீர்வதிக்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
சௌம்யநாராயணன்.

தனித் தமிழ் நடை: இலக்கண அமைப்பினின்றும் வழுவாது, வேற்றுச் சொல் விரவாது, தனித் தமிழ்ச் சொல்லே புணர்த்து எழுதப்படுவது தனித் தமிழ் நடையாகும்.

"மக்கள் வாழ்நாள் என்கின்ற நீரோடையிலே நினைவுகளான கலங்கற் பெருநீர் பெருகிச் செல்லும் போது, உலக இயற்கை என்னும் மலைக் குகைகளிலே அரித்தெடுத்துவந்த அருங்கருத்துக்களான பொற்றுகள், இடையிடையே ஆழ்ந்து அவ்வோடையின் அடி நிலத்தே சிதர்ந்து மின்னிக் கிடப்ப, நல்லிசைப் புலவன் என்னும் அரிப்புக்காரன் மிக விழைந்து முயன்று அப்பொற் சிதர்களை எல்லாம் ஒன்றுய்ப் பொறுக்கி எடுத்துத் தன் மதிநுட்ப நெருப்பிலிட்டு உருக்கிப் பசும்பொற் பிண்டமாகத் தருவதே பாட்டு என்று அறிதல் வேண்டும்."

—மறைமலையடிகள்.

செந்தமிழ் நடை: வேற்றுச் சொல் விரவாது, தமிழ்ச் சொற்களால் ஓசை நயம்பட எழுதுவது செந்தமிழ் நடையாம்.

''அப்போது சேய்மையில் ஒல்லென ஓர் ஒலி கிளம்பியது. அதன் தன்மையை மனத்தாற் கருது முன்னரே கடுங்காற்று வேகமாய்ச் சுழன்று வீசத் தலைப்பட்டது. விண்ணுக்கடங்காமல் வெற்புக்கடங்காமல் வீசிய புயல்காற்றின் வெம்மையால் மலைப் பொருள்கள் எல்லாம் மயங்கிச் சுழன்றன. அக்கடும் புயலின் வேகத்திற்கு ஆற்ருது மலையே நிலைகுலைந்தது.''

—ரா. பி. சேதுப் பிள்ளை.

கொடுந்தமிழ் நடை: செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும் வழங்குஞ் சொற்களால் தொடுக்கப் படுவது. இது பெருவழக்காயில்லாமையானும், சிறப்பின்மையானும், மாணுக்கர்க்கு இந்நடை வேண்டாததாகலானும் எடுத்துக்காட்டுத் தரப்படவில்லை.

கொச்சை நடை: இலக்கண அமைப்பின்றி இழி வழக்குகள் புணர்த்து, எல்லாச் சொல்லும் விரவிவர எழுதப்படுவது. இது மாணுக்கரால் வெறுத்தொதுக்கப்பட வேண்டியதாகும்.

''காலம்பறவே கண்ணுல வூட்டுக்குப் போனுன். நாஷ்டாவை முடிச்சுக்கிட்டு பேஷா ஒரு தூக்கம் போட்டான். மறுபடியும் மத்தியானச் சோறு துன்னப் பொறப்பட்டுப் பூட்டான்.''

களவியல் நடை: ''அக்காலத்துப் பாண்டிய நாடு பன்னீராண்டு வற்கடம் சென்றது. செல்ல, பசி கடுகுதலும், அரசன் சிட்டரை எல்லாம் கூவி, 'வம்மின்;

யான் உங்களைப் புரந்தரகில்லேன்; என்தேயம் பெரி தும் வருந்துகின்றது; நீயிர் போய் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயினஞான்று என்னை உள்ளி வம் மின், என்ருன்."

—இறையனுர் களவியல்.

செய்யுள் நடை: இஃது எதுகைத் தொடை அமையவும், அருஞ்சொற்கள் புணர்த்தும், புணர்ச்சி இலக்கணம் வழுவாதும் எழுதப்படுவது.

"வடவாரிய மன்னராங்கோர் மடவரலை மாலைசூட்டி யுடனுறைந்த விருக்கை தன்னி லொன்றுமொழி நகை யினராய்த் தென்றமிழ்நாடாளும் வேந்தர் செருவேட் டுப் புகன்றெழுந்து மின்றவழு மிமய நெற்றியில் விளங்கு விற்புலி கயல் பொறித்தநாளெம்போலும் முடிமன்ன ரீங்கில்லை போலும் என்ற வார்த்தை!"

(உரைப்பாட்டு மடை)—சிலப்பதிகாரம்.

இலக்கிய நடை: இஃது அருஞ்சொற் புணர்த் தும், புணரியல் வழுவாதும் எழுதப்படுவதாகும்.

"ஒழுக்கங்களை வழுவாதொழுக அறம் வளரும், அறம் வளரப் பாவந்தேயும், பாவந்தேய அறியாமை நீங்கும், அறியாமை நீங்க நித்தவநித்தங்களது வேறுபாட்டுணர்வும், அழிதன் மாலையவாகிய இம்மை மறுமை யின்பங்களி னுவர்ப்பும், பிறவித் துன்பங் களும் தோன்றும், அவை தோன்ற வீட்டின் கணுசை யுண்டாம், அஃதுண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய பயனின் முயற்சிகளெல்லாம் நீங்கி,வீட்டிற்குக் காரண மாகிய யோக முயற்சியுண்டாம், அஃதுண்டாக மெய் யுணர்வு பிறந்து புறப்பற்ருகிய எனதென்பதும் அகப்பற்ருகிய யானென்பதும் விடும், ஆகலான் இவ்

விரண்டு பற்றையும் இம் முறையே யுவர்த்துவிடுத லெனக் கொள்க.''.

—பரிமேலழகர்.

தருக்க நடை: வினுவிடை அமைப்பில் தொடரும் நடையைத் தருக்க நடை என்பர். கற்பார் மனத்தில் நன்கு பதிய இந்நடை சாலத் துணை புரியும்.

" 'உலகம் ஒருகுலமாதல் வேண்டும்' என்று பேசுதல் எளிது; எழுதுதல் எளிது. பேச்சும் எழுத்தும் செயலாதல் வேண்டும். செயலை எழுப்பவல்ல கருவி உளதா? உளது. அஃது எது? அஃது அன்பு. உலகை ஒருகுல மாக்குதற்கென்று அன்பு இயற்கையில் அமைந்துள்ளது. அன்பு யாண்டு இல்லை? அஃது யாண்டும் உளது. அவ்வன்புண்மைக்கு அறிகுறி என்னை? வளர்ச்சி. வளர்ச்சியற்ற உலகம் உண்டு கொல்? இல்லை.''

—திரு. வி. க.

மேலும், ஒரு பொருள்பற்றி இருவர் உரையாடல் நிகழ்த்துவதாக எழுதுவதும் தருக்க நடையே யாகும்.

கலப்பு நடை: பல மொழிச் சொற்களையும் கலந்து எழுதுவது கலப்பு நடை எனப்படும். இதுவும் மாணக்கரால் வெறுத்தொதுக்கப்பட வேண்டியதே.

''அலமாரியில் இருந்த பணத்தைத் திருடியதற்காகக் கைதியாக்கப்பட்டுக் குற்றம் ருஜுவாக்கப்பட்டு அதனுல் கோர்ட்டாராலே ஒறுக்கப்பட்டவன், சில நாளில் ஜெயில் சம்பியை வளைத்து வெளியேறித் தப்பி விட்டான். ஆனுல், சிறிது காலத்திற்குப் பிறகு அவன் காயலாக் கிடந்து மரணமுற்ருன்.''

| | |
|---|---|
| அலமாரி, ஜன்னல் | போர்த்துக்கீசியச்சொற்கள் |
| கைதி | உருதுச் சொல் |
| ருஜு | ,, |
| கோர்ட்டார் | ஆங்கிலம் |
| மரணம் | வடமொழி |
| காயல்–(காய்ச்சல்) | இழிவழக்கு |

பலமொழிச் சொற்களும், இழி வழக்கும் கலந்து எழுதப்படுவதே கலப்பு நடை. இதனை மாணக்கர் கட்டாயம் தவிர்த்தல் வேண்டும்.

## 6. வழூஉச் சொற்களும் திருத்தமும்

வீட்டிலும் வெளியிலும் பேசப்படுகின்ற கொச்சை மொழிகளும், இழி வழக்குக்களும் மெல்ல மெல்ல எழுத்திலும் இடம்பெறத் தொடங்கிவிடுகின்றன. ஆதலின் தொடக்கத்திலேயே இச்சொற்களைப் பேச்சிலும் எழுத்திலும் விலக்கவேண்டுவது இன்றியமையாததாகும். அதற்குத் துணையாக ஈண்டுச் சில வழூஉச் சொற்களும் அவற்றின் திருத்தங்களும் தரப்பட்டுள்ளன. வழூஉச் சொற்களை யாண்டுக் கேட்பினும் உடனே குறித்துக்கொண்டு ஆசிரியரை அண்மி அச்சொல்லின் உண்மை வடிவத்தை அறிய முயல்க.

| வழூஉச் சொற்கள் | திருத்தம் |
|---|---|
| அண்ணாக் கயிறு | அரைஞாண் கயிறு |
| அமக்களம் | அமர்க்களம் |
| ஆச்சு | ஆயிற்று |
| இடது பக்கம் | இடப்பக்கம் |
| வலது பக்கம் | வலப்பக்கம் |
| உடமை | உடைமை |

| | |
|---|---|
| தாவாரம் | தாழ்வாரம் |
| செகப்பு | சிவப்பு |
| சேதி | செய்தி |
| நொங்கு | நுங்கு |
| வவுறு | வயிறு |
| மானம் பாத்த பூமி | வானம் பார்த்த பூமி |
| வெக்கம் | வெட்கம் |
| அப்பரம் | அப்புறம் |
| உசிரு | உயிர் |
| சிலவு | செலவு |
| தலகாணி | தலையணை |
| நாத்து | நாற்று |

## 7. விலக்குதற்குரிய இழி வழக்குக்கள்

அத்தைக்காரி, அண்ணாச்சி, ஆம்படையான், ஆம்பிளைப்பிள்ளை, வென்னித்தண்ணி, கதைக்குறான், ஜல்ப் பிடிச்சிருக்கு, இஸ்துக்கினு போறான், கேட்டு வாசல், டபாய்க்கிறான், பேஜாரு, ஷாப்புக்கடை, ஒட்லவுழுந்து கெட, நாமஞ் சாத்துறான், வெளுத்து வாங்கிட்டான், சாயம் வெளுத்துப் போச்சு, டிமிக்கி அடிச்சான், டேக்கா கொடுத்தான், வாலாட்றான், டம்பாச்சாரி.

இவை போல்வனவாகிய இழிவழக்குக்களை மாணாக்கர், பேச்சிலும் எழுத்திலும் விலக்குதல் வேண்டும்.

## 8. நிறுத்தற்குறிப் பயிற்சிகள்

முன் வகுப்புக்களில் காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, முற்றுப்புள்ளி, வினாக்குறி, உணர்ச்சிக்குறி இரட்டை மேற்கோட் குறிகள், ஒற்றை மேற்கோட் குறிகள், பிறைக்கோடு, வரலாற்றுக் குறி, கீழ்க்கோடி

டல், இடைப்பிறவைப்புக் குறி முதலிய குறியீடுகளை வாக்கியங்களில் எவ்வாறு பயன்படுத்துவது என்பதைத் தெரிந்து கொண்டிருப்பீர்கள். இப்பொழுது மேலும் இரண்டு குறியீடுகளைப்பற்றி அறிந்து கொள்க.

1. நாம் தொடர்ந்து எழுதிச் செல்லும்போது ஏதேனும் விடுபட்டால், அதனை எந்த இடத்தில் விடுபட்டதோ அந்த இடத்தில் வரிப்பிளந்து மேலே எழுதுகிறோம். அவ்வாறு எழுதும்போது "இதையும் சேர்த்துப் படியுங்கள்" என்பதற்கு அடையாளமாக ∧ இவ்வாறு ஒரு குறியீட்டைப் பயன்படுத்துகிறோம். இதனைச் செருகற்குறி என்பர்.

2. மேற்கோளாகக் காட்டும் ஒரு தொடரில் வேண்டாத பகுதிகள் இருந்தால் அதனை நீக்கி விடுகிறோம். அவ்வாறு நீக்கும்பொழுது சொற்கள் நின்ற பகுதியில் '.........' இவ்வாறு தொடர் புள்ளிகள் இட்டோ '★★★' இவ்வாறு உடுக்குறிகளிட்டோ காட்டுகிறோம். விடுபட்ட சொற்களை இக்குறியீடுகள் காட்டுவதால், இவை விடுபாட்டுக் குறிகள் எனப்படும்.

## 9. மரபு

முன்னோர்கள் எப்பொருளை எச்சொல்லாற் குறித்தார்களோ, அப்பொருளை அச்சொல்லாற் குறிப்பதே மரபாகும். அவ்வாறு கூறாது பிறவழியிற் கூறின் மரபு வழுவாம். கீழே சில மரபு வழுக்களும் அவற்றிற்கான திருத்தங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. மாணக்கர் கற்று மரபு வழியில் நிற்பாராக.

| மரபு வழு | திருத்தம் |
|---|---|
| ஆட்டுச் சாணம் | ஆட்டுப் பிழுக்கை |
| யானைச் சாணம் | யானை இலண்டம் |

| | |
|---|---|
| கரும்புத் தோப்பு | கரும்புத் தோட்டம் |
| கரும்பிலை | கரும்புத் தோகை |
| பாட்டுச் சொல் | பாட்டுப்பாடு |
| புலி கத்தும் | புலி முழங்கும் |
| யானை உறுமும் | யானை பிளிறும் |
| தேன் உண் | தேன் நக்கு |
| நீர் உண் | நீர் பருகு |
| மயில் கூவும் | மயில் அகவும் |
| நாய் சத்தமிடும் | நாய் குரைக்கும் |
| நரி குரைக்கும் | நரி ஊளையிடும் |
| காக்கா கத்தியது | காக்கை கரைந்தது |
| குயில் கரைந்தது | குயில் கூவியது |
| யானை ஓட்டி | யானைப்பாகன் |
| சந்தனம் அணிந்தான் | சந்தனம் பூசினன் |
| பால் சாப்பிடு | பால் குடி |
| மாடு புல்லுண்ணும் | மாடு புல்மேயும் |

## 10. உவமைகளும் பழமொழிகளும் வைத்தெழுதுதல்.

உவமைகள் : அறிந்ததைக் கொண்டு அறியாததை விளக்குவதற்கும், அழகுபடச் சொல்வதற்கும் நம் முன்னோர் உவமைகளைப் பயன்படுத்தி வந்தனர். கீழே சில உவமைத் தொடர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை நும் சொந்த வாக்கியங்களில் அமைத்துப் பயில்க.

அத்தி பூத்தாற் போல
அன்றலர்ந்த மலர் போல
அலை ஓய்ந்த கடல் போல
அழலில் இட்ட மெழுகு போல

ஆலைவாய்ப்பட்ட கரும்பு போல
இலவு காத்த கிளி போல
இருதலைக் கொள்ளி எறும்பு போல
உள்ளங்கை நெல்லிக் கனி போல
ஊமை கண்ட கனவு போல
எரிகின்ற தீயில் எண்ணெய் வார்த்தாற் போல
கதிரவனைக் கண்ட தாமரை போல
கடன்பட்டார் நெஞ்சம் போல
குடத்துள் இட்ட விளக்குப் போல
தாமரை இலைத் தண்ணீர் போல
பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல
வெந்த புண்ணிலே வேல் நுழைந்தாற் போல

பழமொழிகள் : நம் முன்னோர் தம் வாழ்நாளிற் கண்ட பல பேருண்மைகளைத் திட்ப நுட்பம் செறிந்த சிறு தொடர்களால் கூறியுள்ளனர். அவற்றை இற்றை நாளில் பழமொழிகள் எனவழைக்கிறோம். பேச்சிலும், எழுத்திலும் பழமொழிகளைப் பயன்படுத்துதல் அழகும், செறிவும் தருதலின், கீழே தரப்பட்டுள்ள பழமொழிகளை மாணாக்கர் பயன்படுத்தி நலம் பெறுவாராக.

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாம்.
அகத்தின் அழகு முகத்திலே தெரியும்.
ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
ஆயிரம் காக்கைக்கு ஒரு கல்.
ஆனைக்கும் அடி சறுக்கும்.
இக்கரைக்கு அக்கரை பச்சை,
உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு.
கரும்பு தின்னக் கூலி வேண்டுமா?

குறை குடம் ததும்பும்; நிறை குடம் ததும்பாது
கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை.
கைக்கெட்டியது வாய்க்கெட்ட வில்லை.
பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்.
பதருத காரியம் சிதருது.
பழகப் பழகப் பாலும் புளிக்கும்.
பொறுத்தார் பூமி யாள்வார்.
மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

## 11. உவமை உருவக மாற்றம்

அறிந்த பொருளைக் கொண்டு அறியாத பொருளை உணர்த்தலே உவமையின் நோக்கம் என்று குறிப்பிட்டோம். இவ்வாறு வரும் உவமைகளை உருவகங்களாகவும் மாற்றிக் கூறலாம். ஆதலின் உவமை, உருவகம் ஆகிய இரண்டின் இயல்புகளையும், அவற்றை மாற்றும் முறைகளையும் பற்றிக் காண்போம்.

"தாமரை முகம்" இது 'தாமரை போன்ற(மலர்ந்த) முகம்' என விரியும். இத்தொடர் உவமானம், உவமேயம், உவம உருபு, பொதுத்தன்மை என்ற நான்கு உறுப்புக்களைக் கொண்டுள்ளது. இங்கே, தாமரை: உவமானம்; முகம்: உவமேயம்; போன்ற: இரண்டையும் ஒப்பிடும் உவம உருபு; மலர்ச்சி: இரண்டிற்கும் உள்ள பொதுத்தன்மை ஆகும். உவமத் தொடரில் உவமானம் முன்னும், உவமேயம் பின்னுமாக வரும்.

உவமையை உருவகமாக மாற்றல்:

இவ்வுவமைத் தொடரை உருவகத் தொடராக மாற்ற வேண்டுமானல், உவம உருபாகிய "போன்ற"

என்ற சொல்லை நீக்கி, உவமையாகிய தாமரையின் தன்மையைப் பொருளாகிய முகத்தின் மீது ஏற்றி "முகத்தாமரை" என மொழிதல் வேண்டும். இவ்வாறு வரும் இத்தொடரை விரித்தால், "ஆகிய" என்னும் பண்புருபு மறைந்து நிற்பது புலனாகும். இவ்வாறு மாற்றும்பொழுது உவமேயம் முன்னும், உவமானம் பின்னுமாக அமைதல் வேண்டும்.

உருவகத்தை உவமையாக மாற்றல்: "தமிழ்த் தேன்" இஃது உருவகம். இதனை உவமைத் தொடராக மாற்றப் பின்னுள்ள உவமையாகிய "தேனை" முன்னர்க்கொண்டு வந்தும், முன்னுள்ள உவமேயமாகிய "தமிழை" இறுதியில் வைத்தும், இடையில் "போன்ற" என்ற உவம உருபை விரித்தும் எழுதின் "தேன்போன்ற (இனிய) தமிழ்" என உவமைத் தொடராக மாறும்.

கீழே தரப்பட்டுள்ள உவமைகளையும், உருவகங்களையும் பிரித்தெடுத்து மாற்றி எழுதிப் பயில்க.

பவளவாய், முகமதி, பாதமலர், பால்போலும் இன்சொல்.

## 12. வல்லெழுத்து மிகும் இடங்களும் மிகா இடங்களும் (விரிவாக)

தமிழ் மொழியில் புணர்ச்சியிலக்கணம் பொருட் செறிவுமிக்கது. ஆதலின் அதனை நன்கு விளங்கிக் கற்று எழுதப் புகுதல் மாணாக்கர் கடனாம். எனவே ஈண்டு வல்லெழுத்து மிகும் இடங்களும், மிகா இடங்களும் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. மாணாக்கர் கற்றுப் பயன் பெறுவாராக.

1. அ, இ, உ என்னும் சுட்டெழுத்துக்களின் முன்னும் 'எ' என்னும் வினு எழுத்தின் முன்னும் வருமொழியில் வல்லினம் வந்தால் மிகும்.

எ-டு: அ + கோயில் = அக்கோயில்
இ + பள்ளி = இப்பள்ளி
உ + தென்னை = உத்தென்னை
எ + சார்பு = எச்சார்பு

2. சுட்டெழுத்துக்களின் திரிபுகளாகிய 'அந்த', 'இந்த' என்பவற்றின் முன்னும், 'எ' என்னும் வினுவெழுத்தின் திரிபாகிய 'எந்த' என்பதன் முன்னும் வல்லினம் மிகும்.

எ-டு: அந்த + கொடி = அந்தக் கொடி
இந்த + சோலை = இந்தச் சோலை
எந்த + பாதை = எந்தப் பாதை

3. அப்படி, இப்படி, எப்படி என்பவற்றின் முன்னும் வல்லினம் மிகும்.

எ-டு: அப்படி + பேசினுன் = அப்படிப் பேசினுன்
இப்படி + பார் = இப்படிப் பார்
எப்படி + சொல்வாய் = எப்படிச் சொல்வாய்

4. இடம் பொருள் உணர்த்தும் அங்கு, இங்கு, எங்கு என்பவற்றின் முன்னும் வலி மிகும்.

எ-டு: அங்கு + சென்றுன் = அங்குச் சென்றுன்
இங்கு + பார்த்தான் = இங்குப் பார்த்தான்
எங்கு + கண்டாய் = எங்குக் கண்டாய்

5. மேலும், இனி, தனி, மற்று, மற்ற, மற்றை என்பவற்றின் முன்னும் வல்லினம் மிகும்.

எ-டு: இனி + செல்க = இனிச்செல்க
தனி + பாட்டு = தனிப்பாட்டு
மற்று + காண்க = மற்றுக்காண்க
மற்ற + பாடம் = மற்றப்பாடம்
மற்றை + செல்வம் = மற்றைச்செல்வம்

6. உவமைத் தொகை சிலவற்றில் வல்லினம் மிகும்.

எ-டு: மலர் + கண் = மலர்க்கண்
வேய் + தோள் = வேய்த்தோள்
தாமரை + கண் = தாமரைக்கண்

7. இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லினம் மிகும்.

எ-டு: சாரை + பாம்பு = சாரைப்பாம்பு
சித்திரை + திங்கள் = சித்திரைத் திங்கள்

8. ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன்னும் வல்லினம் மிகும்.

எ-டு: நில்லா + பொழுது = நில்லாப்பொழுது
ஓடா + புலி = ஓடாப் புலி

9. தனிக்குறிலைச் சார்ந்த முற்றுகரங்களின் முன் வல்லினம் மிகும்.

எ-டு: புது + பார்வை = புதுப்பார்வை
உரு + கண்டான் = உருக்கண்டான்
வடு + பட்டது = வடுப்பட்டது

10. தீ, பூ, ஈ என வரும் ஓரெழுத்தொருமொழியின் முன்னும் வல்லினம் மிகும்.

எ-டு: தீ + பாய்ந்தான் = தீப்பாய்ந்தான்
பூ + பறித்தாள் = பூப்பறித்தாள்
ஈ + கால் = ஈக்கால்

11. ஆய், போய், அன்றி, இன்றி, ஆக, என என்னும் வினையெச்சங்களின் முன்னும், சில அகர ஈற்று வினையெச்சங்களின் முன்னும், இகர ஈற்று இறந்த கால வினையெச்சங்களின் முன்னும் வல்லினம் மிகும்.

எ-டு:

நன்றாய் + பேசினான் = நன்றாய்ப் பேசினான்
போய் + சொன்னான் = போய்ச் சொன்னான்
அன்றி + போகான் = அன்றிப் போகான்
இன்றி + காணான் = இன்றிக் காணான்
நன்றாக + பாடினான் = நன்றாகப் பாடினான்
சொல்லென + சொன்னான் = சொல்லெனச் சொன்னான்
குறுக + தறித்த குறள் = குறுகத் தறித்த குறள்
ஆடி + கொண்டான் = ஆடிக்கொண்டான்

**வேற்றுமையில் வலிமிகுதல் :**

12. இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

கண்ணை + காட்டு = கண்ணைக் காட்டு
என்னை + பார் = என்னைப் பார்

13. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில், வல்லினம் மிகும்.

மலர் + கொடி = மலர்க் கொடி

14. மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வல்லினம் மிகும்.

ஓலை + பெட்டி = ஓலைப் பெட்டி

15. நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

வீட்டுக்கு + காவல் = வீட்டுக்குக் காவல்

16. ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வல்லினம் மிகும்.

விழி + புனல் = விழிப்புனல்

17. ஆறும் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும்.

வண்டு + கால் = வண்டுக்கால்

18 வன்றொடர்க் குற்றியலுகரத்தின்முன் அல்வழி, வேற்றுமை ஆகிய ஈரிடத்தும் வலி மிகும்.

இழுத்து + செல் = இழுத்துச் செல் (அல்வழி)
ஆற்று + புனல் = ஆற்றுப்புனல் (வேற்றுமை)

19. மென்றொடர்க் குற்றியலுகரத்தின்முன் வேற்றுமையில் வல்லினம் மிகும்.

நண்டு + கால் = நண்டுக்கால்

20. முற்றியலுகரத்தின் முன்னும் வேற்றுமையில் வல்லினம் மிகும்.

கதவு + தாள் = கதவுத் தாள்
அரவு + தோல் = அரவுத் தோல்

21. அரை, பாதி என்னும் சொற்களின்முன் பண்புத் தொகையில் வல்லினம் மிகும்.

அரை + பலம் = அரைப்பலம்
பாதி + பாக்கு = பாதிப் பாக்கு

22. தனிக்குற்றெழுத்தைத் தொடர்ந்து வரும் முற்றுகரத்தின் முன்னும், குறில் நெடில் இணைவின் முன்னும் வலிமிகும்.

நடு + பகல் = நடுப் பகல்
பலா + பழம் = பலாப் பழம்

23. மென்றொடர்க் குற்றியலுகரங்கள், வன்றொடர்க் குற்றியலுகரங்களாகத் திரிந்தவழி வருகின்ற வல்லினம் மிகும்.

இரும்பு + பாதை = இருப்புப் பாதை
குரங்கு + கால் = குரங்குக் கால்

24. ஐகாரச் சாரியைபெற்ற குற்றுகரங்கட்கு முன்னும் வலி மிகும்.

நேற்று + ஐ + பொழுது = நேற்றைப் பொழுது

25. அத்து, இற்றுச் சாரியைகளின் முன்னும் வல்லினம் மிகும்.

குன்றம் + அத்து + கோயில் = குன்றத்துக்கோயில்
மரம் + அத்து + கோடு = மரத்துக் கோடு
பது + இற்று + பத்து = பதிற்றுப் பத்து

**வலிமிகா இடங்கள் :**

1. உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது.

நன்மை + தீமை = நன்மை தீமை
அன்பு + பண்பு = அன்பு பண்பு

2. வினைத் தொகையில் வல்லினம் மிகாது.

பாய் + புனல் = பாய் புனல்
செய் + தொழில் = செய் தொழில்

3. இரண்டாம் வேற்றுமைத் தொகை, ஆறும் வேற்றுமைத் தொகை ஆகியவற்றில் வல்லினம் மிகாது.

நீர் + குடித்தாள் = நீர் குடித்தாள்
மகளிர் + கை = மகளிர் கை

4. மூன்றும் வேற்றுமை விரி, ஆறும் வேற்றுமை விரி ஆகியவற்றின் முன் வல்லினம் மிகாது.

கண்ணனொடு + சென்றேன் = கண்ணனொடு
சென்றேன்

எனது + கை = எனது கை

5. எழுவாய்த் தொடர், விளித் தொடர், வினை முற்றுத் தொடர் ஆகியவற்றில் வலி மிகாது.

காக்கை + கரைந்தது = காக்கை கரைந்தது
கண்ணா + கேள் = கண்ணா கேள்
ஓய்ந்தன + கைகள் = ஓய்ந்தன கைகள்

6. தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம் ஆகியவற்றிலும் வலி மிகாது.

வந்த + பையன் = வந்த பையன்
நல்ல + பையன் = நல்ல பையன்
கேளாத + கதை = கேளாத கதை

7. அது, இது, எது, ஏது, யாது; அவை, இவை, எவை, யாவை; அத்தனை, இத்தனை, எத்தனை; அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு என்பவற்றின் முன்னும் வல்லினம் மிகாது.

அது + பூனை = அது பூனை
இது + காக்கை = இது காக்கை
எது + பாட்டு = எது பாட்டு
ஏது + துணி = ஏது துணி ?
யாது + கண்டாய் = யாது கண்டாய்
அவை + கழல்கள் = அவை கழல்கள்
இவை + தோடுகள் = இவை தோடுகள்
எவை + சிறந்தன = எவை சிறந்தன
யாவை + பாடின = யாவை பாடின
அத்தனை + கூறினான் = அத்தனை கூறினான்
இத்தனை + பெரிதோ = இத்தனை பெரிதோ

எத்தனை + தந்தாய் = எத்தனை தந்தாய்
அவ்வளவு + போதும் = அவ்வளவு போதும்
இவ்வளவு + தேவை = இவ்வளவு தேவை
எவ்வளவு + கொடுத்தான் = எவ்வளவுகொடுத்தான்

8. வினைச் சொற்கள் 'படி' என்னும் துணையுருப்பைப் பெற்றுவரும் போதும் வல்லினம் மிகாது.

சொன்னபடி + செய்தேன் = சொன்னபடி செய்தேன்
இருக்கும்படி + சொன்னான் = இருக்கும்படி சொன்னான்
வரும்படி + கூறினான் = வரும்படி கூறினான்

9. பல, சில என்னும் சொற்களின்முன் சில இடங்களில் வல்லினம் மிகாது.

பல + பாடல்கள் = பல பாடல்கள்
சில + செய்திகள் = சில செய்திகள்

10. ஆ, ஓ, ஏ என்னும் இடைச் சொற்களின் முன்னும் வல்லினம் மிகாது.

முடிக்கவா + சென்றான் = முடிக்கவா சென்றான்
தொடுக்கவோ + பூ = தொடுக்கவோ பூ
அவனே + சிறந்தவன் = அவனே சிறந்தவன்

11. எண்ணுப் பெயர்களின் முன்னும் வல்லினம் மிகாது.

இரண்டு + கொடு = இரண்டு கொடு
ஐந்து + சொன்னான் = ஐந்து சொன்னான்

12. அன்று, இன்று, என்று என்னும் காலப்பெயர்களின் முன் வல்லினம் மிகாது.

அன்று + கண்டேன் = அன்று கண்டேன்
இன்று + சொல்கின்றேன் = இன்று சொல்கின்றேன்
என்று + பார்த்தாய் = என்று பார்த்தாய்

13. நெடிற்றொடர், ஆய்தத் தொடர், உயிர்த் தொடர், இடைத் தொடர்க் குற்றிய லுகரங்களின் முன்னும் வலி மிகாது.

ஏறு + தழுவினன் = ஏறு தழுவினன் (நெடிற்றொடர்)
எஃகு + கொடிது + எஃகு கொடிது (ஆய்தத்தொடர்)
பழகு + தமிழ் = பழகு தமிழ் = (உயிர்த் தொடர்)
சால்பு + கண்டேன் = சால்பு கண்டேன்
(இடைத் தொடர்)

14. வினையெச்சமாக வரும் மென்றொடர்க் குற்றிய லுகரத்தின் முன்னும் வல்லினம் மிகாது.

நுழைந்து + செல் = நுழைந்து செல்]

15. செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தின் முன் வல்லினம் மிகாது.

காணிய + சென்மோ = காணிய சென்மோ

16. வியங்கோள் வினை முற்றின் முன்னும் வலி மிகாது.

வாழிய + பெரிதே = வாழிய பெரிதே
வாழ்க + பல்லாண்டு = வாழ்க பல்லாண்டு

17. 'யா' என்னும் முதல்வினாவின் முன் வரும் வல்லினம் மிகாது.

யா + சிறந்தன = யா சிறந்தன

## 13. இடம் விட்டெழுதுதலும் சேர்த்தெழுதுதலும்

எழுத்துக்களையோ, சொற்களையோ இடையீடின்றி ஒரே தொடர்ச்சியாக எழுதிச் சென்றால் கற்பார்க்கு ஒன்றும் விளங்காமல் இடர்ப்பட நேரிடும். ஆகவே, எழுதுங்கால், சொற்களுக்கிடையே தக்க அளவு இடம் விட்டும், அஃதே போன்று பத்திகட்கிடையே இடம்

விட்டும், பொருள் விளக்கும் துணைகளாகிய குறியீடு களைப் பயன்படுத்தியும் எழுதுதல் வேண்டும். அழகும் தெளிவும் கருதி இவ்வாறு செய்ய வேண்டுவது மாணக்கர் கடனாகும். கீழ்க்காணும் சொற்றொடர்களைக் காணுங்கள் :—

"அன்புவிரைந்துபெருகும்வாய்ப்புமக்கட்பிறவிக் குண்டுஅதனாலப்பிறவிவிழுமியதென்றான்றோரால் போற்றப்பெற்றதுமக்கட்பிறவிவிழுமியதேயெப் பொழுதப்பிறவிதன்மாட்டுக்கெழுமியுள்ளஅன்பு வளர்ச்சிக்குரியவாய்ப்பைநன்முறையிற்பயன்படுத்தி னாலதுவிழுமியதாகுமில்லையேலதுவிழுமியதாகாது.

இப்பத்தி இடம்விட்டும், குறியீடுகள் காட்டியும் பொருள் விளங்க எழுதாததால், கற்பார்க்கு மருட்சி ஏற்படுகிறது. இதையே கீழுள்ளவாறு எழுதினால் பொருள் தெளிவு பிறப்பதோடு, அழகு படவும் அமை கிறது.

"அன்பு விரைந்து பெருகும் வாய்ப்பு மக்கட் பிறவிக்கு உண்டு. அதனால், அப்பிறவி விழுமிய தென்று ஆன்றோரால் போற்றப் பெற்றது. மக்கட் பிறவி விழுமியதே; எப்பொழுது? அப்பிறவி தன் மாட்டுக் கெழுமியுள்ள அன்பு வளர்ச்சிக்குரிய வாய்ப்பை நன்முறையில் பயன்படுத்தினால், அது விழுமியதாகும். இல்லையேல், அது விழுமியதாகாது."

## 14. சொற்களை இடம்விட்டு எழுதுதலும் சேர்த்து எழுதுதலும்

இருபொருள் தந்து நிற்கும் சொற்றொடர்களை நாம் எந்தப் பொருளில் பயன்படுத்துகிறோமோ—அதற் கேற்ப இடம்விட்டு எழுதுதல் வேண்டும். அவ்வாறின்

றிச் சேர்த்தே எழுதினல் பொருள் கவர்பட்டு மயங்க நேரிடும். இருபொருள்பட வரும் தொடர்கள் சில வற்றை நோக்குக.

1. குன்றேருமா :

குன்று ஏரு மா
குன்று ஏறு ஆமா

2. செம்பொன்பதின்றொடி :

செம்பொன் பதின் தொடி
செம்பு ஒன்பதின் தொடி

3. மாதேவா :

மாதே வா
மா தேவா

4. கொடுத்துவந்தான் :

கொடுத்து வந்தான்
கொடுத்து உவந்தான்

5. என்பரவாமை :

என் பரவாமை
என்பு அரவு ஆமை

6. மணந்துவக்குங்காலம் :

மணம் துவக்கும் காலம்
மணந்து உவக்கும் காலம்

7. தலைவிதிவசம் :

தலைவி திவசம்
தலை விதி வசம்

8. புத்தியில்லாதவன்

புத்தியில் ஆதவன்
புத்தி இல்லாதவன்

9. எங்கணேசா :

எம் கணேசா

எங்கள் நேசா

இவ்வாறு வரும் தொடர்களை எப்பொருள்பட வேண்டுமென்று விரும்புகின்றோமோ, அதற்கேற்பப் பிரித்து எழுதுதல் வேண்டும். இன்றேல் கற்பார் மனம் வெறுப்புற நேரிடும்.

ஆகவே, பொருள் தெளிவும், நடையழகும், தோற்றப் பொலிவும் உண்டாகுமாறு, எழுத்துக்களையும் சொற்களையும், தொடர்களையும், பத்திகளையும் தக்க அளவு இடம்விட்டு எழுதுவதோடு, உரிய குறியீடுகளையும் பயன்படுத்தி மாணக்கர் கட்டுரையை அணிசெய்வாராக.